பன்னிரு பாட்டியல்
விளக்கவுரையுடன்

கழக வெளியீடு - ௲௫௪

பன்னிரு பாட்டியல்

மேற்கோட் சூத்திரங்களுடனும்

சென்னை, பச்சையப்பன் கல்லூரி
உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியராயிருந்த
திரு. கா. ர. கோவிந்தராச முதலியார் அவர்கள்
எழுதிய

விளக்கவுரையுடனும்

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை.

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., ::
TIRUNELVELI, & MADRAS.

JULY 1943

SRI BHARATHI PRESS, CHOOLAI, MADRAS.

பொருள் அடக்கம்

முன்னுரை

நேரிசை வெண்பா

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

பாட்டியல் நூற்களுள், பன்னிரு பாட்டியல் மிகச் சிறந்தது எனப் புலவர்கள் யாவராலும் போற்றப்படுவதாகும். இதில் எழுத்தியல், சொல்லியல், இனவியல் என மூன்று இயல்கள் உள்ளன. அவற்றுள், எழுத்தியலில் எழுத்துக்களின் பிறப்பும்; நூற்களின் முதற்சீரின்கண் அமைத்தற்குரியன எனக் கூறப்படும் பொருத்தங்களுள், (1) வருணப்பொருத்தம், (2) கதிப்பொருத்தம், (3) உண்டிப்பொருத்தம், (4) பாற்பொருத்தம், (5) தானப் பொருத்தம், (6) கன்னற்பொருத்தம், (7) புட்பொருத்தம், (8) நாட்பொருத்தம் என்னும் எட்டுப்பொருத்தங்களும்; சொல்லியலில், (1) சீர்க்கணப்பொருத்தம், (2) மங்கலப்பொருத்தம், (3) பெயர்ப்பொருத்தம் என்னும் மூன்று பொருத்தங்களும் ஆகிய பன்னிரண்டு பொருள்கள் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றாலேதான் இந்நூலுக்குப் பன்னிரு பாட்டியல் என்னும் பெயர் எய்தியது. மூன்றாவதாகிய இனவியலில் புலவர்களால் அப்பொருத்தங்களை அமைத்துப் பாடப்படும் நூற்களின் இலக்கணங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இந்நூலின் சூத்திரங்களுட் பலவற்றிற்கு நூலாசிரியராலே மேற்கோட் சூத்திரங்கள் காட்டப்பட்டு, அவற்றின்கீழ் அவற்றை இயற்றினவர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. அப்பெயர்களுட் பெரும்பாலன சங்கத்துச் சான்றோர்களின் பெயர்களாகக் காணப்படுகின்றன. அப்பெயர்கள்: (1) பொய்கையார், (2) பரணர், (3) இந்திரகாளியார், (4) அவிநயனர், (5) அகத்தியர், (6) கல்லாடனர், (7) கபிலர், (8) சேந்தம் பூதனர், (9) கோவூர்கிழார், (10) மாபூதனர், (11) சீத்தலையார், (12) பல்காயனர், (13) பெருங்குன்றூர்கிழார் என்பனவாகும்.

சிலர், இந்நூல், ஆசிரியர் அகத்தியனார் மாணவர் பன்னிருவர் கூடி இயற்றியது எனப்படும் பன்னிருபடலம்போலப் பன்னிரண்டு புலவர்களால் இயற்றப்பட்டது என்று கருதுகின்றனர். இந்நூலில் பதின்மூன்று புலவர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டிருத்தலானும், அப்பெயருடையவர்களால் இயற்றப்பட்டனவாகக் குறிக்கப்பட்டிருக்கும் சூத்திரங்களினின்றும் நூற்சூத்திரம் வேறாகக் காணப்படுதலானும் அக்கருத்துப் பிறழ்வுடையதேயாகும். அங்ஙனம் மேற்கோட் சூத்திரங்களினின்று நூற்சூத்திரம் வேறாயிருத்தலை அடியில் வருவனவற்றான் அறிக. மேலும் பாயிரத்தின் "உரைப்பல்" எனவருவதும் கருதுக!

நூற் சூத்திரம்

3. சிறப்புடை எழுத்தின் பிறப்பினி துரைப்பின்
முந்நான் குயிரும் முதல்வன் படைத்தனன்.

மேற்கோட் சூத்திரம்

"நல்லுயிர்ப் பகுதி நான்முகன் படைத்தனன்"
—பொய்கையார்.

நூல் - சூ.

5. நறுமலர்த் திசைமுகன் ஈசன் நாரணன்
அறுமுகன் படைத்தன அந்தணர் சாதி.

மேற் - சூ.

"திருமால் அரனே திசைமுகன் குமரன்
மரபிற் படைத்தன மறையவர் சாதி"
—பரணர்.

இவற்றான், பொய்கையார் முதலிய பதின்மூவராலும் வெவ்வேறாகப் பாட்டியல்நூற்கள் செய்யப்பட்டன என்பது பெறப்படுகின்றது. அன்றியும், இந்நூலிற் காட்டப்படாதனவாகிய சில பாட்டியற் சூத்திரங்கள் இலக்கணவிளக்கப் பாட்டியலில், காட்டப்பட்டிருக்கின்றன. அவையும் பண்டைச் சான்றோர் பெயரானே குறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை இலக்கணவிளக்கப் பாட்டியலில் தானப்பொருத்தம் கூறுவதாகிய 23-ஆம் சூத்திர உரையின்கீழ்,

"நட்பரன் எதிபகை மரணம் ஐந்தனுள்
ஒப்புடைக் குறிக்கோள் ஒருமூன் றதும்'

என்றார் மாழலர்" எனவும், கணப்பொருத்தம் கூறும் 40-ஆம் சூத்திரத்தின்கீழ்,

"நீரது கணமே சீர்சிறப் பெய்தும்
தீயின் கணமே நோயது சேரும்
அந்தர கணமே வாணாள் அகற்றும்
இந்திர கணமே பெருக்கம் செய்யும்
சந்திர கணமே வாழ்நாள் தருஉம்
சூரிய கணமே வீரியம் போக்கும்
மாருத கணமே சீர்சிறப் பகற்றும்
நிலக்கணந் தானே மலர்த்திரு விளங்கும்'

என்றார் மாழலர்" எனவும், அதன்கீழ்,

"நேரசை ஆகவும் நிரையசை ஆகவும்
சீர்பெற எடுத்தல் சில்லிடத் துளவே'

என்றார் இந்திரகாளியார்" எனவும்,

"வருண கணமே சதயம் என்ப
சந்திர கணமே மிருக சீரிடம்
அந்தர கணமே புனர்பூசம் ஆகும்
வாயு கணமே சோதி ஆகும்
சூரிய கணமே பூசம் என்ப
தீக்கணந் தானே கார்த்திகை என்ப
யமான கணமே பரணி என்ப
பூமி கணமே கேட்டை ஆகும்"

எனக் கணநாட் கூறி,

"நிலையே செல்வம் சூலை நலம்நீக்கல்
கோலைபிணி நன்மை இன்பம் கூறே'

என இந்திரகாளியார் பலமும் கூறியவாறு அறிந்துகொள்க" எனவும் குறிக்கப்பட்டிருத்தலான் அறிக.

இவற்றுற் பண்டைச் சான்ருேருட் பலர் பாட்டியல் நூற்களை இயற்றினர் என்பது பெறப்படுகின்றது.

ஆயினும் சிலர், "அவை, பண்டைச் சான்ருேர்களால் செய்யப்பட்டன அல்ல; பிறராற் செய்யப்பட்டு, அவற்றிற்கு மேன்மை தோன்றற்பொருட்டுப் பண்டைச் சான்ருேர்களால் இயற்றப்பட்டவை எனக் கற்பனையாக வழங்கப்பட்டனவாக வேனும், பிற்காலத்து அப்பெயர் கொண்டிருந்தவர்களாற் இயற்றப்பட்டனவாக வேனும் இருக்கும்" என்கின்றனர். அதற்கு அவர்கள் கூறும் காரணங்களுள், முக்கியமானவை இரண்டு. அவற்றுள் ஒன்று, பாட்டியல் நூற்களில், நூற்களின் முதற் சீரின்கண் இன்றியமையாமல் அமைத்தற்கு உரியன என்று கூறப்பட்டுள்ள பொருத்தங்கள் வடமொழி நூற்களின் மரபையே தழுவினவைகளா யிருத்தலின், செந்தமிழ் வழக்கையே கொண்டு பாட்டுக்களை இயற்றியவர்களாகிய பண்டைச் சான்ருேர்கள் அவற்றைத் தழுவிய பாட்டியல் நூற்களை இயற்றினுர்கள் என்பது ஏற்புடையது ஆகாது என்பது.

மற்ருென்று, இதிற் குறிக்கப்பட்ட சான்ருேர்களால் இயற்றப்பட்டுத் தொகை நூற்களிற் சேர்க்கப்பட்டிருக்கும் பாட்டுக்களும், அவர்களால் இயற்றப்பட்டன என இந்நூலிற் காட்டப்பட்டிருக்கும் சூத்திரங்களும் நடையின் வேறுபட்டிருத்தலின், இச்சூத்திரங்கள் அவர்களால் இயற்றப்பட்டன என்றல் ஏற்புடையதாகாது என்பது.

தொல். பொருள். அகத்திணை இயலில்,

"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்,"

என்றதனுற் குறித்த எண்வகை மணங்களுள், காந்தர்வம் அன்பின் ஐந்திணைக்கும்; ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்னும் மூன்றும் கைக்கிளைக்கும்; பிரமம் பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்னும் நான்கும் பெருந்திணைக்கும் உரியன எனக் கொண்டு, அன்பின் ஐந்திணை, கைக்கிளை என்னும் இரண்டு திணைகளும் அவ் வெண்வகை மணத்துள் நான்கு மணங்களைப் பெறப், பொருந்தாக்காமம் தான் ஒன்றே நான்கு மணங்களைப் பெறுதல் கொண்டு அதற்குப் பெருந்திணை எனப் பெயர் குறித்தமையானும், புறத்திணை இயலில்,

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்,"

என்றமையானும் பண்டைச் சான்ருேர்கள் வடநூன்மரபும் சில தழுவினமை பெறப்படுதலின், அப்பொருத்தங்களைத் தழுவிய பாட்டியல் நூற்களை இயற்றினுர்கள் என்பது எற்புடையதேயாம் என்க.

சிலர் செய்யுட்கள் யாவும் ஒரே நடையின் அமைந்திருக்கும். சிலருடைய செய்யுட்களிற் சில வன்மையாகிய நடையை உடையனவாகவும் சில எளிய நடையை உடையனவாகவும் இருக்கும். பத்துப் பாட்டினும், எட்டுத் தொகையினும் காணப்படுவனவாகிய கபிலர் பாட்டுக்கள், நூற்பயிற்சி யுடையவர்களும் பன்முறை நோக்கி அறிதற்கு உரியனவாயிருப்ப, அவராலேயே இயற்றப்பட்ட இன்னு நாற்பது இளமாணவர்களும் எளிதிற் கற்றறிதற்கு உரியதாயிருக்கின்றது. அங்ஙனமே எட்டுத் தொகை நூற்களிற் காணப்படுவனவாகிய சீத்தலைச்சாத்தனுர் பாட்டுக்கள் வன்மை உடையனவாயிருப்ப, அவராலே இயற்றப் பட்ட மணிமேகலை எளிய நடையை உடையதாயிருக்கின்றது. ஆதலின், இந்நூலிற் குறிக்கப்பட்ட புலவர்களால் இயற்றப் பட்டுத் தொகை நூற்களிற் சேர்க்கப்பட்டிருப்பனவாகிய செய் யுட்களின் நடையின் அவர்களால் இயற்றப்பட்டனவென இந் நூலிற் குறிக்கப்பட்டுள்ள பாட்டியற் சூத்திரங்களின் நடை வேறுபட்டிருத்தல் கொண்டு, அவை, அவர்களால் இயற்றப்பட் டன அல்ல என்றல் எற்புடைய தாகாது.

பாட்டியல் நூற்களிற் கூறப்படும் முதற் சீர்ப்பொருத்தங் களும், பிள்ளைப்பாட்டு முதலிய நூற்களுமாகிய இரண்டு பகுதி களுள், பொருத்தங்கள் வடநூன்மரபைத் தழுவினவையே யாயி னும் பிள்ளைப்பாட்டு முதலிய நூற்களுள் தாண்டகம் ஒன்று நீங்கிய மற்றை யாவும் தமிழ்நூன் மரபைத் தழுவியவைகளே யாகும். அவற்றுள், பிள்ளைப் பாட்டு, பரணி, உலா, ஆற்றுப் படை முதலிய பல நூற்களுக்கு இலக்கணங்கள் தொல்காப் பியத்தினும் காணப்படுகின்றன. அங்ஙனம் அந்நூற்களுக்கு இலக்கணம் கூறும் தொல்காப்பியச் சூத்திரங்களுட் பல இந் நூலின்கண் அந்த அந்த நூலின் இலக்கணச் சூத்திர உரையிற் காட்டப்பட்டிருக்கின்றன. அங்ஙனம் தொல்காப்பியத்தினும் அந்நூற்களுள் பலவற்றிற்கு இலக்கண உண்மையை இலக்கண விளக்கம், பொருளதிகாரம், பாட்டியலில் உள்ள, 7-ஆம் சூத்தி

ரத்தின் விசேட உரையில், "ஈண்டுக் கூறிய அகலக் கவிக்கு இலக்கணம் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறாராயினார் என்னை? எனின், அவர்,

"வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளு நாடி"
(சிறப்புப் பாயிரம்)

எனக் கூறிப்புகுதலானும்,

"முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை இன்றே
ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்"
(தொல். சொல். சூ. 462)

என அகலக் கவியைச் சொன்முடிபு கூறுமுகத்தாற் கூறலானும், புறத்திணைக்கண்,

"தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூத ரேத்திய துயிலெடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்
சிறந்த நாளணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங் கலமும்
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்
நடைமிகுத் தேத்திய குடைநிழன் மரபும்
மாணார்ச் சுட்டிய வாண்மங் கலமும்
மன்னெயில் அழித்த மண்ணுமங் கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயிற் றோன்றும் இருவகை விடையும்
அச்சமும் உவகையும் எச்சம் இன்றி

நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமும்
காலங் கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉ நடக்கையது குறிப்பிற்
காலம் மூன்றும் கண்ணிய வருமே''
(தொல். பொருள். புறத்திணை இயல். சூ. 91.)

என அகலக் கவியை விதந்து கூறலானும், செய்யுள் ஒத்தின்,

"அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்று பொருள்முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்''

என்றதனாற் பொருட்டொடர்நிலைச் செய்யுளும்,

"மாட்டும் எச்சமும் நாட்டம் இன்றி
உடனிலை மொழியினும் தொடர்நிலை பெறுமே''

என்றதனாற் சொற்றொடர்நிலைச் செய்யுளும் பெறப்படூஉம் என்க. அவற்றைப் பின்னுள்ளோர் பலரும் பாட்டியல் என விரித்துக் கூறினாராகலான், இந்நூலுடையாரும் அகலக் கவிக்கு இலக்கணம் கூறினர் என உணர்க'' என்று கூறியவற்றானும் அறிக.

பல ஆசிரியர்களாற் பாட்டியல் நூற்கள் இயற்றப்பட்டன. பலராற் பாட்டியல் நூற்கள் இயற்றப்பட்டன என்பதனை, இலக்கணவிளக்கப் பாட்டியல் 42-ஆம் சூத்திரத்தின் விசேட வுரையில், "பாட்டியல் செய்தார் பலராகலான் ஒரு சாரார் மூவசைச் சீரே வரும் எனக் கூறுதலானும், ஒரு சாரார் ஈரசைச் சீர் உடன்கொண்டு கூறுதலானும், ஈரசைச்சீரும் இலக்கியத்திற் பயின்று வருதலானும் இவ்வாசிரியர் இருதிறனும் நேர்ந்தார் என்பதாம்'' என்றதனால் அறிக.

அவற்றுள் ஒன்றான பன்னிரு பாட்டியலின் சூத்திரங்கள் இன்னோசை உடையனவா யிருக்கின்றன. அன்றியும் அவை சுருங்கச்சொல்லல் முதலிய அழகுகளோடு கூடிச்

"சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன'' வாகவும் இருக்கின்றன.

மேற்கணக்குக் கீழ்க்கணக்கு நூற்களை இன்னவை என விளக்கு

தற்குப் புலவர்களால் எடுத்துக் காட்டப்படுஞ் சூத்திரங்கள் இந்நூற் சூத்திரங்களேயாகும். இந்நூலின் இனவியலில் நூற்களுக்குக் கூறப்படும் இலக்கணங்களுட் பல மற்றைப்பாட்டியல்களிற் கூறப்படாதனவாகவும், சிறந்தனவாகவும் இருக்கின்றன. இந்நூலிற் காப்பியத்திற்குக் கூறப்பட்ட இலக்கணம் அவற்றுள் ஒன்ருகும். காப்பியத்திற்கு இந்நூலிற் கூறப்பட்ட இலக்கணம் நன்கு போற்றற்கு உரியதாகும். இந்நூலை இயற்றியவர் நல்லிசைப் புலமை வாய்ந்த சான்ருேர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இந்நூலின்கண் சிறப்புப்பாயிரம் காணப்படாமையின், இதனை இயற்றினுர் இன்னுர் என்பதும், இவர் காலம், மதம் முதலியனவும் விளங்கவில்லை. தற்சிறப்புப்பாயிரத்தில் "சொலலின் கிழத்தி மெல்லியல் இணையடி சிந்தையில் வைத்து," என்றலின், இவர் வைதிக மதத்தினர் என்பதிற் றட்டு இல்லை. வைதிகமதங்கள் பலவற்றுள் இவர் எந்த மதத்தினர் என்னும் வினுவிற்கு விடைகூறுதல் அரிதாகும். இவர் பிள்ளைப்பாட்டின், காப்பில் முன் எடுக்கும் தெய்வம் 'திருமால்' என்றமையானும், 'தேவபாணி' என்று தொடங்கும் சூத்திரத்தில் 'தேவபாணி திருமாலுக்கே உரியது' என்றமையானும் இவரை வைதிக மதத்தினருள் வைணவ மதத்தினர் என்று கொள்ளுதலாகாதோ? எனின் பிள்ளைப்பாட்டின் காப்பில் முதல் எடுக்கும் கடவுள் திருமால் என்பதை மற்றையோரும் கூறுதலானும், இவர் தேவபாணி திருமாலுக்கே உரியது என்றது இவர்க்கு முற்பட்ட ஆசிரியர்கள் கூறியதை நோக்கிக் கூறியதே என்பது,

"சுடர்கதிர்த் திங்கள் சூடி யோற்தும்
பனிதிரைப் பனிக்கடல் மாதடிந் தோற்தும்
உரிய காலமும் உளவென மொழிப"

என்னுஞ் சூத்திரத்தில், 'மொழிப' என்றதனுல் நன்கு விளங்குதலானும் அவற்றைக்கொண்டு இவரை வைணவர் என்று துணிதல் பொருந்தியதாகாது என்க. ஆயினும் அச் சூத்திரத்தில் உள்ள "நீர்நிலம் அளந்த நெடியோன்," என்னும் தொடர் இவர் வைணவராயிருத்தல் கூடும் என யூகித்தற்கு இடந்தருகின்றது.

என் அரிய நண்பர் தமிழ்ப்புலவர் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்களிடமிருந்து இந்நூலின் மூலமும் மேற்கோற்கோட் சூத்திரங்களும் கூடிய அச்சுப்பிரதி ஒன்றைச் சில ஆண்டுகட்கு முன் பெற்றுப் படித்து அதனை அவர்களிடம் சேர்த்து

விட்டேன். இப்பொழுது சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் இதற்கு உரை எழுதும் தொண்டை எனக்களித்தமையால் மேற்படி முதலியார் அவர்களிடமிருந்து மீண்டும் அப்பிரதியைப் பெற்றுக்கொண்டேன். இது, சேது சமஸ்தான மகா வித்துவான் உ. வே. ரா. இராகவ ஐயங்கார் அவர்களாற் செந்தமிழின் 12-ஆம் வெளியீடாக கி. பி. 1904-ம் ஆண்டு வெளியிடப்பட்டதாகும். இதில் நூற்சூத்திரங்கட்கும் மேற்கோட் சூத்திரங்கட்கும் எண்கள் வெவ்வேருகக் கொடுக்கப்படாமல் ஒன்ருகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், மேற்கோட் சூத்திரங்கள் பலவற்றின் ஈற்றில், முக்காற்புள்ளியும், அவற்றின்கீழ் அவற்றை இயற்றினர் பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. சில மேற்கோட் சூத்திரங்கள் அவ்விரண்டும் குறிக்கப்படாமல் இருக்கின்றன. அங்ஙனம் இருப்பனவற்றை ஒரே பொருளில் இரண்டும் பலவுமாகிய சூத்திரங்கள் வந்திருப்பின் அவற்றுள் முன்னையது நூற்சூத்திரம் எனவும், பின்னையது அல்லது பின்னையவை மேற்கோட் சூத்திரம் எனவும் கொண்டு பிரித்துக் கொண்டேன். என்? எனின், நூற் சூத்திரத்தை முன்னும் மேற்கோட் சூத்திரத்தைப் பின்னுமாக அமைப்பதே மரபாகலானும், இந்நூலின்கண்ணும் அங்ஙனமே மேற்கோட் சூத்திரங்கள் அமைக்கப்பட்டிருத்தலானும் என்க. அங்ஙனம் பிரித்துக் கொண்டதற்கு உதாரணமாக அடியில் வருவனவற்றை நோக்குக.

எழுத்தியல்

சூ. யாவே உத்திரட் டாதி ஏனை
யூயோ ழலமென் றுணர்ந்திசி னேரே.

சூ. யூயோ இரண்டும் மேனுள் ழலம்
யாவே உத்திரட் டாதிநாள் பேறுமே.

இங்ஙனம் பிரித்துக்கொண்டு உரை எழுதத் தொடங்குகையில், இதற்கு ஏட்டுப்பிரதி துணையாகக் கிடைக்கின் நலமாம் எனக் கருதிச் சென்னைப் பல்கலைக் கழக நூல் நிலயத்தைச் சார்ந்த கீழ்நாட்டுக் கலைநூல் நிலையத்துக்குச் சென்றேன். இப்பொழுது அந்நூல்நிலயம் திருப்பதியில் இருக்கின்றது என்பதை அங்குள்ளவர்களால் அறிந்துகொண்டு வந்து, முன்குறித்த அச்சுப் பிரதியை ஆதாரமாக வைத்துக்கொண்டு உரை எழுதத் தொடங்

கினேன். இந்நூலின் எழுத்தியலில் உள்ள கன்னற்பொருத்தம், புட்பொருத்தம் என்னும் இவ்விரு பொருத்தங்களைக் கூறும் சூத்திரங்கட்கும், இனவியலில் உள்ள 'சாற்றிய மாறெருத்தல்' என்று தொடங்கும் வெண்பாவிற்கும் பொருள் நன்கு விளங்காமையின் அவற்றிற்கு உரை எழுதிலேன்.

இத்தமிழ்த் தொண்டை எனக்களித்த சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு என் அன்போடு கூடிய நன்றியைச் செலுத்துகின்றேன்.

எனது இம்முயற்சி இனிது முடியத் திருவருள் புரிந்த திருமகள் நாதன் திருவடித் தாமரைகளை வழுத்தி வாழ்த்துகின்றேன்.

சென்னை,
1—7—1943

இங்ஙனம்,
கா. ர. கோ.

உரைத்தற்சிறப்புப்பாயிரம்

நேரிசை வெண்பா

நல்லா ருளத்தான் நவில்குருகைப் பாமாறன்
சொல்லா ரடிநற் றுணையாகும்—வல்லார்சொல்
பன்னிரு பாட்டியனூல் பன்னும் பொருள்விளக்கி
இன்னுரையின் வைக்க இனிது.

அவையடக்கம்

ஆற்றுநீ ரேற்கும் அருங்கடல் புன்கழித்தீ
நாற்றநீர் தன்னையு நன்கேற்கும்—ஆற்றல்சால்
வல்லோ ருரையை மகிழ்ந்தேற்கு மேலோரென்
புல்லுரையு மேற்பர் புரிந்து.

---

[1]பன்னிரு பாட்டியல்

I. [2]எழுத்தியல்

தற்சிறப்புப் பாயிரம்

1. [3]சொல்லின் கிழத்தி மெல்லியல் இணையடி
சிந்தையில் வைத்து [4]முன்னோர் பொருள்நெறி
கூட்டி யுரைப்பல் பாட்டியல் மரபே. (க)

குறிப்புரை

1. இதிற் பாட்டியல் என்பது நூற்களின் முதற்சீரின்கண் அமைத்தற்குரிய எழுத்துக்களின் பிறப்பும், அதன்கண் அமைத்தற்குரிய வருணப் பொருத்த முதலிய பொருத்தங்களுமாகிய இவைகளினது இலக்கணங் கூறும் நூல் என்றுதலின், ஆறன் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர். இதில் பாட்டு என்பது அதன் சினையாகிய முதற்சீரை உணர்த்த, அது பிறப்புணர்த்தப்பட்ட எழுத்துக்களாலும் அவ்வெழுத்துக்களினாலாகும் சொற்களாலும் அமைக்கப்படும் வருணப் பொருத்த முதலிய பொருத்தங்களை உணர்த்தலின், இருமடியாகு பெயர். பாட்டு என்பது பன்னிரண்டு என்னும் அடையடுத்து நின்றது. பன்னிரு பாட்டு - பன்னிரண்டாகிய பாட்டு; (பன்னிரண்டு பொருத்தம்.) இயல் - இலக்கணம்.

இந் நூலானது மேற்கூறிய எழுத்துக்களின் பிறப்பும், வருணப்பொருத்தம் முதலிய பதினொரு பொருத்தங்களுமாகிய பன்னிரண்டு பொருள்களைக் கூறுதலான் பன்னிருபாட்டியல் என்னும் பெயரினதாயிற்று.

இந் நூலின் இயல்கள் மூன்று; அவை, எழுத்தியல், சொல்லியல், இனவியல் என்பன. அவற்றுள், முதல் இரண்டியல்களில்

மேற்கூறிய பொருத்தங்களையும், மூன்ருவதாகிய இனவியலில் பாட்டுக்களால் அமைக்கப்படும் நூற்களின் இலக்கணமும் கூறப் பட்டிருப்பினும் பாட்டியல் நூலார் பொருத்தங்களைக் கூறுதலை முதன்மையாகக் கொள்பவாகலின், இப் பெயர் கமுகந்தோட்டம் என்பதுபோலத் தலைமைபற்றி வந்த பெயராகும். இது, தொல்காப்பியச் சொல்லதிகாரம் கிளவியாக்கத்தின்கண் உள்ள

"ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழிய
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்" (சூ. 49.)

என்னுஞ் சூத்திரத்தாற் கொள்ளப்படும்.

இப் பெயர் நன்னூலின்கண் சிறப்புப்பாயிர இலக்கணம் கூறுமிடத்துள்ள,

"முதனூல் கருத்தன் அளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே"

என்னுஞ் சூத்திரத்துள், 'முதல்,' என்றதனுல் அமைக்கப்படும்.

பாட்டியல் என்பதற்குப் பாட்டினது இலக்கணங்கூறும் நூல் என்று பொருள் கொள்ளலாமேனும் பாட்டியல் நூற்கள் பெரும்பான்மையும் நூற்களின் முதற்சீரின்கண் அமைத்தற் குரிய பொருத்தங்களையும், பாட்டுக்களால் ஆகும் நூற்களை அமைத்தற்குரிய இலக்கணங்களையும் கூறுவனவாகவே இருத்த லின், அங்ஙனம் பொருள் கொள்ளலாகாதென்க. சிதம்பரப் பாட்டியல் ஒன்றே அவற்றுடன் பாட்டின் இலக்கணமும் கூறு கின்றது. இலக்கண விளக்கத்துள், செய்யுளியலும் பாட்டியலும் வெவ்வேருகக் கூறப்பட்டிருத்தலையும் ஈண்டு நோக்குக.

2. முதற்சீரின்கண் அமைத்தற்குரிய எழுத்தாலாகும் பொருத்தங்களைக் கூறும் இயல் என்பது. எழுத்து என்பது ஈண்டு எழுத்தால் அமைக்கப்படும் பொருத்தங்களை உணர்த்துத லின், காரணவாகு பெயர். 'இயல்' என்றது இந் நூலின் பிரிவை. இயல் ஒத்து என்பன ஒரு பொருட்சொற்கள்.

நூல்

2. [1]எத்திய வோத்தியல் எழுத்தியல் இயம்பின்
பிறப்பும் வருணமும் சிறப்பாம் கதியும்
இருவகை உண்டியும் மூவகைப் பாலும்
பொருவில் தானமும் [2]கன்னலும் [3]புள்ளும்
நயம்பெறு நாளும் இயம்புதல் கடனே. (உ)

---

3. இது, தெய்வ வணக்கமும் செயப்படு பொருளுங் கூறுதலின், தற்சிறப்புப் பாயிரமாம்.

என்னை,

'தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த வுரைப்பது தற்சிறப் பாகும்'

என்றார் முன்னோராகலின்.

இதில், 'சொல்லின் கிழத்தி—வைத்து' எனத் தெய்வ வணக்கமும், 'முன்னோர்—பாட்டில் மரபு உரைப்பல்' எனச் செயப்படு பொருளும் கூறப்பட்டன. சொல்லின் கிழத்தி - கலைமகள்.

4. 'முன்னோர் பொருள் நெறி கூட்டிப் பாட்டியல் மரபு உரைப்பல்' என இயைக்க. இதன் பொருள் முன்னோர்களால் (தம்முடைய நூற்களிற்) கூறப்பட்ட பொருள்களின் வழியை அமைத்துக்கொண்டு பாட்டியன் முறைமையைக் கூறுவேன் என்பது.

'பாட்டியன் முறைமையைக் கூறுவேன்' என்றதன் கருத்துப் பாட்டியலை முறையாகக் கூறுவேன் என்பது.

1. (புலவர்களாற்) போற்றிக் கொள்ளப்பட்ட பாட்டியல் நூற்களின் இயல்களுள், எழுத்தியலைச் சொல்லுமிடத்துப் பிறப்பு முதல் நாள் ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பதையும் சொல்லுதல் கடமையாகும் என்பது.

ஓத்து - இயல்; அஃது ஈண்டுச் சினையாகு பெயராய் நூலை உணர்த்தியது. 'ஓத்துள் (நூலுள்) உள்ள இயல்களுள், எழுத்தியலை இயம்பின்', என்க.

2. நாழிகையும், 3. பறவையும்.

க. [1]பிறப்பு

3. சிறப்புடை எழுத்தின் பிறப்பினி துரைப்பின்
[2]முந்நான் குயிரும் [3]முதல்வன் படைத்தனன். (ந)

க. "நல்லுயிர்ப் பகுதி நான்முகன் படைத்தனன்"
—பொய்கையார்.

4. [4]கண்ணுதல் திருமால் கதிர்வேல் முருகன்
[5]விண்ணவர் தலைவன் [6]வெங்கதிர் வெண்மதி
[7]நிதிக்கோன் [8]கூற்றுவன் நெடுநீர் வருணன்

---

1. அஃதாவது, இந்த இந்தத் தேவர்களால் இந்த இந்த எழுத்துக்கள் படைக்கப்பட்டனஎன்பதைக்கூறும்பகுதிஎன்பது.

ஈண்டுப் பகுதி என்றது இவ்வியலின் பகுதியை. மேற் கூறப்படும் பகுதிகளையும் இங்ஙனமே கொள்க. ஈண்டுப் 'பிறப்பு' என்பது எழுத்துக்களின் பிறப்பைக் கூறும் பகுதியை உணர்த்தலின், காரியவாகு பெயர்.

2. பன்னிரண்டு உயிரையும், 3. பிரமன்.

4. கண்ணுதல் முதல் வருணன் ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பது தேவர்களில் ஒவ்வொருவரும் முறையே இரண்டு இரண்டு எழுத்துக்களாகப் பதினெட்டு மெய்களின் வகையை வெவ்வேறாகப் படைத்தனர். எனவே, கண்ணுதல் க ங என்னும் இரண்டெழுத்துக்களையும், திருமால் ச ஞ என்னும் இரண்டெழுத்துக்களையும், முருகன் ட ண என்னும் இரண்டெழுத்துக்களையும், விண்ணவர் தலைவன் த ந என்னும் இரண்டெழுத்துக்களையும், வெங்கதிர் ப ம என்னும் இரண்டெழுத்துக்களையும், மதி ய ர என்னும் இரண்டெழுத்துக்களையும், நிதிக்கோன் ல வ என்னும் இரண்டெழுத்துக்களையும், கூற்றுவன் ழ ள என்னும் இரண்டெழுத்துக்களையும், வருணன் ற ன என்னும் இரண்டெழுத்துக்களையும் படைத்தனர் என்பது பெறப்படுதல் அறிக. ஈண்டு ஒற்று என்றது உயிரோடுகூடிய ஒற்றினை என்க. எனவே, உயிர்மெய் என்பது பெறுதல் அறிக.

[5]இந்திரன், [6]சூரியன், [7]குபேரன், [8]எமன்.

எண்ணுங் கடவுளர் ஈரிரண் டாக
மன்னிய வோற்று வகைவேறு படைத்தனர். (ச)

உ. "ஒன்பது தேவரும் உடம்பு படைத்தனர்"
—பொய்கையார்.

உ. [1]வருணம்

அந்தண சாதிக்குரிய எழுத்துக்கள்

5. [2]நறுமலர்த் திசைமுகன் ஈசன் நாரணன்
அறுமுகன் படைத்தன அந்தணர் சாதி. (ரு)

அவை: அகரமுதல் பன்னீருயிரும், கங, சஞ, டணவும்.

ரு. "திருமால் அரனே திசைமுகன் குமரன்
மரபிற் படைத்தன மறையவர் சாதி"
—பரணர்.

அரச சாதிக்குரிய எழுத்துக்கள்

6. [3]இந்திரன் வெங்கதிர் சந்திரன் படைத்தன
துன்னரும் சிறப்பின் மன்னவர் சாதி. (சா)

அவை: தந, பம, யர.

ச. "இந்திரன் இரவி சோமனிம் மூவர்
தந்த எழுத்தே அரசர் சாதி"
—பரணர்.

---

[1] அஃதாவது, அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் என்னும் நால்வகைச் சாதிக்கும் உரிய எழுத்துக்களைக் கூறும் பகுதி என்பது.

'வருணம்' என்பது ஈண்டு வருணத்திற்குரிய எழுத்துக்களை உணர்த்த, அவை, அவற்றைப்பற்றிக் கூறும் பகுதியை உணர்த்தலின், இருமடியாகு பெயர்.

2. திசைமுகன்முதல் அறுமுகன் ஈறாகச் சொல்லப்பட்ட நான்கு தேவர்களாற் படைக்கப்பட்ட எழுத்துக்கள் அந்தண சாதிக்குரியனவாம்.

3. இந்திரன், சூரியன், சந்திரன் என்னும் இம் முத்தேவர்களாற் படைக்கப்பட்ட எழுத்துக்கள் அரச சாதிக்குரியவாம்.

வணிக சாதிக்குரிய எழுத்துக்கள்

7. [1]திருமிகு நிதிக்கோன் வருணன் படைத்தன
அணிமிகு சிறப்பின் வணிகர் சாதி. (எ)

அவை: லவ, றன.

இ. "வருணன் நிதிக்கோன் என்றிவர் படைத்தன
வசைதீர் சிறப்பின் வணிகர் சாதி"

—பரணர்.

சூத்திர சாதிக்குரிய எழுத்துக்கள்

8. [2]கூற்றுவன் படைத்தன கூற்றன இரண்டும்
ஏத்திய மரபிற் சூத்திர சாதி. (அ)

அவை: ழள.

சு. "இயமன் படைத்த இருவகை எழுத்தும்
துகடீர் மரபிற் சூத்திரர் சாதி"

—பரணர்.

உயிர்மெய்க்காவதோர் சிறப்பிலக்கணம்

9. [3]ஒற்றுமைக் காலேயும் வேற்றுமைக் காலேயும்
பிறவியும் வருணமும் பெறுமென மொழிப. (கூ)

---

1. குபேரன் வருணன் என்னும் இவ்விரு தேவர்களாற் படைக்கப்பட்ட எழுத்துக்கள் வணிக சாதிக்குரியவாம்.

2. எமனுற் படைக்கப்பட்ட எழுத்துக்கள் சூத்திர சாதிக் குரியவாம்.

இந்த எழுத்துக்கள் அந்த அந்த வருணத்திற்கு ஏற்றபடி முதற்சீரின்கண் வருதல் வேண்டும் என்ப.

3. உயிர்மெய் எழுத்தை ஒற்றுமை நயத்தான் ஒன்றெனக் கொண்ட காலத்தும், வேற்றுமை நயத்தான் உயிரும், மெய்யும் என இரண்டாகக்கொண்ட காலத்தும் அவை, தமக்கு முற்கூறிய பிறப்பும் வருணமுமே பெறும்.

வருணப் பொருத்தத்திற்குக் கூறிய மெய்களும் உயிரோடு கூடிய மெய்களேயாம் எனக்கொள்க. இலக்கண விளக்கத்துப்

10. [1]உயிர்மெய் போல ஒற்றுமிம் முறைபெறும். (கo)

இது மேற்கோள் கூறல்

11. [2]உயிர்மெய் வழக்கம் மெய்வழக் காகும்
வேற்றுமைக் கண்ணே என்றார் பிறரும். (கக)

வருணப்பொருத்தம் அமைக்கும் வகை

12. நால்வகை வருணத் தோர்க்கும் [3]நால்வகை
[4]இயம்பும் எழுத்தை [5]இயம்புவர் முதன்மொழி
[6]மற்றவை மயங்கினும் வரையார் ஆண்டே. (கஉ)

எ. "மக்கட் சாதி நான்கிற்கும் வகுத்த
தத்தஞ் சாதி எழுத்தே அவரவர்க்கு
வைத்துமுன் எடுப்பின் அதுமாண் புடைத்தே
மயங்கினும் வரையார் பயன்பட வரினே"

—இந்திரகாளியார்.

பாட்டியலின் பதினான்காஞ் சூத்திரத்தின் விசேட உரையில் 'ஒற்றெனப் பொதுப்படக் கூறினாரேனும் உயிரோடு கூடிய மெய் யென்றே கோடும்' என்றதையும் ஈண்டு நோக்குக.

1. தனி மெய்எழுத்தும் உயிர்மெய்போலவே பிறப்பும் வருணமும் பெறும்.

2. பிறப்பினும் வருணத்தினும் உயிர்மெய் எழுத்தை வேற்றுமை நயத்தான் இரண்டெனக் கொண்டகாலத்து அதனை (உயிர்மெய் எழுத்தை) வழங்கும் வழக்கம், மெய் எழுத்தை வழங்குதலாகவே கொள்ளப்படும் என்றார் பிறரும்.

மெய் எழுத்தே முதன்மையுற்று நிற்கும் என்பது இதன் கருத்து. இது முன் சூத்திரத்தைத் தழுவாமல் தவளைப்பாய்த் தாய் அதற்கு முன்னுள்ள சூத்திரத்தைத் தழுவியது.

3. நான்கு வகையாக.

4. கூறிய.

5. முதன்மொழியின்கண் கூறுவர்.

6. அவ்வழி, ஒரு வருணத்தினர்க்குரிய எழுத்துக்கள் மற்றொரு வருணத்தினர்க்கு அமைக்கும் முதன் மொழியின்கண் மயங்கிவரினும் அவற்றை நீக்காமல் கொள்வர்; மற்று - அசை.

௩. [1]கதி

13. வானவர் மக்கள் நரகர் விலங்கென
[2]ஊனமில் கதியே ஒருநான் காகும். (௧௩)

அ. "கதியெனப் படுபவை காண்டக விரிப்பின்
தேவர் மக்கள் நரகர் விலங்கென
மேவிய கதிகள் ஈரிரண் டாதும்"
—இந்திரகாளியார்.

க. "தேவர் மக்கள் நரகர் விலங்கென
மேவிய நான்கே எழுத்தியல் கதியே"
—பரணர்.

வானவர் கதிக்குரிய எழுத்துக்கள்

14. அவற்றுள்,
[3]உயிர்க்குறில் வல்லினம் ஈற்றெழுத் தொழியப்
[4]பயிர்ப்புறு வானவர் கதியெனப் படுமே. (௧௪)

[5]'அவைதாம், அஇ உஎ கசட தபக்கள்.'

---

1. அஃதாவது தேவர், மக்கள், விலங்கு, நரகர் என்னும் நால்வகைக் கதிகளுக்குரிய எழுத்துக்களையும், அவற்றுள், முதற் சீரின்கண் வரத்தக்கவற்றையும், வரத்தகாதவற்றையும் கூறும் பகுதி என்பது.

கதி - நிலை. ஈண்டுக் கதி என்பது கதிகளுக்குரிய எழுத்துக்களை உணர்த்த, அவை அவற்றைப் பற்றிக் கூறும் பகுதியை உணர்த்தலின் இருமடியாகு பெயர்.

2. ஊனம் இல் - குற்றமில்லாத.

3. உயிர்க்குறிலினும் வல்லின மெய்யினும் ஈற்றெழுத் தொழியக்கொள்ளும் எழுத்துக்கள் தேவர் கதிக்குரியவாகும்.

4. பயிலல்.

5. இது, முன்னும் பின்னும் உள்ளவற்றை நோக்கிப் புதி தாகச் சேர்க்கப்பட்டது.

கo. *"தேவர் கதியே தேரியுங் காலை
அஇ உஎ கசட தபவே"
—பரணர்.

மக்கட் கதிக்குரிய எழுத்துக்கள்

15. [1]மக்கட் கதியே நெட்டுயிர் நான்கொடு
மிக்க சிறப்பின ஙஞண நமவே. (கரு)

அவைதாம், ஆஈ ஊஏ ஙஞண நமக்கள்.

விலங்கின் கதிக்குரிய எழுத்துக்கள்

16. [2]ஒஓ இரண்டும் யரல றழவெனத்
தொக்கன ஐந்தும் விலங்கின் கதியே. (கசூ)

நரகர் கதிக்குரிய எழுத்துக்கள்

17. [3]ஒழிந்தன ஐஔ ஆய்த வெழுத்தும்
கழிந்தன வளனவும் நரகர் கதியே. (கஎ)

கதிநான்கனுள் முதற்சீரின்கண் வருதற்குரியனவும் வரலாகாதனவும்

18. [4]மன்னுவர் தேவர் மக்கள் செய்யுளுள்
மன்னார் விலங்கொடு நரகர் கதியே. (கஅ)

---

1. நெட்டுயிர் நான்கும், மிக்க சிறப்பை உடையனவாகிய ஙஞணநம என்னும் ஒற்றுக்கள் ஐந்தும் மக்கட் கதிக்குரியவாம்.

2. ஒஓ என்னும் இரண்டுயிர்களும் யரலறழ என்று கூடிய ஒற்றுக்கள் ஐந்தும் விலங்கின் கதிக்குரியனவாம்.

3. உயிர்களுள், எஞ்சிநின்றனவாகிய ஐஔ என்னும் இரண்டுயிர்களும், ஆய்தமும், ஒற்றுக்களுள் எஞ்சி நின்றனவாகிய வளன என்னும் மூன்றொற்றுக்களும் நரகர் கதிக்குரியனவாம்.

'ஐஔ' என்றதனோடு உம்மையைக் கூட்டி 'ஐஔவும்' என்க.

4. நூற்களின் முதற்சீரின்கண் அமைக்கப்படும் பொருத்தங்களுள் ஒன்றாகிய கதிப்பொருத்தத்தில் தேவரும், மக்களும் பொருந்துவர்; விலங்கும், நரகரும் பொருந்தார்.

கக. "விலங்தும் நரதும் விலங்கின வேன்ப"
—இந்திரகாளியார்.

கஉ. [1]"நரதும் விலங்தும் வரைவ ரீண்டே
தேவரு மக்களும் மேவின பாட்டே"

ச. [2]உண்டி

19. அமுதேன விடமேன வருமிரு வகையும்
உணவேனப் [3]புலவர் உரைத்தனர் உளரே. (கக)

விலங்கு நரகர் என்னும் இருதிணையுங்கூடி நரகர் உயர் திணையாதற் சிறப்பான் 'மன்னர்' என்னும் உயர்திணை முடிபை எற்றன.

தேவரும், மக்களும் பொருந்துவர்; விலங்கும் நரகரும் பொருந்தார் என்றிருப்பினும், அவற்றின் கருத்து முதற்சீரின் கண் தேவர்கதியும், மக்கள் கதியும் பொருந்துதற்குரியனவாம்; விலங்கின்கதியும் நரகர்கதியும் பொருந்துதற்குரியனவல்ல என் பனவாம் என்று கொள்க.

1. இச் சூத்திரம் இயற்றினர் பெயர் தெரியவில்லை.

2. அதாவது அமுதம் நஞ்சு என்னும் இருவகை உண்டி களுக்குரிய எழுத்துக்களையும், அவற்றுள், முதற்சீரின்கண் வரத் தக்கவற்றையும், வரத்தகாதவற்றையும் கூறும்பகுதி என்பது.

உண்டி, உணா என்பன ஒரு பொருட் சொற்கள். உண்டி யானது அமுதம் நஞ்சு என இரண்டு வகைப்படும். அவை, அவற்றைப்போல நன்மை தீமைகளைச் செய்யும் எழுத்துக்களை உணர்த்த, அவை அவற்றைப்பற்றிக் கூறும் பகுதியை உணர்த்த லின் இருமடியாகுபெயர்.

3. 'உரைத்தனர் புலவர் உளர்' என இயைக்க. உரைத்த புலவர் உளர் என்பது அதன் பொருள்.

கந. "நஞ்சேன அமுதேன நவிலவும் படுமே"
—பொய்கையார்.

கச. "உணாவே அமுதம் விடமு மாதும்"
—அவிநயனார்.

20. [1]உயிர்க்குறில் நான்கோடு கசதப நமவ
மயக்கற அமுத எழுத்தாகும் என்ப. (உ0)

அவை: அ, இ, உ, எ; க, ச, த, ப, ந, ம, வ.

21. [2]இவ்வுயிர் மெய்யோ டியைந்தன கோளலே. (உக)

---

1. 'உயிர்க்குறில் நான்கொடு கசதபநமவ அமுத எழுத்து, மயக்கற ஆகும் என்ப' என இயைக்க.

இதன் பொருள்: உயிர்க்குறில் நான்கும் இந்த ஒற்றுக்கள் எழும் அமுத எழுத்துக்கள்; இவை முதன் மொழிக்கண் வருதல் ஆகும்என்று மயக்கமறக் கூறுவர் புலவர் என்பது.

'உயிர்க்குறில் நான்கும், கசதப நமவவும்' என்க. ஒடு-எண்ணிடைச் சொல். முதன்மொழி என்பது எதனாற் பெறுதும் எனின், முதற்கண் கூற எடுத்துக்கொண்ட வருணப்பொருத்தங் கூறிய சூத்திரங்களுள் ஒன்றாகிய 'நால்வகை வருணத்தோர்க்கும்' என்னும் சூத்திரத்தின்கண் கூறிய 'முதன்மொழி' என்பது அதிகாரப்பட்டு நின்றமையின் பெறுதும் என்பது. அஃது அதிகாரப்பட்டு நின்றவாறென்னை? எனின், இப்பொருத்தங்கள் யாவும் முதன்மொழிக்குரியவாகலின், அஃது அதிகாரப்பட்டு நின்றது என்க. அவ்வுயிர்க்குறில் நான்கும் இச் சூத்திரத்தின் கீழ்க்கூறப்பட்டன. பாட்டியல் நூலார் முதற்சீரை முதன் மொழி என்றும் ஆளுப.

2. அமுதம் என்று சொல்லப்பட்ட இந் நான்கு உயிர்க் குற்றெழுத்தும் மெய் எழுத்தோடு சேர்ந்துவரின், அவற்றையும் கொள்க.

22. [1]ஆஓ இரண்டும் யரல மூன்றும்
தாவிலிவ் விருவகைக் கூட்டத் தியைந்தவும்
அளவும் ஆய்தமும் ஐவகைக் குறுக்கமும்
உளமலி புலவர் உரைத்தனர் நஞ்சென்
றவையொரு பெயர்மருங் கணைய நிற்பின்
நவையுறு துஞ்சலும் நடுக்கமுஞ் செய்யும். (உஉ)

23. [2]இருவகைக் கூட்டத் தியைந்தமேற் கூறிய
ஆகார ஓகாரத் தோடியர லக்கள்
என்னும் ஒற்றேடும் இயைந்த [3]வுயிர்அளபெடை.

---

1. ஆஓ என்னும் உயிர்கள் இரண்டும், யரல (ய், ர், ல்) என்னும் ஒற்றுக்கள் மூன்றும், 'நீங்குதல் இல்லாத இவ்வுயிர்கள் இரண்டும் ஒற்றுக்கள் மூன்றும் கூடுவதனுல் உளவாகும் உயிர் மெய்யெழுத்துக்களும், அளபெடையும், ஆய்தமும், ஐவகைக் குறுக்கமும் நஞ்சு எழுத்துக்கள் என்று மனத்தின்கண் அன்பு மிக்க புலவர்கள் உரைத்தார்கள்; அவ்வெழுத்துக்கள், முதன் மொழியின்கண் வரும் பாட்டுடைத் தலைவனது ஒப்பற்றதாகிய பெயரினிடத்தில் பொருந்தி நின்றால், அத் தலைவனது குடும்பத் திற்கு இழிவு உண்டாதற்குக் காரணமாகிய இறப்பையும் நடுக் கத்தையும் உண்டாக்கும்.

'என்று உரைத்தனர்' என இயைக்க. முதன் மொழியின் கண் வரும் பெயர் என்க. ஈண்டுப் பெயர் என்றது பாட்டுடைத் தலைவன் பெயரை. அப் பெயர் அந் நூலின்கண் முதன்மையுற்று நிற்றலின் ஒரு பெயர் எனப்பட்டது. 'மருங்கில் அணைய' என எழனுருபு சேர்த்துப்பொருள் கொள்க. நவை - இழிவு. பாட் டுடைத் தலைவன் இறந்தால் இழிவு உளதாவது அவன் குடும்பத் திற்காதலின், 'அவன் குடும்பத்திற்கு என்பது வருவித்துரைக் கப்பட்டது. குடும்பத்திற்கிழிவாவது அக் குடும்பம் செல்வம் முதலியவற்றில் தன்னிலையினின்று தாழ்தல்.

2. 'இருவகைக் கூட்டத்து...ஒற்றெடும் இயைந்த' இரு வகைக் கூட்டத்து இயைந்தவையாவை எனின், முன்னே சொல்

24. [1]ஐவகைக் குறுக்கமும் அறையுங் காலை
இகர உகர ஐகார ஔகார
மகரம் என்னும் இவற்றின் குறுக்கம். (உச)

லப்பட்ட ஆகாரம் ஓகாரம் என்னும் இரண்டு உயிர்களும், யரல (ய்,ர்,ல்) என்னும் மூன்று ஒற்றுக்களும் தம்முள் இயைந்து வரும் எழுத்துக்களாம்.

வச்சணந்திமாலை, முதன்மொழியியலின் எட்டாம் வெண் பாவில்,

'தெரிந்த யாலமேற் சேர்ந்தஆ ஓவும்'

என்றதையும், இலக்கண விளக்கப்பாட்டியலின் இருபதாஞ் சூத் திரத்தில்,

'யரலள என்னும் எழுத்தினை ஊர்ந்த
ஆவும் ஓவும்'

என்றதையும் ஈண்டு நோக்குக.

இனி இதற்கு, இருவகைக் கூட்டத்து இயைந்தவை யாவை எனின், முன்னே சொல்லப்பட்ட ஆகாரமும் ஓகாரமும் கூடிய மெய்களும், யரல (ய், ர், ல்) என்னும் ஒற்றுக்கள் கூடிய உயிர் களுமாம் என்று பொருள் கொள்ளலுமாம்.

ஈண்டுக் கூடிய மெய்களும், கூடிய உயிர்களும் என்றது எல்லா மெய்களையும், எல்லா உயிர்களையும் எனக் கொள்க. ஈண்டு,

'நஞ்சாம் ஒற்றெடு நடந்த உயிர்களும்
வஞ்சமில் புலவர் மறுத்திலர் என்ப'

எனப் பின்னர்வரும் இந்திரகாளியார் மேற்கோட் சூத்திரத்தை யும் நோக்குக.

3. அளபெடையாவது உயிர் அளபெடையாம்.

1. ஐவகைக் குறுக்கமாவன: குற்றியல் இகரம், குற்றியல் உகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் என்பன.

கசு. "ஆஒ யரல முதலிய அளபெடை
ஆய்தம்ஐங் குறுக்கம் உளப்பட வெல்லாம்
விடமென மொழிப மெய்யுணர்ந் தோரே"

—பரணர்.

கரு. "நஞ்சாம் ஒற்றொடு நடந்த உயிர்களும்
வஞ்சமில் புலவர் மறுத்திலர் என்ப"

கஎ. "இருவகை உண்டியென் றெடுத்தன அல்ல
தாமே நிற்பினும் தோமில என்ப"

கஅ. "நஞ்சும் அமுதாம் மங்கலம் புகினே"

கசு. "அமுதெழுத் தென்ற ஆதியுயிர் நான்கோடும்
புணர்ந்த மெய்யை உணர்ந்தமு தென்ப"

உ0. "மெய்யாம் அமுதின் மேவிய உயிரும்
பொய்தீர் புலவர் பொருந்தின என்ப"

—இந்திரகாளியார்.

ரு. [1]பால்

25. ஆண்பால் பெண்பால் அலியென நின்ற
மூன்றே பாலென மொழிந்தனர் புலவர். (உரு)

---

1. அஃதாவது ஆண் பெண் அலி என்னும் 'முப்பால்களுக்குரிய எழுத்துக்களையும், அவற்றுள், முதற்சீரின்கண் வரத் தக்கவற்றையும் வரத்தகாதனவற்றையும் உணர்த்தும் பகுதி என்பது.

ஈண்டுப் பால் என்பது பாலுக்குரிய' எழுத்துக்களை உணர்த்த, அவை, அவற்றை உணர்த்தும் பகுதியை உணர்த்தலின், இருமடியாகுபெயர்.

26. [1]இருவகை ஐங்குறில் ஆண்பால் என்ப. (உசா)

உக. [2]"அகரமோ டைங்குறில் என்றூர் ஆண்பால்"

27. நெடிலேழ் இருவகை பெண்பால் என்ப. (உஎ)

28. ஒற்றும் ஆய்தமும் அலியெனப் படுமே. (உஅ)

உஉ. [3]"ஒற்றின் வருக்கமும் ஒன்பதிற் றிரட்டியும்
பெற்ற ஆய்தமும் பேடெனப் படுமே"

29. அவ்வவ் வெழுத்தே [4]அப்பாற் குரிய
விரவினும் வரையார் அலியெழுத் தொழித்தே.

உங. [5]"அவ்விரு பாற்கும் அலியெழுத் தாகா
தம்முள் மயங்கினும் தாவின் றென்ப"

உச. "உயிரீ ராறும் ஆணென மொழிப
உயிர்மெய் யெல்லாம் பெண்ணென மொழிப
உடம்பெழுத் தெல்லாம் நபுஞ்சக மாதும்"
—பொய்கையார்.

---

1. உயிர்க்குறில் ஐந்தும், உயிர்மெய்வருக்கம் பதினெட்டின் ஒவ்வொரு வருக்கத்தினும் உள்ள உயிர்மெய்க்குறில் ஐந்து ஐந்தும் ஆண்பாலாம் என்பது.

இருவகை - உயிர், உயிர்மெய் என்னும் இருவகை. மேற் கூறப்படும் நெடிலுக்கும் 'இருவகை' என்பதை இவ்வாறே கொள்க.

2. இச் சூத்திரம் இயற்றினர் பெயர் தெரியவில்லை.

3. இச் சூத்திரம் இயற்றினர் பெயரும் தெரியவில்லை.

4. அவ்வப்பாற்கு உரிய.

5. இச் சூத்திரம் இயற்றினர் பெயரும் தெரியவில்லை.

௬. [1]தானம்

30. [2]குறிலொடு நெடிலில் கூட்டி நின்ற
ஐஔ இரண்டும் இஉ அடக்கிப்
பால குமார அரசு மூப்பு
மரணமென் றைவகைத் தானம் வகுத்தனர். (௩௰)

உரு. "முன்பிற் செய்யுள் முதலெழுத் ததற்குப்
பொருத்தமும் விருத்தமும் பகையுங் கோளலே"
—அகத்தியர் பாட்டியல்.

31. [3]நட்பே உதாசீ னம்பகை என்னும்
ஒப்புடைக் குறிப்பின் ஒருமூன் றாகும். (௩௧)

---

1. அஃதாவது, பாலன், குமாரன், அரசன், மூப்பு, மரணம் என்னும் ஐவகைத்தானங்களுக்குரிய எழுத்துக்களையும், அவற்றுள், முதற்சீரின்கண் வரத்தக்கவற்றையும் வரத்தகாதவற்றையும் உணர்த்தும் பகுதி என்பது.

ஈண்டுத் தானம் என்பது தானத்திற்குரிய எழுத்துக்களை உணர்த்த, அவை, அவற்றைப்பற்றிக்கூறும் பகுதியை உணர்த்தலின், இருமடியாகுபெயர்.

2. அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து குற்றெழுத்துடன் முறையே இனம் ஒத்தனவாகிய ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்னும் ஐந்து நெட்டெழுத்துக்களைச் சேர்த்து, ஒத்த இனம் இன்மையின், எஞ்சிநின்ற ஐ ஔ என்னும் இரண்டு நெட்டெழுத்துக்களையும் முறையே இகரக்கூற்றினும் உகரக்கூற்றினும் அடக்கிப் பாலன், குமாரன், அரசன், மூப்பு, மரணம் என்னும் ஐவகைத் தானங்களை வகுத்தார்கள் புலவர்கள்.

புலவர்கள் என்னும் எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது.

3. (நூற்பொருளோடு) பொருந்துதலை உடைய (புலவர்களின்) கருத்தின்படி (அவ்வைவகைத் தானமும்) நட்பும், உதாசீனமும், பகையும் என்னும் மூன்று வகையாகும்.

மேற்கூறிய ஐந்துதானமும் இம்மூன்று வகையினுள் அடங்கும் என்பது. உதாசீனம்-பராமுகஞ் செய்தல்; இகழ்தலுமாம்.

32. [1]பால குமார அரச வென்னும்
மூவகைத் தானமும் நட்பெனப் படுமே. (௩௨)

33. [2]ஒழிந்த இரண்டும் உதாசீ னம்பகை. (௩௩)

34. [3]பாட்டுடைத் தலைவன் இயற்பெயர் முன்னெழுத்துப்
பால னாக நால்வகை எழுத்தும்
வட்டமாய் முறையின் இயலும் என்ப. (௩௪)

---

1. பாலன், குமாரன், அரசன் என்னும் மூன்று தானமும் நட்பென்று சொல்லப்படும்.

2. எஞ்சிநின்ற மூப்பு, மரணம் என்னும் இரண்டு தானமும் முறையே உதாசீனமும், பகையுமாகும்.

மூப்பு உதாசீனமாம் எனவும், மரணம் பகையாம் எனவுங் கொள்க.

மூப்பு உதாசீனம் எனப்பட்டது, அஃது உதாசீனஞ் செய்யப்படுதற்குரியதாகலின்.

மூப்பு உதாசீனஞ் செய்யப்படுதற்குரியது என்பதனை,

"முதுகு பற்றிக் கைத்த லத்தால் முன்னொரு கோலூன்றி
விதிர்வி திர்த்துக் கண்சு ழன்று மேற்கிளை கொண்டிருமி
இதுவென் னப்பர் மூத்த வாறென் றிளையவ ரேசாமுன்
மதுவுண் வண்டு பண்கள் பாடும் வதரிவ ணங்குதுமே"

(பெரிய திருமொழி 1-ஆம் பத்து, 3-ம் திருமொழி, பாசுரம் 2.) என்னுந் திருமங்கை ஆழ்வார் அருளிச்செயலான் அறிக.

பாலன், குமாரன், அரசன் என்னும் மூன்றும் யாவரும் விரும்பி நட்புச் செய்தற்குரியனவாகலின், நட்பெனப்பட்டன. மரணம் கையறு நிலையை விளைவிப்பதாதலின், பகை எனப்பட்டது.

நட்பு முதலிய மூன்றனுள், நட்பும், உதாசீனமும் முறையே பொருத்தம், விருத்தம் என்றுங் கூறப்படும். அதனை மேற்காட்டிய அகத்தியர் பாட்டியற் சூத்திரத்தினால் அறிக.

3. பாட்டுடைத் தலைவனது இயற்பெயரின் முதல் எழுத்தைப் பாலனாகக் கொள்ள, மற்றை நான்கு கூற்றெழுத்தும் முறையே (வலமுற) வட்டமாய்க் குமாரன், அரசன், மூப்பு மரணம் என்னும் நான்குவகைத் தானமாகி நடக்கும் என்று சொல்லுவர் புலவர் என்பது.

உசு. "பெயர்முத லெழுத்துப் பால னாக
நால்வகை எழுத்தினும் வட்ட மாக
முறையே நட்புதா சீனம் பகைவரும்"

அ

உஎ. "அகாரந் தனக்காய நட்பென் றுரைப்ப
இகா உகாரங்கள் தாம்"

உஅ. "அகாக் கேகாரம் உதாசீன மாதும்
அகாக் கோகாரம் பகை"

இ

உகூ. "உகாரம் எகாரம் எனவிரண்டும் என்ப
இகாரந் தனக்காய நட்பு"

௩0. "இகாக் கோகாரம் உதாசீன மாதும்
இகாக் ககாரம் பகை"

உ

௩க. "உகா எழுத்துக்கு நட்பாய் வருமே
எகா ஒகாரங்கள் தாம்"

௩உ. "உகாக் ககாரம் உதாசீனம் என்ப
உகாக் கிரகம் பகை"

எ

௩௩. "எகாக் கோகாரம் அகாநட் பாதும்
இகாம் உதாசீன மாம்"

௩ச. "எகாந் தனக்குப் பகையென் றுரைப்ப
துகா எழுத்தென் றுணர்"

'இயற்பெயர் முன்னெழுத்துப் பாலனாக,' என்றதனால், மற்றை நாற்கூற்றெழுத்தின் தானங்களும் வருவித்துரைக்கப் பட்டன.

மூப்பை உதாசீனம் என்றும், மரணத்தைப் பகை என்றும் கூறியதனால் அவ்விரண்டும் விலக்கற்குரியனவாம் என்று கொள்க.

'உரையிற்கோடல்' என்பதனான், இயற்பெயரின் முதலெழுத்தினை முதற்சீரினது முதலெழுத்தோடு சார்த்தி அவ்வை வகைத்தானமும் வகுத்தறிதல் வேண்டும் என்று கொள்க. எங்ஙனம் எனின், பொன்னன் என்பது ஒருவர் இயற்பெயராயின், அதன்முதல் எழுத்து ஒகரமாதலின், அதனைப் பாலனாகக்

ஒ

௩௫. "ஒகா எழுத்துக் ககர எழுத்தும்
இகர எழுத்தும்நட் பாம்"

௩௬. "ஒகாக் துகரம் உதாசீன மாதும்
எகரம் பகையாம் எனல்"

௩௭. "நட்புப் பகையாம் பகையுநட் பாமவை
வைத்த முறையே கொளல்"

—கல்லாடனார்.

கொண்டு, முதற்சீரின் முதற்கண் ஒகரக்கூற்றின் ஒன்றுவரின் அதனைப் பாலனாகவும், அகரக்கூற்றின் ஒன்றுவரின் அதனைக் குமரன் எனவும், இகரக்கூற்றின் ஒன்றுவரின், அதனை அரசன் எனவும், உகரக்கூற்றின் ஒன்றுவரின், அதனை மூப்பு எனவும், எகரக்கூற்றின் ஒன்றுவரின், அதனை மரணம் எனவும் கொள்ளுதல் வேண்டும் என்றறிக.

மற்றைக் கூற்றெழுத்துக்களுக்கும் இவ்வாறே ஐவகைத் தானங்களையும் வகுத்துக்கொள்க.

ஐவகைத் தானங்களையும் வகுத்துக்கொள்ளு முறை இஃதாதலை,

"குற்றெழுத் தைந்தும் ஒத்தநேட் டெழுத்தோடும்
ஐஔ என்னும் ஆயீ ரெழுத்தை
இஉ என்னும் இரண்டோடுஞ் சேர்த்திப்
பால குமரா இராச விருத்தம்
மரணம் என்ன வகுத்திறை வன்பெயர்
முதலெழுத் தினைமுதற் பொருத்தம தாக
முதற்சீ ரிடத்து முதற்க ணின்ற
எழுத்தொடு தாக்கி இடமுதல் மூன்றும்
விழுத்தகு மூப்பும் மரணமும் விலக்கே"

என்னும் இலக்கண விளக்கப்பாட்டியலின் இருபத்துமூன்றாஞ் சூத்திரத்தானும் அதன் உரையானும் அறிக.

இனி நட்பு, உதாசீனம், பகை என்பவற்றை வகுக்கும் முறை யாது எனின், ஒகரத்துக்கு அகரக்கூறும், இகரக்கூறும் நட்பாம் எனவும், உகரக்கூறு உதாசீனமாம் எனவும், எகரக்கூறு பகையாம் எனவும் அறிக. மற்றவற்றையும் இங்ஙனம் அறிந்தமைக்க. அவற்றைப் பின்வரும் கல்லாடச் சூத்திரங்கள் நன்கு விளக்கியுரைக்கின்றன. அவற்றை நன்கு நோக்குக.

எ. [1]கன்னல்

35. [2]குணபாற் பரிதி [3]தேன்பால் இயமன்
[4]குடபால் வருணன் [5]வடபாற் சோமன்
[6]திசைமுகன் நடுவாம் தெய்வ நிலைகளில்
குறிலந் தமைத்து முதல்மூன்றும் கொள்கென
[7]நெறியறி புலமை அறிஞர்நேர்ந் தனரே. (௩௫)

௩௮. அருக்கன் இயமன் வருணன் சோமன்
பிரமனும் தெய்வ நிலையெனப் பேசுவர்.

௩௯. "அகர முதலாக முறையான் எய்தவத்
தெய்வந் தம்மேல் வைக்கப் படுமே"
—கபிலர்.

36. உரைத்த குறிலந் தோரோவொன் றுக
[8]அருக்கனே டாகுமவ் வாறு நாழிகை. (௩௬)

37. அகரந் தானே அருக்கனே டுதிப்ப
இகரம் இன்புற வெய்தி இருக்கும்
உகரம் நடக்கும் எகரம் உறங்கும்
ஒகரம் துஞ்சுமென் றுரைத்தனர் புலவர். (௩௭)

௪௦. "அவரவர் பெயர்முதல் எழுத்துவந் துதிப்ப
அவரவர்ப் பாடின் ஆக்கந் தருமே"
—இந்திரகாளியார்.

38. இராப் பொழு திற்கும் இவ்வகை கொள்க. (௩௮)

---

1. நாழிகை, 2. கிழக்கு, 3. தெற்கு, 4. மேற்கு, 5. வடக்கு. 6. பிரமன், 7. (நூற்களின்) முறையை உணர்ந்த புலமையை உடைய அறிஞர்கள் உடன்பட்டார்கள். 8. சூரியன்.

அ. [1]புள்

39. ஐவகைக் குறிலும் அகர முத லாக
வல்லூ ருந்தை [2]வலியன் குருகே
[3]மெல்லியல் மயிலென விளம்பினர் இவற்றின்
பொருத்தமும் விருத்தமும் பகையும் பலனும்
விரித்தினி தெண்ணி மேவினர் கொளலே. (௩௯)

சக. "என்னைப்பட்ட அகாழத லைந்தும்
வல்லூ றந்தை வலியான் குருகே
மெல்லியன் மயிலென விளம்பிய வியந்கையிற்
புள்ளென விளம்பும் புலவரு முளரே"
—பரணர்.

கூ. [4]நாள்

40. [5]மொழிக்கு முதலா ஆகிய எழுத்துக்
கோதிய நாள்வகை இயற்றுதல் கடனே. (௪0)

---

1. பறவை, 2. கரிக்குருவி, 3. மென்மையாகிய தன்மையை உடைய மயில்.

கன்னல், புள் என்னும் இவ்விரு பொருத்தங்களையும் அமைக்கு முறையை வல்லார்பாற் கேட்டறிக. இவ்விரு பொருத்தங்களும் வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல் என்னும் இப்பாட்டியல்களிற் கூறப்படவில்லை. இவற்றைக் கூறும் வேறு பாட்டியல்கள் உளவாயின் கண்டறிக.

4. அஃதாவது நாளுக்குரிய எழுத்துக்களையும், அவற்றுள், முதற்சீரின்கண் வரத்தக்கவற்றையும் வரத்தகாதவற்றையும் கூறும் பகுதி என்பது.

நாள் என்பது ஈண்டு நாளுக்குரிய எழுத்துக்களை உணர்த்த, அவை, அவற்றைப்பற்றிக் கூறும் பகுதியை உணர்த்தலின், இருமடியாகு பெயர். நாள்-உடு.

5. முதற்சீரின் முதற்கண் பொருந்திய மொழிக்கு அமைத்தற்குரியவை எனப் பாட்டியல் நூற்களால் கூறப்பட்

41. [1]உயிர்முதல் நான்கும் செயிர்தபு கார்த்திகை
ஐந்தும் மூன்றும் அவற்றின் அடைவே
வந்தபூ ராடம் உத்திரா டம்மே. (சக)

42. [2]ககர வருக்க வகைநாள் விரிப்பின்
நான்கும் இரண்டும் மூன்றும் மூன்றும்
ஓணம் ஆதிரை புனர்பூசம் பூசம். (சஉ)

டனவாகிய பாட்டுடைத் தலைவன் இயற்பெயருக்குரிய நாள், பிறந்தநாள் என்னும் இவற்றில் ஒன்றேனும் அவ்விரண்டுமேனும் பொருந்த அமைத்தல் கடமையாம் என்பது.

நாள் என்னாது நாள்வகை என்றது, பாட்டுடைத் தலைவன் இயற்பெயருக்குரிய நாளேனும், பிறந்த நாளேனும், அவ்விரண்டு மேனும் கொள்ளுதலாம் என்பதனை அறிவித்தற்கு எனக் கொள்க. அதனை இந்நூலிற் பின்வரும்,

"சிறந்தசீர்த் தலைவன் பிறந்தநா ளாயினும்
பெயர்நா ளாயினும் இயலுற உணர்ந்தபின்
ஒன்றற் கேனும் இரண்டற் கேனும்
மூன்றிகழ் பொருத்தம் மொழிவது கடனே"

என்னும் மேற்கோட் சூத்திரத்தான் அறிக.

1. உயிர் பன்னிரண்டனுள், அ, ஆ, இ, ஈ. என்னும் முதல் நான்குயிரும் கார்த்திகை நாளுக்கு உரியவாம்; அவற்றின், உ, ஊ, எ, ஏ, ஐ என்னும் ஐந்தும், ஒ, ஓ, ஔ என்னும் மூன்றும் முறையே பூராடம், உத்திராடம் என்னும் நாட்களுக்கு உரிய வாம்.

'அவற்றின் ஐந்தும் மூன்றும் அடைவே வந்த பூராடம், உத்திராடம்' என இயைக்க.

2. ககர வருக்கத்து எழுத்துக்களுள், க கா கி கீ என்னும் நான்கும், கு கூ என்னும் இரண்டும், கெ கே கை என்னும் மூன்றும், கொ கோ-கௌ என்னும் மூன்றும் முறையே திருவோணம், திருவாதிரை, புனர்பூசம், பூசம் என்னும் நாட்களுக்கு உரியவாம்.

43. [1]சகர நான்கைந் தோருமூன் றிவற்றின்
வகைநாள் இரேவதி முதன்மூன் றென்ப. (சரு)

44. [2]ஞகர வருக்கத் தோருமூன் றவிட்டம்
[3]ஞா,ஞெ,ஞொ. (உ-ம்.) ஞாலம், ஞெகிழி, ஞொள்கல்.

45. [4]தகர வருக்கத் திரண்டேழ் மூன்றற்கு
வகைநாள் சோதி விசாகம் சதயம். (சரு)

46. [5]நகரத் தாறும் அநுடத் தனவே
ஏனை ஆறும் கேட்டைபூ ரட்டாதி. (சசு)

---

1. சகர வருக்க எழுத்துக்களுள், ச சா சி சீ என்னும் நான்கும், சு சூ செ சே சை என்னும் ஐந்தும், சொ சோ சௌ என்னும் மூன்றும் முறையே இரேவதி, அச்சுவினி, பரணி என்னும் நாட்களுக்கு உரியவாம்.

இரேவதி முதலிய மூன்று நாட்கள்: இரேவதி, அச்சுவினி, பரணி என்பன.

2. ஞகர வருக்க எழுத்துக்களுள், ஞா ஞெ ஞொ என்னும் மூன்றும் அவிட்ட நாளுக்கு உரியவாம்.

3. வெண்பாப்பாட்டியல் உரையாசிரியர் ஞகர வருக்கத்து மூன்றெழுத்துக்கள் ஞ ஞா ஞெ என்று கொண்டார்.

4. தகர வருக்க எழுத்துக்களுள், த தா என்னும் இரண்டும், தி தீ து தூ தெ தே தை என்னும் ஏழும், தொ தோ தௌ என்னும் மூன்றும் முறையே சோதி, விசாகம், சதயம் என்னும் நாட்களுக்கு உரியவாம்.

5. நகர வருக்க எழுத்துக்களுள், ந நா நி நீ நு நூ என்னும் ஆறும் அநுடநாளுக்கு உரியவாம்; மற்றை ஆறனுள், நெ நே நை என்னும் மூன்றும், நொ நோ நௌ என்னும் மூன்றும் முறையே கேட்டை, பூரட்டாதி என்னும் நாட்களுக்கு உரியவாம்.

47. [1]பத்திய பகரத் தோருநான் கிரண்டா
றுத்திரம் அத்தம் சித்திரை ஆகும். (சஎ)

48. [2]மகரத் தாறும் மூன்றும் மூன்றும்
மகமா யிலியம் பூரம் ஆகும். (சஅ)

49. [3]யாவே உத்திரட் டாதி ஏனை
யூயோ மூலமேன் றுணர்ந்திசி னோரே. (சகூ)

சஉ. [4]யூயோ இரண்டும் மேனுள் மூலம்
யாவே உத்திரட் டாதிநாள் பெறுமே.

50. [5]ஒருநான் குரோகணி வகரம் அவ்வகை
மற்றை நான்கும் மகசிரம் ஆகும். (ரு0)

---

1. பகர வருக்க எழுத்துக்களுள், ப பா பி பீ என்னும் நான்கும், பு பூ என்னும் இரண்டும், பெ பே பை பொ போ பௌ என்னும் ஆறும் முறையே உத்திரம், அத்தம், சித்திரை என்னும் நாட்களுக்கு உரியவாம்.

2. மகர வருக்க எழுத்துக்களுள், ம மா மி மீ மு மூ என்னும் ஆறும், மெ மே மை என்னும் மூன்றும், மொ மோ மௌ என்னும் மூன்றும் முறையே மகம், ஆயிலியம், பூரம் என்னும் நாட்களுக்கு உரியவாம்.

3. யகர வருக்க எழுத்துக்களுள், யா என்பது உத்திரட்டாதி நாளுக்கு உரியதாம்; யூ யோ என்னும் இரண்டும் மூல நாளுக்கு உரியவாம்.

4. இச் சூத்திரம் இயற்றினர் இன்னர் என்பது தெரிந்திலது.

5. வகர வருக்க எழுத்துக்களுள், வ வா வி வீ என்னும் நான்கும் உரோகணி என்னும் நாளுக்கு உரியவாம்; வெ வே வை வௌ என்னும் நான்கும் மிருகசிர நாளுக்கு உரியவாம். மகசிரம் - திரிபு.

51. [1]மூவகை யாய்ச்சேய் தோன்றுமுன் றைந்தேழ்
அட்டம ராசி வைநா சியத்தால்
விட்டனர் பின்னர் மேவினர் கோளலே. (ருக)

---

1. மேற்கூறப்பட்ட இருபத்தேழு நாட்களையும், பாட்டுடைத் தலைவன் இயற்பெயருக்குரிய நாளையேனும் பிறந்த நாளையேனும் தொடங்கி ஒன்பது ஒன்பதாக மூன்று கூறாக்கி, அம் மூன்று கூற்றினும் ஒன்று, மூன்று, ஐந்து, எழ் என்னும் எண்ணின்கண் வந்த நாட்களையும், பாட்டுடைத் தலைவன் இயற்பெயருக்குரிய நாளின் அல்லது பிறந்த நாளின் இராசிக்கு எட்டாம் இராசிக்கண் அமைந்த இரண்டேகால் நாட்களையும், எண்பத்தெட்டாங்கால் பொருந்திய வைநாசிக நாளையும் விட்டு மற்றவற்றை விரும்பிக்கொள்க என்பது.

அம்மூன்று கூறுகளில் முதற்கூறு சன்மம் என்றும், இரண்டாம் கூறு அநுசன்மம் என்றும், மூன்றாம் கூறு உபசன்மம் என்றும் கூறப்படும். விட்டனர், மேவினர் என்பன முற்றெச்சங்கள்.

இலக்கண விளக்கப்பாட்டியலில்,

"இறைவன் பெயர்முதல் எழுத்தை நோக்கி
உறுநா ளினைஒழ வொன்ப தாக்கி
ஒன்றுமுன் றைந்தே ழொருமூத் திறத்தினும்
ஒன்ற வண்ணாம் உரைமுதற் சீர்க்கே"

எனவும்,

"எட்டா மிராசியும் வைநா சிகமும்
விட்டு முதற்சீர் ளிளம்புதல் மரபே"

எனவும் வரும் 36, 37 ஆம் சூத்திரங்களையும் அவற்றின் உரைகளையும் ஈண்டு நோக்குக.

வெண்பாப்பாட்டியல், முதன்மொழி இயலின் பதினெட்டாம் சூத்திர உரையும் ஈண்டு நோக்கற்குரியதாகும். அது வருமாறு:

"சொல்லிய நாள் இருபத்தேழையும், ஒன்பது ஒன்பதாக மூன்று கூறாக்கிப் பாட்டுடைத் தலைமகன் இயற்பெயரின் முத

52. [1]இரண்டிரண்டா றெட்டோன் பானெனத்
திரண்ட நாளே செல்வம் புகுதரும். (ரு௨)

சங. [2]"நன்மை பொருள்பே றின்பந் தருமெனத்
தொன்னெறிப் புலவர் உரைத்தனர் துணிந்தே"

சச. [3]அவை,
மூவகை ஒன்பதின் முதல்முத னாளாம்.

சரு. [4]"சிறந்தசீர்த் தலைவன் பிறந்தநா ளாயினும்
பெயர்நா ளாயினும் இயலுற உணர்ந்தபின்
ஒன்றற் கேனும் இரண்டற் கேனும்
[5]மூன்றிகழ் பொருத்தம் மொழிவது கடனே"

லெழுத்தின் நாளைத் தொடங்கிக் கூறுகளை எண்ண, ஒன்று, மூன்று, ஐந்து, எழ்வரிற் பொருந்தா; அல்லாத நாட்களுட் பாட்டுடைத்தலைவன் பெயர் முதல் எழுத்தின் இராசி தொடங்கி எட்டாம் இராசி நாட்களும் பொருந்தா; வயிஞசியமாகிய எண் பத்தெட்டாங்கால் நின்ற நாளும் பொருந்தா"

நாட்களைப் பாட்டுத்தலைவன் நாள் தொடங்கி வகுக்காமல் கார்த்திகை முதலாகச் சொல்லிய முறைப்படியே வகுக்கவேண்டும் என்பது இவ்வுரையின் கருத்தாகும்.

1. இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, ஒன்பது என்னும் எண்களிற் பொருந்தும் நாட்களை அமைத்தால் செல்வம் உண்டாகும்.

நாட்களை அமைத்தல் என்பதற்கு நாட்களுக்குரிய எழுத்துக்களை அமைத்தல் என்று பொருள் கொள்க. முன்னே நாட்களைவிட்டு என்றதற்கும் இங்ஙனமே பொருள் கொள்க.

2, 3, 4 இச்சூத்திரங்களை இயற்றினோர் இன்னார் என்பது தெரிந்திலது.

5. மூன்று, ஐந்து, எழு என்னும் மூன்றையும் விட்ட பொருத்தம் என்ப. இச் சூத்திரப்பொருளையும் இந் நூலின் ஐம்பத்துநான்கு, ஐம்பத்தைத்தாஞ் சூத்திரங்களின் பொருளையும் நன்கு நோக்குக.

எழுத்தியல் முற்றிற்று.

2. [1]சொல்லியல்

53. [2]நவையறு சீர்க்கண மங்கலச் சொற்பெயர்
இவையொரு நாளுக் கியம்புதல் சொல்லியல். (௬)

க. [3]சீர்க்கணம்

54. [4]ஈரசைச் சீரே மூவசைச் சீரே
நாலசைச் சீரே ஓரசைச் சீரென
சீர்வகை நான்கும் தெரிந்தனர் புலவர். (௨)

55. ஈரசை அகவல் மூவசை நான்கு
நேரிறில் வெள்ளை நிரையிறில் வஞ்சி
நாலசை பொதுமற் றோரசைச் சீரே. (௩)

---

1. முதற்சீரின்கண் அமைத்தற்குரிய சொல்லினது பொருத்தம் கூறும் இயல் என்பது.

சொல் என்பது ஈண்டுப் பொருளாகு பெயராய்ப் பொருத்தத்தை உணர்த்தியது.

2. முதற் சீருக்கு உரியனவாகிய கணமும், மங்கலமும், பாட்டுடைத் தலைவன் பெயர்ப் பொருத்தமும் ஆகிய இம் மூன்றையும் கூறுதல் சொல்லியலினது முறைமையாகும் என்பது.

எழுத்தியலின் இரண்டாஞ் சூத்திரத்திற்கூறிய 'இயம்புதல் கடனே' என்றதை ஈண்டுங் கூட்டுக.

3. அதாவது, சீருக்குரியனவாகிய கணத்தைப் பற்றிக் கூறும் பகுதி என்க.

ஈண்டுக் கணம் என்பது காரியவாகு பெயராய்க் கணத்தைப் பற்றிக் கூறும் பகுதியை உணர்த்திற்று. இப் பொருத்தம் சீரினையே நோக்கிக் கூறப்படுவது ஆகலின், சீர்க்கணம் எனப்பட்டது.

4. ஈரசைச் சீர்முதல் ஓரசைச் சீர்வரையினும் சீர் நான்கு வகைப்படும் என்பது.

56. [1]மூவசை எண்சீர்க் கணம்என மொழிந்தனர்
ஈரசை நாலசை ஓரசை ஒழித்தே. (ச)

சகு. "கணமே மூவசைக் கூட்டம் ஆகும்"

—கபிலர்.

சஎ. "முற்பாட் டெடுப்பின் முதலீ ரசைச்சொல்
சொற்பான் மங்கலச் சொல்லொடு தோன்றி
நிற்பினும் கொள்ளார் நெறியுணர்ந் தோரே"

சஅ. "நன்மைசெய் கடவுள் நாடின் அவற்றிற்குத்
தொன்னெறி மரபின் இன்மையானே
நாலசைச் சீரும் மேலோ ரொழித்தனர்"

—இந்திரகாளியார்.

57. [2]நீடிய மானன் திங்கள் நிலம்நீர்
சூரியன் [3]வானம் [4]அங்கி [5]காற்று [6]என
இயம்பினர் தெய்வம் நலம்பெறு புலவர். (ரு)

58. [7]நேரசை மூன்றிய மானன் அதற்குச்
சீர்புனை நாளே பரணி வாழ்நாள்
மற்றது பயக்குமென் றுய்த்துரைத் தனரே. (சு)

---

1. ஈரசை, நாலசை, ஓரசைச் சீர்களை ஒழித்து, மூவசை யான் ஆகிய எட்டுச் சீர்களையே கணம் என்று கூறினர்கள் புலவர்கள்.

2. இயமானன் - ஆன்மா. 3 வானம் - ஆகாயம். 4 அங்கி - அக்கினி. 5 காற்று - வாயு. 6 நலம்பெறு புலவர் இயமானன் முதலிய எட்டையும் தெய்வம் என இயம்பினர் என இயைக்க.

7. நேர் நேர் நேர் என்னும் இம் மூன்று அசையினாலாகிய சீர் இயமானகணம் ஆம்; அதற்கு நாள் பரணி; அது, வாழ்நாளை பயக்கும் என்று புலவர் ஆய்ந்து கூறினர்.

இயமானக் கணத்தைத் துறக்கக்கணம் என்றுங் கூறுவர்.

59. [1]நிரைநேர் நேரது நீள்மதி அதற்கு
வருநாள் மகசிரம் மலிபுகழ் ஆகும். (எ)

60. [2]நிரையசை மூன்று நிலக்கணம் அதற்குத்
தருநாள் கேட்டை திருமிகத் தருமே. (அ)

61. [3]நீர்க்கணம் நேர்நிரை நிரைநாள் சதயம்
பார்க்கதிர்ப் பெருக்கம் பார்க்கும் என்ப. (கூ)

62. [4]கண்ணிய நேர்நிரை நேர்வரிற் கடுங்கதிர்
நண்ணிய நோய்தரும் நாள்புனர் பூசம். (கo)

63. [5]நிரைநிரை நேர்தாம் வரினது வானம்
பெருகிய கேடது தரும்நாள் ஓணம். (கக)

---

1. நிரை நேர் நேர் என்னும் இம் மூவசைச் சீர் சந்திரகணமாம்; அதற்கு நாள் மிருகசீரிடமாம்; அதனால் மிக்க புகழ் உண்டாகும்.

மிருகசிரம் - மிருகசீரிடம்.

2. நிரை நிரை நிரை என்னும் இம் மூவசைச் சீர் நிலக்கணம் ஆம்; அதற்கு நாள் கேட்டையாம்; அது மிக்க செல்வத்தைத் தரும்.

3. நேர் நிரை நிரை என்னும் இம் மூவசைச் சீர் நீர்க்கணம் ஆம்; அதற்கு நாள் சதயமாம்; அது நிலத்தில் சூரியனைப் போலச் சீர்பெருகி விளங்குதலைச் செய்யும்.

'நீரது கணமே சீர்சிறப் பெய்தும்',

என்பது வச்சணந்திமாலையினும், இலக்கண விளக்கத்தினும் காட்டிய மேற்கோட் சூத்திரம்.

4. நேர்நிரை நேர் என்னும் இம் மூவசைச்சீர் சூரியகணம் ஆகும்; அதற்கு நாள் புனர்பூசமாம்; அது நோய் தரும்.

5. நிரைநிரைநேர் என்னும் இம் மூவசைச்சீர் ஆகாயகணம் ஆம்; அதற்கு நாள் திருவோணம் ஆம்; அது மிக்க கேட்டை உண்டாக்கும்.

64. [1]நெருப்பின் கணம்நிரை நேர்நிரை கார்த்திகை
விருப்புறு நாள திடுக்கண் செய்யும். (௬௨)

65. [2]காட்டிய நேர்நேர் நிரைவரிற் காற்றது
நாட்டறை போக்கும்நாள் சோதி யாகும். (௬௩)

66. [3]நிற்பன தீக்கணம் நான்கவை நீக்கி
நற்கணம் நான்கவை நாட்டினர் கொளலே. (௬௪)

௫௯. "அவைதாம்,
நீரே நிலனே வானே நீள்மதி
சீரிய மானன் செந்தீத் தெறுகதிர்
காற்றெனக் கிளர்ந்த கூற்றன என்ப"

௬௦. "நேர்முத லாகி நிரையிணை பின்வரின்
நீர்க்கணம் என்ப நெறியுணர்ந் தோரே"

௬௧. "நிரைமுன் றியைந்தது நிலனெனத் தகுமே"

௬௨. "முந்துநிரை இணைந்து நேரிறு மூவகை
அந்தர கணமென் றறிதல் வேண்டும்"

௬௩. "முதனிரை யாகி இணைநேர் வழிவரின்
அதுமதிக் கணமென் றறிந்தனர் கொளலே"

---

1. நிரை நேர் நிரை என்னும் இம் மூவகைச்சீர் தீக்கணம் ஆம்; அதற்கு நாள் கார்த்திகையாம்; அஃது இடுக்கணைச் செய்யும்.

2. நேர் நேர் நிரை என்னும் இம் மூவகைச்சீர் வாயுக்கணம் ஆம்; அதற்கு நாள் சோதியாம்; அது, நாட்டினின்று நீக்கும்.

3. சூரியகணம், ஆகாயகணம், தீக்கணம், வாயுக்கணம் என்னும் நான்கும், தீமை பொருந்தியனவாகிய கணங்களாம்; அவற்றை நீக்குக; இயமானகணம், மதிக்கணம், நிலக்கணம், நீர்க்கணம் என்னும் நான்கும் நன்மை பொருந்திய கணங்களாம்; அவற்றை முதற்சீராக அமைத்துக்கொள்க.

நாட்டினர் என்பது முற்றெச்சம்.

௪௪. "நேரசை முன்றிய மானன் கணமே"

௪௫. "நேர்நடு வாகி நிரையிரு பாலும்
சேரு மாயிற் செந்தீக் கணமே"

௪௬. "நிரைநடு வாகி நேரிரு பால்வரின்
அலர்கதிர்க் கணமென் றறிந்தனர் கொளலே"

௪௭. "ஈறுநிரை யாகி இணைநேர் முன்வரின்
மாறி வந்த மாருத கணமே"

௪௮. "நிலனும் மதியும் நீருமிய மானனும்
நலமிது முதல்வரிற் பிறநான் கும்பகை"

௪௯. "யாவர்செய் யுட்கும் இனமோடு புணரும்
மூவகைச் சீரே முதல்நிற் பனவே"

௫0. "அவைதாம்,
பெருக்கஞ் செய்தலின் வாழ்நாள் பயத்தலின்
தருக்கிய சீர்த்தி தன்னைத் தருதலின்
மிகுதிரு வாக்கலின் வேந்தர்க்கும் பிறர்க்கும்
தகுமெனப் பகரினும் தகாது மற்றச்
சீர்க்குரிய நாளொடு செய்யுட் செய்யும்
பொருபடைக் குரிசிலுள் பொருந்தாக் கடையே"

௫௧. "அவைதாம்,
தேயம் போக்குதல் செல்வத்து விளிதல்
சூனிய மாதல் சுழனே யுறுதல்
ஊனம் பயக்குமென் றுரைத்தனர் ஆயினும்
ஆதி அமுதெழுத் தாகிய சீர்கட்
கோதிய தெய்வத் திற்குரித் தாக
ஓதிய நாளொடு பாடப் படுமே"

௫௨. "எல்லாக் கணமும் நாணல மிலவெனிற்
பொல்லாங்கு தருமெனப் புகல வேண்டும்"

—இந்திரகாளியார்.

.67. [1]மங்கலம் அமைந்த சொல்லொடு பொருந்திய
ஈரசை நான்கினுள் நேரீ றொழித்து
நிரையீற் றியற்சீர் முதற்கண் நிற்பினும்
வரையார் மூவசை வாராக் காலே. (௬௫)

௬௩. "ஈரசை முதலா நேரீ றேழித்து
நிரையீற்று மங்கலம் புணர்ந்தனர் கொளலே"

௬௪. "நிரைநிரை கொற்றவை நேர்நிரை சாத்தன்"

௬௫. "அவைதாம்,
மிகுதரு திருவும் புகழும் செய்யும்"
—சேந்தம்பூதனார்.

௬௬. "ஓரசைச் சீரும் நாலசைச் சீரும்
ஈரசைச் சீருள் நேரிறு சீரும்
மங்கலம் புணரினும் மங்குதல் செய்யும்"
—கோவூர்கிழார்.

௨. [2]மங்கலச் சொல்

68. [3]பொன்பூத் திருமணி புனல்ஆ ரணம்கடல்
சேங்கதிர் திகிரி தேர்பரி எழுத்தே

---

1. "மூவசை வாராக்கால், ஈரசை நான்கினுள் நேரீறு ஒழித்து, மங்கலம் அமைந்த சொல்லொடு பொருந்திய நிரையீற்று இயற்சீர் முதற்கண் நிற்பினும் வரையார்" என இயைக்க.

இதன் கருத்து மூவசைச் சீர் (ஈண்டுக்கூறிய பொருத்தங்கள் பொருந்திப் பாட்டுக்கியையும்படி முதற்சீராய்) வாராத போது மங்கலச் சொல்லமைந்த நிரையீற்று இயற்சீர் முதற்சீராய் நின்றாலும் அவற்றை நீக்காமல் கொள்வர் புலவர் என்பது.

2. அதாவது மங்கலச் சொல்லின் பொருத்தத்தைக்கூறும் பகுதி என்பது.

மங்கலம் என்பது மங்கலமாகிய பொருளை உடைய சொல்லை உணர்த்தலின் பண்பாகு பெயர். மங்கலச் சொல் என்பது மங்கலமாகிய பொருளை உடைய சொல் என்றாதலின் இரண்டனுருபும் பயனும் உடன் தொக்க தொகை. அஃதீண்டு மங்கலச் சொல்லை உணர்த்தும் பகுதி என்றாதலின், அத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைப் பெயராம்.

3. பொன்...சீர் என்னனு௵ண்டுடன் எண்ணிய சொல்லும் அவையல்லாதனவாகிய பிறசொற்களும் முன்னோரால்

மாநிலம் கங்கை மலைபுகழ் அமுதம்
கார்புயல் உலகம் களிறே அருந்ததி
பார்மதி நாள்சீர் ஞெண்டுடன் என்ன
எண்ணிய சொல்லே அவைஅல் பிறவும்
கண்ணிய மங்கலச் சொல்எனக் காட்டினர். (கசு)

சுஎ. "சொல்லெனப் படுபவை சொல்லுங் காலைத்
திருப்பொன் பூமி புனன்மணி கடல்யா
றெழுத்தழ தெழின்மழை பசுங்கதிர் செஞ்சுடர்
நாள்சொல் ஞெண்டு நாட்டிய பரிமலை
கருட னருந்ததி மற்றிவை யென்ப
நிலைபெறு மங்கல நெறிநிற் பனவே"
—பொய்கையார்.

இதுவும் அது

69. [1]செப்பிய உடம்பொடு சேரா துயிர்முதல்
நிற்பன மக்கட் காமெனின் நேர்ந்திலர்
மற்றவை கடவுளர் முனிவர்க் காமே. (கஎ)

சுஅ. "உயிரொடு புணரா மேன்மையும் இடையும்
செயிரிற் றீமையும் செப்பத் தகுமே"

கருதப்பட்ட மங்கலச் சொல் என்று புலவர்கள் தெரிவித்தார்கள்.

சொல்லே என்பதில் உள்ள ஏகாரம் எண்ணுப்பொருளது; சொல்லும் பிறவும் என இயைக்க.

1. மக்களுக்கு மங்கலச் சொல்லை அமைப்பது என்றால் மெய்யெழுத்தின்றி உயிர் எழுத்துத் தனியாக நிற்றலைப் புலவர் உடன்பட்டிலர். அங்ஙனம் உயிர் தனியாக நிற்றல் கடவுளருக்கும் முனிவருக்கும் ஆகும் என்பது.

3

௬௯. "ஒதிய மெய்யோடு புணரா துயிரெழுத்
தாதி நிற்பி னனந் தம்மே"

௭0. "உடம்பு பிரிவுயிர் சாத றனே"

—இந்திரகாளியார்.

௭௧. [1]"நகரும் விலங்கும் அழகோடு வரினவை
புகரில என்ப புலமை யோரே"

—பரணர்.

இதுவும் அது

70. [2]மூன்றைந் தேழோன் பானெழுத் தான்ற
ஒற்றுடன் எண்ணிமுன் சொற்ற முறையின்
பல்பொருள் படவரூஉம் சொல்லால் அகற்றி
ஒருபொருட் டாகி வருமொழி பற்றித்

---

1. இம் மேற்கோட் சூத்திரம் உண்டி கூறிய இடத்தில் இருத்தற்கு உரியதாகும்.

2. நூற்களை ஆய்ந்துணர்பவர்களாகிய புலவர்கள் முன் சொன்ன முறைப்படி அமைந்த ஒற்றுடன் மூன்றும், ஐந்தும், எழும், ஒன்பதுமாகிய எழுத்துக்களைக் கருதி அமைத்துப் பல பொருளைத் தரும் சொல்லை நீக்கி, ஒருபொருள் தரும் சொல்லைக் கொண்டு, திரிதல் விகாரமும் வகையுளியும் வாராமல் அமைத்தது மங்கலச் சொல் என்று வகுத்துக் கூறினர் புலவர்.

வெண்பாப்பாட்டியல் முதலிய மற்றைப் பாட்டியல்களில் பொன் பூ முதலிய மங்கலச் சொற்களை அமைத்தல் மங்கலப் பொருத்தம் எனவும், மூன்று முதலிய எழுத்துக்களை அமைத்தல் எழுத்துப்பொருத்தம் எனவும், பல்பொருள் தருதலின்றி ஒரு பொருள் தரும் சொற்களை ஈறுதிரிதலும் வகையுளியும் சேராத வகையில் அமைத்தல் சொற்பொருத்தம் எனவுங் கூறப்பெற்றுள்ளன. இந்நூலின்கண் அம்மூன்றும் மங்கலப்பொருத்தம் என ஒரேபொருத்தமாக வைத்துக் கூறப்பெற்றிருக்கின்றன. இவை நோக்கற்குரியனவாகும்.

திரிதல் ஒழியத் திருந்திச் சொல்லினுள்
தெரிவோர் வகையுளி மறுத்து நட்டது
மங்கலச் சொல்லென வகுத்தனர் புலவர். (கஅ)

முதற்சீரில் இருக்கவேண்டிய எழுத்து

71. [1]முன்னிலை எழுத்தின் வியநிலை நலனே
சமநிலை யாயின் முதல்வற் கூனம். (கசு)

மங்கலச் சொல்லைச் சிதைத்தலாகாது என்பது

72. [2]சொல்லிய மரபின் மங்கலஞ் சிதைத்துப்
புல்லுதல் குற்றம் பொருட்டலை மகற்கே. (உ௦)

மங்கலச் சொல்லை இவ்விடங்களிற் சிதைத்தலாம் என்பது

73. [3]தொடுகழல் வேந்தன் றன்னு தோரும்
வடுவறு பரிசில் வழங்கா தோரும்
கெடுதல் வேண்டிச் சிதைத்தலும் உரித்தே. (உக)

---

1. முதற்சீரின்கண் நிற்கும் எழுத்துக்கள் ஒற்றை எண்ணு யின் நலமாம்; இரட்டை எண்ணுயின் பாட்டுடைத் தலைவனுக்கு ஊனமாம்.

வியநிலை - ஒற்றை எண்; சமநிலை - இரட்டை எண்.

2. மேற்சொல்லப்பட்ட முறையினின்று மங்கலச் சொல்லைச் சிதைத்துப் பொருத்தின் பாட்டின் பொருளாகிய தலைமகனுக்குத் தீமையாம்.

3. தங்கள் அரசனுடைய பகைவர்களும் தம்முடைய பாட்டைப் பெற்றுக்கொண்டு தமக்குப் பரிசில் வழங்காதவர்களும் கெடுதற்பொருட்டுச் சிதைத்தலுமாம்.

உம்மை - இழிவு சிறப்பு.

௩. [1]பொருத்தம்

எண்வகைப் பெயர்கள்

74. [2]எண்வகைப் பெயரும் நண்ணுதல் செப்பின்
குலம்குடி கோத்திரம் நலம்பெறு குணமே
மனமே ஆணை மன்னிய சிறப்பே
இயற்பெயர் என்றிவை தம்முள் இயன்ற
சிறப்பியற் பெயர்எனும் இருதிறத் திற்கும்
மயக்கற மொழிமுதல் எடுக்கும் சொல்லுடன்
பொருத்தம் கொள்வர் கருத்துணர்ந் தோரே. (உஉ)

---

1. அதாவது பெயரால் அமைக்கப்படும் பொருத்தத்தைக் கூறும் பகுதி என்பது.

பெயர்ப்பொருத்தம் என்பது, பெயரால் அமைக்கப்படும் பொருத்தம் என்றூதலின், மூன்றன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை. அஃதீண்டுப் பெயர்ப் பொருத்தத்தைக் கூறும் பகுதி என்றூதலின், அஃது தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைப்பெயர்.

2. முதற்சீரின்கண் வந்து பொருந்துதலை உடைய எண் வகைப் பெயரையும் சொல்லுமிடத்துக் (1) குலப்பெயரும், (2) குடிப்பெயரும், (3) கோத்திரப்பெயரும், நன்மை பெறுதற்குக் காரணமாகிய (4) குணப்பெயரும், (5) மனப்பெயரும், (6) ஆணைப்பெயரும், பொருந்திய (7) சிறப்புப் பெயரும், (8) இயற் பெயரும் என்று சொல்லப்படும்; இவற்றுள், சிறப்புப் பெயரும் இயற்பெயருமாகிய இருவகைப் பெயர்க்கும் மயக்கம் நீங்க முதற் சீரின்கண் எடுத்துச் சொல்லப்படும் சொல்லோடு பொருத்தங் கொள்ளுவார்கள் (பாட்டியல்) நூற்களின் கருத்தை உணர்ந்த புலவர்கள் என்பது.

ஈண்டுப் பின் வரும் 'தந்தை மகப்பெயர்' என்னும் மேற் கோட் சூத்திரத்தையும் நோக்குக.

குலப்பெயரின் இலக்கணம்

75. [1]பார்ப்பார் அரசர் வணிகர்வே ளாளரெனப்
பாற்படு நாற்பெயர் குலப்பெயர் ஆகும். (௨௩)

குடிப்பெயரின் இலக்கணம்

76. [2]குடிப்பெய ராவன கூறுங் காலைச்
சேரன் சோழன் பாண்டியன் என்றிப்
போல்வன பிறவும் பொருத்தம் கொளலே. (௨௪)

கோத்திரப்பெயரின் இலக்கணம்

77. [3]கோத்திரப் பெயரே கூறுங் காலைத்
தாதைகுடிப் பெயரைத் தக்கவற் றியற்றல். (௨௫)

குணப்பெயரின் இலக்கணம்

78. [4]குணப்பெயர் எனைப் புலவோர் கொடுப்பத்
தணப்பில வாகித் தழுவும் பெயரே. (௨௬)

---

1. பார்ப்பார், அரசர், வணிகர் வேளாளர் என்னும் இந் நாற்பெயரும் குலப்பெயராகும்.

2. குடிப்பெயர் இவை எனக் கூறினால், சேரன், சோழன், பாண்டியன் என்னும் பெயர்களும் இப் பெயர்களைப் போன்ற பிற பெயர்களுமாம் என்க. (இவற்றிற்கு ஏற்றபடி) பொருத் தங் கொள்க.

3. கோத்திரப் பெயரைச் சொல்லும் இடத்துத் தந்தையி னுடைய குடிப்பெயராம்; அதனைத் தக்க வகைகளில் அமைக்க என்பது.

4. அவற்றின் வேறாகிய குணப்பெயராவன, புலவர்கள் கொடுத்தலின் நீங்குதல் இல்லாதனவாய்ப் பொருந்தியிருக்கும் பெயர்களாம் என்பது.

மனப்பெயரின் இலக்கணம்

79. [1]மனப்பெய ராவன தனக்குத் தானே
எனக்கிது வேண்டுமேன் றெய்தும் பெயரே. (உஎ)

ஆணைப்பெயரின் இலக்கணம்

80. [2]ஆணைப் பெயரே வலியோர் அஞ்சப்
பேணி உலகம் பேசும் பெயரே. (உஅ)

சிறப்புப்பெயரின் இலக்கணம்

81. [3]சிறப்புப் பெயரே தெரியுங் காலைச்
சிறப்புடை வேந்தன் கொடுக்கும் பெயரே. (உசு)

சிறப்பியற்பெயர்களின் சிறப்பிலக்கணம்

82. [4]சாதியில் உள்ளோர் தமக்குத் தாமே
நீதிகொள் சிறப்பியற் பெயர்கொளற் குரியர். (௩௦)

---

1. மனப்பெயர் என்று சொல்லப்படுவன யாவை என்றால் தாமே தமக்கு இப்பெயர் வேண்டும் என அவரவர் கொள்ளும் பெயர்களாம் என்பது.

2. ஆணைப்பெயராவன யாவை எனின், வலியோர் அஞ்சும்படி உலகத்தோரால் போற்றிப் பேசப்படும் பெயர்களாம் என்பது.

3. சிறப்புப் பெயர்களை அறிந்து சொல்லுமிடத்து, மேன்மையினையுடைய அரசனால் கொடுக்கப்படும் பெயர்களாம் என்பது.

4. சாதியில் உள்ளவர்கள் தாமேயும் முறைமையினைக் கொண்ட சிறப்புப் பெயரும், இயற்பெயருங் கொள்ளுதற்குரியராவர் என்பது.

சிறப்பியற் பெயர் என்பதை ஒரு பெயராம் எனக் கொள்ளின், இச் சூத்திரத்தினைச் சிறப்பியற் பெயர்களின் சிறப்பிலக்கணங் கூறுவது என்று கொள்ளாமல் சிறப்பியற்பெயரின் இலக்கணங் கூறுவதாம் என்று கொள்க.

வேந்தனூற் சிறப்புப் பெயர் பெறுதற்குரியார்

83. [1]முடியுடை வேந்தன்முற் குலத்தோர்க் கல்லது
பட்டமும் பூவும் பூணும் ஆழியும்
நட்டமில் நலமலி சிறப்புப் பெயரும்
கொடாஅனென மொழிப குலமொழிப் புலவர்.

இதுவும் அது

84. [2]வினைசெயல் மருங்கின் மிக்கோரும் பெறுப. (௩௨)

௭௨. [3]தந்தை மகப்பெயர் முந்திய குலப்பெயர்
மனப்பெயர் கோத்திரம் குணப்பெயர் ஆண
இயற்பெயர் சிறப்புடைப் பெயரிரண் டாதும்
கயக்கறு முதன்மொழிப் பொருத்தங் கொளலே.

---

1. முடி உடைய அரசன் பார்ப்பார், அரசர், வணிகர் என்னும் முற்குலத்தோர்க்கல்லது, பட்டமும், அதற்கு அறிகுறியாகிய பூவும், பூணும், மோதிரமும், கெடுதலில்லாத நன்மை மிக்க சிறப்புப் பெயரும் கொடான் என்று சொல்லுவர் சிறந்த நூற்பொருள்களை உணர்ந்த புலவர்கள்.

மொழி என்பது கருவியாகு பெயராய் நூற்களை உணர்த்தியது.

2. அரசனது தொழிலைச் செய்யுமிடத்தில் சிறப்பெய்தியவர்களாகிய வேளாண்மாந்தரும் அவற்றைப் பெறுவர்.

"வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே"

என்னும் தொல். பொருள். மரபியல், எண்பத்தோராஞ் சூத்திரத்தையும் அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

3. இச் சூத்திரம் இயற்றினர் இன்னர் என்பது தெரிந்திலது.

சொல்லியல் முற்றிற்று.

3. [1]இனவியல்

இனம் என்பதன் இலக்கணம்

85. [2]வெள்ளை அகவல் துள்ளுகலி வஞ்சி
என்னும் நாற்பா இவற்றுடன் இயல்மருள்
தாழிசை துறைவிருத் தங்களென் றிவற்றின்
சூழ்வகை இனம்பல சொல்லுதல் இனவியல். (க)

இனங்களின் வகை

86. [3]ஒன்றே யாகியும் ஒன்றுபல வாகியும்
பலவொன் றாகியும் பாற்படும் இனமே. (உ)

---

1. இது, பல வகுப்புக்களாகியுள்ள நூற்களின் இலக்கணத்தைக் கூறும் இயல் என்றாதலின், இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை. இனம் என்பது பண்பாகு பெயராய்ப் பல இனமாகியுள்ள நூற்களை உணர்த்த, அது, பொருளாகு பெயராய் அவற்றின் இலக்கணத்தை உணர்த்தலின், இருமடியாகு பெயர். இனம் - வகுப்பு, வகை. இயல் - ஒத்து.

2. வெண்பாவும், ஆசிரியப்பாவும், ஓசை துள்ளும் கலிப் பாவும், வஞ்சிப்பாவுமாகிய நாற்பாக்களாகிய இப் பாக்களுடன் இவற்றுள் வெண்பா ஆசிரியப்பா என்னும் இவற்றால் அமையும் மருட்பாவும், தாழிசையும், துறையும் விருத்தமும் என்று சொல்லப்பட்ட இவற்றினால் ஆய்ந்து செய்யப்படும் பலவகையாகிய நூற்கள் இனமாகும்; அவற்றுள், பலவற்றைக் கூறுதல் இவ்வின வியலின் முறைமையாம்.

எழுத்தியலின் முதற் சூத்திரத்திற் கூறிய 'கடன்' என் பதை ஈண்டுங் கூட்டி, 'சொல்லியலின் கடன்' என இயைத்துப் பொருள் கொள்க.

3. அந் நூற்கள், ஒருநூல் ஒரு பாட்டேயாகியும், ஒருநூல் பல பாட்டை உடையதாகியும், பல பாட்டுக்கள் தொக்கு ஒரு நூலாகியும் இயலும் மூன்றுவகையின் அடங்கும்.

ஒன்றேயாவன இவை என்பது

87. அவற்றுள்,
ஒன்றே யாகிய இனம்எனப் பட்டன
உலாவாற் றுப்படை வகைமடல் முதலாயின. (௩)

ஒன்று பலவாவன இவை என்பது

88. [1]ஒன்பல வாகிய இனமந் தாதி
கோவை காப்பிய மாதியாக் கூறுவன. (௪)

---

4. அவற்றுள், ஒன்றே ஆகிய இனம் என்று சொல்லப்படுவன உலா, ஆற்றுப்படை வகைகள், மடல் முதலியன.

இச் சூத்திரத்தின் இறுதியும், அடுத்த மூன்று சூத்திரங்களின் இறுதிகளும் உரைநடையாக அமைந்துள்ளன. இனம்-நூல்.

1. ஒன்று பல ஆகிய இனம் அந்தாதி, கோவை, காப்பியம் முதலியனவாகக் கூறப்படுவன.

'ஆதியாக் கூறுவன' என்றதனுன் பிள்ளைக்கவி, பரணி முதலியவற்றையும் கொள்க.

ஈண்டு ஒன்று பலவாகிய இனம் என்று கூறப்பெற்றவை, தண்டியலங்காரத்து,

"செய்யுள் என்பவை தெரிவுற விரிப்பின்
முத்தகம் குளகம் தொகைதொடர் நிலைஎன
எத்திறத் தனவும் ஈரிரண் டாகும்"

எனவரும் இரண்டாஞ் சூத்திரத்திற் கூறப்பட்ட நான்குவகைச் செய்யுட்களுள் ஒருவகையினவாகிய தொடர்நிலைச் செய்யுட்களாம் என்றுணர்க.

தொடர்நிலைச் செய்யுள் சொற்றொடர்நிலைச் செய்யுளும், பொருட்டொடர்நிலைச் செய்யுளும் என இரண்டு வகையாம். அவற்றுள், சொற்றொடர்நிலைச் செய்யுளாவது தன்பால் உள்ள செய்யுட்கள் சொல்லால் தொடர்ந்திருத்தலை முதன்மையாகப் பெற்றதாகும். பொருட்டொடர்நிலைச் செய்யுளாவது தன்பால்

பல ஒன்றுவன இவை என்பது

89. [1]பலவொன் றாகிய இனமெனப் பட்டன
கலித்தொகை குறுந்தொகை நெடுந்தொகை முத
லாயின. (ரு)

உள்ள செய்யுட்கள் பொருளால் தொடர்ந்திருத்தலை முதன்மை யாகப் பெற்றனவாகும். மேற்கூறிய நூற்களுள், அந்தாதி ஒன்றுமே சொற்றொடர்நிலைச் செய்யுளாம்; பிற பொருட்டொடர் நிலைச் செய்யுட்களாம் என்றறிக.

'ஆதியன' என்னாமல் 'ஆதியாக்கூறுவன' என்றது, சொற்றொடர்நிலைச்செய்யுட்குச் சொற்றொடர்தலும், பொருட்டொடர் நிலைச் செய்யுட்குப் பொருள் தொடர்தலும் முதன்மையானவை யாம்; கலம்பகம், மும்மணிக்கோவை முதலியவும், சொல்லால் தொடர்ந்து வருவனவேனும் அவை, சொல்லால் தொடர்தலை முதன்மையாகக் கொண்டனவல்ல; பலவகை உறுப்புக்களையும், பலவகைப்பாட்டுக்களையும் முதன்மையாகக் கொண்டவாகலின், சொற்றொடர்நிலைச் செய்யுளாகா; அவை, பொருள் தொடர்ந்து வருவன அல்லவாகலின் பொருட்டொடர்நிலைச் செய்யுளுமாகா என்பதூஉம், பொருட்டொடர்நிலைச் செய்யுள், சொல்லானும் தொடர்ந்திருக்கப்பெறினும் அது, பொருள் தொடர்ந்திருத் தலையே முதன்மையாகக் கொண்டதாகலின், பொருட்டொடர் நிலைச்செய்யுள் என்றே கொள்ளப்படும் என்பதூஉம் அறிவித்தற் காம் எனக்கொள்க.

இவ்விலேசிற்கு இங்ஙனம் பொருள் கொள்ளாவிடின், பின்னர்க் கலம்பகம், மும்மணிக்கோவை முதலியன 'பலவொன் றாகிய இனம்' என்றது பொருந்தாமையையும், சொற்றொடர் நிலைச் செய்யுளையும் பொருட்டொடர்நிலைச் செய்யுளையும் வேறு பிரித்தறிதலில் இடர்ப்பாடு உளதாதலையும் உய்த்துணர்க.

1. பல ஒன்றாகிய இனம் என்று கூறப்பட்டவை கலித் தொகை, குறுந்தொகை, நெடுந்தொகை முதலாயினவாம்.

'முதலாயின' என்றதனால், நற்றிணை, ஐங்குறுநூறு, புற நானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு முதலியவற்றையுங் கொள்க. இவை மேற்காட்டிய

இதுவும் அது

90\. [1]பலவொன் ருகிய இனமெனப் பட்டன
கலம்பகம் மும்மணிக் கோவை முதலாயின. (௬)

க. [2]பாப்பொருத்தம்

வெண்பா

91\. [3]அந்தணர் சாதி யாகிய வெள்ளைக்குச்
சந்திரன் தன்னொடு தகைமிகு வியாழன்
கடவுளர் கார்த்திகை முதல்எழ் நாளாம்
மீனம் கடகம் தேளே ஓரை
சந்தனம் விரைபூ அந்தண் மல்லிகை

தண்டியலங்காரச் சூத்திரத்தினுட் கூறப்பட்ட நால்வகைச் செய்யுட்களுள் தொகைநிலைச் செய்யுளாகும். பின்னர்க் கூறப்படுவனவும் அன்ன.

1\. பல ஒன்ருகிய இனம் என்று கூறப்பட்டவை கலம்பகம், மும்மணிக்கோவை முதலியனவுமாம்.

'முதலாயின' என்றதனல், நான்மணிமாலை, இரட்டைமணிமாலை, ஒருபாஒருபஃது முதலியனவும் கொள்க.

2\. வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் நான்கு வகைப்பாக்களுக்கு உரிய கடவுளர், நாள், ஓரை, விரை, பூ, வண்ணம், நிலம் என்னும் இவைகளின் பொருத்தங்கூறும் பகுதி என்பது.

பாப்பொருத்தம் என்பது பாக்களினது பொருத்தங் கூறும் பகுதி என்ருதலின், ஆறன் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. ஓரை - இராசி, விரை - வாசனை.

3\. அந்தணர் சாதியாகிய வெண்பாவினுக்குச் சந்திரனும் மேன்மையினுற் சிறந்த குருவும் கடவுளர்; கார்த்திகை முதலிய எழுடுக்கள் உரியனவாகிய நாட்கள்; மீனம், கடகம், விருச்சிகம் என்பன இராசிகளாம். சந்தனம் வாசனைப்பொருள்; பூ அழ

வெண்மதி நிறனே வண்ணம் நிலனே
முல்லை என்னச் சொல்லினர் புலவர். (எ)

ஆசிரியப்பா

92. [1]காவலர் சாதி ஆகிய அகவற்
காகிய கடவுளர் செங்கதிர் செவ்வாய்
நாளே மகமுதல் நாளேழ் ஆகும்
சிங்கம் தனுவே மேடம் ஓரை
செஞ்சந் தனம்விரை கழுநீர் பூவே
செந்நிறம் நிறனே நன்னிலம் குறிஞ்சி. (அ)

கலிப்பா

93. [2]நெடுநிலைக் கலியே வணிகர் சாதி
கடவுளர் சனிபுதன் கருதிய நாளே
அநுடமுதல் ஆறே ஓரை துலாம்குடம்
மிதுனம் சந்தனம் விரைபூச் சண்பகம்
பொன்னிறம் நிறனே நன்னிலம் நெய்தல். (கூ)

கிய குளிர்ந்த மல்லிகையாம்; மதியின் வெண்ணிறமே வண்ணம்; முல்லைநிலம் நிலம் என்று புலவர்கள் கூறினார்கள்.

1. அரசர் சாதிக்குரிய அகவற்பாவிற்குச் சூரியனும் செவ்வாயும் கடவுளர்; மகம் முதல் ஏழுடுக்கள் நாளாம்; சிங்கமும், தனுவும், மேடமும் இராசிகளாம்; சந்தனம் விரை; கழுநீர் பூ; செந்நிறம் செவ்விய நிறமாம்; குறிஞ்சி நிலமாகும்.

2. நெடிய நிலைமையினை உடைய கலிப்பா வணிகர் சாதிக்கு உரியதாகும். அதற்குச் சனியும், புதனும் கடவுளாவர்; அநுடம் முதல் ஆறு உடுக்கள் நாளாம்; துலாம், கும்பம், மிதுனம் இராசிகள்; சந்தனம் விரை; சண்பகம் பூ வாம்; பொன்னிறம் நிறம்; நிலம் நெய்தல்.

வஞ்சிப்பா

94. [1]எஞ்சிய வேளாண் சாதி வஞ்சி
நாளே அவிட்ட முதலேழ் நாளாம்
இடபம் கன்னி மகரம் ஓரை
சார்ந்த விரையே தண்ணறுங் கலவை
ஏந்திய போதே இன்னறு நீலம்
நீலம் நிறனே நெடுநிலம் மருதம். (௧௦)

95. [2]நால்வகைப் பாவிற்கு மேலோர் வகுத்த
இனங்களும் பெறுமென நினைந்தனர் கொளலே. ()

96. [3]நால்வகைப் பாவும் நால்வகைக் குலத்தின்
பால்வகைப் படுமே முதலன இரண்டின்
புணர்ச்சி மருட்பாப் பொருந்தா வருணம். (௧உ)

எ-டு. "நாளும் ஓரையும் நலத்தத நிலனும்
விரையும் சாதியும் நிறனும் துணனும்
உரைபெறும் பாநரர்க் குடைய வென்ப"
—கல்லாடனார்.

---

1. வஞ்சிப்பா எஞ்சிநின்ற வேளாண் சாதிக்குரிய பாவாம். அதற்கு அவிட்டம் முதலிய எழ் உடுக்கள் நாளாம்; இடபம், கன்னி, மகரம் இராசியாம்; குளிர்ந்த நல்ல கலவைச் சாந்து, பொருந்திய விரையாம்; இனிய நல்ல நீலம், கொண்ட பூவாதும்; நீலம் நிறமாதும்; நெடிய நிலம் மருதம் ஆம்.

2. நால்வகைப் பாக்களுக்கும் மேலோர் வகுத்த இவற்றை நூற்களும் பெறும் என்று கருதிக்கொள்ளக்கடவர்.

3. நால்வகைப் பாவும் நால்வகைக்குலத்தின் பகுதியின் வகையிற் பொருந்தும்; மருட்பா, வெண்பாவும் ஆசிரியப்பாவு மாகிய முதல் இரண்டு பாக்களின் சேர்க்கையான் உளதாகும் பா ஆதலின், அதற்கு வருணம் பொருந்தாது.

வருணம் - சாதி.

சாதிக்கேற்பப் பாக்களை அமைக்குமாறு

97. [1]அந்தச் சாதிக் கந்தப் பாவே
தந்தனர் புலவர் [2]தவிர்ந்தனர் வரையார். (கங)

மங்கலச் செய்யுட்கள்

98. [3]வெள்ளையும் அகவலும் விருத்தமும் கலியும்
வஞ்சியும் எஞ்சா மங்கலம் பொருந்தும். (கச)

எச. "வெள்ளை அகவல் விருத்தங் கலியே
வஞ்சி யென்றிவை மங்கலப் பாவே"
—அவிநயனார்.

உ. [4]பா இனம்

இனங்கள் இவை என்பது

99. [5]மேதகு சாதகம் பிள்ளைப் பாட்டே
கோதில் வேந்தன் குடைமங் கலமே
ஓதிய ஒருபோகு அமைந்த கலம்பகம்
உலாவே சின்னப் பூவே பரணி

---

1. அந்த அந்தச் சாதிக்கு உரிய பாவே அந்தந்தச் சாதிக்கு அமைத்தல்வேண்டும். கவிஞர் ஒரு சாதியினர்க்குரிய பாவான் மற்றொரு சாதியினரைப் பாடினாராயினும் புலவர் நீக்குதல் இன்றி எற்றுக்கொள்ளுவார் என்பது.

2. 'தவிர்ந்தன வரையார்' என்றிருப்பின் பொருத்தமாம்.

3. வெண்பாவும், ஆசிரியப்பாவும், விருத்தமும், கலிப்பாவும், வஞ்சிப்பாவும் ஆகிய இப் பாக்கள் மங்கலம் பொருந்துவனவாம்.

4. பாக்களால் ஆகும் நூற்களைக் கூறும் பகுதி என்பது.

இது, மூன்றன் உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துவந்த அன்மொழித் தொகை.

5. (1) சாதகமும், (2) பிள்ளைத்தமிழும், (3) வேந்தன் குடை மங்கலமும், (4) ஒருபோகும், (5) கலம்பகமும், (6) உலாவும், (7) சின்னப்பூவும், (8) பரணியும், (9) மடலும், (10) மறமும், (11) பல்சந்தமாலையும், (12) இணைமணி மாலை

பழுதில் மடல்மறம் பல்சந்த மாலை
இணைமணி மாலை இரட்டைமணி மாலை
மும்மணி மாலை நான்மணி மாலை
கலம்பக மாலை மும்மணிக் கோவை
அருங்கலி ஒலியே யானைத் தொழிலே
வருக்க மாலை நாம மாலை
திருக்கிளர் இன்னிசை சிலைபரி கரியே
எழில்புனை வாள்குடை தொழில்புனை வேல்கோல்.
அழிவில் நாரேர் ஐம்படை விருத்தம்
நாழிகைக் கவியே நவமணி மாலை

யும், (13) இரட்டைமணி மாலையும், (14) மும்மணி மாலையும், (15) நான்மணி மாலையும், (16) கலம்பக மாலையும், (17) மும்மணிக் கோவையும், (18) கலிஅந்தாதியும், (19) ஒலிஅந்தாதியும், (20) யானைத்தொழிலும், (21) வருக்கமாலையும், (22) நாமமாலையும், (23) இன்னிசைத் தொகையும், (24) விருத்த வகையும், (25) ஐம்படை விருத்தமும், (26) நாழிகைக் கவியும், (27) நவமணி மாலையும், (28) கைக்கிளை மாலையும், (29) அரிபிறப்பும், (30) அட்டமங்கலமும், (31) இல்லற வெள்ளையும், (32) மங்கல வெள்ளையும், (33) தாரகமாலையும், (34) செந்தமிழ் மாலையும், (35) தாண்டகமும், (36) பதிகமும், (37) சீர்மெய்க்கீர்த்தியும், (38) செருக்களவழியும், (39) மறக்களவஞ்சியும், (40) செருக்களவஞ்சியும், (41) ஆற்றுப்படைவகையும், (42) கண்படை நிலையும், (43) துயிலெடை நிலையும், (44) விளக்குநிலையும், (45) கடாநிலையும், (46) ஆண்டு நிலையும், (47) பறைநிலையும், (48) அந்தாதித் தொகையும், (49) மருட்பாவும், (50) பாதாதியும், (பாதாதி கேசமும்), (51) பணைமுலையும் நயனமும் பற்றிய பத்தும், (52) உழத்திப் பாட்டும், (53) குறத்திப்பாட்டும், (54) ஒருபா ஒருபஃதும், (55) இருபா இருபஃதும், (56) கோவையும், (57) கணக்கும், (58) தொடர்நிலைச் செய்யுளும், (59) பத்துப்பாட்டும், (60) கடைநிலையும், (61) கையறுநிலையும் ஆகிய இவற்றை (நூற்கள் இயற்றும்) முறைமையினை உணர்ந்த புலவர்கள் இனம் என்று கூறினார்கள்.

கைக்கிளை அரிபிறப்பு அட்டமங் கலமே
இல்லற வெள்ளை எழில்புனை தாரகை
செந்தமிழ் தாண்டகம் துகளறு பதிகம்
சீர்மெய்க் கீர்த்தி செருக்கள வழியே
மறக்கள வஞ்சி செருக்கள வஞ்சி
யாற்றுப் படைவகை கண்படை துயிலெடை
விளக்கு நிலையே வெஞ்சினக் கடாநிலை
எண்ணி யாண்டே கண்ணிய பறைநிலை
அரும்பொருள் நிறுத்த அந்தா தித்தொகை
புறநிலை வாயுறை செவியறி வுறூஉவே

இதில் வந்த ஏகாரங்களும், என என்பதும் எண்ணிடைச் சொற்கள்.

இவ்வியலிற் பின்னர்க் கூறப்படும் நூற்களின் இலக்கணங் களுள், 'தாரகைமாலை' என்பதற்குப் பின், 'செந்தமிழ்மாலை' என்பதற்கு இலக்கணங் கூறப்பட்டிருக்கின்றது. 'செருக்கள வழி' என்பதற்குப்பின் 'மறக்களவஞ்சி', 'செருக்களவஞ்சி' என் பனவற்றிற்கு இலக்கணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இம் மூன் றும் இச் சூத்திரத்திற் காணப்பட்டில; ஆதலின், இச் சூத்திரத் தில் தாரகைமாலை என்பதற்குப்பின் உள்ளதாகிய பதினேழாம் அடியின் முதலில் உள்ள சொல்லிய என்பது 'செந்தமிழ்' எனத் திருத்தப்பட்டது. 'சீர்மெய்க் கீர்த்தி' என்று தொடங்கும் அடிக் குப்பின்,

'மறக்கள வஞ்சி செருக்கள வஞ்சி'

என்னும் அடி சேர்க்கப்பட்டது.

இவை என் சொந்த மொழியினால் அமைத்துக் கொள்ளப் பட்டனவல்ல. 'செந்தமிழ்மாலை' என்பதினின்று 'செந்தமிழ்' என்பது கொள்ளப்பட்டது எனவும், 'மறக்களவஞ்சி', 'செருக் களவஞ்சி' என்பன இரண்டும் உள்ளபடியே ஓரடியாக்கி அமைக் கப்பட்டன எனவும் அறிக.

'சிலைபரிகரியே, எழில்பூனை வாள்குடை தோழில் புனை வேல்கோல், அழிவில் நாடேர் என்பவற்றோடு விருத்தம் என்ப

பாத மாதி பணைமுலை நயனம்
குற்றமில் உழத்தி குறத்திப் பாட்டே
ஒருபா ஒருபஃது இருபா விருபஃது
கோவை கணக்கே தொடர்நிலைப் பாட்டே
கடைநிலை கையறு நிலைஎனக் கருதி
இடன்அறி புலவர் இயம்பினர் இனமே. (கரு)

க. சாதகம்

100. [1]தோற்றிய சாதகம் சாற்றும் காலைப்
பற்றிய கலியுகத் துற்ற யாண்டில்
திருந்திய சகாத்தமும் ஆண்டும் பொருந்திய
ஞாயிறும் பக்கமும் மேய வாரமும்
இராசியும் மன்னுற மொழிதற் குரிய. (கசு)

தனை இயைத்து, 'விருத்த வகை' எனவும், ஐம்படை என்பதனோடு விருத்தம் என்பதனை இயைத்து, 'ஐம்படை விருத்தம்' எனவும் கொள்க. இங்ஙனம் விருத்தம் என்பதை இரண்டிடத்தும் இயைக்க.

'பணைமுலை நயனம்' என்பதில் உள்ள பணைமுலை, நயனம் என்பன தனித்தனிப் பத்து என்பதனோடு கூடிப், 'பணை முலைப் பத்து நயனப்பத்து என்றாம். இவை இரண்டு நூலாமேனும் பத்து என்பதை நோக்கி ஒன்றாகக் கொள்ளப்பட்டன. விருத்த வகையும் அன்னதே. 'பணைமுலைப்பத்து' என்பது 'பயோதரப் பத்து' என்றுங் கூறப்படும்.

'புறநிலை வாயுறை செவியறிவுறூஉ' என்றதற்கு புறநிலையும், வாயுறையும், செவியறிவுறூஉமாகிய இம் மூன்றையும் பொருளாகக்கொண்டு வருகின்ற மருட்பா என்று பொருள் கொள்க.

இஃது உம்மைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழி.

1. மகவு தோன்றியதைப்பற்றிய சாதகம் என்னும் நூலைப் பாடும்போது, மகவு தோன்றிய அப்பொழுது பொருந்திய கலியுகத்தில் அமைந்துள்ள ஆண்டில் செவ்விதின் விளங்கும் சகாத்தமும், அச் சகாத்தத்துள் அப்பொழுது நிகழும் ஆண்டும், (அச்

உ. [1]பிள்ளைப்பாட்டு

101. [2]பிள்ளைப் பாட்டே தெள்ளிதின் கிளப்பின்
மூன்று முதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே. (கஎ)

எஉ. "ஒன்றுமுத லையாண் டோதினும் வரையார்"
—பொய்கையார்.

எசு. "தோற்ற முதல்யாண் டீரேட் டளவும்
ஆற்றல் சான்ற ஆண்பாற் குரிய"

சமயத்துப்) பொருந்திய உதயாதி நாழிகையும், பூர்வபக்கம் அமரபக்கம் என்பவற்றுள் அப்பொழுதுள்ள பக்கமும், அன்றைக் கிழமையும், மேட முதலியனவாகிய பன்னிரண்டு இராசிகளுள் அப்பொழுது பொருந்திய இராசியும் அதிற்பொருந்த பாடுதற்கு உரியனவாம்.

ஞாயிறு - சூரியன்; அஃது ஈண்டுப் பொருளாகு பெயராய் உதயாதி நாழிகையை உணர்த்திற்று.

1. இஃது இக்காலத்துப் பிள்ளைத்தமிழ் என்றே வழங்குகின்றது.

2. பிள்ளைப்பாட்டை தெளிவுறப் பாடுமிடத்து, மூன்று மாத முதலாக இருபத்தோராமாதம் வரையினும் அமைந்த மாதங்களுள் சிறந்தனவாகிய ஒற்றித்த மாதங்களில் காப்பு முதலிய நிலையை உடைய அந்நூலை உரியோர் கேட்கும்படி கூறுவார்கள் புலவர்கள்.

நிலை - காப்பு முதலிய நிலைகள்; இவற்றை நிலங்கள் என்றுங் கூறுவர். இஃது ஈண்டுச் சினையாகு பெயராய் நூலை உணர்த்தியது.

'திங்கள்' என்னாது 'ஆன்றதிங்கள்' என்றது, பிள்ளைப் பாட்டை ஒற்றித்த மாதங்களிற் கேட்பித்தல் வேண்டும் என்பதூஉம், மூன்றும் ஆண்டினும், ஐந்தாம் ஆண்டினும், எழாம் ஆண்டினும் கேட்பிக்கினும் இழுக்காது என்பதூஉம் அறிவித்தற்காம் எனக்கொள்க.

எஎ. "காப்புமுத லாகிய யாப்புவகை யெல்லாம்
பூப்பு நிகழ்வளவும் பெண்பாற் குரிய"
—இந்திரகாளியார்.

எஅ. "தோன்னிலை வேந்தர் சுடர்முடி சூடிய
பின்னர்ப் பெறஅர் பிள்ளைப் பாட்டே"
—பரணர்.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின், எழாஞ்செய்யுளில்,

"முறைதருமுன் றதிழ வேழிறந் திங்கள்
அறைகநிலம் பத்துமான் டைந்தேழ்"

என்றதனையும், அந்நூலின் உரையாசிரியர் அதற்குக் கூறிய உரையில்,

"பிள்ளைப்பிரபந்தம், மூன்றுமாதமுதல் இருபத்தோரா மாதம் வரை ஒற்றித்த மாதமாகிய பத்துமாதங்களினும் கேட்பிக்கப்படும். அன்றியும், ஐந்தாம் ஆண்டினும் ஏழாம் ஆண்டினும் இக்கவி கேட்பிக்கினும் இழுக்காது." என்றதனையும், இலக்கண விளக்க பாட்டியலின்கண்,

"மூன்று முதல்ழ வேழ திங்களின்
ஒற்றை பெற்ற முற்றுறு மதியின்
கோள்ளுக பிள்ளைக் கவியைக் கூர்ந்தே"

எனவும்,

"மூன்றைந் தேழா மாண்டினு மாதம்"

எனவும் வருஞ் சூத்திரங்களையும், அவற்றின் உரையையும் ஈண்டு நோக்குக. ஈண்டுக் காட்டியவற்றுள், வச்சணந்திமாலைச் சூத்திரத்து செய்யுளினும் உரையினும் மூன்றும் ஆண்டு நீங்கிய மற்றவை கொள்ளப்பட்டிருத்தலை அறிக.

ஒரு சாரார் ஆண்பாற்காயின் பதினறு ஆண்டளவும், பெண்பாற்காயின் பூப்பு நிகழும் வரையினும் கேட்பிக்கலாம் என்ப.

அவற்றைப் பின்வரும் இந்நூலின் மேற்கோட் சூத்திரங்களான் அறிக.

ஆண்பாற் பிள்ளைப்பாட்டில் அமைத்தற்குரிய நிலைகள்

102. [1] காப்போடு செங்கீரை தால்சப் பாணி
யாப்புறு முத்தம் வருகஎன் றல்முதல்
அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்
நம்பிய மற்றவை சுற்றத் தளவென
விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர். (௬அ)

---

1. காப்பும், செங்கீரையும், தாலும், சப்பாணியும், முத்தமும், வருக என்றலும், முதன்மையாகிய அம்புலியும், சிற்றிலும், சிறுபறையும், சிறுதேரும், அறிஞர் தெளிந்த மற்றவையும் சுற்றத்தளவாக வைத்துப்பாடுதல் வேண்டும் என்று தெய்வத்தன்மையினை உடையவர்களாகிய நன்மையினைக்கொண்ட புலவர்கள் கூறினார்கள்.

ஒடு - எண்ணிடைச் சொல்;

அதனைச் 'செங்கீரை' முதலியவற்றோடுங் கூட்டிப் பொருள் கொள்க. 'காப்பும்...சிறுதேரும் மற்றவையும் என்க. குழந்தைகளிடம் முத்தம் பெறுகையில் பெரும்பான்மையும் அவர்களைத் தழுவிக்கொள்ளுதல் இயல்பாகலின், முத்தம், 'யாப்புறு முத்தம்' என விசேடிக்கப்பட்டது.

அம்புலிப்பருவச் செய்யுள்கள், சாமம், தானம், பேதம், தண்டம் என்னும் நான்குவகை உபாயங்களும் அமையப் பாடப்படுதற்கு உரியன என்பதனை அறிவித்தற்கு அப்பருவம், 'முதல் அம்புலி' என விசேடித்துக் கூறப்பட்டது.

சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பனவற்றிற்கு முறையே சிற்றில் சிதைத்தல், சிறுபறை கொட்டல், சிறுதேர் உருட்டல் என்பன பொருள் எனக்கொள்க.

'மற்றவை' என்றதனால், அச்சோவச்சோ எனல், புறம் புல்குவான் எனல், அப்பூச்சி காட்டுகின்றான் எனல், முலையுணாய் எனல், நீராட வாராய் எனல், குழல்வாராயக்காக்காய் எனல், ஓர்கோல் கொண்டுவா எனல், பூச்சூட்ட வாராய் எனல், காப்பிட வாராய் எனல், இன்று முற்றும் எனல் முதலியனவும் கொள்க. இங்குக் கூறியவற்றைப் பெரியாழ்வார் திருமொழியிற்காண்க.

முன்னுற அமைத்தற்குரிய சுற்றத்தார்

103. [1] தந்தை தாயே பாட்டன் பாட்டி
முந்துற உரைத்தல் முறைமை என்ப. (௧௯)

பெண்பாற் பிள்ளைப்பாட்டில் அமைத்தற்குரிய நிலைகள்

104. [2] திருந்திய பெண்மக வாயின் விரும்பிய
பின்னர் மூன்றும் மன்னுநீக் கென்றனர். (௨௦)

எசு. [3] "சிற்றில் சிறுதேர் சிறுபறை ஒழிந்து
மற்றவை மகளிர்க்கு வைப்ப தாதும்"

பெண்பாற் பிள்ளைபாட்டுக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி

105. [4] சிற்றில் இழைத்தல் சிறுசோ றுக்கல்
பொற்பமர் குழமகன் புனைமணி ஊசல்
ஆண்டீ ராறதில் எழிற்காமன் நோன்போடு
வேண்டுதல் தானுள விளம்பினர் புலவர். (௨௧)

---

1. சுற்றத்தவர்களைக் கூறுமிடத்துத் தந்தை, தாய், பாட்டன், பாட்டி என்னும் இவர்களை முன் அமைத்துக் கூறுதல் முறைமை என்று புலவர்கள் கூறுவார்கள்.

2. இல்லறநிலைமை செம்மையுறுதற்குக் காரணமாகிய பெண்மகவைப்பற்றிய பிள்ளைப்பாட்டாயின் ஆண்பாற்காமென விழைந்து கூறிய பத்தினுள் ஈற்றிற் கூறிய சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் மூன்றும் அதிற் பொருந்துதல நீக்குக என்று புலவர்கள் கூறினார்கள்.

'மன்னு' என்பது உகரச்சாரியை பெற்ற முதனிலைத் தொழிற்பெயர்.

3. இச் சூத்திரம் இயற்றினார் இன்னார் என்பது தெரிந்திலது.

4. சிற்றில் இழைத்தலும், சிறுசோறுக்கலும், அழகு பொருந்திய குழமகனும், மணிகளாற் புனையப்பட்ட ஊசல் ஆடுதலும், பன்னிரண்டு ஆண்டில் நோன்பு நோற்றலும் ஆகிய இவை

காப்பிற்குரிய கடவுளர்

106. [1]திருமால் அரனே திசைமுகன் கரிமுகன்
போருவேல் முருகன் பரிதி வடுகன்
எழுவகை மங்கையர் இந்திரர் சாத்தன்
நிதியவன் நீலி பதினொரு மூவர்
திருமகள் நாமகள் திகழ்மதி என்ப
மருவிய காப்பினுள் வருங்கட வுளரே. (உஉ)

பெண்பாற் பிள்ளைப்பாட்டில் விரும்பிப்பாடுதற் குரியனவாக உள்ளன எனப் புலவர்கள் கூறினர்கள்.

ஒடு என்பது எண்ணிடைச் சொல். 'உள' என்னாது, வேண்டுதல் தானுள' என்றதனுற் கழங்கு, அம்மானை என்பவற்றையும் கொள்க. இலக்கண விளக்கப்பாட்டியலின்கண் உள்ள,

"அவற்றுள்,
பின்னைய் மூன்றும் பேதையர்க் காகா
ஆடும் கழங்கம் மானை ஊசல்
பாடும் கவியாற் பகுத்து வகுப்புடன்
அகவல் விருத்தத் தாற்கிளை அளவாம்"

என்னும் 47-ஆம் சூத்திரத்தில் கழங்கு அம்மானை சேர்ந்திருத்தல் காண்க.

'சிறுசோறுக்கல்' என்பது இப்பொழுது நிலாச்சோறுக்கல் என்று வழங்குகின்றது. குழமகன் என்பது சிறுமியர் மரம் முதலியவற்றுற் குழவிகளைப்போற் செய்யப்பட்ட பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடும் விளையாட்டுப்போலும். குழமகன் - குழந்தை. ஈண்டுக் கூறப்பட்ட நோன்பு, பிள்ளைப் பாட்டிற் காப்பு முதலியவற்றோடு வைத்துக் கூறப்படும் நோன்பாதலின், பாவை நூற்களிற் கூறப்படும் நோன்பின் வேறானதாம் என்று கொள்க.

1. திருமாலும், அரனும், பிரமனும், யானைமுகக் கடவுளும், முருகனும், சூரியனும், வடுகனும், எழுவர் மங்கையரும்,

காப்பின் முதற்கண் எடுத்துரைக்கும் கடவுள்

107. [1]காப்பின்முதல் எடுக்கும் கடவுள் தானே
பூக்கமழ் துழாழ்முடி புனைந்தோன் ஆகும். (உரு)

காப்பின் முதற்கண் திருமாலைக் கூறவேண்டியதன் காரணம்

108. [2]அவன்றான்,
காவற் கிழவன் ஆக லானும்
பூவின் கிழத்தியைப் புணர்த லானும்
முடியும் கடகமும் மோய்பூந் தாரும்
குழையும் நூலும் குருமணிப் பூணும்
அணியும் சேம்மல் ஆக லானும்
முன்னுற மோழிதற் குரியன் என்ப. (உச)

இந்திரரும், சாத்தனும், குபேரனும், நீலியும், முப்பத்து மூன்று தேவர்களும், திருமகளும், பாமகளும், சந்திரனும் பிள்ளைப்பாட்டின் காப்பில் வருதற்குரிய கடவுளர் ஆவர் என்று புலவர் கூறுவர்.

இதில் 'இந்திரன்' என்னுது 'இந்திரர்' என்றது கருதற்குரியது. பதினொரு மூவர் என்பதில் பதினொன்று என்பது மூவர் என்பதன் முதனிலையாகிய மூன்று என்பதனோடியைந்து பதினொன்றாகிய மூன்று, முப்பத்து மூன்று என்றாயிற்று என்க.

முப்பத்து மூன்று தேவர்கள் : பன்னிரண்டு ஆதித்தர்கள், பதினோர் உருத்திரர்கள், எட்டு வசுக்கள், இரண்டு மருத்துவர்கள் என்ப.

1. காப்பிலே முதலில் எடுத்துரைத்தற்குரிய கடவுள் பூமணம் கமழும் துழாய்மாலையை முடியில் அணிந்த இறைவனுவன் என்பது.

2. பூவின் கிழத்தி - திருமகள், மொய் பூந்தார் - ஒன்றுடன் ஒன்று நெருங்கிய பூக்களாலாகிய மாலை, குரு மணிப்பூண்- நன்னிறத்தினை உடைய மணிகளைப் பதித்த அணிகள், செம்மல்- எப்பொருட்கும் இறைவன்.

காப்பின்கண் விரிசடைக் கடவுளையும் எழுவர் மங்கையரையும் பாடும் வகை

109. [1]விரிசடைக் கடவுளும் வேய்த்தோள் எழுவரும்
அருளோடு காக்கவென் றறையுங் காலைக்
கொலையும் கொடுமையும் கூறு ராகிப்

---

1. வேய்த்தோள் எழுவர் - மூங்கிலைப்போன்ற தோள்களை உடைய சத்த மாதர்கள். அவர்களாவார்: (1) அபிராமி, (2) மாயேச்சுவரி, (3) கௌமாரி, (4) நாராயணி, (5) வராகி, (6) இந்திராணி, (7) காளி என்பவர்கள்.

சின்னம் - அடையாளம். அவர்களின் அடையாளமாவன வாகன முதலியன (1) அபிராமியின் வாகனம்-அன்னம், ஆயுதம்-மறை. (2) மயேச்சுவரியின் வாகனம்-இடபம், ஆயுதம்-பினாகம். (3) கௌமாரியின் வாகனம்-மயில், ஆயுதம்-வேல், (4) நாராயணியின் வாகனம் - கருடன், ஆயுதம் - ஆழி. (5) வராகியின் வாகனம் - சீயம், ஆயுதம் - கலப்பை. (6) இந்திராணியின் வாகனம் - யானை, ஆயுதம் - வச்சிரம். (7) காளியின் வாகனம் - பேய், ஆயுதம் - சூலம் என்க.

கொலையும் கொடுமையும் கூறுராகி - விரிசடைக் கடவுளையும், வேய்த்தோள் எழுவரையும் காப்பில் வைத்துப் பாடுகையில் அவர்கள் அரக்கர் முதலியவர்களைக் கொன்றதையும், அவர்கள் அக் கொடியவர்கள்பால் இயற்றிய கொடுமையையும் கூறாதவர்களாய். மழுவொடு என்பதில் ஒடு எண்ணிடைச் சொல்.

கங்கை, திங்கள், கடுக்கைமாலை, மழு, மலைமகள் என்னும் இருதிணையும் விரவி, 'என்ற இவை' என அஃறிணை முடிபைப் பெற்றன.

இம் முடிபிற்குத் தொல்காப்பியத்துள், சொல். கிளவியாக்கத்தில் உள்ள,

"பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே"

என்னும் ஐம்பத்தோராஞ் சூத்திரம் விதியாம். இது, நன்னூலில் சொல். பொதுவியலில் உள்ள,

பேயரும் சின்னமும் பிறவும் தோன்றக்
கங்கை திங்கள் கடுக்கை மாலை
மங்கல மழுவொடு மலைமகள் என்றிவை
விளங்கக் கூறல் விளம்பிய மரபே. (உரு)

அ0. "ஒன்பது பதினேன் றென்பது காப்பே"

—பரணர்.

"திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினும் இழிவினும் ஒருமுடி பினவே"

என்னும் 27-ஆம் சூத்திரத்துள், 'மிகவினும்' என்றதனுற் கொள்ளப்படும்.

இச் சூத்திரத்துக், 'கூறல்மரபு' என்னுமல், 'கூறல் விளம்பிய மரபு' என்றமிகையான், காப்புச் செய்யுள் ஒன்பதாகவேனும் பதினொன்ருகவேனும் பாடுதல் வேண்டும் என்பதூஉம், நிலைகள், பத்தையும் தம்மில் ஒப்பக்கொண்டு பாடுமிடத்து ஒற்றைப்படப் பாடுதல் சிறப்புடைத்து ; இரட்டிக்கப்பாடின் ஓசை பெயர்த்துப் பாடுதல்வேண்டும் என்பதூஉம் கொள்க. அவற்றை அங்ஙனம் பாடுதல் வேண்டும் என்பதனைப் பின்னர் வரும்,

"ஒன்பது பதினேன் றென்பது காப்பே"

என்னும் மேற்கோட் சூத்திரத்தானும், இலக்கண விளக்கப்பாட்டியல் ஐம்பத்தோராஞ் சூத்திரத்தின் விசேடவுரையில், 'நிலங்கள் பத்தும் தம்மில் ஒப்பக்கொண்டு பாடுமிடத்து ஒற்றைப்படப் பாடுதல் சிறப்புடைத்து; இரட்டிக்கப் பாடுமிடத்து ஓசை பெயர்த்துப்பாடுக" என்றதனுனும் அறிக.

மேற்காட்டிய மேற்கோட் சூத்திரமே இலக்கணவிளக்கப் பாட்டியலின் ஐம்பத்தோராஞ் சூத்திரமாகக் கொள்ளப்பட்டிருத்தலும் ஈண்டு நோக்கற்கு உரியது.

110. [1]அகவல் விருத்தமும் [2]கட்டளை யோலியும்
[3]கலியின் விருத்தமும் [4]கவின்பெறு பாவே. (உசு)

111. [5]பிள்ளைப் பாட்டே நெடுவெண் பாட்டெனத்
தெள்ளிதிற் செப்பும் புலவரும் உளரே. (உஎ)

112. [6]முதற்கண் எடுக்கும் அகவல் விருத்தம்
[7]எழுத்தின் பகுதி எண்ணினர் கோளலே. (உஅ)

உவகை அமைத்துப்பாடும் திறம்

113. [8]நீணெறி உவகை ஆண்மக விற்கேழ்
ஐம்மூ வாண்டே அவர்முதற் சாற்றல். (உகூ)

---

1. அகவல் விருத்தம் - ஆசிரிய விருத்தம்.

2. 'கட்டளை ஒலி' என்றது கட்டளை அடியையப் பெற்று வரும் கலிப்பாப்போலும்; அடுத்துக் கலியின் விருத்தம் என்றதனால் இங்ஙனங் கருத்துக் கொள்ளப்பட்டது.

3. கலியின் விருத்தம் - கலிவிருத்தம்.

4. கவின்பெறு பா - இவை பிள்ளைப்பாட்டில் அழகு பெற்றிருக்கும் பாவாம்.

5. பிள்ளைப்பாட்டு நெடுவெண்பாட்டாய் வருதல் வேண்டும் என்று தெளிவாகக் கூறிய புலவர்களும் உளர்.

6. கவிஞர் முதற்கண் எடுக்கும் ஆசிரிய விருத்தத்தின் எழுத்தின்பகுதிகளை நான்கடிக்கும் ஒப்ப எண்ணிக் கொள்ளக் கடவர்.

இலக்கண விளக்கப்பாட்டியல் ஐம்பத்தோராஞ் சூத்திரத்தின் விசேட உரையில், "உரையிற் கோடலால் காப்பு முதற்கண் எடுத்த அகவல் விருத்தம் நான்கடிக்கும் எழுத்தொப்பப்பாடுதல் வேண்டும் எனக்கொள்க" என்றதை ஈண்டு நோக்குக.

7. 'எழுத்தின் ஒருகுதி' என்றும் பாடம்.

8. ஆண்பாற்கு உயர்ந்த நெறியினையுடைய உவகையை அமைத்துப் பாடுங்கால் எழு, ஐந்து, மூன்று என்னும் ஆண்டுகளை அவர்முதற் சாற்றுக.

பிள்ளைப்பாட்டில் ஆண்பாற்குக் கூறற்குரிய உவமை

114. [1]பொங்குகதிர் இளம்பிறை புலியின் சிறுபறழ்
குஞ்சரக் குழவி கோளரிக் குருளை
அடலிள விடையே ஆறிரண் டாண்டின்
இடைநிகழ் உவமை என்மனார் புலவர். (கூ0)

பெண்பாற்குக் கூறற்குரிய உவமை

115. [2]பெண்மக விற்குப் பேசு மிடத்து
மானின் கன்று மயிலிண் பிள்ளை
தேனின் இன்பத் தெள்ளாத் தேறல்

அவர் முதற் சாற்றல் என்பதற்கு அவர்க்கு முதலாகச் சாற்றுக என்பது பொருள் போலும். இதனை ஆய்ந்துகொள்க. பின்னர்,

"பிறப்பே ஓகை பேணுறு வளர்ச்சி
சிறைப்பட வச்சம் உறுத்தலோடு நான்கும்
ஆராயுங்கால் ஐந்துமன் றிடையாய்
ஓரே ழொருபொருட் குயர்ச்சியிழி பொன்றே''

எனவரும் மேற்கோட் சூத்திரத்தை ஈண்டு நோக்குக.

1. கதிர்முதல் விடைவரையினும் கூறிய இவை பிள்ளைப் பாட்டில் ஆண்மகற்குப் பன்னிரண்டாம் ஆண்டின்கண் கூறற்கு உரிய உவமைகளாம் என்று புலவர் கூறுவர் என்பது.

"என்மனார்' என்பது செய்யுண் முடிபெய்தி நின்றதோர் ஆரீற்றெதிர்கால முற்றுச் சொல்'' என்றார் சேனாவரையர்.

"என்மனார்' என்பது ஓர் ஆரீற்று நிகழ்கால முற்றுவினைத் திரிசொல்'' என்றார் நச்சினார்க்கினியர். ஈண்டு, அது, முக்காலத்திற்கும் பொதுவாய் நின்றது.

2. மானின் கன்று முதல் வல்லி வரையினும் கூறிய இவை பிள்ளைப்பாட்டிற் பெண்பாற்குக் கூறுதற்குரிய உவமைகளாம் என்பது.

கரும்பின் இளமுளை கல்லாக் கிள்ளை
இளந்தளிர் வல்லி என்றிவை எல்லாம்
பெய்வளை மகளிர்க் கெய்திய உவமை. (௩௪)

அக. "இளங்கதிர்த் திங்கள் எல்லார்க்கும் உரித்தே"
—பரணர்.

அஉ. [1]"அவைதாம்,
பிள்ளையைப் பாடலிற் பிள்ளைப் பாட்டாய்ப்
பிறப்பே ஓகை காப்பே வளர்ச்சி
அச்ச முறுத்த லுடன்செங் கீரை
தால்சப் பாணி முத்தம்வா ரானை
அம்புலி சிற்றில் குழமகன் ஊசல்
என்றனர் பிறவும் தொன்னெறி மரபின்
தத்தம் தொழிற்குத் தகுவன புகறல்
எத்திறத் தோர்க்கும் உரிய என்ப
கொச்சகக் கலியொடு நெடுவெண் பாட்டே"

அ௩. "நெடுவெண் பாட்டின் முந்நான் கிறவாது
தொழிலொடு குறித்துத் தோன்றுஞ் செய்யுள்
ஒன்றுமுன் றைந்தே ழொன்பான் பதினொன்
றென்றிவை இவற்றின் இகந்தன இழுக்கே"

அச. "பிறப்பே ஓகை பேணுறு வளர்ச்சி
சிறைப்பட அச்ச முறுத்தலொடு நான்கும்
ஆரா யுங்கால் ஐந்துமுன் றிடையாய்
ஓரே ழொருபொருட் குயர்ச்சியிழி பொன்றே"
—இந்திரகாளியார்.

---

1. இதிற் கூறப்பட்டவற்றுள், பிறப்பு, ஓகை, வளர்ச்சி, அச்சமுறுத்தல், குழமகன் என்பன ஆய்ந்து கோடற்குரியன வாகும். இது, மேற்கோட் சூத்திரமேனும் இதிற் கூறப்பட்ட வற்றுள், ஓகை என்பது நூற் சூத்திரங்களுள் ஒன்றாகிய 116-ஆம் சூத்திரத்திற் கூறப்பட்டிருத்தலின், இவை ஆய்தற்கு உரியன எனக் கருதப்பட்டன.

௩௨. வேந்தன்குடை மங்கலம்

116. [1]முன்னீர் அடியிலும் குடைத்தொழில் இயம்பியும்
பின்னீர் அடியில் தனிநிலை இரட்டியும்
கொற்றவற் புகழ்ந்து குடைஎன முடிக்கும்
நற்றிற நேரசைக் குடைவெண் பாட்டே. (௯௨)

அரு. அதுவே,
குடைச்சொற் சிந்தடி யீற்றில்வைத் தந்தக்
குடைச்சொல் லாதிக் குளகத் தடக்கி
ஈற்றயல் அடியினும் ஈற்றினும் இறைவனைப்
போற்றிப் புகழ்ந்து புகறல் வேண்டும்.
—இந்திரகாளியார்.

குடைமங்கலம் உரைக்கும் வெண்பாவிற்குச் சிறப்புவிதி

117. [2]ஒட்டிய குடைப்பொருள் உரைக்கும் நேரசை
கட்டளை ஆகுதல் கடனென மொழிப. (௯௩)

---

1. முன்னிரண்டு அடிகளிலும் கொடைத் தொழிலைக் கூறியும், பின்னிரண்டு அடிகளில் தனிநிலையை இரட்டித்தும் அரசனைப்புகழ்ந்து குடை என முடிக்கும் நன்மையாகிய திறத்தினை உடைய நேரிசை வெண்பாக்களாற் பாடுவது குடைமங்கலமாகும்.

இது, தொல். பொருள். புறத்திணை இயல் 36-ஆம் சூத்திரத்தில்,

"நடைமிகுத் தேத்திய குடைநிழன் மரபும்"

என்று கூறப்பட்டது (பாடாண்டிணை). புறப்பொருள் வெண்பாமாலைப், பாடாண்படலத்து 34-ஆம் கொளுவில்,

"நாற்றிசையும் புகழ்பெருக
வீற்றிருந்தான் குடைபுகழ்ந்தன்று"

என்று கூறப்பட்டது.

2. அரசன் சிறப்பை ஒட்டிய குடைமங்கலத்தைச் சொல்லுமிடத்து, அதனை உரைப்பதாகிய நேரசை வெண்பாவின் அடிகள் கட்டளையை உடையனவாயிருத்தல் கடைமையாம் என்று புலவர் கூறுவர்.

இதுவும் அது

118. [1]கட்டளை என்பது கருதும் காலை
ஈற்றடி ஒழிய ஏனைமூன் றடியும்
பாற்படும் எழுத்தின் பகுதியொப் பதுவே. (௩௪)

இதுவும் அது

119. [2]இதற்கே ஆமெழுத் தெண்ணுங் காலை
குற்றியல் உகரமும் குற்றியல் இகரமும்
ஒற்றும் ஒழித்துயிர் உயிர்மெய்யுங் கோளலே. ()

தொடைஎன்பன இவைஎனல்

120. [3]மோனையும் எதுகையும் தொடைஎன மொழிப.

ஈண்டுநேரசை என்றது நேரசை வெண்பாவை உணர்த்தியது. அது முதலாகு பெயராய் அதன் அடிகளை உணர்த்தியது. அக் கட்டளையை அடுத்த சூத்திரத்தான் அறிக.

1. ஈண்டுக் கட்டளை என்று சொல்லப்படுவதனைக் கருதும் இடத்து அவ் வெண்பாவின் ஈற்றடி ஒழிய மற்றை மூன்று அடிகளும் தம்பாற் பொருந்திய எழுத்துக்களின் பகுதி ஒத்திருத்தலாம்.

இதில் எண்ணமல் விடுதற்குரிய எழுத்துக்களும் எண்ணுதற்கு உரிய எழுத்துக்களும் உண்மையின் எண்ணுதற்கு உரிய எழுத்துக்களைக் கொள்ளுதல் வேண்டும் என்பதனை அறிவித்தற்கு 'எழுத்து' என்னமல் 'எழுத்தின் பகுதி' எனப்பட்டது.

2. இதற்காம் எழுத்துக்களை எண்ணுமிடத்துக் குற்றியலுகரமும், குற்றியலிகரமும், ஒற்றும் ஒழித்து உயிரையும் உயிர்மெய்யையும் எண்ணிக்கொள்க.

ஈண்டு 'ஒற்று' என்றது மெய் எழுத்தையும் ஆய்த எழுத்தையும்.

3. இதில் வருதற்கு உரிய தொடைகள் மோனையும் எதுகையும் என்பது இதன் பொருள்போலும். தொடைகளை ஈண்டுக் கூறுதற்கு உரிய இயைபு வேறியாதுமின்மையின்,

௩ குடைமங்கலத்தில் வரும்பொருள்

நேரிசை வெண்பா

121. [1]சாற்றியமா றேத்தல் தனிமை மிகுதிசமம்
போற்றுமுடன் பாடு புலனுண்மை - யேற்றும்
தலைப்பாடு பாதி தருகோடை பத்தும்
நிலைப்பாடு நேரசையா நேர். (நடஎ)

௪. ஒரு போகு

122. [2]தன்மை முன்னிலை படர்க்கையுள் தன்மை
ஒழித்திரு வகையுள் ஒன்றாற் கடவுட்

இங்ஙனம் பொருள் கொள்ளப்பட்டது. இவற்றை ஈண்டுக் கூறியதற்கு வேறு இயைபு கொள்ளக் கூடுமெனின், கொள்க.

1. இதன் பொருளை ஆய்ந்துகொள்க.

2. தன்மையும், முன்னிலையும், படர்க்கையுமாகிய மூன்றிடத்தில் தன்மை இடத்தை நீக்கி மற்ற இரண்டிட்த்தில் ஓரிடத்தாற் கடவுளைப் பழிச்சும் ஒரு போகானது, தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்பும் ஒன்றாய் அமைந்து நடக்கும் நயம் விளங்கும் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவினுள், வண்ணக உறுப்பு நீங்கினும் அம்போதரங்க உறுப்பு நீங்கினும் ஓதப்பட்ட உறுப்பாற் பெயரைக் கூறினர்கள் புலவர்கள் என்பது.

போதினும் என்பவற்றில் இருக்கும். து சாரியை என்க.

'ஓதிய உறுப்பாற் பேர்பெறும்' என்றதனால், அவற்றுள் வண்ணக உறுப்புத் தழுவின 'வண்ணக ஒருபோகு' எனவும், அம்போதரங்க உறுப்புத் தழுவின அம்போதரங்க ஒருபோகு எனவும் கூறப்படும் என்றறிக. அதனை, யாப்பருங்கலவிருத்தி, 86-ஆம் சூத்திரத்தின் விசேட உரையில், "இனி, ஒருசார் கொச்சகங்களை ஒருபோகு என்று வழங்குவாரும் உளர். மயேச்சுரராற் சொல்லப்பட்ட 'அம்போதரங்கமும்', 'வண்ணகமும்' என்றிரண்டு தேவபாணியும் திரிந்து தரவொழித்து அல்லாத உறுப்புப் பெறினும், தாழிசை ஒழித்து அல்லாத உறுப்புப்

பழிச்சும் ஒருபோ கிருமூன் றுறுப்பும்,
அமைந்தொருங் கியலும் நயந்திகழ் கலியுள்
வண்ணகம் போதினும் எண்ணே போதினும்
ஓதிய உறுப்பாற் பேர்புகன் றனரே. (ரு அ)

பெறினும், அம்போதரங்கத்துள் ஓதப்பட்ட மூவகை எண்ணும் நீங்கினும், வண்ணகத்துக்கு ஓதப்பட்ட இருவகை எண்ணும் நீங்கினும் நீங்கிய உறுப்பு ஒழியத் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவருவன 'ஒருபோகு' எனப்படும். அவை அம்போதரங்க உறுப்புத் தழீஇயின 'அம்போதரங்க ஒருபோகு' எனவும், வண்ணக உறுப்புத் தழீஇயின 'வண்ணக ஒருபோகு' எனவும் படும்'' என்று கூறப்பட்டதனால் அறிக.

ஈண்டு வண்ணகம் என்றது தாழிசையைப்போலும். தாழிசையை வண்ணகம் என்று கூறுதலும் உண்டு. அதனைத், தொல். பொருள். செய்யுளியலின், 140-ஆம் சூத்திரத்தின் விசேட உரையில், "வண்ணித்துப் புகழ்தலின் வண்ணகம் எனப்படும். என்னை? தரவினானே தெய்வத்தினை முன்னிலையாகத் தந்து நிறீஇப், பின்னர்த் தெய்வத்தினைத் தாழிசையானே வண்ணித்துப் புகழ்தலின், அப்பெயர் பெற்றதாகலின். ஒழிந்த உறுப்பான் வண்ணிப்பினும் சிறந்த உறுப்பு அதுவென்க. எனவே அகநிலைச் செய்யுட் டாழிசை, வண்ணித்து வாரா என்பதாம்;......இனி வண்ணகம் என்பது அராகம் என உரைத்து, அவ்வுறுப்புடையன வண்ணக ஒத்தாழிசை எனவும் சொல்வாரும் உளர்.'' என்று பேராசிரியர் கூறியதனால் அறிக.

தாழிசை, கொச்சகம் என்னும் பெயரையும் பெறும். அதனை, மேற்படி செய்யுளியல், 148-ஆம் சூத்திரத்தின் விசேடவுரையில் "வண்ணகமொருபோகு என்றவழி ஒன்றேயாகின்ற கொச்சகம், ஒருவழிவாராமையின், அது 'கொச்சக ஒருபோகாம்' என்று பேராசிரியர் கூறியதனால் அறிக.

ஆனால், தாழிசை என்னும் பெயரானே வழங்கும் தாழிசைக்கும், கொச்சகம் என்னும் பெயரான் வழங்கும் தாழிசைக்கும் வேறுபாடு உள. அவ் வேறுபாடாவன: தாழிசை என்னும் பெயரான் வழங்குந் தாழிசை, துள்ளலோசையை உடைத்தா

கொச்சக ஒருபோகின் இலக்கணம்

123. [1]வரன்முறை பிறழ உறுப்பு மயங்கி
மிக்கும் குறைந்தும் வருவது கொச்சக
ஒருபோ காம்என உரைத்தனர் புலவர். (ரு௬௯)

யிருக்கும். அதனை, மேற்படி யியல் 130-ஆம் சூத்திரத்தின் விசேடவுரையில், "தாழிசை என்பது தானுடைய துள்ளல் ஓசைத்தாம்"என்று பேராசிரியர் கூறியதனால் அறிக.

துள்ளல் ஓசை தாழம்பட்ட ஓசை என்றுங் கூறப்படும். அதனை, மேற்படி இயல், 132- ஆம் சூத்திரத்தின் விசேட உரையில், "இனி, 'இடைநிலைப்பாட்டு' என்பது தாழிசையினை நோக்காது. என்னை ? தாழம்பட்ட ஓசையல்லாதனவும் இடைநிலைப் பாட்டாய் வருதலின் என்பது" என்றதனால், தாழிசை, தாழம் பட்ட ஓசை உடையது என்னும் பொருள் தோன்றுதலான் அறிக.

கொச்சகம் என்னும் பெயரான் வருந்தாழிசை பெரும் பான்மையும் துள்ள லோசை இன்றிவரும் என்க. அஃது அன்ன தாதலை, மேற்படி இயல், 121-ஆம் சூத்திரத்தின் விசேட உரையில், "கொச்சகம் என்பது ஒப்பினாகிய பெயர். ஓராடையுள் ஒருவழி அடுக்கியது கொச்சகம் எனப்படும். அதுபோல ஒரு செய்யுளுட் பல குறள் அடுக்கப்படுவது கொச்சகம் எனப்பட்டது" என்பதனால் அறிக.

1. வண்ணக ஒத்தாழிசைக் கலியின்கண் அமைந்து வருதலை உடைய முறையானது பிறழத் தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச் சொல், சுரிதகம் என்னும் உறுப்புக்கள், மயங்கியும், மிக்கும், குறைந்தும் வருவது கொச்சக ஒருபோகாகும் என்று புலவர்கள் உரைத்தார்கள்.

கொச்சக ஒரு போகிற்கு இந்நூலிற் கூறப்பட்ட இலக்கணத்தையும், தொல்காப்பியத்திற் கூறப்பட்ட இலக்கணத்தையும் நன்கு நோக்கி அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை அறிக.

இச் சூத்திரத்தை முன் சூத்திரத்தோடு வைத்து நோக்கின், கொச்சக ஒரு போகை வண்ணக ஒரு போகு என்று கூறுதலும்

கொச்சகத்தின் இலக்கணம்

124. [1]கொச்சகத் தன்மையிற் கொச்சகம் என்ப. (சo)

தேவபாணி இன்ன சொல்லின் திரிபாம் என்பது

125. [2]தேவப் பிரணவம் எனும்வட மொழியைத்
தேவ பாணியெனத் திரித்துவழங் கினரே. (சக)

இந் நூலாசிரியர் கருத்தென்பது தோன்றுகின்றது. முன்னர்த் 'தாழிசைக்கு வண்ணகம் என்னும் பெயரும் உண்டு' எனவும், 'அது கொச்சகம் என்றும் கூறப்படும்' எனவும் கூறியது, இதனை விளக்குதற்பொருட்டேயாகும். ஆசிரியர் தொல்காப்பியனார் வண்ணகமும், ஒரு போகும் வெவ்வேறானவை எனவும், அவற்றுள், ஒருபோகு 'கொச்சக ஒருபோகு', 'அம்போதரங்க ஒரு போகு' என இருவகைப்படும் எனவும் கொண்டு, அவற்றிற்கு இலக்கணங் கூறினர். அவ்விலக்கணங்களைத் தொல். பொருள். செய்யுளியலிற் காண்க. முற் சூத்திரத்தின்கண், 'கடவுட்பழிச்சும் ஒருபோகு' என்றதனால் ஒருபோது தேவபாணியாகவே வரும் என்பது பெறப்படுதல் அறிக.

1. (அதனைக் கொச்சகம் என்பது எதனால் எனின்,) கொச்சகத்தின் தன்மையை உடையதாதலின், அதனைக் கொச்சகம் என்று புலவர் கூறுப.

கொச்சகத்தன்மை இன்னது என்பது முன்னே கூறப்பட்டது. மேற்படி இயல். 152-ஆம் சூத்திரத்தின் விசேட உரையில், அவர், "இனிக் கொச்சகம் என்பது ஒப்பின் ஆகிய பெயர்; என்னை? பல கோடுபட அடுக்கி உடுக்கும் உடையினைக் கொச்சகம் என்ப. அதுபோலச் சிறியவும் பெரியவும் விராய் அடுக்கியும், தம்முள் ஒப்ப அடுக்கியும் செய்யப்படும் பாட்டதனைக் கொச்சகம் என்றார் ஆகலின் என்பது. இக்காலத்தார் அதனைப் பெண்டிர்க்கு உரிய உடை உறுப்பாக்கியும் கொய்சகம் என்று சிதைத்தும் வழங்குப" என்று கூறியதனையும் ஈண்டு நோக்குக.

2. தேவப் பிரணவம் என்று சொல்லப்படும் வடமொழியைத் தமிழ் நூலாசிரியர்கள் தமிழ் நூற்களில் தேவபாணி எனத் திரித்து வழங்கினார்கள் என்பது.

தேவபாணி இன்ன தேவரைப்பற்றிப் பாடுதற்குரியதாம் என்பது

126. [1]தேவ பாணி தெரியுங் காலை
மாசறு துழாய்முடி மலைந்த சென்னி
நீர்நிலம் அளந்த நெடியோன் மேற்றே. (சுஉ)

தேவபாணி இத்தேவர்களைப்பற்றிப் பாடுதற்கு உரியதாகிய காலமும் உள என்பது

127. [2]சுடர்க்கதிர்த் திங்கள் சூடி யோற்கும்
படர்திரைப் பனிக்கடல் மாதடிந் தோற்கும்
உரிய காலமும் உளஎன மொழிப. (சுங)

---

1. தேவபாணி தேவர்களுள், எத்தேவரைப்பற்றிப் பாடு தற்கு உரியது என ஆராயுங்கால் குற்றமற்ற துழாய் மாலையினை யும் பொன்முடியினையும் கொண்ட சென்னியை உடைய நீராற்சூழப்பட்ட நிலத்தை அளந்த இறைவனைப் பற்றியே பாடுதற்குரியதாம் என்பது.

'நெடியோன் மேற்றே' என்றதில் உள்ள ஏகாரம் பிரிநிலைப் பொருளது, மற்றைத் தேவர்களினின்று நெடியோனைப் பிரித் தலின்.

நெடியோன் தன்னை ஒத்தாரையும் மிக்காரையும் இன்றித் தான் எவரினும் உயர்ந்தவன்.

"உயர்வற வுயர்நலம் உடையவன்,"
(திருவாய்மொழி 6-ஆம் பத்து, திருவாய்மொழி.)

எனவும்,

"ஒத்தாரை மிக்காரை இலையாய மாமாயா,"
(திருவாய்மொழி, 2-ஆம் பத்து, 3-ஆம் திருவாய்மொழி)

எனவும் ஆழ்வார் அருளியவற்றை ஈண்டு நோக்குக.

உலகம் அளக்க நீண்டவன் என்னும் கருத்தில் 'நெடி யோன்' என்பது கூறப்பட்டது என்று கொள்ளலாகாதோ? எனின், முன்னே, 'நீர்நிலம் அளந்த' என்றலின், அக்கருத்தில் அஃதீண்டு வாளாப் பெயராவதன்றிப் பொருளுடையது ஆகாது ஆதலானும், தேவபாணி திருமாலுக்கு உரியதாதற்கமைந்த காரணம் உணர்த்துதற்குக் கூறப்பட்டது ஆதலின், அதனைப் பொருளின்றி நின்றதெனல் ஏற்புடையதாகாது ஆதலானும் அங்ஙனங் கொள்ளலாகாது என்க.

2. ஒளியினைக் கொண்ட கதிர்களை உடைய பிறைச்சந்தி ரனை (முடியில்) அணிந்த இறைவனைப்பற்றியும், பரவிய அலை

தேவபாணியின்கண் இத்தகைய அரசர்களை அமைத்து வாழ்த்துதலும் ஆம் என்பது

128. [1]வேந்தன் வேண்டும் நெறிசெய் தாலும்
வாய்ந்த மதியும் மரபும் வாழ்த்தலும்
விதியென மொழிப மெய்ந்நெறிப் புலவர். (சச)

களையும் குளிர்ச்சியையும் உடைய கடலில் தோன்றிய (சூரபதும ஞாகிய) மாமரத்தினை அழித்த செவ்வேளைப்பற்றியும் (தேவ பாணி பாடுதற்கு) உரியதாகிய காலங்களும் உள என்று புலவர் கள் கூறுவார்கள் என்பது.

அக்காலங்கள் இவை என ஈண்டுக் கூறப்பெற்றில; ஆத லின், அவற்றை ஆய்ந்து கொள்க.

1. அரசன் குடிகளுக்கு வேண்டிய முறையைச் செய்தா லும் (தெய்வத்தை முன்னிலையாகவேனும் படர்க்கையாகவேனும் வைத்து) அவ்வரசனுடைய அறிவையும் மரபையும் வாழ்த்து தலும் விதி என்று கற்றதற்குத் தக உண்மை நெறியில் ஒழுகும் புலவர்கள் கூறுவார்கள் என்பது.

அரசனை வாழ்த்துகையில் தெய்வத்தைப் படர்க்கையில் வைத்து வாழ்த்தின், அது புறநிலைவாழ்த்தாய்விடும்; தெய்வத்தை முன்னிலையாகவைத்து வாழ்த்துவதே தேவபாணியாம் என்றார் பேராசிரியர். அதனைத், தொல். பொருள். செய்யுளியலின்கண் உள்ள,

"ஏனைஒன்றே,
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே"

என்னும் 138-ஆம் சூத்திரத்தின் விசேடவுரையில் அவர், "மற்று முன்னிலைக்கண் என்றது என்னை? எனின், தெய்வத் தினை முன்னிலையாகச் சொல்லப்பட்டன அன்றி அல்லன தேவ பாணி எனத் தகா என்பது. என்னை? 'யான் இன்ன பெருஞ் சிறப்பின் இன்ன தெய்வம்' என்று தன்னைத் தான் புகழ்ந்து கூறி, நின்னைக் காப்பேன்; நீ வாழிய' எனத் தெய்வம் சொல்லிற் றாகச் செய்யுள் செய்தலும் ஆகாது வாழ்த்தினுள் அவ்வாறு உண்டாயின் என்பது. இதனானே படர்க்கையும் விலக்கினானும். ஆகவே, தெய்வம் படர்க்கையாயவழிப் 'புறநிலை வாழ்த்தாவ தன்றித் தேவர்ப்பராயிற்று ஆகாது பாட்டுடைத்தலைவனோடு கூட்டிச் சொல்லும் என்றானும். இங்ஙனம் கூறவே, பாட் டுடைத் தலைவனைக் கூட்டினும், கூட்டாக்காலும் தேவர்ப்பரா

ரு. கலம்பகம்

129. [1]சொல்லிய கலம்பகம் சொல்லில் ஒருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை புயமே
அம்மனை ஊசல் யமகம் களிமறம்
சித்துக் காலம் மதங்கி வண்டே
கொண்டல் மருள்சம் பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே இன்னிசை
புறமேய் அகவல் விருத்தம் எனவரும்
செய்யுட் கலந்துடன் எய்திய அந்தம்
ஆதி யாக வரும்என மொழிப. (சரு)

யிற்றேயாம் முன்னிலையாயின் என்பது பெற்றாம்" என்றுரைத்த தனால் அறிக.

நச்சினார்க்கினியரும் அச் சூத்திரத்தின் விசேடவுரையில், அங்ஙனமே கூறினர். ஈண்டு அதனையும் நோக்குக.

1. புலவர்களாற் சிறப்பித்துச் சொல்லப்பட்ட கலம்பகத்தைக் கூறுமிடத்து அது, முதலிலே ஒருபோகும் அதன்பின் ஒரு வெண்பாவும், அதன்பின் ஒரு கலித்துறையுமாகிய இவை முதல் உறுப்பாக அமைய, (1) புயம், (2) அம்மானை, (3) ஊசல், (4) யமகம் (மடக்கு), (5) களி, (6) மறம், (7) சித்து, (8) காலம், (9) மதங்கி, (10) வண்டு, (11) மேகம், (12) கைக்கிளை, (13) சம்பிரதம், (14) தவம் என்னும் உறுப்புக்கள் வெண்டுறையும், வஞ்சித்துறையும், இன்னிசை வெண்பாவும், வெண்பாவின் பக்கத்து அமைந்துள்ளதாகிய அகவற்பாவும், பலவகையாகிய விருத்தங்களும் என்று சொல்லநிற்கும் பாக்களிற் கலந்துவர, மற்றும் வருதற்குரிய பாக்களுடன் கூடியதாகி, அந்தாதியாக வரும் என்று புலவர் கூறுவர் என்பது.

உறுப்புக்கள் பாக்களிற் கலந்துவர, அது, பாக்களுடன் கூடியதாகி அந்தாதியாகவரும் என இயைக்க.

புயம் முதல் சம்பிரதம் வரையினும் கூறிய உறுப்புக்களோடு 'தவசு' என்னும் உறுப்பை வைக்காமல் இடையில் 'வெண்டுறை' என்னும் பாட்டை வைத்தது, அவற்றுடன், (1) பாண், (2) ஊர் (குடி), (3) தழை, (4) இரங்கல் என்னும் உறுப்புக்களும் வரும் என்பதனை அறிவித்தற்காம் என்று கொள்க. இது, நிலைநடு மாற்றந்தந்து புணர்ந்துரைத்தல் என்னும் உத்தியின்பாற்படும்.

மருள் என்றது கைக்கிளையை. மருள் - மருட்சி. ஈண்டு மருட்சி என்பது அதனுல் உளதாகும் ஐயத்தினை உணர்த்தியது. இது மரபுவழுவமைதி. காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என்னும் கைக்கிளையின் பொருள்கள் நான்கனுள் ஒன்ருகிய ஐயம், தலைமைபற்றிய பெயராய்க் கைக்கிளையை உணர்த்தி நின்றது. என்னெனின், தலைவனுக்குத் தலைவியைக் கண்ட போது உளதாகிய மருட்சியே பின் வரும் துணிவு, குறிப்பறிதல் என்பவற்றிற்குக் காரணமாகலான் என்க. கண்ட பின்னரே மருட்சியுளதாம்; ஆதலின், காட்சி தலைமைபற்றியதாவதின்றி, மருட்சியினுலாகிய ஐயம் தலைமைபற்றியதாவது எய்துமோ எனின், தலைவன் தலைவியைக் கண்டவிடத்து அவளது உருச் சிறந்து நின்று தலைவனுக்கு மருட்சியை விளைக்காதாயின், அக் காட்சி தலைவனுக்கு வேட்கையை விளைக்காது; ஆதலின், காட்சியினும் மருட்சியே கைக்கிளைப் பொருட்கண் சிறந்ததாம்; ஆதலின், அதனுல் ஆகிய ஐயம் தலைமைபற்றியதாதல் எய்தும் என்க.

எய்தியவரும் என இயைக்க. இதில் 'எய்திய' என்பது எய்தியனவாகி என்ருதலின், முற்றெச்சம். அந்தம் ஆதியாக என்பது அந்தாதியாக என்னும் பொருளது.

வெண்பாப்பாட்டியலின் செய்யுள் இயலில்,

"வைத்தும் புயம்தவம்வன் டம்மனே பாண்மதங்க
கைக்கிளைசித் தூசல் களிமடக்கூர் - மிக்கமறம்
காலந் தழைஇரங்கல் சம்பிரதம் கார்தூது
கோலும் கலம்பகத்தின் கூறு"

எனவும்,

"கூறும் ஒருபோத வெண்பாக் கலித்துறைகள்
மாறில் முதல்உறுப்பாம் மன்விருத்தம் - வேறகவல்
வஞ்சித் துறைவிருத்தம் வான்றுறைவேன் பாமருட்பா
எஞ்சாக் கலிஇனங்கோன் டீட்டு"

எனவும் வரும் 10, 11-ஆம் வெண்பாக்களையும் அவற்றின் உரைகளையும் ஈண்டு நோக்குக.

கலம்பகத்திற்குரிய அப் பதினெட்டு உறுப்புக்களிற் (1) புயமாவது நூலின் தலைவனுடைய தோள்களைப் பலவகையாகப் புகழ்ந்து வகுப்பினுற் பாடுவது. (2) அம்மானையாவது மூன்று பெண்கள்கூடி அம்மானை ஆடுகையில் அவர்களில் ஒருத்தி தலைவனைப் புகழ்ந்து கூற, வேறொருத்தி அதில் ஐயங்கொண்டவளாய்

வினவ, மற்றொருத்தி அவள் வினவிற்கு அவ்விருவரும் எற்கும்படி விடை கூறுதலாகப் பாடுவது. இதிற் பெரும்பான்மையும் சிலேடை அணி கலந்துநிற்கும். (3) ஊசலாவது ஆசிரிய விருத்தத்தாலேனும் கலித்தாழிசையாலேனும் 'ஆடீரூசல்', 'ஆடாமோ ஊசல்' என்பனவற்றுள் ஒன்று முடிவினுறப் பாடுவது. (4) யமகமாவது நூலின் இடையிடை மடக்கு என்னும் சொல்லணி அமைந்த செய்யுட்களை அமைப்பது. (5) களியாவது கட்குடியர்களைச் சிறப்பித்துக் கூறுதல் தோன்றப்பாடுவது. (6) மறமாவது மறவர்கள் தம்முடைய மகளை மணம்பேசும்படி அரசனால் விடுக்கப்பட்ட தூதனை நோக்கி, மணமறுத்துக்கூறி அவ் வேந்தனையும் இகழ்ந்து கூறுதல் தோன்றப் பாடுவது. இது, புறப்பொருள் வெண்பாமாலையில், காஞ்சித்திணையிற் கூறப்பட்ட மகட்பாற் காஞ்சியின் பாற்படும். அத் துறையின் பொருளை அத் திணையில் உள்ள,

> "ஏந்திழையாட் டருகேன்னும்
> வேந்தனோடு வேறுநின்றன்று"

என்னும் 24-ஆம் கொளுவினாலறிக. இதன் பொருள் "அழகிய ஆபரணத்தினை உடையாளை எனக்குத் தருக என்று சொல்லும் அரசனோடு மாறுபட்டு நின்றது" என்பது.

இந்நூலில் இத்திணை போர் செய்ய வந்த அரசர்களை எதிர் சென்றூன்றுதலைக் கூறுவதாகும். ஆதலின், மறம் என்பது இதன்படி மறவர்களின் வீரத்தின் சிறப்பைத் தோற்றுவிப்பதாகும்.

இனித் தொல்காப்பியத்தின் காஞ்சித்திணையினும் மகட்பாற் காஞ்சி உளது. தொல்காப்பியத்துக் காஞ்சித்திணை உலக நிலையாமையை உணர்த்துவதாகும். ஆதலின், அதிலுள்ள மகட்பாற்காஞ்சி அதற்கேற்ப உயிர்நிலையாமையை உணர்த்துவதாகும். அதனைத், தொல். பொருள். புறத்திணை இயலின் 24-ஆம் சூத்திரத்தின்கண்,

> "நிகர்த்து மேல்வந்த வேந்தனோடு முதுகுடி
> மகட்பா டஞ்சிய மகட்பா லானும்"

என்பதற்குப், "பெண்கோள் ஒழுக்கத்தின் ஒத்து மறுத்தல் பற்றிப் பகைவனாய் வலிந்து கோடற்கு எடுத்துவந்த அரசனோடு முதுகுடித்தலைவராகிய வாணிகரும், வேளாளரும் தத்தம் மகளிரைப் படுத்தற்கு அஞ்சிய மகட்பாற் காஞ்சியானும்" எனவும், "வேந்திய

லாவது உயிர்போற்ருது வாழ்தலின் அவரது நிலையின்மை நோக்கி அவரோடொத்து மகளிரைப்படுத்தற்கஞ்சி மறுப்பாராத லின், 'அஞ்சி' என்றும், 'மேல்வந்த'என்றும் கூறிஞர். அம் முது குடிகள் தாம் பொருதுபடக் கருதுதலின் உயிரது நிலையாமை உணர்ந்த காஞ்சியாயிற்று''எனவும் நச்சினர்க்கினியர் கூறிய உரை யான் உணர்க. 'மறம்' என்பதனை இதன்பாற்படும் எனக்கொள் ளின் உயிர்நிலையாமையை உணர்த்துங் கருத்தினதாம் என்க. (7) சித்தாவது சித்தர்கள் இரசவாதவித்தையினல் ஓர் உலோகத்தை மற்ருேர் உலோகமாக மாற்றக்கூடிய தங்கள் வல்லமையை ஒரு தலைவனிடம் புகழ்ந்து கூறுதல் தோன்றப் பாடுவது. (8) கால மாவது தலைவன் பொருள் முதலியன காரணமாகப் பிரிந்து செல்லத் தலைவியானவள் கார்முதலிய காலங்களால் தனக்கு உளவாகும் துன்பங்களைக் கூறுதல் தோன்றப் பாடுவது. (9) மதங்கியாவது இரண்டு கைகளினும் வாளையேந்திச் சுழற்றுத லோடு தானும் சுழன்று ஆடாநிற்கும் ஓரிளமாதினது எழிலின் சிறப்பைக் கண்டு ஓரிளங்காளையன்னுன் பாராட்டிக் கூறுதல் தோன்றப்பாடுவது. (10) வண்டாவது பிரிந்து சென்ற தலைவன் பால் தலைவி வண்டைத் தூது விடுதல் தோன்றப் பாடுவது. (11) மேகமாவது அங்ஙனமே தலைவி, பிரிந்து சென்ற தலைவன்பால் மேகத்தைத் தூது செலுத்துதல் தோன்றப் பாடுவது. (12) கைக்கிளை என்பது ஒருதலைக்காமம்; அது காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என நான்கு வகையாம். அவை அமையப்பாடுவது கைக்கிளை யாம். ஈண்டுக் கூறிய கைக்கிளை அகப்பொருட் கைக்கிளையாகும். (13) சம்பிரதமாவது மாயவித்தை வல்லவர் தமது வல்லமையின் சிறப்பை ஒருவர்பால் தாமே புகழ்ந்து கூறு தல் தோன்றப் பாடுவது. (14) தவமாவது "ஊண்வாட வுண்ணு துயிர் காவலிட்டு உடலிற்பிரியாப் புலனைந்தும் நொந்து, தாம் வாட வாடத் தவஞ்செய்ய வேண்டா" எங்கள் தலைவனை (அல் லது வேண்டுதல் வேண்டாமையில்லாதவனுகிய இறைவனை) அடைந்தால் தவத்தால் நீங்கள் எய்தும் பயனினும் சிறந்த பயனை எளிதின் எய்துவீர்கள் என்பது தோன்றப் பாடுவது.

(1) பாணுவது தலைவியைப் பிரிந்து பரத்தையர்பாற் சென்ற தலைமகன், அதனுல் தலைவிக்கு உண்டாகிய ஊடலைத் தணித்து வரும்படி பாணனை அனுப்பத் தலைவி பாணன்பால் வெகுண்டு கூறுதல் தோன்றப் பாடுவது. (2) ஊராவது பாட் டுடைத் தலைவன் வாழும் ஊர் இன்ன சிறப்பினை உடையது

என்று பாடுவது. (3) தழையாவது களவில் இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் என்னும் மூவகைப் புணர்ச்சி நிகழ்ந்தபின் தலைவியினுடைய உயிர்ப்பாங்கியின் துணையைக் கொண்டு தலைவியை அடைய விரும்பிய தலைவன் தலைவியும் பாங்கியும் ஒருங்கிருந்துழித் தழையையும், கண்ணியையும் ஏந்திச் சென்று தான் வேட்டைக்கு வந்தவன்போல் அவர்களை நோக்கிச் சில சொற்களைக் கூறப், பாங்கி தலைவனை நகையாடிக்கூறுதல் தோன்றப் பாடுதலும், தோழி தனித்திருந்துழித் தலைவன் தழையும் கண்ணியும் ஏந்தி அவள்பாற் சென்று தன்குறையைக் கூறித் தன்கையுறையைத் தலைவி ஏற்கும்படி செய்தல்வேண்டும் என்று பலவாறு வேண்டத், தோழி அதனை மறுக்கத், தலைவன் 'மடலே பொருளாகக்கொண்டு தலைவியை யெய்துவேன்' என்று புலந்து கூறத் தோழி அக் கையுறையை யேற்றுக்கொண்டு சென்று அதனைத் தலைவி ஏற்கும்படி செய்தல் தோன்றப்பாடு தலுமாகும். தழையாவது இடையிடை மலர்கள் பெய்து இளந் தளிர்களாற் செய்யப்பட்டதோர் உடை என்றுணர்க. (4) இரங்கலாவது பொருள் முதலியன காரணமாகத் தலைவன் பிரிந்து செல்லத் தலைவி வருந்திக் கூறுதல் தோன்றப் பாடுவது. இதில் தலைவி பெரும்பான்மையும் நெய்தல் நிலத்துக் கருப்பொருள்களை முன்னிலையாக்கித் தன் துன்பத்தினைக் கூறுவள் என்றுணர்க.

கலம்பகத்தில், குறம் முதலிய வேறு சிலவற்றையும் அமைத்துப் பாடுவார் எனினும், முற்கூறிய பதினெட்டு உறுப் புக்களே அதற்கு இன்றியமையாத உறுப்புக்களாம் என்று கொள்க. என்னெனின், நூற்களின் இலக்கணங்களைக் கூறும் நூற்கள் இவற்றையே விதந்து கூறுதலின் என்க. அங்ஙனங் கூறுதலைப் பாட்டியல் நூற்களைக் கண்டறிக.

கலம்பகத்தில், பிச்சியார், கொற்றியார், இடைச்சியார், வலைச்சியார், கீரையார் என வேறு சிலவற்றை அமைத்துப் பாடுவாரும் உளர். அவை அகப்புறக் கைக்கிளையின்பாற்படுவன வாக இருத்தலின், சிறப்புடையன அல்ல என்க. மதங்கியாரும் அன்னதாயினும், மதங்கி நாடகத்திற்கு உரியவளாதலின் அவ் வுறுப்பைக் கொண்டனர் போலும்.

கலப்பு அகம் என்பது கலம்பகம் என வல்லொற்று மெல் லொற்றாய் நின்றது. அது, பலவகையாகிய உறுப்புக்களும் செய்யுட்களும் கலத்தற்குரிய இடமானது என்றாதலின், நான் கன் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைப்பெயர்.

கலம்பகத்தின்கண் செய்யுட்களின் தொகையை அமைக்கும் விதம்

130. [1]தேவர்க்கும் முனிவர்க்கும் காவல் அரசர்க்கும்
நூறு தொண்ணூற் றைந்துதொண் ணூறே
ஒப்பில் எழுபது அமைச்சிய லோர்க்குச்
செப்பிய வணிகர்க் கைம்பது முப்பது
வேளா ளர்க்கென விளம்பினர் செய்யுள். (சரு)

சூ. உலா

131. [2]முதனிலே பின்னேழு நிலேயுலா வெண்கலி. (சசா)

---

1. கலம்பகத்தில், தேவர்க்கும் முனிவர்க்கும், பூமியைக் காத்தலில் வல்லவர்களாகிய அரசர்களுக்கும் முறையே நூறும், தொண்ணூற்றைந்தும், தொண்ணூறுமாகிய செய்யுட்களேயும்; ஒப்பில்லாத அமைச்சர்களுக்குரிய இயல்புகளே உணர்ந்த மந்திரிகளுக்கு எழுபது செய்யுட்களேயும்; வணிகர்க்கு ஐம்பது செய்யுட்களேயும்; வேளாளர்க்கு முப்பது செய்யுட்களேயும் அமைத்துப் பாடுதல் வேண்டும் என முன்னேப் புலவர்கள் கூறினார்கள் என்பது.

முன்னே இங்ஙனம் பாடிய கலம்பகங்கள் இருந்தனபோலும். இப்போது அம் முறையிற் பாடிய கலம்பகங்கள் இல. நூறு செய்யுட்களே அமைத்துக் கடவுளரையும், மெய்ப்பொருளுணர்ச்சியும் அன்பும் நிறைந்த பெரியோர்களேயும், அரசரையும்பற்றிப் பாடிய கலம்பகங்களே உள்ளன. ஆதலின், இனிக் கடவுளேயும், பெரியோர்களேயும், அரசரையும்பற்றி நூறு செய்யுட்கள் அமைத்துக் கலம்பகம் பாடுதல்வேண்டும் எனக் கோடலே ஏற்புடையதாகும்.

2. உலாவை வெண்கலியாகிய பாவில் முன்னர் முதல்நிலேயும் பின்னர் எழுநிலேயும் அமைத்துப் பாடுதல்வேண்டும் என்பது.

கலிவெண்பாட்டின் இலக்கணத்தினேத் தொல். பொருள். செய்யுள் இயலினும், யாப்பருங்கலம் முதலியவற்றினும் காண்க.

அசு. "பாட்டுடைத் தலைவன் உலாப்புற இயற்கையும்
ஒத்த காமத் தினையாள் வேட்கையும்
கலியொலி தழுவிய வெள்ளடி யியலால்
திரிபின்றி வருவது கலிவெண் பாட்டே"
—பொய்கையார்.

இதுவும் அது

132. [1]பேதை முதலா எழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியான் ஒருவனைக்
காதல்செய் தலின்வரும் கலிவெண் பாட்டே. (சஎ)

முதனிலை

133. [2]குடிநெறி மரபு கோளல்கோடை விடியல்
நன்னீ ராடல் நல்லணி அணிதல்

ஈண்டுத் தொல். பொருள். புறத்திணை இயலில் உள்ள,
"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப"
என்னும் 30-ஆம் சூத்திரத்தின் உரையில், "இது, புரைதீர் காமத்திற்கன்றிப் பக்கு நின்ற காமத்திற்குப் புறனடை கூறுகின்றது.

"இதன் பொருள் - பக்குநின்ற காமம் ஊரிற்பொது மகளிரொடு கூடிவந்த விளக்கமும் பாடாண்டிணைக்கு உரித்தென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

"தோற்றமும்' என்றது அக்காமம் தேவரிடத்தும் மக்களிடத்தும் விளங்கும் விளக்கத்தை. அது, பின்னுள்ளோர் எழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டாகச் செய்கின்ற உலாச் செய்யுளாம்" என்று நச்சினார்க்கினியர் கூறியதனை நோக்குக.

1. உயர்ந்த செல்வம், அறிவு, ஆண்மை, அன்பு, ஈகை, எழில் முதலிய பலதிறத்தினன் உயர்ந்த நிலைமையினை உடையவன் ஒருவனை எழுவகை மகளிர் கண்டு காதல் செய்யும் பொருளில் கலிவெண்பாட்டு வரும் என்பது.

உலாவைக் கலிவெண்பாவாற் பாடுதல் வேண்டும் என்பது இதன் கருத்து.

2. தலைவனுடைய குடிப்பிறப்பும், அவன்றன் நீதி முறையும், மரபும், பொருளீட்டுந்திறமும், ஈகையும் கூறி, அவன்

தோன்னக ரேதிர்கோளல் நன்னெடு வீதியின்
மதகளி றூர்தல் முதனிலை யாகும். (சஅ)

இதுவும் அது

134. [1]ஆதி நிலையே குழாங்கோளல் என்றெடுத்து
ஓதிய புலவரும் உளரேன மோழிப. (சகூ)

பின்வரும் ஏழுநிலைகள்

135. [2]எழு நிலையும் இயம்புங் காலை
பேதை பெதும்பை மங்கை மடந்தை
அரிவை தெரிவை பேரிளம் பேண்எனப்
பாற்படு மகளிர் பருவத் தாதல்
நோக்கி உரைப்பது நுண்ணியோர் கடனே. (ரு0)

உலாப்போதற்காக விடியற்காலம் நன்னீர் ஆடுதலும், சிறந்த (ஆடை) அணிகளை அணிதலும், பழைய நகரில் உள்ள மாந்தர்கள் எதிர்கொள்ளுதலும், அவர்கள் அங்ஙனம் எதிர்கொள்ள அவன் அழகிய நீண்ட தெருவின்கண் மதத்தினைஉடைய களிற்றின்கண் ஊர்ந்து செல்லுதலுமாகிய இவற்றைப் பாடுவது முதல் நிலையாகும்.

1. முதனிலையாவது குழூஉக்கொளல் என்று இலக்கணம் எடுத்துக்கூறிய புலவரும் உளர் என்று கூறுவர் முன்னோர்.

இது, பிறன்கோட் கூறல்.

2. பின்னர் வருதற்குரிய எழுநிலைகளையும் சொல்லுங் காலத்து மகளிருடைய பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்று எழு பகுதியாகிய பருவத்துள் அவ்வப்பருவத்தினுக்குரிய தன்மைகளை நோக்கிக் கூறுதல், பொருள் இயல்புகளை நுட்பமாக ஆய்ந்துணருபவர்களாகிய புலவர்களின் கடமையாம் என்பது.

அஎ. [1]"பேதைக் கியாண்டே ஐந்துமுதல் எட்டே"

அஅ. [2]"பெதும்பைக் கியாண்டே ஒன்பதும் பத்தும்"

அகூ. [3]"மங்கைக் கியாண்டே பதினொன்று முதலாத்
திரண்ட பதினு லளவுஞ் சாற்றும்"

கூ0. [4]"மடந்தைக் கியாண்டே பதினைந்து முதலாத்
திடம்படும் ஒன்பதிற் றிரட்டி செப்பும்"

கூக. [5]"அரிவைக் கியாண்டே அறுநான் கென்ப"

கூஉ. [6]"தெரிவைக் கியாண்டே இருபத் தொன்பது"

கூங. [7]"ஈரைந் திருநான் கிரட்டிக் கொண்டது
பேரிளம் பெண்டுக் கியல்பென மொழிப"

—பொய்கையார்.

பின்வரும் மேற்கோட் சூத்திரங்களான் அவ்வப்பருவத்து மாதர்களின் ஆண்டுகளை அறிக.

1.	பேதை	5	முதல்	8	வரையில்	(4)	ஆண்டுகள்
2.	பெதும்பை	9	,,	10	,,	(2)	,,
3.	மங்கை	11	,,	14	,,	(4)	,,
4.	மடந்தை	15	,,	18	,,	(4)	,,
5.	அரிவை	19	,,	24	,,	(6)	,,
6.	தெரிவை	25	,,	29	,,	(5)	,,
7.	பேரிளம்பெண்	30	,,	56	,,	(7)	,,

வச்சணந்திமாலையினும் இலக்கண விளக்கத்தினும் இவ்வாண்டுகள் வேறுபடுகின்றன. அவற்றை அடியிற்காண்க.

1.	பேதை	5	முதல்	7	வரையில்	(3)	,,
2.	பெதும்பை	8	,,	11	,,	(4)	,,
3.	மங்கை	12	,,	13	,,	(2)	,,
4.	மடந்தை	14	,,	19	,,	(6)	,,
5.	அரிவை	20	,,	25	,,	(6)	,,
6.	தெரிவை	26	,,	31	,,	(6)	,,
7.	பேரிளம்பெண்	32	,,	40	,,	(9)	,,

கூ௪. "காட்டிய முறையே நாட்டிய ஆண்பாற்கு
எல்லையும் பெயரும் இயல்புற ஆய்ந்து
சொல்லிய தொன்னெறிப் புலவரும் உளரே"

கூ௫. [1]"பாலன் யாண்டே யேழென மொழிப"

கூ௬. [2]"மீளி யாண்டே பத்தியை காறும்"

கூ௭. [3]"மறவோன் யாண்டே பதினான் காதும்"

கூ௮. [4]"திறலோன் யாண்டே பதினைந் தாதும்"

கூ௯. [5]"பதினா றெல்லை காளைக் கியாண்டே"

க00. [6] "அத்திறம் இறந்த முப்பதின் காறும்
விடலைக் காதும் [7]மிகினே முதுமகன்"

—அவிநயனார்.

பாட்டுடைத்தலைவனது இன்ன வயது வரையினும் உலாவைப்பாடுதலாம் என்பது

136. [1]நீடிய நாற்பத் தெட்டின் அளவும்
ஆடவர்க் குலாப்புறம் உரித்தென மொழிப. (ருக)

ஆண்பாற்கும் எழுபருவங்கள் வகுத்துக் கூறுவாரும் உளர் என்பது கூ௪-ஆம் மேற்கோட் சூத்திரத்தின் கருத்தாகும். அப் பருவங்களின் பெயரும் அவற்றிற்குரிய ஆண்டுகளும் வருமாறு:

1.	பாலன்	1 முதல்	7 வரையினும்	(7)	ஆண்டு
2.	மீளி	8 ,,	10 ,,	(3)	,,
3.	மறவோன்	11 ,,	14 ,,	(4)	,,
4.	திறலோன்		15 ஆம் ஆண்டு	(1)	,,
5.	காளை		16 ,,	(1)	,,
6.	விடலை	17 முதல்	30 வரையில்	(14)	,,
7.	முதுமகன்		முப்பதின் மிக்கவன்		

அவை, இவையாம் என்பதனை, கூ௫ முதல் க00 வரையினும் உள்ள மேற்கோட் சூத்திரங்களான் அறிக.

1. உலாப்புறச்செய்யுள், (அதனைப் பெறுதற்குரிய) ஆடவர்களுக்குப் பதினாறு ஆண்டுமுதல் நாற்பத்தெட்டாண்டு ஆகும் வரையினும் பாடப்படுதற்கு உரியதாகும் என்று புலவர் கூறுவர் என்பது.

ஏழுபருவமங்கையர்களுக்கும் ஒரு சிறப்பு விதி

137. [1]சிற்றில் பாவை கழங்கம் மனையே
போற்புறு முசல் பைங்கிளி யாழே
பைம்புன லாட்டே பொழில்விளை யாட்டே
நன்மது நுகர்தல் இன்ன பிறவும்
அவரவர்க் குரிய ஆகும் என்ப.। (ருஉ)

உலாப்பாட்டுப் பெறுதற்குரியார்

138. [2]வேந்தர் கடவுளர் விதிநூல் வழிஉணர்
மாந்தர் கலிவெண் பாவிற் குரியார். (ருங)

கoக. "நாலு வருணமும் மேவுதல் உரிய
உலாப்புறச் செய்யுளென் றுரைத்தனர் புலவர்"

உலா, உலாப்புறம் என்பன ஒருபொருட் சொற்கள். அகப்பொருள் நூற்கள் தலைவனைப் பதினேந்தாண்டும் பத்துத்திங்களும் உடையவனாகக்கொண்டமையானும், உலாவில் உலாப்பாட்டிடைத் தலைவனை மாதர்கள் கண்டு காதலித்தல் கூறப்படுதலானும் உரையிற் கோடலாகப் 'பதினாறு ஆண்டுமுதல்' என்பது வருவித்துரைக்கப்பட்டது.

1. சிற்றிலும், பாவையும், கழங்கும், அழகுமிக்க புன்முறுவலும், பைங்கிளியும், யாழும், குளிர்ந்த நீராட்டும், பொழில் விளையாட்டும், நன்மதுநுகர்தலுமாகிய இவையும், இவைபோல்வன பிறவும் அந்த அந்தப் பருவத்து மங்கையருக்கேற்றபடி உலாவின்கண் அமைத்துப் பாடுதற்கு உரியனவாகும் என்பது.

உலா என்பது அதிகாரப்பட்டு நின்றமையில் 'உலாவில்' என்பது வருவித்துரைக்கப்பட்டது.

2. வேந்தர்களும் கடவுளரும், மாந்தர்களுக்குரிய ஒழுகலாறுகளை விதிக்கும் நூற்களின் வழியை உணர்ந்த மற்ற மாந்தர்களும் உலாவிற்கு உரியவர்கள் ஆவார்கள் என்பது.

கலிவெண்பா என்னும் பாட்டின் பெயர், அதன்கண் கூறப்படும் உலாச்செய்திக்கு ஆதலின், பொருளாகு பெயராம். அன்றிக் கலிவெண்பா என்னும் பாட்டின் பெயர் அப் பாட்டாற்

எ. சின்னப்பூ

139. [1]மலையும் யாறும் நாடும் ஊரும்
பரியும் களிறும் கொடியும் முரசும்
தாரும் பெயரும் எனத்தெரி பத்தும்
சொல்லும் எல்லையின் முதற்குறட் கண்ணே
சின்னத் தொழிலை மன்ன வைத்துப்

கூறப்படும் உலாச்செய்தியாகிய காரியத்திற்கு ஆதலின், காரண வாகு பெயர் என்றலுமாம்.

1. மலையும், யாறும், நாடும், ஊரும், பரியும், களிறும், கொடியும், முரசும், மாலையும், பெயரும் என்று நூற்களால் தெரிந்த பத்தையும் அமைத்துப் பாடுகையில், நேரிசை வெண் பாவின் முதற்குறட்கண் சின்னத்தின் தொழிலைப் பொருந்த வைத்துப், பின்னர் வருங்குறளில் பாட்டுடைத் தலைவர்களின் இயற்பெயர்களை வைத்து, அவர்களுக்கு உரிமை தோன்றத்தக்க செயல்களை விளங்க வைத்துப் பாடப்படுவது சின்னப்பூவாம்; அது, முதற்பாவாகிய வெண்பாவினுற் பாடப்படுதற்கு உரிய தாகும். சின்னப்பூவின் இனமாகிய தசாங்கப்பத்தும் முற்கூறிய சின்னங்களாற் பாடப்படும் என்பது.

'ஆதிப்பாவினது' என்றதனுற் சின்னப்பூப் பாடுதற்குரிய பா வெண்பாவாம் என்பதும், 'முதற்குறள்' என்றும், 'பின்னர்க் குறள்' என்றும் கூறியவற்ருன், அவ்வெண்பா நேரிசை வெண்பா என்பதும் பெறப்படுதல் காண்க. 'முதற்குறள்' 'பின்னர்க் குறள்' என்பவற்ருல் நேரிசை வெண்பா என்பது பெறப் படுமோ? எனின், இருகுறள் இணைந்து வருவது நேரிசை வெண்பாவையன்றிப் பிறிது இன்மையின், நேரிசை வெண்பா என்பது பெறப்படும் என்க. அங்ஙனமாயின். முன், 'முதற் குறள்', 'பின்னர்க்குறள்' என்று கூறியவற்ருனே நேரிசை வெண்பா என்பது பெறப்படுவதாயிருக்க, மேலும் 'ஆதிப்பாவி னது' என்றது என்னெனின், சின்னப்பூவில், நேரிசை வெண்பா நூறேனும் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்ப தேனும், முப்பஃதேனும் வருதல் வேண்டும் என்பதூஉம் சின் னப்பூவின் இனமாகிய தசாங்கப்பத்தும் நேரிசை வெண்பா வானே பாடுதல் வேண்டும் என்பதூஉம் அறிவித்தற்காம் என்க.

பின்னர்க் குறளுட் பாட்டுடைத் தலைவர்
இயற்பெயர் வைத்தவர்க் குரிமை தோன்றும்
செயல்பெற வைப்பது சின்னம் அதுவே
ஆதிப் பாவினது அதன்இனம் வருமே. (நிச)

வச்சணந்திமாலை, செய்யுளியலின்கண் உள்ள,

“நேருந் தசாங்கத்தை நேரிசை வெண்பாவால்
ஈரைம் பதுதோன்னூ றீண்டெழுபான் - ஓரைம்பான்
தேர்ந்துரைக்கிற் சின்னப்பூ ஈரைந்தாற் செப்பினர்
நேர்ந்த தசாங்க நிலை”

என்னும் 20-ஆம் வெண்பாவையும், இலக்கண விளக்கப் பாட்டியலின்கண் உள்ள,

“மிக்க நேரிசை வெண்பா வதனால்
தக்க தசாங்கந் தன்னை நூறு
தொண்ணூ றெழுப தைம்பது முப்பஃ
தெண்ணப் பாடிற் சின்னப் பூவே”

என்னும் 86-ஆம் சூத்திரத்தையும்,

“நேரிசை வெண்பா வானிரு பன்பெறு
தசாங்கத் தினைச்சொல்லல் தசாங்கப் பத்தாம்”

என்னும் 80-ஆம் சூத்திரத்தையும் ஈண்டு நோக்குக.

தொல். பொருள். புறத்திணை இயலின்கண் உள்ள,

‘வழக்கொடு சிவணிய வகைமை யான’

என்னும் 31-ஆம் சூத்திரத்தின் விசேட உரையில், “‘சிவணிய வகைமை’ என்றதனானே முற்கூறியவற்றோடே நாடும், ஊரும், மலையும், யாறும், படையும், கொடியும், குடையும், முரசும், நடை நவில் புரவியும், களிறும், தேரும், தாரும், பிறவும் வருவன எல்லாங் கொள்க” எனவும், “இவற்றுட் சிலவற்றை வரைந்து கொண்டு சின்னப்பூ என்று பெயர் இட்டு இக்காலத்தார் கூறுமாறுணர்க” எனவும் நச்சினார்க்கினியர் கூறியவற்றையும் ஈண்டு நோக்குக.

இவற்றுள், பிற்கூறியதனாற் சின்னப்பூ என்பது பிற்காலத்து நூல் என்பது பெறப்படுதல் காண்க.

தசாங்கம் பாடும் வகை

140. [1]மலையே யாறே நாடே ஊரே
பறையே பரியே [2]களிறே தாரே
பெயரே கோடியே என்றிவை தசாங்கம். (ருரு)

---

1. மலையும், ஆறும், நாடும், ஊரும், முரசும், பரியும், களிறும், மாலையும், பெயரும், கொடியும் என்று மேற்சொல்லப் பட்ட இவற்றுள், ஒவ்வொன்றையும் ஒவ்வொரு நேரிசை வெண் பாவில் அமைத்துப் பத்துப் பாட்டாற் பாடப்படுவது தசாங்கப் பத்து என்னும் பெயரைப்பெறும் என்பது.

என்ற என்பதன் அகரந்தொக்கது. 'என்ற இவை' என்ற தனுல் இவை சின்னப்பூவிற்கு உரியனவாக மேற்சொல்லப் பட்டவை என்பதூஉம், மேலைச்சூத்திரத்தில் 'அதன் இனம்' என்றதனுல் இதுவும் நேரிசை வெண்பாவானே பாடப்படுதற் குரியதாம் என்பதூஉம் கொள்க.

இஃது அதன் இனமாதலான் தனியாகக் கூறப்பட்டிலது என்றுணர்க.

2. மேற்சொல்லப்பட்ட களிற்றை ஒழித்துப் படையைக் கொள்வாரும் உளர். படை - ஆயுதம். அதனைத் திருவாசகத் தில் உள்ள திருத்தசாங்கத்திற் காண்க.

இப்பத்துச் சின்னங்களுள் பெயர் என்பதனை ஆணை என்பர் இலக்கணவிளக்க ஆசிரியர். அதனை, இலக்கணவிளக்கப் பாட் டியலில் உள்ள,

"மலைநதி நாடூர் வனைதார் இவுளி
கோலமத களிறு கோடிமுர சாணை
இவையே தசாங்கம் என்மனுர் புலவர்"

என்னும் 22-ஆம் சூத்திரத்தான் அறிக.

மேற்சொன்ன தசாங்கங்களை ஆசிரிய விருத்தம் பத்தாற் பாடின் அது, தசாங்கத்தயல் எனப்படும் என்பாரும் உளர். அஃது ஈண்டுக் கூறப்பட்டிலது.

சின்னப்பூவிற்கோர் சிறப்பு விதி

141. [1]பத்தே ஏழே மூன்றே சின்னம். (ரு௬)

அ. பரணி

142. [2]மயக்கறு கோச்சகத் தீரடி இயன்று
நயப்புறு தாழிசை உறுப்பிற் போதிந்து
வஞ்சி மலேந்த உழிஞை முற்றித்

---

1. சின்னப்பூவில் மேற்கூறப்பட்ட சின்னங்கள் பத்துமே னும், ஏழேனும், மூன்றேனும் வரும் என்பது இச் சூத்திரத்தின் பொருள்போலும்.

இச் சூத்திரம், தவளைப்பாய்த்தாக மேலைச் சூத்திரத்தை இடையிட்டு அதற்கு முன்னுள்ள சூத்திரத்தைத் தழுவி நின்றது.

2. பரணி என்னும் நூலின் இயல்பாவது வஞ்சிமாலை யைச் சூடிப் பகைவர் நாட்டினைக் கொள்ளுதற்பொருட்டு அவர் மேற் சென்றதனுற் பின் செய்தற்குரியதாகிய உழிஞை மாலை யைச் சூடிப் பகைவர்களுடைய மதிலை வளைத்துக் கொள்ளுதலா கிய செயலை முடித்தலால், பின் தும்பை மாலையைச்சூடி, அம் மாற் றருடன் போர்செய்தலாகிய செயலிற் புக்க வீரக்கழலினை அணிந்த அடியை உடைய மன்னன் புகழை மயக்கமற்ற கொச் சகத்தின் ஈரடியான் அமைந்து (ஓசை) நயம் பொருந்திய தாழி சையாகிய உறுப்புக்களில் வைத்து, (மனத்தின்கண் தழலெனக்) கொதிக்கும் சினத்தினை உடைய அம்மாற்றருடைய சேனைகளை உடைய கொடிய போர்க்களத்தினுள், குருதியினுலாகிய பெரிய யாறு பெருகி வருதலாற் சிவந்த களத்தின்கண் (அக்கொற்றவ னது வீரத்தின்) ஒப்பற்ற தன்மையை ஏத்துதலாகும் என்பது.

“பரணியது பண்பு, வஞ்சி மலேந்த ஊழிஞை முற்றித் தும் பையிற் சென்ற தொடுகழல் மன்னனை வெம்புசின மாற்றான் வெங்களத்திற் குருதிப்பேராறு பெருகும் செங்களத்து ஒருதனி எத்தும்” என இயைக்க.

மலேந்த என்னும் பெயரெச்சம் ஈண்டுக் காரணப்பொரு ளது; என்னெனின், வஞ்சி மலேந்தமை, பின் உழிஞை சூடிப் பகைவர் மதிலை வளைத்தற்கு ஏதுவாதலின் என்க. ‘முற்ற’ என் னும் செயவென் எச்சம் ‘முற்றி’ எனச் செய்தென் எச்சமாகத்

தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை
வெம்புசின மாற்ருன் தானைவெங் களத்தில்

திரிந்து நின்றது. ஈண்டு இது காரணப்பொருளது. ஈண்டு உழிஞை செயல் முடிந்தமை தும்பை சூடி மாற்ருருடன் பொரு தற்குக் காரணமாய் நிற்றலை அறிக. ஈண்டு மன்னன் புகழை மன்னன் என்றது மரபு வழுவமைதி. ஒரு தனி என்பது ஒரு பொருட் பன்மொழி. பரணியது பண்பு ஒரு தனிமையை எத்துதலாம் எனமுடிக்க.

ஈண்டு 'எத்தும்' என்னும் செய்யும் என் முற்று 'எத்துதல்' என்னும் தொழிற் பெயர்ப்பொருளில் வந்தது.

ஈண்டு 'வஞ்சி' என்றது வஞ்சித்திணையை; அது, பகைவர் நாட்டைக் கொள்ளக் கருதிய வேந்தன் வஞ்சிமாலையைச் சூடி அவர் மேற்செல்லுதலாம். அதனைப், புறப்பொருள் வெண்பா மாலையின், வஞ்சிப்படலத்தில் உள்ள,

"வாடா வஞ்சி தலைமலைந்து
கூடார்மண் கொளக் குறித்தன்று"

(வஞ்சிப்படலம் - கொளு - க.)

என்னும் கொளுவினுல் அறிக.

'உழிஞை' என்றது உழிஞைத்திணையை; அது, உழிஞை மாலையைச் சூடிப் பகைவர் மதிலை வளைத்துக்கொள்ளுதலாம். அதனை அந்நூலின், உழிஞைப் படலத்தில் உள்ள,

"முடிமிசை உழிஞை சூடி ஒன்னுர்
கொடிநுடங் காரெயில் கொளக்கரு தின்று"

(உழிஞைப்படலம் - கொளு - க.)

என்னும் கொளுவினுல் அறிக.

'தும்பை' என்றது தும்பைத் திணையை; அது, தும்பை மாலையைச் சூடிப் பகைவருடன் பொருதலாம்; அதனை அந் நூலின் தும்பைப்படலத்தில் உள்ள,

குருதிப் பேராறு பெருகுஞ் செங்களத்
தொருதனி ஏத்தும் பரணியது பண்பே. (ருஎ)

"செங்களத்து மறங்கருதி
பைந்தும்பை தலைமலைந்தன்று
(தும்பைப்படலம் - கொளு - க.)

என்னுங் கொளுவினுல் அறிக.

'ஈரடியியன்று, நயப்புறு தாழிசை' என்னுமல் 'ஈரடியியன்று நயப்புறு தாழிசை உறுப்பு' என்று கூறியது என்னெனின், ஈண்டுக் கூறிய தாழிசை, கலியின் உறுப்புக்கள் ஆறனுள், ஒன்ருகிய தாழிசையின் வகைகளுள், இரண்டடியான் வரும் தாழிசையாம் என்பதூஉம், அஃது ஈரடியும் ஒத்துவருவதாம் என்பதூஉம், கலிப்பாவின் இனமாகிய தாழிசைகளுள், ஈரடியான் வருந் தாழிசையும் ஈற்றடிமிக்கு வருவதாகலின் ஈண்டுக் கூறிய தாழிசை அஃதன்று என்பதூஉம் அறிவித்தற் காம் என்க.

'ஈரடியியன்று நயப்புறு தாழிசை உறுப்பு' என்றது அவற்றை அறிவிக்குமோ? எனின், கலியின் உறுப்பாய் வருந் தாழிசை அடி ஒத்துவருவதாகலானும், இனமாகிய தாழிசை ஈற்றடி மிக்கு வருவதாகலானும், அது, கலியின் இனமாயினும் உறுப்பாகவன்றித் தனியாகவரும் பாட்டாகலானும் அவற்றை அறிவிக்கும் என்க.

ஆயின், 'கலியின் ஈரடி யியன்று நயப்புறு தாழிசை உறுப்பு' என்னுமல், 'கொச்சகத்தின் ஈரடி இயன்று நயப்புறு தாழிசை உறுப்பு' என்று கூறியது என்னெனின், அங்ஙனம் கூறின், ஒத்தாழிசைக் கலியின் தாழிசை உறுப்பும் கொள்ளப்படும். அதன் தாழிசை உறுப்பு நாற்சீரின் மிக்க சீராணுகிய அடியான் வருவதன்று ஆகலாலும், ஈண்டுக் கூறிய தாழிசை உறுப்பு, நாற்சீரடியானும், நாற்சீரின் மிக்க சீராணுகிய அடியானும் வருவதாகலானும் ஒத்தாழிசைக் கலியின் தாழிசை உறுப்பை நீக்குதற்குக் கூறியதாம் என்றுணர்க.

கொச்சகக்கலி, ஒத்தாழிசைக் கலிக்குக் கூறிய உறுப்பின் மிக்கும், குறைந்தும், பிறழ்ந்தும் வருவதாகலின், அதன்

பரணியிற் கூறப்படுவன இவை எனல்

143. [1]தேவர் வாழ்த்தே கடைநிலை பாலை
மேவி அமரும் காளி கோயில்

தாழிசை உறுப்பு, நாற்சீர் அடியானும் நாற்சீரின் மிக்க சீரானாகிய அடியானும் வரும் என்பதறிக.

அங்ஙனமாயின் 'ஈரடியான் இயன்று' என்றது என்னெனின், கலியின் தாழிசை உறுப்புக்கள் ஈரடி முதல் ஆறடிகாறும் வருவனவாம் ஆகலின், அவற்றுள் ஈரடியான் வருவதே ஈண்டுக் கூறிய தாழிசை உறுப்பு என்பது அறிவித்தற்காம் என்க.

'நயப்புறு' என்றது என்னெனின், ஈண்டு வரும் தாழிசை உறுப்புப், பல சந்தங்கள் கொண்டியங்கும் என்பது அறிவித்தற் காம் என்க.

கலிவெண்பாட்டை நீக்காதது என்னெனின், அது, தனி நிலையாவதாகலின், 'தாழிசை உறுப்பு' என்றதனானே நீக்கப் பட்டதாம் என்க. இவை, கலிப்பா, ஒத்தாழிசைக்கலி, வெண் கலி, கொச்சகக்கலி என மூன்றும் என்பார் கொள்கைபற்றிக் கூறப்பட்டன, இந்நூலின் 122, 123-ஆம் சூத்திரங்களான் இந்நூலாசிரியர் அக்கொள்கையர் எனத் தோன்றலின். இனி ஆசிரியர் தொல்காப்பியனார், விரவுறுப்புடையதெனக் கூறிய வெண்கலியும், 'தாழிசை உறுப்பு' என்றதனானே நீக்கப்படும்; என்னெனின், அது, தாழிசை உறுப்புடையதன்றாகலின். இனி அவர் நான்காவதெனக்கூறிய உறழ்கலி, கொச்சகக்கலியோடு பொருளான் வேறுபாடுடையதேனும் உறுப்பான் பெரிதும் ஒத்துவருவதேயாகலான் கொச்சகத்துள் அடங்கும் என்க. ஆசிரியர், தொல்காப்பியனார், கலிப்பாவானது ஒத்தாழிசைக்கலி, கலிவெண்பா, கொச்சகக்கலி, உறழ்கலி என நான்கு வகையாம் என்றார். அதனைத் தொல். பொருள். செய்யுளியலில் உள்ள,

"ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கோச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே"

என்னும் 130-ஆம் சூத்திரத்தான் அறிக.

1. (பரணிபாடுங்கால்) முதலிற் கடவுள் வாழ்த்துக் கூறு தலும், கடைதிறப்புக் கூறுதலும், பாலைநிலத்தியல்பு கூறுதலும்,

கன்னியை ஏத்தல் அலகை விநோதம்
கனநிலை நிமித்தம் பசியே ஓகை
பெருந்தேவி பீடம் அழகுற இருக்க
அமர்நிலை நிமித்தம் அவள்பதம் பழிச்சா
மன்னவன் வாகை மலையும் அளவு
மரபினி துரைத்தல் மறக்களம் காண்டல்
செருமிகு களத்திடை அடுகூழ் வார்த்தல்
பரவுதல் இன்ன வருவன பிறவும்
தொடர்நிலை யாகச் சொல்லுதல் கடனே. (ருஅ)

காளிவிரும்பி வீற்றிருக்கும் கோயிலின் சிறப்பைக் கூறுதலும், பெருந்தேவியாகிய காளி அழகாக வீற்றிருக்கப் பேய்கள் அத்தேவியை ஏத்துதலும், முன்னொரு காலத்தில் அத்தேவிக்கஞ்சி ஓடிப்போன பேய் வந்து அத்தேவியை வணங்கித் தான் சென்ற விடத்திற் கற்றுவந்த இந்திரசால வித்தையைக் காட்டுதலும், பிறகு தான் அறிந்துவந்த பாட்டுடைத் தலைவனாகிய மன்னனது மரபைக் கூறுதலும், ஒரு பேய் கண்ட கனவின் நிலைமையைத் தேவி கூறுதலும், பேய்கள் கண்ட நன்னிமித்தங்களைக் கூறுதலும், அவை தங்கள் பசியைக் கூறுதலும், தேவிக்கும் பேய்களுக்கும் உண்டாகும் மகிழ்ச்சியைக் கூறுதலும், இந்திரசாலப் பேய் தான் வரும் வழியில் அம் மன்னனுடைய மாற்றூர் நாட்டிற் கண்ட அந்நாட்டினர் போரில் எய்தநிற்குந் தீமையாகிய நிலையைக் காட்டும் தீய நிமித்தங்களைக் கூறுதலும், போர்க்களத்தினின்று வந்த பேய் அம் மன்னவன் மாற்றூர் நாட்டின்மேற் சென்று தேவியை வணங்கிப் போர்புரிந்து வென்று வாகைமாலை சூடுதலாகிய அம் மன்னது போர்ச்செயலைக் கூறுதலும், அம் மன்னன் மரபைக் கூறுதலும், தேவி சென்று போர்க்களங் காணுதலைக் கூறுதலும், போர் மிகுதியாக நடந்த அக்களத்தில் பேய்கள் சமைத்த கூழை எல்லாப் பேய்களுக்கும் வார்த்தலும், பேய்கள் பிறகு மன்னனை வாழ்த்துதலுமாகிய இவற்றையும், இன்னும் பரணியில் வருதற்குரியனவாகிய இவைபோல்வன பிறவற்றையும் பொருட்டொடர் நிலையாகக் கூறுதல் புலவர்களின் கடமையாகும் என்பது.

'பெருந்தேவி பீடம் அழகுற இருக்க' என்பதனைக் 'கன்னியை ஏத்தல்' என்பதற்கு முன் கூட்டுக. வருவன இன்ன

பரணி பெருந்திறம்

144. [1]யானை சாய்த்த அடுகளத் தல்ல
தியாவரும் பெறுஅர் பரணிப் பாட்டே. ருகூ

இதுவும் அது

145. [2]ஏழ்தலைப் பெய்த நூறுடை இபமே
அடுகளத் தட்டாற் பாடுதல் கடனே. கூ0

பிறவும் என இயைக்க. 'சொல்லுதல் வேண்டும்' என்னுமல், 'சொல்லுதல் கடன் என்றது என்னெனின், ஈண்டுக் கூறியவை முன்னும் பின்னுமாகக் கூறப்பட்டிருப்பினும் புலவர்கள் தாங்கள் அமைத்துக்கொள்ளும் பொருட்டொடர்நிலைக் கேற்ப அவற்றை முறைப்பட அமைத்துக்கொள்ளுதல் வேண்டும் என்பதூஉம், புறப்பொருள் இலக்கணத்தின் முறைமை தோன்றப் பாடுதல் வேண்டும் என்பதூஉம் அறிவித்தற்காம் என்க. வச்சணந்திமாலை, செய்யுளியலில் உள்ள,

"ஈறில் வணக்கம் கடைநிலம்பேய் என்பனவும்
வீறுசால் ஐயைக்கு மெய்ப்பேய்கள் - கூறித்
திறப்படச் சொல்லினவும் செப்பிற் பிறவும்
புறப்பொருணூல் கொண்டு புகல்"

என்னும் 39-ஆம் பாட்டையும் அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

1. யானைகளை அழித்த போர்க்களத்தான் அன்றி எவரும் பரணிப்பாட்டுப் பாடப்பெறார் என்பது.

இதன் கருத்து யானைப்போர்க்களத்திலே பரணிப்பாட்டுப் பாடுதற்கு உரியது என்பதாகும். இதற்கு வேறு பொருள் கொள்ளுதல் கூடுமெனிற் கொள்க.

2. பரணியால், போர்க்களத்தில் எழுநூறு யானைகளைக் கொன்ற வீரனைப் பாடுதல் முறைமையாம் என்பது.

'அடுகளத்து ஏழ்தலைப் பெய்த நூறுடை இபம் அட்டாற் பாடுதல் கடன்' என இயைக்க. ஏழ்தலைப் பெய்த நூறு - எழு

கூ. மடல்

146. [1] அறம்பொருள் வீடு திறம்பேரி தழித்துச்
சிறந்த வேட்கை செவ்விதிற் பராஅய்ப்
பாட்டுடைத் தலைவன் இயற்பெயர்க் கேதுகை
நாட்டிய வெண்கலிப் பாவ தாகித்
தனிச்சொல் லோரீஇத் தனியிடத் தொருத்தியைக்

நூறு. இபம் - யானை. எழுநூறுடை இபம் - எழுநூறு என்னும் எண்ணையுடைய யானைகள் என்க; எழுநூறு யானைகள் கள் என்பது. இலக்கணவிளக்கப் பாட்டியலில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனுக்குப் பரணி பாடுதற்குரியது என்று கூறப்பட்டது. அதனை இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி"

என்னும் 78-ஆம் சூத்திரத்தான் அறிக.

1. ஆடவர் தனியிடத்து ஒருத்தியைக்கண்டபின் காமம் கவற்ற, அறம் பொருள் வீடு திறம்பெரிது அழித்து, சிறந்த வேட்கை (த்திறம்) செவ்விதிற் பராஅய், அந்த ஒண்டொடியை எத்தல் (செய்து) மற்றவள் வடிவை உற்றகிழி எழுதிக் கரும்பனை மடல்மா ஏறுவர் என்றனர் புலவர். (அங்ஙனமாகும் மடலைத்) தனிச் சொல் ஒரீஇப் பாட்டுடைத் தலைவன் இயற்பெயர்க்கு எதுகை நாட்டிய வெண்கலிப் பாவதாகி (வைத்துப் பாடுக) என இயைக்க.

சிறந்தவராகிய ஆடவர் ஒருவர் தனி இடத்து ஒருத்தியைக் கண்ட பிறகு, அவள்பாற் கொண்ட காதல் தம்மை வருத்துதலான், அறமும் பொருளும் வீடுமாகிய இவற்றின் தன்மையைப் பெரிதும் இழித்துக் கூறிச், சிறந்ததாகிய (ஒத்த அன்பினால் எய்துதற்குரிய) இன்பத்தின் தன்மையைச் செம்மையாகப் புகழ்ந்துரைத்து, அந்த ஒள்ளிய வளையை அணிந்த நங்கையைப் புகழ்தல் செய்து (புகழ்ந்து), அவளது வடிவை ஒரு படத்தில் எழுதிக், கரும்பனையாற் செய்யப்பட்ட குதிரையின்மீது ஏறுவர். (அங்ஙனம் மடல் ஏறுதலைத்) தனிச் சொல் நீக்கிப் பாட்டுடைத் தலைவனது இயற்பெயர்க்கு (அடிதோறும்) எதுகையினை அமைக்கப்

கண்டபின் அந்த ஒண்டோடி ஏத்தல்
மற்றவள் வடிவை உற்றகிழி எழுதிக்
காமம் கவற்றக் கரும்பனை மடல்மா
ஏறுவர் ஆடவர் என்றனர் புலவர். (கூ0)

பெற்ற கலிவெண்பாவின்கண்ணதாகும்படி வைத்துப் பாடக் கடவர் என்பது.

ஆடவர் மடல் ஏறுதற்குரிய காரணம் முன்னே கலம்பகத்தின் உறுப்புக்களுள் தழை என்னும் உறுப்பின்விளக்கங் கூறிய இடத்திற் கூறப்பட்டது. தலைவனை ஆடவர் எனவும், தலைவியை ஒருத்தி எனவுங்கூறியது என்னெனின், தலைவனும் தலைவியும் குடிப்பிறப்பு முதலியவற்றான் ஒத்தவர்களாயிருத்தலே யன்றித் தலைவன் தலைவியின் உயர்ந்தவனாயிருத்தலும் உண்டு என்பதனை அறிவித்தற்காம் என்று கொள்க. அதனைத் தொல். பொருள். களவியலில் உள்ள,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை இன்றே"

என்னும் இரண்டாஞ் சூத்திரத்தான் அறிக.

ஈண்டு 'ஆடவர்' என்பது உயர்வினால் ஒருமைப்பாலைப் பன்மைப்பாலாகக் கூறிய வழுவமைதியாம் என்க. இதற்குத் தொல்காப்பியத்துள், சொல். கிளவியாக்கத்தில் உள்ள,

"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல"

என்னும் 27-ஆம் சூத்திரம் விதியாம். நன்னூலில், பொதுவியலில் உள்ள,

"உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே"

என்னும் 28-ஆம் சூத்திரம் விதியாகும்.

மடலேறுதலிற் பெண்டிர்க்குரிய விதி

147. [1]மடன்மாப் பெண்டிர் ஏறார் ஏறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலே. (சூக)

கOஉ. "கடவுளர் மேற்றே காரிகை மடலே"

கOரு. "எந்தை உடைப்பெயர்க் கேதுகை சாற்றி
அந்தமில் இன்பம் பொருளா வேத்திப்

அன்றி 'ஆடவர்' என்றதனைப் பலர்பாலாகவே கொள்ளின், 'ஆட்வர் ஒருத்தியைக் கண்டு' என்பது 'ஏவலிளையர் தாய்வயிறு கரிப்ப' என்பதிற்போலப் பன்மையின் ஒருமைவந்த வழுவமைதியாம் என்க.

இதற்குத் தொல்காப்பியத்துள், சொல், எச்சவியலில் உள்ள,

"ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காதும் இடனுமா ருண்டே"

என்னும் 65-ஆம் சூத்திரமும், நன்னூலுள், பொதுவியலில் உள்ள,

"ஒருமையிற் பன்மையும் பன்மையின் ஒருமையும்
ஓரிடம் பிறவிடந் தழுவலும் உளவே"

என்னும் 29-ஆம் சூத்திரமும் விதியாம் என்க.

'வெண்கலிப்பாவது' என்பது வெண்கலிப்பாவின் அகத்தது என்னும் பொருளது. இது குறிப்புவினையாலணையும் பெயர். 'ஆக' என்னும் செயவென் எச்சம் ஆகி எனச் செய்தென் எச்சமாகத் திரிந்து நின்றது. இதில் வருவிக்கப்பட்ட சொற்கள் இசை யெச்சங்கள். இச் சூத்திரம் சிதைவுற்றிருப்பதாகத் தோன்றுகின்றது. ஆதலின், இதனை வேறு பிரதிகளோடு ஒப்பிட்டு ஆய்தல் வேண்டும்.

திருமங்கைமன்னர் அருளிச்செய்த பெரிய திருமடலும், சிறிய திருமடலும் இச் சூத்திரத்திற்கூறிய இலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைந்திருக்கின்றன.

1. மகளிர் காதலானது தம்மை மிகுதியும் கவற்றிய காலத்தும் மடலேறார். கடவுளர் தலைவராய் வருங்காலத்து மடலேறுவர் என்பது.

பொருளும் அறனும் வீடும் பழித்து
மடல்மா ஏறுதல் [1]மாதர்க் குரித்தே''

கo. மறம்

148. [2]பெருநில வேந்தன் மகட்பால் வேண்டி
ஒருபெருந் தூதன் உரைத்தமொழி கேட்டுக்
குறுநில மறவன் வெஞ்சினம் திருகி
மாற்றமிக உரைப்பது மறம்என மொழிப. (கஉ)

---

1. 'மாதர்க்குரித்தே' என்னும் பாடம் பொருந்தவில்லை. இது, 'மாந்தர்க்குரித்தே' என்றிருப்பின் பொருந்தும். இப் பாடத்தில் 'மாந்தர்' என்றது மாந்தருள் ஆடவரைக்குறித்து நின்றது எனக் கொள்ளுதல் வேண்டும். அன்றி, 'மாதர்க்கு முரித்தே' என்றிருப்பினும் பொருந்தும். இப்பாடம் யாங்ஙனம் பொருந்தும் எனின், எந்தையுடைப் பெயர்க்கு எதுகைசாற்றி, அந்தமில் இன்பம் பொருளாக எத்திப், பொருளும் அறனும் வீடும் பழித்து, மடல்மா ஏறுதல் ஆடவர்க்கேயன்றிக் (கடவுளர் தலைவராய் வருங்கால்) மகளிர்க்கும் ஆம் என்பது இச் சூத்திரத்தின் பொருளாம் ஆதலின், பொருந்தும் என்க.

2. பெரிய நிலத்தினை உடைய அரசன் பெண்கொள்ள விரும்புதலான், ஒப்பற்ற பெருமையினையுடைய தூதன் சென்று உரைத்த மொழிகளைக் குறுநிலத்திற்குத் தலைவனாகிய மறவன் கேட்டுக் கொடிய சினம் முதிர்ந்து (மாறான) சொற்களைத் (தன் வீரம் தூதன் மனத்துச்) சிறந்து விளங்கும்படி கூறுவது தோன்றப் பாடுவது மறம் என்னும் நூலாகும் என்று புலவர்கள் கூறுவார்கள் என்பது.

ஈண்டு 'வேண்ட' என்னும் செயவென் எச்சம் 'வேண்டி' எனச் செய்தென் எச்சமாகத் திரிந்து நின்றது. இஃதீண்டுக் காரணப் பொருட்டாய் நின்றது; வேண்டுதலால் என்பது இதன் பொருள். (பெருநிலவேந்தன் மகட்பால் வேண்ட, ஒரு பெருந் தூதன் சென்று) உரைத்தமொழி குறுநிலமறவன் கேட்டு வெஞ் சினம் திருகி' என இயைக்க. ஈண்டு மறம் காரியவாகு பெயராய் மறத்தைப்பற்றிக் கூறும் நூலை உணர்த்திற்று. கலம்பகத்தின் உறுப்புக்களுள் ஒன்றாகிய மறத்தைப்பற்றிக் கூறியவற்றையும் ஈண்டு நோக்குக.

கக. பல்சந்த மாலை

149. [1]சொன்ன கலம்பக உறுவகை நீக்கி
மன்னிய பத்து முதல்நூ றளவா
வந்த மரபின் வரூஉஞ்செய்யுள் முதலா
வந்தது பல்சந்த மாலை யாகும். (சுரு)

---

1. கலம்பகத்திற்குச் சொல்லப்பட்ட உறுப்புவகைகளை நீக்கி, (முன்னோர் பாடி) வந்த முறையான் வருஞ் செய்யுளை முதலாகக் கொண்டு, பொருந்திய அச் செய்யுள்கள் பத்து முதலாக நூறு அளவாக அமையப்பெற்றது பல்சந்தமாலையாகும் என்பது.

'சொன்ன கலம்பக உறுப்புவகை நீக்கி வந்த மரபின் வரூஉம் செய்யுள் முதலா மன்னிய பத்து முதலாக நூறு அளவாக வந்தது' என இயைக்க. சொன்ன கலம்பக உறுப்புவகை - கலம்பகத்திற்குச் சொன்ன உறுப்பு வகைகள். அவை ஒருபோகு முதலாயின. மன்னிய - பலவின் படர்க்கை வினையாலணையும் பெயர். பொருந்தியனவாகிய அச் செய்யுள்கள் என்பது அதன் பொருள்.

வச்சணந்திமாலைச் செய்யுளியல் 9-ஆம் பாட்டில்,

'பத்தாதி நூறந்தம் பல்சந்த மாலையாம்'

என்றதனையும்,

அந்நூலின் உரையாசிரியர் அதற்குப், 'பத்துமுதலாக நூறு ஈறாகநின்ற விகற்பத்தது பல்சந்த மாலை விகற்பமாம்' என்றுரைத்த உரையையும்,

'பல்சந்தமாலை வகுப்பும், ஆசிரியமுமாய் அந்தாதித்து வரும்'என்ற விசேட உரையையும்; இலக்கண விளக்கப்பாட்டியலின்கண் உள்ள,

"பத்து முதலாப் பப்பத் தீறு
வந்த வண்ண வகைபத் தாகப்
பல்சந்த மாலை பகரப் படுமே"

என்னும் 74-ஆம் சூத்திரத்தையும்,

'பத்துக் கவி முதலாக நூறு கவி ஈறாக வைக்கப்பட்ட சந்தம். பப்பத்தாகப் பல்சந்தமாலை வரும்' என்ற அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

௧௨. இணைமணி மாலை

150. [1]இணைமணி மாலை தணிவிலந் தாதியாய்
மறையவர் பாவும் வணிகர்தம் பாவின்
துறையும் இயைந்தீ ரைம்பது வருமே. (௨௪)

௧௦௪. "வெண்பாக் கலித்துறை ஈரிரண் டியைந்த
ஒண்பா நூறவை இணைமணி மாலை"

---

1. இணைமணிமாலையாவது, வெண்பாவும் கலித்துறையும் தம்மில் இயைந்து குறைதல் இல்லாத அந்தாதியாய் நூறு செய்யுள் வருவதாகும் என்பது.

மறையவர்பா - வெண்பா, வணிகர்தம் பாவின் துறை - கலித்துறை.

இணைமணிமாலை, மறையவர்தம் பாவும், வணிகர்தம் பாவின் துறையும் இயைந்து தணிவில் அந்தாதியாய் ஈரைம்பது வரும் என இயைக்க.

வச்சணந்திமாலை, செய்யுளியலில் உள்ள 17-ஆம் பாட்டின் உரையில், "வெண்பாவும் ஆசிரியப்பாவும் முறையே அந்தாதியாய் நூறு செய்யுளான் முடிவது வெண்பா அகவல் இணைமணி மாலை என்றும், வெண்பாவும் கலித்துறையுங்கூடி முன்போல் முடிவது வெண்பாக் கலித்துறை இணைமணிமாலை என்றும் பெயர் பெறும்" என்றதையும்; இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"வெண்பா அகவல் வெண்பாக் கலித்துறை
பண்பான் ஈரைம் பஃதந் தாதி
இயலின் வதுப்ப திணைமணி மாலை"

என்னும் 58-ஆம் சூத்திரத்தையும் அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

'அந்தாதியாகி' என்னுமல், 'தணிவிலந்தாதியாய்' என்றது என்னெனின், பின்வரும் இரட்டைமணிமாலை என்பதூஉம் அந்தாதியாய் வரும் என்பது அறிவித்தற்காம் என்றுணர்க.

௧௫. இரட்டைமணி மாலை

151. [1]வெண்பா முதலாகக் கலித்துறை பின்வரும்
இந்த இருப திரட்டைமணி மாலை. (௯௫)

௧௦௫. "ஆதி அந்தம் வெண்பாக் கலித்துறை
ஏதம் இன்றி வருவ திரட்டைமணி மாலை
அதுவே நாலைந் தியலும் என்ப"

---

1. வெண்பா முதலாகக் கலித்துறை பின்வரும் இருபது செய்யுள் அந்தாதியாய் வருவது இந்த இரட்டைமணிமாலை யாகும் என்பது.

வச்சணந்திமாலையின் செய்யுளியலில் உள்ள 17-ஆம் சூத்திரத்தின் உரையில், "வெண்பாவும், கலித்துறையும் முறையே அந்தாதியாய் வந்து இருபது செய்யுளான் முடிவது வெண்பாக் கலித்துறை இரட்டைமணிமாலை" என்றதையும், இலக்கண விளக்கப்பாட்டியலில் உள்ள,

"இருபது வெண்பாக் கலித்துறை இனையயின்
வருவ திரட்டைமணி மாலை யாகும்"

என்னும் 59-ஆம் சூத்திரத்தையும், அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

'இந்த இரட்டைமணிமாலை' என இந்நூற் சூத்திரத்திற் கூறியது வேறு வகையான் வரும் இரட்டைமணிமாலையும் உண்டு என்பதை அறிவித்தற்காம் எனக் கொள்க. அது, வெண்பாவும் விருத்தமும் அந்தாதியாய் இருபது செய்யுள் வருவதாகும். அதனை, வச்சணந்திமாலைச் செய்யுளியலில் உள்ள 136-ஆம் சூத்திரத்தில்,

"பெற்றசீர் மன்விருத்தம் வெண்பாப் பெயர்த்திருபான்
மற்றை இரட்டைமணி மாலையாம்"

என்று கூறியதையும், அதன் உரையில் ஆசிரியவிருத்தமும், வெண்பாவும் தம்முள் மாறி அந்தாதியாய் இருபது வருவது இரட்டைமணிமாலையாம்" என்றதையும், இலக்கண விளக்கத்தின் பாட்டியலில் உள்ள,

கச. மும்மணி மாலை

152. [1]மிருத்த வெள்ளை கலித்துறை அகவல்
விருத்தம் மும்மணி விளம்புமந் தாதி. (சுசு)

"வெண்பா விருத்தம் வியப்புற இருபஃ
தெண்பட வுரைப்பதும் இரட்டைமணி மாலை"
என்னும் 69-ஆம் சூத்திரத்தையும், அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

இணைமணிமாலையின்கண் நூறு செய்யுளும், இரட்டைமணி மாலையின்கண் இருபது செய்யுளும் வரும் என்றதற்குக் காரணம் வழக்காறேயாம் என்க. மற்றவற்றின் செய்யுள் வரையறைக்கும் அஃதே காரணம் என்றறிக.

1. மேன்மையுற்ற வெண்பாவும், கலித்துறையும், ஆசிரிய விருத்தமும் சொல்லப்படும் அந்தாதியாய் முப்பது செய்யுள் வருவது மும்மணி மாலையாம் என்பது.

'முப்பது செய்யுள் வருவது' என்பது இச் சூத்திரத்தில் இன்றேனும், முன் சூத்திரத்தில் 'இருபது செய்யுள் வருவது இரட்டைமணிமாலை' என்றதனால், மும்மணிமாலை 'முப்பது செய்யுள் வருவது' என்பது கொள்ளப்பட்டது.

வச்சணந்திமாலையினும், இலக்கணவிளக்கப் பாட்டியலினும் மும்மணிமாலை வெண்பாவும், கலித்துறையும், ஆசிரியப்பாவும் அந்தாதியாக முப்பது செய்யுள் வருவது எனக் கூறப்பட்டது. அதனை, வச்சணந்திமாலை, செய்யுளியலில் உள்ள,

"மன்னிய வெண்பாக் கலித்துறை மன்னர்பா
முன்னிய முப்பான் மும்மணி மாலை"
என்னும் 16-ஆம் செய்யுளானும், இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"வெண்பாக் கலித்துறை அகவலந் தாதிப்
பண்பான் முப்பது பகரின் மும்மணி
மாலை என்று வகுத்தனர் புலவர்"
என்னும் 60-ஆம் சூத்திரத்தானும் உணர்க.

கரு. நான்மணி மாலை

153. [1]வெண்பாக் கலித்துறை அகவல் விருத்தம்
நண்பாய் வருவது நான்மணி மாலை. (கூஎ)

154. [2]அகவலும் அகவல் விருத்தமும் நாற்பது
அகவலை முன்வைத் தறைவது கடனே. (கூஅ)

கOசு. "வெள்ளை கலித்துறை அகவல் விருத்தம்
கொள்வது நான்மணி கோத்த அந்தாதி"

---

1. வெண்பாவும், கலித்துறையும், ஆசிரியப்பாவும், விருத்தமும் ஒன்றுடன் ஒன்றற்கியைபை உண்டாக்கும் அந்தாதித் தொடையோடு நாற்பது வருவது நான்மணி மாலையாம் என்பது.

நண்பு - நேயம், இயைபு. அஃது ஈண்டுக் காரிய ஆகு பெயராய் ஒரு செய்யுளோடு மற்றொரு செய்யுளுக்கு இயைபை உண்டாக்கும் அந்தாதித் தொடையை உணர்த்தியது. அடுத்த சூத்திரத்து 'நாற்பது' என்றது இதற்கும் கொள்ளப்பட்டது. என்னை? அதுவும் நான்மணி மாலையின் இலக்கணம் ஆதலின்.

இலக்கணவிளக்கப் பாட்டியலில், விருத்தம் முன்னாகவும், அகவல் பின்னாகவும் வைத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அங்ஙனம் கூறப்பட்டிருத்தலை, இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசும் அந்தா தியின்நாற் பதுபெறின்
நான்மணி மாலை ஆம்என நவில்வார்"

என்னும் 61-ஆம் சூத்திரத்தான் அறிக.

2. ஆசிரியப்பாவும், ஆசிரிய விருத்தமும் அந்தாதியாக நாற்பது வருவதும் நான்மணி மாலையாம்; அதன்கண் அகவலை முன்வைத்துப் பாடுவது முறைமையாகும் என்பது.

இதன்கண் வரும் செய்யுள் இருவகையின, ஆதலின், இதனை இணைமணி மாலையோடேனும், இரட்டைமணி மாலையோடேனும் சேர்த்திருத்தல் வேண்டும்; அங்ஙனம் சேர்க்காமல் நான்மணி மாலையுடன் சேர்த்ததனால், இருவகையாகிய ஆசிரியப்பாவும் இருவகையாகிய ஆசிரிய விருத்தமும் அமையப் பாடுதல் இதன் இலக்கணம் போலும் எனத் தோன்றுகிறது.

கசு. கலம்பக மாலை

155. [1]ஒருபோ குடனம் மனைநனி நீக்கி
வெள்ளை முதலா எல்லா உறுப்பும்
தள்ளா இயலது கலம்பக மாலை. (சுகூ)

கoஎ. "ஒருபோ கம்மனை ஒழித்துவெண் பாமுதல்
கருதிய பெயாது கலம்பக மாலை"

---

1. கலம்பகத்தின்கண்வரும் உறுப்புக்களுள், பெரிதும் ஒருபோகையும், அம்மானையையும் நீக்கி வெண்பா முதலாகிய மற்றை எல்லா உறுப்புக்களையும் நீக்காமல் அமைக்கப்பெற்று அந்தாதியாய் வரும் இலக்கணத்தை உடையது கலம்பக மாலை யாம் என்பது.

'நீக்கி' என்னுமல் 'நனிநீக்கி' என்றது இவ்விரண்டுறுப்புக் களுள் யாதேனும் ஒன்று கலந்து வருதலுமாம் என்னுங் கருத் தினாற்போலும். ஒருபோகு கலம்பகத்தினது முதலுறுப்பின் பகுதியாதலின், அதனை இந்நூலின்கண் வைப்பதாயின் முதலில் வைத்தலை நீக்குதல் வேண்டும் எனவும், அம்மானையையும் அங் ஙனமே முதலில் வைத்தலாகாது எனவும் கொள்க.

இதற்கு இவ்விரண்டு உறுப்புக்களையும் நீக்கியவர் அந்தா தியை நீக்காமையின், இஃது அந்தாதியாய் வருதல் கொள்ளப் பட்டது.

வச்சணந்திமாலையின்கண்ணும் இலக்கணவிளக்கப் பாட்டிய லின்கண்ணும் இந்நூற்குப் பன்மணிமாலை என்னும் பெயர் கூறப்பட்டது. இதற்கு அவ்விரு நூற்களும் இவ்விரண்டுறுப்புக் களோடு ஊசலையுஞ் சேர்த்து ஆக மூன்றுப்புக்களை நீக்குதல் வேண்டும் எனக் கூறுகின்றன. அதனை, வச்சணந்திமாலைச் செய்யுளியலின் 18-ஆம் செய்யுளில்,

"......அம்மானை - கூர்ந்தோருபோ
கூச லொழித்தார் கலம்பகப்பா ஒன்மாலை
பேசிய பன்பணியாம் பின்பு"

என்றதனானும், இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"ஒருபோ கம்மானை ஊசல் இன்றி
வருவது பன்மணி மாலை யாதும்"

என்னும் 54-ஆம் சூத்திரத்தானும் அறிக.

கஎ. மும்மணிக்கோவை

156. [1]வெள்ளையும் அகவலும் நேரிசை ஆகக்
கலித்துறை வரஅந் தாதி ஆகி
முறைமையின் இயல்வது மும்மணிக் கோவை.

க0சு. "தோன்றிய அகவல் வெள்ளை கலித்துறை
மூன்றும் வருவது மும்மணிக் கோவை"

கக0. "மும்மூன் றெருபொருள் மிசைவரும் என்ப"

---

1. வெண்பாவும் ஆசிரியப்பாவும் நேரிசையாய் இருக்க, அவற்றுடன் கலித்துறை வர அவை அந்தாதியாய் முன்னோர் கூறிய முறைமையின்படி அகவல் முன்னாக முப்பது செய்யுள் வருவது மும்மணிக்கோவையாம் என்பது.

'முறைமையின்' என்றதனால் மூன்று பாட்டுக்கும் முப்பது செய்யுள் என்பது கொள்ளப்பட்டது.

'வெள்ளையும் அகவலும் நேரிசையாக' என்றதனால் நேரிசை வெண்பாவும், நேரிசை ஆசிரியப்பாவுமே வருதல் வேண்டும் என்று கொள்க.

'அகவல் முன்னாக'என்பது எதனாற் பெறப்பட்டது எனின், அடுத்த மேற்கோட் சூத்திரத்தில் அகவல் முன்னாகக் கூறப்பட்டிருத்தலாற் பெறப்பட்டது என்றுணர்க.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின் 3-ஆம் செய்யுளில்,

"....................................ஆண்டகவல்
முன்முறையே வெண்பாக் கலித்துறைய அந்தாதி
மும்மணிக்கோ வைக்கு முதல்"

என்றதையும், இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"அகவல் வெண்பா அசைஎண் கலித்துறை
தொகைமுப் பதுபெறச் சொற்றொடர் நிலையில்
கூறுதல் மும்மணிக் கோவை ஆகும்"

என்னும் 55-ஆம் சூத்திரத்தையும் ஈண்டு நோக்குக.

கஅ. கலி அந்தாதி

157\. [1]வல்லின மேல்லின இடையின எழுத்துப்
புல்லி மருங்கு போகா தோன்றிக்
குறில்எனிற் குறிலே நேடில்எனில் நேடிலே
போருந்தி நாற்கலே கோண்டோர் அடியாய்த்

1\. வல்லினமும் மெல்லினமும் இடையினமும் ஆகிய எழுத்துக்களைக்கொண்டு ஓரினத்தெழுத்துள்ள இடத்தில் மற்ரோரினத் தெழுத்துச் செல்லாமல் அமையப்பெற்று, குறில்வந்த இடத்திற் குறிலும் நெடில் வந்த இடத்தில் நெடிலுமே பொருந்தப் பெற்று (இயலும்) நாற்கலை கொண்டது ஓரடியாகத், திருந்திய இவ்வகையின் வந்த நான்கடியை உடையதாகியும், நான்கடியும் ஒரொலியை உடையதாகியும், (முற்கூறிய வகையான்) முப்பத் திரண்டு கலைகளோடு பொருந்தியதாகியும், முதலடியின்கண் ஓரிடத்திற் குறில் வரினும் நெடில் வரினும் மற்றை நான்கடியின் கண்ணும் அவ்விடத்தில் அவ்வவ்வெழுத்துக்களே அமைந்த தாகியும் இத்தன்மையான் இயன்று வரும் முப்பது செய்யுட்களை உடையதாய் மேற்கூறிய கட்டளையாற் சிறந்திருக்கப் பெற்றது கலி அந்தாதியாம் என்பது.

இந்நூல் இதுகாறும் வெளிப்போந்துள்ள பாட்டியல் நூற் களிற் காணப்படவில்லை. ஆதலின், இச் சூத்திரத்திற்கு வகுப்பு என்று கூறப்படும் வண்ணகப்பாவின் தன்மையை மனத்திற் கொண்டு இவ்வுரை கூறப்பட்டது; ஆதலின், இதற்கு வேறு பொருள் கொள்ளக்கூடும் எனிற் கொள்க.

இச் சூத்திரத்திற் "குறிலெனிற் குறிலே நெடிலெனின் நெடிலே" என்றது அடியின்கண்வரும் கலையை நோக்கியதாம் எனவும், 'குறிலும் நெடிலும் முறைமுதல் வரினும், அவ்வெழுத் தாகியும்' என்பது பாட்டின் வரும் அடியை நோக்கியதாம் எனவும் அறிக.

பின்வரும் ஒலி அந்தாதியின் செய்யுட்கள் பதினறு கலையினையே கொண்டுவர, இந்நூலின் செய்யுட்கள் பதினறு கலைகளைப் பெற்று வருதல் மாத்திரமன்றி அவற்றின் இரட்டித்தன வாகிய முப்பத்திரண்டு கலைகளைக் கொண்டும் வருதலின், கலி

திருந்தும் இவ்வகை நான்கடி ஆகியும்
ஓரோலி ஆகியும் எண்ணுன் காகிய
கலேயோடு போருந்தியும் குறிலும் நேடிலும்
முறைமுதல் வரினும் அவ்வேழுத் தாகியும்

அந்தாதி எனப்பட்டது என்றுணர்க. கலித்தல் - எழுதல், மிகுதல். அன்றியும் ‘இரட்டுற மொழிதல்’ என்பதனுல் இதனில் வெண்கலியும் கலந்து வருதல் உண்மையின், கலி அந்தாதி எனப்பட்டது என்னும் பொருளுங்கொள்க. அடுத்த சூத்திரத்தையும் ஈண்டு நோக்குக.

இங்ஙனம் கலேகளைப் பெற்றுவரும் செய்யுட்கு, வகுப்பு, வண்ணகம், வண்ணம், ஒலி என்பன பெயர்களாம் என்றறிக.

இச்செய்யுள் சந்தக் குழிப்புக்களே அடியாகக்கொண்டு வருவனவாகும்.

சந்தக் குழிப்புக்கள்: தத்த, தாத்த, தந்த, தாந்த, தன, தான, தன்ன, தய்ய என எட்டாம்.

இவ்வெட்டும் தத்தா, தாத்தா, தந்தா, தாந்தா, தனு, தானு, தன்னு, தய்யா எனவரும் எட்டுடன் கூடிப் பதினுறுகும்.

இப் பதினுறன்மேல் ன, னு என்னும் உயிர் மெய்கள் தனித்துவரினும்; இவை த், ம் என்னும் ஒற்றுக்களோடு கூடி வரினும்; இவ்வொற்றுக்கள் தனித்து வரினும் அவை அரைச் சந்தம் எனப்படும்.

உதாரணம்: தந்தன, தந்தனு என னவ்வும், னுவும் தனித்து வந்து அரைச் சந்தமாயின.

தந்தனத், தந்தனுத், தந்தனம், தந்தனும் என அவை த், ம் என்னும் ஒற்றுடன் கூடிவந்து அரைச் சந்தமாயின.

தந்தத், தந்தம் என த், ம் என்னும் ஒற்றுக்கள் தனித்து வந்து அரைச் சந்தமாயின.

தந்தன என்பதில் தந்த என்பது முழுச்சந்தமும், ன என்பது அரைச்சந்தமும் ஆகும்; ஆதலின், தந்தன என்பதனே ஒன்றரைச் சந்தமாம் எனக்கொள்க. மற்றவற்றையும் இங்ஙனமே கொள்க.

இப்பரி சியன்ற முப்பது கட்டளை
மிக்கது கலிஅந் தாதி ஆகும். (எக)

சந்தங்களில் சில பல சேர்ந்தது ஒரு துள்ளலாம்.

துள்ளல் மூன்று கொண்டது ஒரு குழிப்பாகும்.

ஒருகுழிப்பும் ஒருசிறு தொங்கல் துள்ளலும் சேர்ந்தது ஒரு கலையாம்.

கலை எட்டுக்கொண்டது ஒரு வண்ணமாம்.

வண்ணம் மிக்கு வருங்கால் அடிக்கு நாலுகலையாகவும், எட்டுக்கலையாகவும், பதினாறு கலையாகவும் வரும்.

தந்தன தந்தன என்பது சந்தங்களிற் சில சேர்ந்த துள்ளல்.

தந்தன தந்தன, தந்தன தந்தன, தந்தன தந்தன எனத் துள்ளல் மூன்று வருதலின், இது குழிப்பாம்.

தந்தன தந்தன, தந்தன தந்தன, தந்தன தந்தன, தனதான எனக் குழிப்புடன் ஒரு சிறு தொங்கல் துள்ளல் வருதலின், இது கலையாம்.

தொங்கல் துள்ளலாவது முன் வந்த துள்ளல்களினின்று ஓசையின் வேறுபட்டிருப்பது.

தந்தன தந்தன என்பவற்றினின்று தனதான என்பது ஓசையின் வேறுப்பட்டிருத்தல் காண்க.

தய்யச் சந்தம், வலித்தல், மெலித்தல்களான் முறையே தன்னச் சந்தமும், தனச் சந்தமும் ஆகும்.

உதாரணம்: வலித்தல்
தய்ய—தன்ன
நெய்நி நெய்ந்நி
வர்ம வர்ம்ம
மெலித்தல்
தய்ய — தன
தொய்வு தொ(ய்)வு
செய்கை செ(ய்)கை

தன்னச்சந்தம் மெலித்தலால் தனச் சந்தமாகும்.

158. [1]வெண்கலி யும்சில சிறுபான்மை வருமே. (எஉ)

உ-ம்: தன்ன—தன

சண்மு ச(ண்)மு

மன்வில் ம(ன்)வில்

இரண்டு தன்னச் சந்தங்கள் வருங்கால் அவற்றுள், ஒன்று தனச்சந்தமாதலும் உண்டு.

உ-ம்: தன்னதன்ன — தன்னதன

சண்முசண்மு— சண்மு ச(ண்)மு

ஈண்டுக் கூறப்பட்ட வண்ணங்களும், தொல்காப்பியம், யாப்பருங்கலம் முதலியவற்றிற் கூறப்படும் வண்ணங்களும் வெவ்வேறனவை. அவற்றின் வேற்றுமைகளை ஆய்ந்துணர்க.

இச் செய்யுளின் மற்ற இலக்கணங்களை இதைப்பற்றி விரிவாகக் கூறும் நூற்களான் அறிக.

1. கலி அந்தாயிற் சில வெண்கலிப்பாக்களும் சிறுபான்மை வரும் என்பது.

'வெண்கலியும் சிலவரும்' என்னது, 'வெண்கலியுஞ் சில சிறுபான்மை வரும்' என்றது என்னெனின், கலி அந்தாதி முப்பத்திரண்டு கலைகளை உடைய செய்யுட்களைக்கொண்டு வருங்கால் வெண்கலி பெருபான்மையும் அதிற்கலந்து வாராது என்பதூஉம், பதினறு கலைகளை உடைய செய்யுட்களைக் கொண்டு வருங்கால் வெண்கலி அதிற் கலந்தே வரும் என்பதூஉம் அறிவித்தற்காம் என்றறிக.

கலி அந்தாதி பதினறு கலைகளை உடைய செய்யுட்களைக் கொண்டு வருங்கால் அதில் வெண்கலி கலவாதாயின், பின்னர்க் கூறப்படும் ஒலி அந்தாதியோடு இதனிடை வேற்றுமை எய்தாது. வேற்றுமை எய்தாது ஆயின், அவை இருவேறு நூற்களாதல் இயையாது என்பதனை அறிக.

கக. ஒலி அந்தாதி

159. [1] தத்தம் இனத்தில் ஒப்புமுறை பிறழாது
நாலடி ஈரேண் கலையோரு முப்பது
கோலிய தோலியந் தாதி ஆகும். (எ௩)

கலி அந்தாதியின் சிறப்பு விதி

160. [2] ஈரோலி ஆகிய எண்ணான்கு கலைஎனச்
சீரியற் புலவர் செப்பினர் கோளலே. (எச)

---

1. கலி அந்தாதியிற் கூறியபடி தத்தம் இனத்தில் ஒத்து வரும் முறைமையின் மாறுபடாமல் (ஓர் அடிக்கு நான்கு கலையாக) நாலடிக்கும் பதினாறு கலைகளை உடையதாய் வரும் செய்யுள் முப்பது கொண்டது ஒலியந்தாதியாம் என்பது.

வச்சணந்திமாலையின் செய்யுளியலின்கண் உள்ள, 13-ஆம் செய்யுளில்,

"ஈண்டிய முப்பதா யீரேண் கலைவண்ணம்
மூண்டதோலி அந்தாதி முப்பதாம்"

என்றதையும், வெண்பாப்பாட்டியலின்கண் உள்ள,

"ஈண்டிய வண்ணம் ஈரேண்கலை முப்பான்
ஆண்ட தோலிஅந் தாதி ஆகும்"

என்னும் 64-ஆம் சூத்திரத்தையும் ஈண்டு நோக்குக.

2. கலி அந்தாதியை முப்பத்திரண்டு கலைகளைக்கொண்டியற்றுங்கால் ஒவ்வோரடியினும் நான்குகலை ஓரொலியாகவும், மற்றொரு நான்குகலை வேறோரொலியாகவும் அமைய எட்டு நான்கு கலைகளைக் கொண்டியற்றுக எனச் சிறந்த இலக்கணங்களை உணர்ந்த புலவர்கள் கூறினார்கள் என்பது.

இச் சூத்திரம் தவளைப் பாய்த்தாய் முன் சூத்திரத்தை இடையிட்டு அதற்கு முன்னுள்ள சூத்திரத்தைத் தழுவிற்று.

'ஒலி அந்தாதியை முப்பத்திரண்டு கலைகளைக் கொண்டியற்றுங்கால் இங்ஙனம் இயற்றுக என்று கூறினார்கள்' என்று கொள்ளலாகாதோ எனின், மற்ற நூலாசிரியர்கள் ஒலி அந்

ஒலி ஏன்று கூறப்படும் செய்யுள் இன்னது என்பது

161. [1]வண்ணகம் என்பது ஒலிஎனப் படுமே. (எரு)

உo. யானைத் தொழில்

162. [2]மூவகை நிலனும் மூவகை நிறைவும்
பல்வகைத் தேயமும் எழுவகை உறுப்பு
அங்கமும் வருணமும் யாண்டும் ஐவகைக்
கோலையும் இருவகை நடையும் ஐவகை
உணர்வும் உடையோர்ப் பேணலும் உளப்பட
நண்ணிய வேளாண் பாவின் நலம்பெற
எண்ணி உரைப்ப தியானைத் தொழிலே. (எசு)

தாதியில் முப்பத்திரண்டு கலைகள் வருதலாகும் எனக் கூறுமை யானும், அங்ஙனங் கொள்ளின், கலி அந்தாதியோடு இதனிடை வேற்றுமை இன்றாம் ஆதலானும், வேற்றுமை இன்றாயின், அவை வெவ்வேறு இரண்டு நூற்களாதல் இயையாது ஆகலானும் அங்ஙனம் கொள்ளலாகாது என்க.

'ஈரொலி ஆகிய எண்ணான்கு கலைகொளல் எனச் சீரியற் புலவர் செப்பினர்' என இயைக்க.

1. வண்ணகப்பா என்று சொல்லப்படும் செய்யுள் ஒலி என்றுஞ் சொல்லப்படும் என்பது.

உம்மை விகாரத்தாற் றொக்கது. இச் சூத்திரத்தான் 'ஒலி அந்தாதி' என்னும் பெயரின் காரணம் கூறப்பட்டமை அறிக. 'ஒலி' எனப்படும் செய்யுள் அந்தாதியாய் வரப்பெறுதலின், இந்நூல் ஒலிஅந்தாதி என்னும் பெயரினதாயிற்று என்க.

இச் சூத்திரமும், தவளைப் பாய்த்தாய் முன் சூத்திரத்தை இடையிட்டு அதற்கு முன்னுள்ள சூத்திரத்தைத் தழுவிற்று.

2. (யானைகளின்) மூவகை நிலமும், மூவகை நிறைவும், பலவகையாகிய தேயமும், எழுவகையாகிய (சிறந்த) உறுப்புக் களை உடைய உடம்பும், குலமும், யாண்டும், ஐவகையாகிய கொல் லுதல் தொழிலும், இரண்டு வகையாகிய நடையும், ஐவகையாகிய

அறிவும், தன் தலைவர்களைப் பேணுதலும் ஆகிய இவை பத்தும் தன்னுள் அமையப், பொருந்திய வஞ்சிப் பாவினால் நன்றாக ஆராய்ந்து பாடப்படுவது யானைத் தொழிலாகும் என்பது.

'உறுப்பு, யங்கமும்' என்பது முன்னைப்பாடம். இப்பாடம் புணர்ச்சியாற் பிழை உடையது; ஆதலின், உறுப்பு அங்கமும்' என்று திருத்திக் கொள்ளப்பட்டது. ஈண்டு உயிர் வரக் குற்றியல் உகரம் கெடாமல் நின்றது எனக் கொள்ளுதல்வேண்டும். நன்னூல், எழுத்ததிகாரம், உயிரீற்றுப் புணரியல் 14-ஆம் சூத்திரத்தில்,

'உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்'

என்றதன் விசேட உரையில், 'கெடும்' என்னாது 'ஓடும்' என்றமையாற் குற்றுகரம் ஒரோவழி இ ஈ ஐ என்னும் பொதுவிதி பெறுதலும் கொள்க' என்றதையும், அதற்கு,

'தன்முக மாகத் தானழைப் பதுவே'

என உதாரணங்காட்டியதையும் ஈண்டு நோக்குக.

உறுப்பு அங்கமும் என்பதுங்கூட ஏற்புடைய பாடமாயிருக்கும் எனத்தோன்றிற்றிலது. இதன் ஏற்புடைய பாடத்தை வேறு பிரதிகளைக்கொண்டு ஆய்ந்துகொள்க. 'உளப்பட வேளாண் பாவின் உரைப்பது யானைத் தொழில்' என இயைக்க. நண்ணிய என்றதனை 'வேளாண்பா'என்றதனோடு இயைக்க. வேளாண்பா-வஞ்சிப்பா.

இது பெரும்பான்மையும் வஞ்சிப்பாவாற் பாடப்படுதலின் யானை வஞ்சி என்றுங் கூறப்படும். இதனை, 'யானைத் தொழின் மாலை' என்று கூறுவாரும் உளர்.

வச்சணந்திமாலைச் செய்யுளியலில் உள்ள,

"இசைந்த நிலம்குலம் ஒத்த எழிலோ
டசைந்த பிராயத் தளவும் - இசைந்தமதம்
துன்னலஞ்சி வீடுயிர்கோள் மன்னன் தொடர்ந்தணைத்தல்
சொன்னவஞ்சி யானைத் தொழில்"

என்னும் 33-ஆம் செய்யுளையும், இலக்கணவிளக்கத்தில் உள்ள,

1. மூவகை நிலம்

163. [1]கிரிசரம் வனசரம் நதிசரம் என்றிவை
நிலைபெறு நிலனென நிறுத்திசி னோரே. (எஎ)

2. மூவகை நிறைவு

164. [2]உயரமும் நீளமும் சுற்றும் அளவினிற்
குறையா தியல்வது நிறைவெனப் படுமே. (எஅ)

3. பல்வகைத் தேயம்

165. [3]பல்வகைத் தேயம் கொல்களிறு பிறக்கும்
பல்வகைத் தேயமாம் என்மனார் புலவர். (எகூ)

"நிலம்எழில் உயரம் நேர்ந்த வயது
குலம்அள விலக்கணம் மும்மதம் கோடல்
அடுத்திடிற் கோறல்கண் டரசனை அறிதல்
தொடுத்தல் வஞ்சி யானைத் தொழிலாம்''

என்னும் 112-ஆம் சூத்திரத்தையும் ஈண்டு நோக்குக.

மேற்காட்டிய வச்சணந்திமாலைச் செய்யுளின் விசேட உரையில், 'இதனை யானைத் தொழின் மாலை' என்பர் பிறநூலார்' என்றதையும் நோக்குக.

1. மலையாகிய இடமும், காடாகிய இடமும், யாறாகிய இடமும் என்று சொல்லப்பட்ட இவை யானைகள் உறையும் இடம் என்று நூற்களிலே சொல்லி வைத்தார்கள் புலவர்கள் என்பது.

சரம் - நடை; அதியானைகள் உலவும் இடங்களை உணர்த்தியது மரபு வழுவமைதி.

2. (யானைகள்,) உயரமும், நீளமும், உடலின் சுற்று வடிவமும், (நூற்களிற் சொல்லப்பட்ட) அளவினிற் குறையாதிருப்பது நிறைவு என்று கூறப்படும் என்பது.

3. பலவகையாகிய தேயம் எனப்படுவன யாவை எனின், (பகைவர்களைக் கொல்லுகின்ற) களிறுகள் பிறக்கின்ற பலவகையாகிய தேயங்களாம் என்று கூறுவார்கள் புலவர்கள் என்பது.

ஈண்டுத் தேயம் என்றது நாட்டை அன்றிச் சீனம் என்பது போலப் பல நாடுகளைத் தன்கண்கொண்ட நிலப்பிரிவை என்றலும் ஆம்.

4. எழுவகை உறுப்பு

166. [1]பாதம் நாலும் கையும்வா லதியும்
கோசமும் நிலனுறத் தீண்டுதல் குறியே. (அ0)

5. வருணம் (குலம்)

167. [2]குலம்எனப் படுவது பலவகை வருணமும்
நலன்உற உரைக்கும் நலத்த தென்ப. (அக)

6. யாண்டு

168. [3]நலம்மிகு வாழ்நாள் பொலிவுற இயம்புதல்
யாண்டென மொழிப இயல்நெறிப் புலவர். (அஉ)

7. ஐவகைக் கொலை

169. [4]கையும்முற் கூறும் கடியபிற் கூறும்
கூர்ங்கோ டிரண்டும் கொலைத்தொகை வகையே.

---

1. நான்கு அடிகளும், துதிக்கையும், வாலும், ஆண்குறியும் நிலத்திற் பொருந்தத் தீண்டுதல் சிறந்த களிறுகளின் எழு என்னும் தொகையினை உடைய உறுப்புக் குறிகளாம் என்பது.

வாலதி - வால்

2. குலம் என்று சொல்லப்படுவது களிறுகளின் பலவகையாகிய சாதிகளையும் நன்கமையக் கூறும் நன்மையினை உடையதாம் என்பது.

3. யானைகளின் ஆயுளை நன்கமையும்படி விளக்கமாகக் கூறுதலை யாண்டு என்று கூறுவார்கள் இலக்கண நூற்களின் வழிகளை உணர்ந்த புலவர்கள் என்பது.

4. யானைகளின், துதிக்கையும் (உடலினது) முற்கூறும், கடுமையை உடைய பிற்கூறும், கூர்மையாகிய இரண்டு கொம்புகளும் ஆகிய ஐந்து உறுப்புக்களும் பகைவர்களைக் கொல்லுதல் தொழிலுக்கு உரிய ஐந்து என்னும் தொகையைக்கொண்ட உறுப்புக்களின் வகையாம் என்பது.

8. இருவகை நடை

170. [1]முன்னர் ஊன்றிய காற்குறி தன்னில்
பின்னர்ப் பதமிடுவேது தோரணம் என்ப. (அசு)

இதுவும் அது

171. [2]பிறழ இடுவேது வக்கிரம் அதுவே
சாரிகை விகற்பமும் ஆகும் என்ப. (அரு)

9. ஐவகை உணர்வு

172. [3]நன்மை இயற்றலும் தீமை இயற்றலும்
பற்றிய நன்மை தீமை நினைத்தலும்
கயக்கறு காலம் நினைத்தலும் புலனே. (அகூ)

10. உடையோர்ப் பேணல்

173. [4]வழுவா துடையோர் ஏவல் இயற்றல்
உடையோர்ப் பேணல் என்மனுர் புலவர். (அஎ)

---

1. முன்னே ஊன்றிய (முன்)காற்குறிக்கண் பின்காலை வைப்பது தோரணம் என்னும் நடையாம் என்று புலவர்கள் கூறுவார்கள் என்பது.

2. முன்சொன்னதின் மாறுகக் கால்களை வைப்பது வக்கிரம் என்னும் நடையாம்; அது சாரிகையின் விகற்பமும் ஆகும் என்பது.

சாரிகை - வட்டமாய் ஓடுதல். சாரிகை விகற்பங்களை அவற்றைப்பற்றிக் கூறும் நூற்களிற் காண்க.

3. தம்மைச் சார்ந்தோர்க்கு நன்மையைச் செய்தலும், பகைவர்களுக்குத் தீமையைச் செய்தலும், தம்மைத் தொடர்ந்த நன்மையை நினைத்தலும், தீமையை நினைத்தலும், குற்றமற்ற காலத்தை நினைத்தலும் யானைகளின் ஐவகை அறிவாகும் என்பது.

கயக்கு - குற்றம், சோர்வு.

4. யானைகள் தம்முடைய தலைவர்களைப் பேணுதல் என்பது யாது எனின், தம்முடைய தலைவர்களின் ஏவலைச் சிறிதும் தவறு நேராமற் செய்தலாம் என்று புலவர்கள் கூறுவார்கள் என்பது.

[1]மேல் 'நண்ணிய' என்றதனுல் ஆசிரிய அடியாற் பாடுவோரும் உளர். (அஎ)

ககக. "அவலும் உரித்தென அறைதுநர் உளரே"

உக. வருக்கமாலை

174. [2]மொழிமுதல் ஆகிய எழுத்துக் கெல்லாம்
வருக்கம் உரைப்பது வருக்க மாலை (அஅ)

---

1. மேல் 'உள்ள மூவகை நிலனும்' என்று தொடங்கும் சூத்திரத்தில் 'நண்ணிய' என்றுள்ள மிகைமொழியால் ஆசிரியப்பாவினுற் பாடுவோரும் உளர் என்பதைக் கொள்ளவேண்டும் என்பது.

2. மொழிக்கு முதலாகும் எழுத்துக்களுக்கெல்லாம் ஒவ்வோரெழுத்துக்கும் ஒவ்வொரு பாட்டாக உயிர்வருக்கம், உயிர்மெய்வருக்கம் என்னும் அவ்விருவகை வருக்கமுறைப்படி பாடுவது வருக்க மாலையாம்.

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு முதலாகும். உயிர் பன்னிரண்டையும் உயிர் வருக்கம் என்ப.

மொழிக்கு முதலில் வரும் மெய்கள் க ச த ந ப ம வ ய ஞ என்னும் ஒன்பதாம். இவை மொழிக்கு முதலிலே உயிரோடன்றி வாராமையின், இவற்றின் உயிர் மெய்களே மொழிக்கு முதலாவன எனக் கொள்ளப்படும். ஙகரம் அவ்வை ஒட்டி மொழிக்கு முதலில் வருமேனும் 'சுட்டுயா எகர வினு வழியன்றி வாராமையின், அஃது ஈண்டு நீக்கப்பட்டது. பாட்டியல் நூலார் மேற்காட்டிய ஒன்பது உயிர் மெய்களுள் யகர ஞகர உயிர்மெய்களை நீக்கி மற்றை ஏழையுமே உயிர்மெய் வருக்கம் எனக் கொண்டனர் என்பதறிக.

இச் சூத்திரத்தில் 'எழுத்துக்கெல்லாம் பாட்டுரைப்பது வருக்கமாலை' என்னுது, 'எழுத்துக்கெல்லாம் வருக்கம் உரைப்பது' என்றது இம்முறைப்படி வருக்கமாலை பாடுதல் வேண்டும் என்பது அறிவித்தற்காம் எனக் கொள்க.

அங்ஙனமாஞல், யகர ஞகர உயிர்மெய்களை நீக்கியதென்னெனின், ஒரு சாரார் ஒவ்வொரு வருக்கத்தினும் எட்டுச் செய்

உஅ. நாமமாலை (புகழ்ச்சி மாலை)

176. [1]மைந்தர்க் காயின் வஞ்சிப் பல்வகை
நேர்ந்த அடிமயக்கம் நாம மாலை. (அகூ)

யுட்கள் பாடுதல் வேண்டும் என்பவாகலானும், யகர ஞகர உயிர் மெய்கள் எவ்வெட்டு வருதற்கு உரியனவல்ல ஆகலானும் நீக்கப் பட்டன என்க. அவை எவ்வெட்டு வருதற்குரிய அல்ல என்பதனைத் தொல்காப்பியத்தினும் நன்னூலினும் மொழிக்கு முதலாம் எழுத்துக்களைக் கூறுஞ் சூத்திரங்களைக் கண்டறிக.

இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"வருக்கத் தினைச்சொலல் வருக்க மாலை"

என்னும் 66-ஆம் சூத்திரத்தையும், அதன் உரையையும், வச்சணந்திமாலைச் செய்யுளியலின் 36-ஆம் செய்யுளில்,

"மன்னகவல் எட்டாய் வருக்கவெழுத் தான்வருமேல்
முன்வருக்க மாலை மொழி"

என்றதையும், அதன் உரையில், "உயிர் வருக்கத்தேனும், க ச த ந ப ம வ என்னும் எழ் உயிர்மெய் வருக்கத்தேனும் அவ்வவ் வருக்க முறையே எட்டாசிரியம் வந்தால் வருக்கமாலையாம்" என்றதையும், அதன் விசேட உரையில் "யகர ஞகரங்களை நீக்கி, எழுயிர் மெய் என்றது, பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்' என்னும் தந்திர உத்திபற்றி" என்றதையும், மேற்காட்டிய இலக்கணவிளக்கப் பாட்டியற் சூத்திரத்தின் விசேட உரையில், "உயிரானும், கசதநபமவ என்னும் உயிரோடுகூடிய மெய் எழானுமாக எட்டு ஆசிரியப்பா வந்தால், அவை வருக்க மாலை எனவும் கூறுவாரும் உளர்" என்றதையும் ஈண்டு நோக்குக.

இந்நூலினும், இலக்கணவிளக்கப்பாட்டியலினும் வருக்க மாலையை இன்ன பாவாற் பாடுதல் வேண்டும் என வரையறை கூறப்படாமையின் ஆசிரியப்பாவேயன்றி மற்றைப் பாட்டுக்களாலும் வருக்கமாலை பாடுதலாம் என்பது இவ்விருநூற்களின் கருத்தாம் என்பது தோன்றுதல் உணர்க.

1. 'பல்வகை அடிமயக்கம் நேர்ந்த வஞ்சி மைந்தர்க்கு ஆயின் நாமமாலை' என இயைக்க.

கக௨. "ஆடவர் திறத்து வஞ்சி யின்னேறி
நாடிய பாதம் மயங்க வைப்பின்
நாம மாலை மற்றது மடந்தையர்க்
காமெனிற் புகழ்ச்சி மாலை ஆதும்"

பலவகை அடிமயக்கம் அமைந்த வஞ்சிப்பாவினுல் புகழைப் பாடுதல் ஆடவரைப்பற்றியதாயின் நாமமாலை என்று கூறப்படும் என்பது.

இங்ஙனம் பாடுதல் மைந்தரைப்பற்றியதாயின் நாமமாலையாம் என்றதனுல், மகளிரைப்பற்றியதாயின் புகழ்ச்சி மாலையாம் என்பது கொள்க.

இச் சூத்திரத்திற்கு இது பொருளாதலை'மைந்தர்க்காயின்' என்றதனுனேயன்றிப் பின்னர்,

"ஆடவர் திறத்து வஞ்சி யின்னேறி
நாடிய பாதம் மயங்க வைப்பின்
நாம மாலை மற்றது மடந்தையர்க்
காமெனிற் புகழ்ச்சி மாலை யாதும்"

என்பதனை இதற்கு மேற்கோளாக் காட்டியதனுனும் பெறுதலாம் என்க.

ஆயின், இச் சூத்திரத்து 'புகழ்' என்பதற்குச் சொல் இல்லையே அதனை எதனுற் பெறுதும் எனின், இந்நூலின் பெயராகிய நாமமாலை என்பதனுள் முதலில் உள்ள சொல்லாகிய நாமம் என்பதனுற் பெறுதும் என்க. எங்ஙனம் எனின், நாமம் என்பது வியப்பு, புகழ், இணக்கம் முதலிய பல பொருள்களைத் தரும் சொல்லாகும். ஆதலின் 'எற்புழிக் கோடல்' என்பதனுன் அதன் பொருள்களுள் ஒன்ருகிய 'புகழ்' என்பதனைப் பெறுதும் என்க. பிறபாட்டியல் நூற்களில் இது விதந்து கூறப்பட்டிருத்தலும் ஈண்டு நோக்கற்கு உரியதாகும்.

இனி அடிமயக்கமாவது யாது? எனின், எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் பாட்டின் உறுப்புக்கள் ஆறனுள், எழுத்து, அசை, தொடை என்னும் மூன்றுறுப்புக்களும் எல்லாப் பாக்களுக்கும் உரியனவாகும் பொதுவியல்புடையனவாம். மற்றைச் சீர், தளை, அடி என்னும் மூன்றுறுப்புக்களும்,

கக௩. "அதுவே,
செங்கலை வண்ணப் பாவும் இயங்தும்"
—கோவூர் கிழார்.

கக௪. "வெள்ளடி இயலாற் புணர்ப்போர் தறிப்பிற்
றள்ளா இயலது புகழ்ச்சி மாலை"
—சேர்ந்தம் பூதனர்.

இன்ன இன்ன பாவினுக்கு இன்ன இன்ன சீர், இன்ன இன்ன தளை, இன்ன இன்ன அடி உரியனவாம் என்னும் சிறப்பியல்பு உடையனவாகும். அம் மூன்றுறுப்புக்களுள் ஒருபாவிற்கு உரிய உறுப்பு மற்றைப் பாக்களில் வரின், அவை முறையே சீர்மயக்கம், தளைமயக்கம், அடிமயக்கம் எனப்படும். அவற்றுள், அடிமயக்கத்தைப் பாக்களின் அடி உரிமையினை உணர்ந்தால்தான் அறிதல் கூடும். பாக்களின் அடி உரிமை, தளையினுல் எய்துவதாகும். எங்ஙனம் எனின், வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் நான்குவகைப் பாக்களுள், முதன் மூன்றற்கும் நாற்சீர் அடிகள் உரியனவாம். வஞ்சிக்கு இருசீரடியும் முச்சீரடியும் உரியனவாம். முதன் மூன்று பாக்களுக்கும் நாற்சீரடிகள் பொதுவாய் நிற்றலின், அம் மூன்று பாக்களுள், இன்ன பாவிற்கு உரிய அடி இஃது எனச் சிறப்புவகையாற் கூறுதல் இயையாது. ஆதலின், அவற்றைத் தளைகொண்டே இவை இன்ன பாவிற்கு உரியன எனச் சிறப்பு வகையாற் கூறுதல்வேண்டும். எவ்வாறு? எனின், இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் அமைந்த நாற்சீர் அடிகளை வெண்பாவிற்கு உரியன எனவும், நேரொன்றாசிரியத் தளையும், நிரையொன்றாசிரியத் தளையும் அமைந்த நாற்சீர்அடிகளை ஆசிரிப்பாவிற்கு உரியன என்றும், கலித்தளை அமைந்த நாற்சீர் அடிகளைக் கலிப்பாவிற்கு உரியன என்றும் கொள்ளுதல் வேண்டும். இனி வஞ்சிப்பாவிற்கு ஒன்றிய வஞ்சித் தளையும், ஒன்றாத வஞ்சித் தளையும் அமைந்த இருசீரடியும், முச்சீரடியும் உரியனவாம் என்க. இருசீரடியும் முச்சீரடியும் வஞ்சிப்பாவிற்கே உரியனவாய் நிற்க, அதன் அடி உரிமை கூறுதற்கும் தளையின் துணைகோடல் என்? எனின், இருசீரடியும் முச்சீரடியும் இணைக்குறளாசிரியப்பாவிற்கும் உரியனவாயிருத்தலின், வஞ்சிப்பாவின் அடி உரிமை கூறுதற்கும் தளையின் துணைகொள்ளுதல் வேண்டும் என்க. இம் மயக்கங்கள் வெண்பா நீங்கிய மற்றைப் பாக்களிலேயே வரும்.

அங்ஙனம் வருங்கால், ஆசிரியப்பாவின்கண் இயற்சீரானுகிய வெள்ளடியும், அருகி வெண்சீர் வெண்டளை கலந்த இயற்சீர் வெள்ளடியும், வஞ்சியடியும் மயங்கி வரும்; அருகிக் கலிஅடியும் மயங்கிவரும் எனவும், கலிப்பாவின்கண் வெள்ளடியும், ஆசிரிய வடியும் மயங்கிவரும் எனவும், வஞ்சிப்பாவின்கண் ஆசிரிய வடியும், கலி அடியும், சிறுபான்மை வெள்ளடியும் மயங்கி வரும் எனவும், இருசீரடி வஞ்சிப்பாவின்கண் முச்சீர் வஞ்சி யடியும், முச்சீரடி வஞ்சிப்பாவின்கண் இருசீர் வஞ்சியடியும் மயங்கி வருதலும் உண்டு எனவும் உணர்க. வஞ்சிப்பாவின்கண் வஞ்சியடிகளே வந்து மயங்கின் இஃது இருசீரடி வஞ்சிப்பா என்றும், இது முச்சீரடி வஞ்சிப்பா என்றும் அறிவது எவ்வா றெனின், முதலடி இருசீரடியாயின் இருசீரடி வஞ்சிப்பா என் றும், முச்சீரடியாயின் முச்சீரடி வஞ்சிப்பா என்றும் அறிதல் வேண்டும் என்க. அன்றியும் வஞ்சிப்பாக்களுள் வஞ்சியடிகள் மயங்கும் மயக்கத்தை அறிதற்குத் தளையின் துணை வேண்டும் என்னும் நியதி இன்று என்றும் உணர்க. என் எனின், அது பிறிது பாட்டின்கண்ணதாகிய மயக்கம் அன்மையின் என்க. அவற்றின், உதாரணங்களை யாப்பருங்கலவிருத்தி, யாப்பருங் கலக்காரிகை முதலியவற்றின்கண் காண்க.

வச்சணந்திமாலையின் செய்யுளியலில் உள்ள,

"புரிந்த மயக்கவடி வஞ்சியாற் போய்தீர்
திருந்திழையார் சீர்பேர் சிறக்கத் - தெரிந்துரைத்தால்
மன்னும் புகழ்ச்சிநன் மாலையாம் மைந்தர்க்காம்
பின்னும மாலைப்பேர் பெற்று"

என்னும் 35-ஆம் செய்யுளையும், இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"மயக்க அடிபெறு வஞ்சிப் பாவால்
வியத்தகு நல்லார் விழச்சீர் உரைத்தல்
புகழ்ச்சி மாலை புருடர்க் குரைப்பின்
நாம மாலை ஆம்என நவில்வர்"

என்னும் 106-ஆம் சூத்திரத்தையும் ஈண்டு நோக்குக.

இச் சூத்திரம் ஞாபகங்கூறல் என்னும் உத்தியின் பாற்படும். ஞாபகங்கூறலாவது சூத்திரத்தைச் சில்வகை எழுத்திற் பல்

உகு. இன்னிசைத் தொகை

176. [1]தொண்ணூ றேனும் எழுப தேனும்
இன்னிசைத் தொடுப்பின் இன்னிசைத் தொகையே.

ககடு. "எண்ணிய வகையான் இன்னிசை வெண்பாத்
தொண்ணூ றெழுபது தொடுப்பதத் தொகையே"
—கோவூர் கிழார்.

வகைப்பொருளைச்செவ்வன் ஆடியிற் செறித்து இனிது விளங்கச் செய்யாது, அரிதும் பெரிதுமாக நலிந்து செய்து, அங்ஙனஞ் செய்ததனால் வேறு பல பொருள்களை உணரச் செய்தலாகும். அஃது அன்னதாதலைத் தொல். பொருள். மரபியலின் 110-ஆம் சூத்திரத்திற் கூறப்பட்ட உத்திகளுக்குப்பொருள் கூறுமிடத்து, "ஞாபகங்கூறல்: சூத்திரம் செய்யுங்கால், அதற்கு ஓதிய இலக்கணவகையானே சில்வகை எழுத்தின் செய்யுட்டாகவும், நாடுதல் இன்றிப் பொருள் நனிவிளங்கவும் செய்யாது, அரிதும் பெரிதுமாக நலிந்து செய்து, மற்று அதனானே வேறு பல பொருள் உணர்த்தல்" என்று பேராசிரியர் கூறியதனானும், அதற்கு அவர் காட்டிய உதாரணத்தானும் அறிக.

1. இன்னிசை வெண்பாத் தொண்ணூறேனும், எழுபதேனும்அமையப் பாடின்,இன்னிசைத் தொண்ணூறு,இன்னிசை எழுபது என்று இன்னிசை வெண்பாவானும் அத் தொகையானும் பெயர் பெறும் என்பது.

அடுத்துள்ள மேற்கோட் சூத்திரத்து,

"தொண்ணூ றெழுபது தொடுப்பதத் தொகையே"

என்றதனை நோக்குக. இங்ஙனம் வரும் நூலை 'இன்னிசைத் தொகை' என்றே கூறும் மரபு உளதேல் 'இங்ஙனம் பாடப்படும் நூல் இன்னிசைத் தொகை என்று பெயர்பெறும்' என்று பொருள் கொள்க.

இது, முற்கூறிய பொருளில் அகநானூறு, புறநானூறு என்பவற்றைப் போன்றதாம் எனவும், பிற்கூறிய பொருளிற் குறுந்தொகை, நெடுந்தொகை என்பவற்றைப் போன்றதாம் எனவும் கொள்க.

உசு. விருத்த வகை

177. [1]பரிசிலே யானே வாள்குடை வேல்செங்
கோலோடு நாடூர் உறுப்பின் அகவல்
விருத்தம் பத்தென வேண்டினர் புலவர். (கூ0)

வச்சணந்திமாலைச் செய்யுளியலில், பாட்டுடைத் தலைவன் ஊரினைப்பற்றி நேரிசை வெண்பாத் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் வரப் பாடப்படுவது 'ஊர் நேரிசை வெண்பா' என்றும், அங்ஙனமே இன்னிசை வெண்பா வரப் பாடப்படுவது 'ஊர் இன்னிசை வெண்பா' என்றும் கூறப்பட்டன. இலக்கணவிளக்கப் பாட்டியலின்கண், ஊரையேனும் பெயரையேனும் பற்றி முற்கூறியபடி இன்னிசை வெண்பாவாற் பாடப்படுவன 'ஊர் இன்னிசை வெண்பா', 'பெயர் இன்னிசை வெண்பா' எனப் பெயர்பெறும் என்றும், அங்ஙனம் நேரிசை வெண்பாவாற் பாடப்படுவன 'ஊர் நேரிசை வெண்பா', பெயர் நேரிசை வெண்பா' எனப் பெயர்பெறும் என்றும் கூறப்பட்டன.

அவற்றை வச்சணந்திமாலைச் செய்யுளியலில் உள்ள,

"முதல்வனு ரின்பேரான் மொழிவன வெண்பா
அதனைத்தொண் ணூறெழுபா னைம்பான் - மதர்விழியாய்
இன்னிசை வெண்பாவிற்றும் ஒக்கும் இயற்பெயர்
அவற்றுக் கட்டுரைத்தார் ஆய்ந்து"

என்னும் 14-ஆம் செய்யுளானும், அதன் உரையானும், இலக்கண விளக்கப்பாட்டியலில் உள்ள,

"இறைவன் பெயநரினைஇன் னிசையான்
முறையிற் றெண்ணூ றெழுபான் ஐம்பான்
அறையின் அப்பெயர் ஆதும் என்ப"

"இன்னிசை போல இறைவன் பெயநர்
தன்னின் இயல்வது தானே ரிசையே"

என்னும் 65, 70-ஆம் சூத்திரங்களானும் அவற்றின் உரையானும் அறிந்துகொள்க.

(க) குதிரையும், (உ) வில்லும், (ங) யானையும், (ச) வாளும், (ரு) குடையும், (சு) வேலும், (எ) செங்கோலும்,

௨௫. ஐம்படை விருத்தம்

178. [1]சக்கரம் தனுவாள் சங்கோடு தண்டிவை
ஐம்படை அகவல் விருத்தம் ஆகும். (௬௪க)

(அ) நாடும், (௯) ஊரும் ஆகிய (அரசர்களுக்கு உரிய இவ்வொன்பது) உறுப்புக்களுள் ஒவ்வொன்றையும் பப்பத்து ஆசிரிய விருத்தங்களாற் பாடுதல் வேண்டும். அங்ஙனம் பாடுவன விருத்த விகற்பம் எனப்படும் என்றார்கள் புலவர்கள் என்பது.

அகவல் விருத்தம் - ஆசிரிய விருத்தம், 'பரி......ஊர் உறுப்பின் அகவல் விருத்தம்' என்றதனால் விருத்தவிகற்பம் என்பது பெறுதும்.

'அகவல் விருத்தம் பத்தாற்பாடுக' என்னாமல், 'அகவல், விருத்தம் பத்தென வேண்டினர் புலவர்' என்றது, அவை முறையே (க) பரி விருத்தம், (௨) வில் விருத்தம், (௩) யானை விருத்தம், (௪) வாள் விருத்தம், (௫) குடை விருத்தம், (௬) வேல் விருத்தம், (எ) செங்கோல் விருத்தம், (அ) நாட்டு விருத்தம், (௯) ஊர் விருத்தம் என்று கூறப்படும் என்பதனை அறிவித்தற்காம் என்க. வச்சணந்திமாலைச் செய்யுளியலில் உள்ள,

"நிலையார் குடைசெங்கோல் ஊர்நாடு நீள்வேல்
கொலையார் களிறு குதிரை - சிலைவாள்
இவற்றின்மேல் மன்விருத்தம் ஈரைந்தாய் வந்தால்
அவற்றின்பேர் நாட்டல் அறிவு"

என்னும் 21 ஆம் செய்யுளையும், இலக்கண விளக்கப்பாட்டியலில் உள்ள,

"வில்வாள் வேல்செங் கோல்மத மாபரி
நாடூர் கொடையை நயந்த பப்பத்து
விருத்தம் ஒன்பதும் விளங்கும்அப் பெயரான்"

என்னும் 93-ஆம் சூத்திரத்தையும் இவற்றின் உரைகளையும் ஈண்டு நோக்குக.

1. சக்கரமும், வில்லும், வாளும், சங்கும், தண்டும் ஆகிய இவை (இறைவனுடைய) ஐம்படைகளாம்; இவற்றை ஆசிரிய விருத்தத்தாற் பாடுவது ஐம்படை விருத்தம் என்னும் பெயரை உடையதாகும் என்பது.

உகூ. நாழிகைக் கவி

179. [1]ஈரிரண் டியாமத் தியன்ற நாழிகைச்
சீர்திகழ் வெண்பாப் பாடுநர் யாவரும்
இருநான் கேழேழ் இருநான் காமெனக்
கன்னல் முப்பதும் எண்ணினர் இனிதே. (கூஉ)

இச் சூத்திரத்தில் இத்துணைப் பாட்டாற் பாடுதல் வேண்டும் என வேறுகூறாமல், 'ஐம்படை அகவல் விருத்தம்' என்றதனால், ஒவ்வொரு படைக்கும் ஒவ்வொரு பாட்டாக ஐந்து பாட்டுக்கள் பாடுதல் வேண்டும் என்பது இதன் கருத்தாம் எனக் கொள்ளப் பட்டது. முன் சூத்திரத்திற் 'பத்து' என்றதனால் ஒவ்வொரு படையையும் பப்பத்து ஆசிரிய விருத்தங்களாற் பாடுதல் வேண்டும் என்பது இச் சூத்திரத்தின் கருத்தாகும் எனக் கொள்ளலா காதோ எனின், அங்ஙனம் கொள்ளின், இவையும் விருத்தவிகற் பத்தின் பாற்படுதலன்றி ஐம்படை விருத்தம் என்னும் பெயரைப் பெறுவாகலின், அங்ஙனம் கொள்ளலாகாது என்க.

ஆயின், ஐம்படைகளுள் ஒவ்வொன்றையும் பப்பத்துப் பாட்டுக்களாற் பாடுதலாகாதோ? எனின், அங்ஙனம் பாடுதலா காது என்பது அன்று; அங்ஙனம் பாடப்படுவன வேறு பெயர் பெறுதலன்றி, 'ஐம்படை விருத்தம்' என்னும் பெயரைப் பெறு' என்பதே இதன் கருத்தாம் என்றுணர்க.

இந்நூல் இதுகாறும் வெளிப்போந்துள்ள பாட்டியல் நூற் களிற் காணப்பட்டிலது.

1. நான்கு யாமத்தினுக்கும் பொருந்திய நாழிகைகளினது சிறப்பு விளங்குதற்குக் காரணமாகிய வெண்பாவைப் பாடுகின்ற வர்கள் எல்லாரும் ஒரு நாளுக்குரிய அறுபது நாழிகைகளுள், நாளின் இரவும், பகலும் ஆகிய இருபகுதிகளுக்குள் ஒரு பகுதிக் குரிய முப்பது நாழிகைகளை எட்டும், எழும், எழும் எட்டும் ஆகிய நான்கு பகுதிகளுக்கு உரியனவாகும் என்று இனிதாக எண்ணிப் பகுத்துக்கொண்டு பாடுதல் வேண்டும் என்பது.

நாழிகை, கன்னல், கடிகை என்பன ஒரு பொருட்சொற்கள்.

நாழிகைக்கவி பாடுதற்குரிய வெண்பா இன்னதாம் என்பது

180. [1]மன்னர் கடவுளர் முன்னிலை ஆக
அன்ன கடிகை என்னும் இயல்பிற்
றொகுநெறி அன்னவை நேரிசை வெண்பா. (கூரு)

உரை நடை

181. [2]முதல்யாமம் ஏழளவும் பாடி எட்டாவதில் யாமம்
ஒன்று என்றும், இரண்டாம்யாமம் ஆறளவும் பாடி
ஏழில் யாமம் இரண்டு என்றும், மூன்ரும் யாமம்

---

1. வேந்தர்களையும், கடவுளரையும் முன்னிலையாகக் கொண்டு, அங்ஙனம் நான்கு பகுதியை உடையவை என்னும் இயல்பினல் முப்பது நாழிகைகளையும் தொகுத்துப் பாடும் முறைமையினை உடைய அவ்வெண்பாக்கள் நேரிசை வெண்பாவாம் என்பது.

'அன்ன என்னும் இயல்பினுன் கடிகை தொகுநெறி அன்னவை' என இயைக்க. இதில் 'அன்ன' என்பது பலவின் படர்க்கைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

நேரிசை வெண்பாவான் நாழிகை வெண்பாப் பாடுதல் வேண்டும் என்பது இதன் கருத்தாகும்.

2. யாமங்கள் நான்கனுள், முதல் யாமமும் நான்காம் யாமமும் ஆகிய இரண்டு யாமங்களுள் ஒவ்வொன்றினுக்கும் நாழிகைகளை எழும் ஒன்றும் ஆகவும், இரண்டாம் யாமமும் மூன்ரும் யாமமும் ஆகிய இரண்டு யாமங்களுள் ஒவ்வொன்றினுக்கும் ஆறும் ஒன்றும் ஆகவும் கொண்டு, முதல் யாமத்தின் முதல் எழு நாழிகைக்கும் எழு வெண்பாக்களைப் பாடி எட்டாம் நாழிகையின் வெண்பாவில் யாமம் ஒன்று என்று பாடுதல்வேண்டும் என்பதும், நான்காம் யாமத்தின் முதல் எழு நாழிகைகளுக்கும் அவ்வாறே எழு வெண்பாக்களைப் பாடி எட்டாம் நாழிகையில் 'யாமம் நான்கு' என்று பாடுதல்வேண்டும் என்பதும், இரண்டாம் யாமத்தின் முதல் ஆறு நாழிகைகளுக்கும் ஆறு வெண்பாக்களைப் பாடி எழாவது யாமத்தில் யாமம் இரண்டு என்று பாடுதல் வேண்டும் என்பதும், மூன்ரும் யாமத்தின் முதல் ஆறு நாழிகை

ஆறளவும் பாடி ஏழில் யாமம் மூன்று என்றும், நான்காம் யாமம் ஏழளவும் பாடி எட்டில் யாமம் நான்கு என்றும் பாடின் முப்பது வெண்பாஆம். (கூச)

களுக்கும் அவ்வாறே ஆறு வெண்பாக்களைப் பாடி ஏழாம் யாமத்தில் யாமம் மூன்று என்று பாடுதல் வேண்டும் என்பதும் இவ்வுரை நடையின் கருத்தாகும்.

வச்சணந்திமாலையும், இலக்கண விளக்கப்பாட்டியலும் முப்பத்திரண்டு வெண்பாக்கள் பாடுதல் வேண்டும் எனக் கூறுகின்றன. அங்ஙனம் பாடுவோர் முப்பது நாழிகைகளை யாமம் ஒன்றுக்கு ஏழரை நாழிகையாகப் பகுத்துக்கொண்டு, ஒவ்வொரு யாமத்து முள்ள முதல் எவ்வேழு நாழிகைகளுக்கும் எவ்வேழு வெண்பாக்களைப்பாடி ஒவ்வோர் அரைநாழிகையினும், முறையே முதல் யாமம், இரண்டாம் யாமம், மூன்றும் யாமம், நான்காம் யாமம் என யாமத்தைக் குறிக்கும் வெண்பாக்களைப்பாடுவோர் போலும். அங்ஙனம் பாடின் நான்கு யாமத்திற்கும் நாலேழு இருபத்தெட்டு நாழிகை வெண்பாக்களும், நான்கு யாமத்தைக் குறிக்கும் நான்கு வெண்பாக்களும் ஆக முப்பத்திரண்டு வெண்பாக்களாம் என்றுணர்க. இதனால் யாமம் ஒன்றுக்கு எட்டாக நாலெட்டு முப்பத்திரண்டு வெண்பாக்களாதலறிக.

உரையிற் கோடலால், அரசரிடத்தும் தேவரிடத்தும் நிகழும் காரியம் நாழிகை அளவில் தோன்றி நடப்பதாகக் கூறுதல் வேண்டும் என்பது கொள்க.

வச்சணந்திமாலைச் செய்யுளியலில் உள்ள, 23-ஆம் வெண்பாவில்,

"..............................போங்கடிகை
தேவர்க்கும் காவலர்க்கும் தேர்ந்துரைக்க வெண்பாவை
மேவியநா லெட்டாக வேய்ந்து"

என்றதையும், அதன் உரையையும், இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"தேவர் அரசர் திறன்நே ரிசையான்
மேவும் கடிகையின் மேற்சென் றதனை
நாலெட் டுறச்சொலல் நாழிகை வெண்பா"

என்னும் 90-ஆம் சூத்திரத்தையும்,

உஎ. நவமணிமாலை

182. [1]பாவே இனமே என்றிவை இரண்டு
மேவிய வகையது நவமணி மாலை (சூ௫)

"தேவரிடத்தும், அரசரிடத்தும் நிகழும் கரியம், கடிகை அளவில் தோன்றி நடப்பதாக முப்பத்திரண்டு வெண்பாக் கூறல் நாழிகை வெண்பா'' என்னும் அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

1. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்குவகைப் பாக்களும்; தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவகை இனங்களும் கலந்து ஒன்பது பாட்டுகள் பொருந்திய வகையினை உடையது நவமணி மாலையாம் என்பது.

ஒன்பது பாட்டு என்பது சூத்திரத்தின்றே; அஃது எதனுற் பெறப்பட்டது எனின், நவமணி மாலை என்பதனுற் பெறப் பட்டது என்க.

இலக்கணவிளக்கப் பாட்டியலில் இஃது அந்தாதியாகப் பாடப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அதனை இலக்கண விளக்கப் பாட்டியலின்கண் உள்ள,

"வெண்பா முதலா வேறோர் ஒன்பது
நண்பாக் கூறல் நவமணி மாலை''

என்னும் 77-ஆம் சூத்திரத்தின் உரையில், "வெண்பா முதலாக வேறுபட்ட பாவும் பாவினமும் ஒன்பது உற அந்தாதியாகப் பாடுதல் நவமணி மாலையாம்'' என்று கூறியதனுல் அறிக.

வச்சணந்தி மாலைச் செய்யுளியலின் 24-ஆம் சூத்திரத்தில்,

"வேய்ந்த விருத்தங்கள் எட்டட்ட மங்கலமாம்
வாய்ந்தன ஒன்பான் மணிமாலை''

என்றதையும், அதன் உரையில், "ஆசிரிய விருத்தத்தாற் கவி தோறும் தேவர்கள் காக்க என எட்டுக்கவியாகப் பாடுவது அட்டமங்கலமாம்; மேற்கூறியவாறே ஒன்பது கவியாகப்பாடுவது நவமணி மாலையாம்'' என்றதையும் ஈண்டு நோக்குக.

உஅ. கைக்கிளைமாலை

183. [1]இரங்க வருவது மயங்கிய ஒருதலை
இயைந்த நெறியது கைக்கிளை மாலை (கூசா)

பருவரல் வளர்தற்குக் காரணமானவை

184. [2]தாயர் சேரியர் ஆயர் தீங்குழல்
தென்றல் சேமணி அன்றில் திங்கள்
வேலை வீணை மாலை கங்குல்
காமன் ஐங்கணை கண்வளர் கனவென

நவமணி மாலையை ஆசிரிய விருத்தத்தாற் பாடுதல்வேண்டும் என்பதும், கவிதோறும் பாட்டுடைத் தலைவனைத் தேவர்கள் காக்க, எனப் பாடுதல் வேண்டும் என்பதும் இதன் கருத்தாம் என்க.

நவமணி மாலைக்கு இந்நூலினும் இலக்கண விளக்கப்பாட்டியலினும் கூறிய இலக்கணத்திற்கும், வச்சணந்திமாலையிற் கூறிய இலக்கணத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை உய்த்துணர்க.

1. ஆடவரும், மகளிரும் வருந்தும்படி வருவதாகிய அறிவு மயங்குதற்குக் காரணமான ஒருதலைக்காமாகிய பொருள், தன்கண் அமைந்த முறையினை உடையது கைக்கிளைமாலை ஆகும் என்பது.

'இரங்கவருவதாகிய ஒருதலை' எனவும், 'மயங்கிய ஒருதலை' எனவும் இயைக்க. ஒருதலை என்றது ஒருதலைக் காமத்தை, ஒருதலைக் காமம், கைக்கிளை என்பன ஒரு பொருட் சொற்கள்.

2. நற்றாய் செவிலித்தாய் என்னுந் தாய்மார்களும், சேரியில் உள்ளாரும், ஆயர்களுடைய இன்னோசையினை விளக்கும் வேய்ங்குழலும், தென்றற் காற்றும், (மாலைப்போதின் மனைக்குத் திரும்பிவரும்) இடபத்தின் கழுத்தின்கண் உள்ள மணியும், அன்றிற் பறவையும், சந்திரனும், கடலும், வீணையும், மாலைப் போதும், இராப்போதும், மன்மதனுடைய ஐந்து கணைகளும், கண்வளர்கையில் உளவாகுமம் கனக்களும், குறைந்த நல்ல

எஞ்சிய நன்னிற வேனில் குயிலே
கோஞ்சிய கிள்ளை கோய்தளிர்ச் சேக்கை
பயில்தரு நன்னலம் பாங்கர் பாங்கியர்
இயன்ற பருவரல் என்மனுர் புலவர் (கூஎ)

நிறங்களை மரங்கள் முதலியவை பெறுதற்குக் காரணமாகிய வேனிற்காலமும், குயிலும், கொஞ்சுதலையுடைய கிளியும், கொய்யுந் தளிர்களாலாகிய படுக்கையும், பலகாலும் பழகும் மிக்க நன்மையினைச் செய்யும் இடம் சோலை பதுமை முதலியவைகளும், பார்ப்பனப் பாங்கன், வேளாண்பாங்கன் என்னும் இருவகைப் பாங்கரும், பாங்கியரும் ஒருதலைக் காமத்தால் பருவரல் வளர்தற்குக் காரணமாய் அமைந்த பொருள்களாம் என்று கூறுவார்கள் புலவர்கள் என்பது.

எனவும் எயும் எண்ணிடைச் சொற்கள். கொய்யப்படாத தளிர் இன்மையின், 'கொய்' என்பது தன்னேடியையின்மை நீக்கிய விசேடணமாம் என்க. இதனை இனமில்லாத அடை என்றும் கூறுப. இனமுள்ள அடை பிறிதினியையு நீக்கிய விசேடணம் எனப்படும்.

'பருவரல் இயன்ற' என இயைக்க. இயன்ற என்பது பலவின் படர்க்கைத் தெரிநிலைவினையாலணையும் பெயர்; இயன்ற பொருள்கள் என்பது அதன் பொருள்.

இச் சூத்திரத்தின்கண் உயர்திணையும் அஃறிணையும் விரவி 'இயன்ற' என்னும் அஃறிணை முடிபைப்பெற்றன; இது திணை வழுவமைதி. இதற்குத் தொல். சொல். கிளவியாக்கத்திலுள்ள,

"பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யுளுள்ளே"

என்னும் 51-ஆம் சூத்திரமும், நன். சொல். பொதுவியலிலுள்ள,

"திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே"

என்னும் 27-ஆம் சூத்திரமும் விதியாகும். நன்னூலின்படி இது மிகுதிபற்றி அஃறிணை முடிபேற்றது என்று கொள்ளுதல் வேண்டும்.

காமன் ஐங்கணை

185. [1]முல்லை அசோகு மாந்தளிர் தாமரை
அல்லி நீலம் ஐங்கணை ஆகும். (கூஅ)

கைக்கிளை ஆண்பாற் கைக்கிளை எனவும், பெண்பாற் கைக்கிளை எனவும் இருவகையாம். இச் சூத்திரத்திற் கூறப்பட்டவற்றுள், ஆண்பாற் கைக்கிளைக்கு உரியவை இவை; பெண்பாற் கைக்கிளைச்கு உரியவை இவை; இருபாற் கைக்கிளைக்கும் பொதுவானவை இவை என ஆய்ந்து பகுத்துக்கொள்ளுக. உதாரணம் பாங்கர் என்றது ஆண்பாற் கைக்கிளைக்கு உரியது எனவும், பாங்கியர் என்றது பெண்பாற் கைக்கிளைக்கு உரியது எனவும், திங்கள் என்பது இருபாற் கைக்கிளைக்கும் உரியது எனவும் கொள்ளுதலாம். இங்ஙனமே மற்றவற்றையும் பகுத்துக் கொள்க.

1. முல்லை மலரும், அசோகமலரும், மாந்தளிரும், தாமரை மலரும், அல்லிமலரும், நீலமலரும் மன்மதனுடைய ஐந்துகணைகளாம் என்பது.

மாந்தளிருக்குப் பதிலாக மாமலரைக் கூறுவாருமுளர்.

உரையிற் கோடலாக மன்மதன் ஐங்கணைகளை எய்யும் இடங்களையும், அக் கணைகளின் செயல்களையும் ஈண்டுக் கூறுதல் இயைபுடையதாகும்.

மன்மதன் ஐங்கணைகளை எய்யும் இடங்களை,

"நெஞ்சில் அரவிந்தம் நீள்சூதம் கொங்கையினில்
துஞ்சும் விழியில் அசோகமாம் - வஞ்சியர்தம்
சென்னியிலே முல்லைத் திகழ்நீலம் அல்குலிலே
அன்னவேள் எய்யுமியல் பாம்"

என்னும் செய்யுளானும், அக் கணைகள் செய்யும் செயல்களை,

"நினைக்கும் அரவிந்தம், நீள்பசலை மாம்பூ
அனைத்திடருண் டாக்கும் அசோக - வனத்திலுறும்
முல்லை கிடைகாட்டும் மாதே முழுநீலம்
கொல்லுமத னம்பின் குணம்"

என்னும் செய்யுளானும் அறிக.

உரை நடை

186. [1]'மயங்கிய' என்றதனால் ஓர் இனப்படுத்திப் பாடுவாரும் உளர்; பாடும்பொழுது மருட்பாவாற் பாடப்படும்; அல்லாதவழி ஆசிரியமும் வஞ்சியும் ஒழிய அல்லாத பாவானும் இனத்தானும் பாடப்படும். சிறுபான்மை ஆசிரியப் பாவானும் இனத்தானும் பாடப்படும் எனக்கோள்க.

---

1. 'இரங்கவருவது' என்னுஞ் சூத்திரத்தில், 'மயங்கிய' என்றதனால், ஓரினப் பாட்டின்கண் அமைத்துப் பாடுவாரும் உளர். அவ்வாறு பாடும்பொழுது மருட்பாவினாலே பாடப்படும். அங்ஙனம் அல்லாத இடத்து ஆசிரியப்பாவும், வஞ்சிப்பாவும் நீங்க அவை அல்லாத வெண்பாவினாலும், கலிப்பாவினாலும் அவைகளின் இனத்தினாலும் பாடப்படும். சிறுபான்மை ஆசிரியப்பாவினாலும், அதன் இனத்தினாலும் பாடப்படும் என்று கொள்க என்பது.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின் 15-ஆம் செய்யுளில்,

"......................................ஏய்ந்த
ஒருதலைக் காமம் உரைப்பவை ஐஐந்தாய்
வருவிருத்தங் கைக்கிளையா மன்"

என்றதையும், அதன் உரையையும், இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"ஒருதலைக் காமம் ஒரைந்து விருத்தம்
கருத உரைத்தல் கைக்கிளை ஆதும்",

என்னும் 67-ஆம் சூத்திரத்தையும் அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

கைக்கிளைமாலையை வச்சணந்திமாலை இருபத்தைந்து விருத்தத்தாற் பாடுதல் வேண்டும் எனவும், இலக்கணவிளக்கப் பாட்டியல் ஐந்து விருத்தத்தாற் பாடுதல் வேண்டும் எனவும் கூறியவற்றையும் ஈண்டு நோக்குக.

கைக்கிளைமாலைக்கு இந்நூலிற் கூறிய இலக்கணத்திற்கும், வச்சணந்திமாலை, இலக்கணவிளக்கப் பாட்டியல் என்னும் இரு

உகூ. அரிபிறப்பு

187. [1]சேலே ஆமை ஏனம் சிங்கம்
கோல வாமனன் மூவகை இராமர்
கரியவன் கற்கி எனவரு கடவுளர்
புரிதரு தோற்றம் தெரிதரப் பராஅய்ப்

நூற்களினுங் கூறிய இலக்கணத்திற்கும் உள்ள, மற்ற வேற்றுமைகளையும் ஆய்ந்துணர்க.

1. இறைவன், மீனும், ஆமையும், ஏனமும், நரசிங்கமும், அழகிய வாமனனும், பரசுராமர், சீராமர், பலராமர் என்னும் மூன்று இராமர்களும், கிருஷ்ணனும், கற்கியும் எனப் பூமியின் கண் வந்தருளிய தேவர்கள் விரும்பிய அவதாரங்களைப் பரவிப் பாட்டுடைத் தலைவனைக் காக்க என வேண்டுதல் செய்து, அந்த அந்த அவதாரங்களுக்கு இயைந்த மொழிகளை அமைத்து, ஆசிரிய விருத்தம் பத்தாற் பாடுதல் அரிபிறப்பு என்னும் நூலாகும் என்பது.

ஆழியோன் என்பதற்குத் திருப்பாற்கடலை இடமாக உடையவன் என்றேனும், ஆழிப்படையை உடையவன் என்றேனும் பொருள் கொள்க.

அன்றி எல்லா இடங்களினும் எல்லாப் பொருள்களினும் ஆழ்ந்து மறைந்துறைவன் என்றலுமாம்.

"பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்
பரந்தவண் டமிதென நிலவிசும் பொழிவறக்
கரந்தசில் இடந்தொறும் இடந்திகழ் பொருடோறும்
கரந்தெங்கும் பரந்துளன் இவைஉண்ட கரனே"
(திருவாய்மொழி, முதற்பத்து, முதற்றிருவாய் மொழி,
7-ஆம் பாசுரம்)

என்னும் ஆழ்வார் அருளிச் செயலை ஈண்டு நோக்குக.

'சேலே......கற்கி என வருதோற்றம்' எனவும்,

பாட்டுடைத் தலைவனைக் காக்க வேண்டி
இனமொழி நாட்டி அகவல் விருத்தம்
ஒருப தியற்றுதல் ஆழியோன் பிறப்பே. (க00)

'கடவுளர் புரிதரு தோற்றம்' எனவும் இயைக்க.

'சேலே.........கற்கி எனவரு தோற்றம்' என்றதே ஈண்டுக் கூறவேண்டியதாகவும், அதனோடமையாது, மிகையாகக் 'கடவுளர் புரிதருதோற்றம்' என்றது என்னெனின், 'வினையி னீங்கி விளங்கிய அறிவின், முனைவனாதலின், இவன் எய்திய இப் பிறப்புக்கள் வினையான் எய்தினவல்ல; தேவர்கள், அரக்கர்க ளால் தங்கட்கு உளவாகிய துன்பங்களைத் தீர்த்தருளும்படி வேண்டலின், அவன்தானே தன் விருப்பின்படி கொண்டவை என்பது அறிவித்தற்காம் என்றுணர்க.

புரி என்னும் பகுதியும், தா என்னும் துணைவினைவிகுதியும் கூடி ஆகிய புரிதா என்னும் பகுதி, தகரங்குறுகி, ருகரம் விரிந்து புரிதரு என நின்றதென்க.

கடவுளர் புரிதரு என்பது எழுவாய்த் தொடர்; புரிதரு தோற்றம் என்பது காரணப் பொருட்டாகிய வினைத்தொகை. காரணம் என்னெனின், கடவுளர் வேண்டுதல் காரணம் என்க.

'சேலே' என்பதில் உள்ள ஏகாரம் எண்ணிடைச் சொல். 'பிறப்பே' என்பதில் உள்ள ஏகாரம் ஈற்றசை.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின் 24-ஆம் செய்யுளில்,

"...ஆய்ந்தங்
கிசைத்திடுவர் மால்பிறப்பால் ஈரைந்து வாழ்த்துத்
தசப்பிரா துற்பவமாம் தந்து"

என்றதையும், அதன் உரையையும், இலக்கணவிளக்கப் பாட்டிய லில் உள்ள,

"அரிபிறப் பொருபதும் அகவல் விருத்தத்
துரியிற் புகறல் உற்பவ மாலை"

என்னும் 108-ஆம் சூத்திரத்தையும், அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

௩௦. அட்டமங்கலம்

188. [1]ஒருவனைக் காக்கஎன் றிறைவனை ஏத்திய
எண்வகை அகவல் விருத்தம் புணர்த்தல்
நண்ணிய அட்ட மங்கலம் என்ப. (க௦க)

ககசு. "இறைவனை ஏத்திய எண்வகை மங்கலம்
அறிதரும் பாலே அகவல் விருத்தம்"
—சேந்தம்பூதனார்.

---

1. அறிவு குணம் செயல்களிற் சிறந்தவனாகிய இவனைக் காக்கவேண்டும் என்று ஒவ்வொரு செய்யுள்தோறும் வேண்டிக் கடவுளைத் துதிக்கும் எண்வகையாகிய ஆசிரிய விருத்தங்களை அமைத்துப் பாடுதல்அமைந்த நூற்கள் அட்டமங்கலம் எனப் படும் என்பது.

'எத்திய எட்டாம் அகவல் விருத்தம்' என்னாது 'எத்திய எண்வகை அகவல் விருத்தம்' என்றது செய்யுள் எட்டாதலே யன்றியும் எத்தும் வகையும் எட்டாய் இருத்தல் வேண்டும் என் பதை உணர்த்தற்குப் போலும்.

'வெவ்வேறு வகையாகிய எட்டு ஆசிரிய விருத்தங்களாற் பாடுதல் வேண்டும் என்பதை உணர்த்தற்கு அங்ஙனம் கூறப் பட்டது எனக் கருத்துக்கொள்ளுதலாகாதோ,' எனின் வேறு நூற்களில் அங்ஙனம் கூறப்படாமையின் அக் கருத்து எற்புடைய தாகாது என்க.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின், 24-ஆம் செய்யுளில்,

"வேய்ந்த விருத்தங்கள் எட்டட்ட மங்சலமாம்"

என்றதையும், அதன் உரையில், 'ஆசிரிய விருத்தத்தாற் கவிதோ றும் தேவர்கள் காக்க என எட்டுக் கவியாகப்பாடுவது அட்ட மங்கலமாம்' என்று கூறியதையும், இலக்கணவிளக்கப் பாட்டிய லில் உள்ள,

"கடவுள் காக்க எனக்கவி இருநான்
கடைவுற அகவல் விருத்தம் அதனால்
வதப்பதட்ட மங்கல மாதும்"

என்னும் 83-ஆம் சூத்திரத்தையும், அதனுரையில் 'கடவுளைப் பாடி அக் கடவுள் காக்க எனக்கவி எட்டாற் பொருளுற அகவல்

௩க. இல்லற வெள்ளை

189. [1]கலைதரு வண்ணமும் வெள்ளையும் ஒன்பான்
நிலைபெறப் புணர்ப்பினஃ தில்லற வெள்ளை. ()

விருத்தம் அதனாற் பாடப்படுவது அட்டமங்கலமாம்' என்று கூறியதையும் ஈண்டு நோக்குக.

இதிற் 'பொருளூற' என்றது நன்கு நோக்கற்கு உரியதாகும்.

1. கலைகள் பொருந்தப்பெற்ற வண்ணமும், வெண்பாவும் ஒன்பது பாட்டுக்கள் அமையப்பாடினால், அஃது இல்லற வெள்ளையாம் என்பது.

இதில் இல்லறம் என்பது தலைவன் இல்லாளோடு (இருந்து) இயற்றும் அறம் என்றுதலின், மூன்றனுருபும் பயனும் உடன்தொக்க தொகை. இதில் இல் என்றது இல்லாளை. இல் என்பது இல்லாள் என்னும் பொருளதாதலை,

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை"

(குறள். இல்லறவியல், வாழ்க்கைத் துணை நலம், செ. 9) என்னுந் திருக்குறளான் அறிக.

மனைமாட்சி மாண்குணத்து மனைவியினால் உளதாவதாகலின், இல் என்பது இல்லாள் என்னும் பொருளைத் தருவதாயிற்று. 'மனைக்கு விளக்கம் மடவார்' (நான் மணிக்கடிகை, செ. 103) என்றதூஉம் காண்க. இஃது இடவாகு பெயர்.

இங்ஙனமாகிய இல்லறம் என்பது வெள்ளை என்பதனோடு கூடி, இல்லறத்தினது தூய்மையை உணர்த்துவது என்றுதலின், ஆறன்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைப் பெயராய் நூலுக்குக் காரணப்பெயராயிற்று என்க.

வெள்ளை என்பது தூய்மை என்னும் பொருளதாதலை,

"வெள்ளைக் கில்லைக் கள்ளச் சிந்தை"

என்றதனால் அறிக. இவற்றான், இல்லற வெள்ளை என்பது, தலைவன் இல்லாளோடிருந்து இயற்றும் அறத்தினது

உரை நடை

190. [1]இதனுள், 'கலைதரு வண்ணம்' என்றதனால் வெண்கலிப்பா ஒன்றானும் பாடுவோரும் உளர். 'நிலைபெற' என்றதனால், சந்தவகை ஒன்பதும், வெண்பா ஒன்பதுமாகப் பாடுவோரும் உளர்.

கூஉ. மங்கல வெள்ளை

191. [2]சந்தமும் வெள்ளையும் தருவன கற்புடை
மங்கல வெள்ளை வருவன ஒன்பான். (கoச)

சகஎ. "அதுவே,
வெண்கலி தானும் வருதற்கும் உரித்தே''
—மாபூதனார்.

சகஅ. "சந்தமும் வெள்ளையும் தனித்தனிப் புணர்த்தலும்
அந்தமில் புலவர் ஆம்என மொழிப''
—சீத்தலையார்.

தூய்மையைப் பொருளாக அமைத்துப்பாடும் நூலாம் என்பது விளங்குதல் அறிக.

இச் சூத்திரத்தின்படி அது வண்ணமும் வெண்பாவும் கலந்து வருவது எனத் தோன்றுகின்றது.

1. இல்லற வெள்ளையைப் பாடுங்கால் வண்ணமும் வெள்ளையுமாகிய இரண்டையும் கலந்து ஒன்பது பாட்டுக்களாற் பாடுதலே அன்றி, மேற்சூத்திரத்து, 'கலைதருவண்ணம்' என்றதனால், வெண்கலிப்பா ஒன்றானும் பாடுவோரும் உளர் என்பதும், 'நிலைபெற' என்றதனால், வகுப்பு ஒன்பதும், வெண்பா ஒன்பதும் ஆக அமைத்துப் பாடுவோரும் உளர் என்பதும் இவ்வுரை நடையின் கருத்தாகும்.

2. வகுப்பும் வெண்பாவும் அமைத்துப் பாடப்படுவன மகளிரின் கற்பைப் பொருளாகக் கொண்ட மங்கல வெள்ளையாம். அதில் வகுப்பு ஒன்பதும், வெண்பா ஒன்பதும் வருதற்குரியனவாம் என்பது.

௬௬. தாரகைமாலை

192. [1]இரண்டு பொருள்புணர் இருபத் தேழுவகைச்
சீரிய பாட்டே தாரகை மாலை. (௧௦௫)

மங்கல வெள்ளை என்பதற்கு (மகளிரது கற்பாகிய) நன்மையினது தூய்மையை உணர்த்துவது என்பது பொருளாகும். மங்கலம் என்பது நன்மை என்னும் பொருளதாதலை,

'மங்கல மென்ப மனைமாட்சி' (திருக்குறள், அ - பா, இ - இ, வாழ்க்கைத் துணைநலம், செ. 10) என்றதனால் அறிக.

வச்சணந்தி மாலையினும், இலக்கணவிளக்கப் பாட்டியலினும் இதற்கு மங்கல வள்ளை என்று பெயர் காணப்படுகின்றது.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின் 32-ஆம் செய்யுளில்,

"..................................நீதிசேர்
மங்கல வள்ளை வகுப்போடு வெண்பாவால்
இங்காம்ஒன் பான்என் றிசை"

என்றதையும், அதன் உரையில், "கற்புடை மகளிரைப் புகழ்ந்து ஒன்பது வகுப்பும், ஒன்பது வெண்பாவும் ஆகப் பாடுதல் மங்கல வள்ளையாம்" என்றதையும் ஈண்டு நோக்குக.

இலக்கணவிளக்கப் பாட்டியலில் உயர்குல மங்கையை ஒன்பது வெண்பாவாற் பாடுவது மங்கல வள்ளை என்று கூறப்பட்டது. அதனை, இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"ஒன்பது வெண்பா வகுப்பால் உயர்குல
மங்கையைப் பாடுதல் மங்கல வள்ளை"

என்னும் 68-ஆம் சூத்திரத்தானும் அதன் உரையானும் அறிக.

1. இரண்டு பொருள் அமைந்த சிறந்த இருபத்தெழு வகைப் பாட்டாற் பாடப்படுவது தாரகைமாலையாம் என்பது.

சீரிய 'இருபத்தெழுவகைப்பாட்டு' என இயைக்க. இருபத்தெழுவகைப்பாட்டு என்றது இருபத்தேழு பாட்டை என்று

௯௪. செந்தமிழ் மாலை

193. [1]எப்பொரு ளேனும் இருபத் தேழுவகை
செப்பிய நெறியது செந்தமிழ் மாலை. (௧0௬)

உரை நடை

194. [2]பாவானும் இனத்தானும் பாடுவோரும் உளர். நான்கு முதற்பாவானுதல், 'ஒருபாவின் இனத்தானுதல் பாடுக' என்பாரும் உளர். (௧0௭)

கொள்க. நூலுக்கு ஒவ்வொருபாட்டும் வகை ஆதலின், இருபத்தேழுவகை எனப்பட்டது எனக்கொள்க. இருபொருள் என்றது இருபொருட் சிலேடையைப்போலும்.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின் 32-ஆம் சூத்திரத்தின் உரையில் "தூசிப்படையைப் புகழ்ந்து வகுப்பால் ஒன்பது கவி பாடுவது தாரகைமாலை என்று கூறப்பட்டது.

இலக்கணவிளக்கப்பாட்டியலில் கற்புடைய மாதர்களின் இயல்புகளை வகுப்பாற் பாடுவது தாரகைமாலை என்று கூறப்பட்டுள்ளது. அதனை, இலக்கணவிளக்கப்பாட்டியலில் உள்ள,

"வகுப்பாற் கற்புடை மங்கையர்க் குள்ள
தகைத்திறம் கூறுதல் தாரகை மாலை"

என்னும் 107 - ஆம் சூத்திரத்தையும் அதன் உரையையும் நோக்கி உணர்க.

1. தன்கண் எப்பொருளேனும் அமைய இருபத்தெழுவகைப் பாட்டுக்களைக் கூறப்பெற்ற முறைமையை உடையது செந்தமிழ் மாலையாகும் என்பது.

ஈண்டு இருபத்தேழு என்றது இருபத்தேழு பாட்டுக்களை உணர்த்தி நின்றது. இஃது எண்ணலளவை ஆகுபெயர்.

2. செந்தமிழ்மாலையை வெண்பா முதலிய நான்குவகைப் பாவினும், தாழிசை முதலிய அவற்றின் இனத்தினும் பாடு

௯௫. தாண்டகம்

195. [1]மூவிரண் டேனும் இருநான் கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளர்ப் புகழ்வன தாண்டகம் அவற்றுள்
அறுசீர் குறியது நெடியதெண் சீராம். (உ0அ)

கககூ. "அறுசீர் எண்சீர் அடிநான் கொத்தங்
கிறுவது தாண்டகம் இருமூச் சீரடி
குறியது நெடிய திருநாற் சீரே"
—பல்காயனார்.

கஉ0. "மங்கல மரபின் மானிடர் கடவுளர்
தம்புகழ் உரைப்பது தாண்டக வகையே"

வாரும் உளர். அன்றி, நான்கு முதற்பாவினாலேனும், ஒரு பாவின் இனத்தினாலேனும் பாடுவாரும் உளர் என்பது இவ்வுரை நடையின் கருத்து.

1. ஒவ்வோரடியினும் அறுசீரேனும் எண்சீரேனும் வகையாக அமைத்து இயற்றிய நான்கடிச் செய்யுளான், ஆடவரையும், கடவுளரையும் புகழ்வனவாகிய அவ்விருதிறத்து நூற்களும் தாண்டகம் எனப்படும். அவற்றுள், அறுசீர்அடிப் பாக்களைப் பெற்றுவருவது, குறுந்தாண்டகம் என்றும், எண்சீரடிப் பாக்களைப் பெற்றுவருவது நெடுந்தாண்டகம் என்றும் கூறப்படும் என்பது.

'மூவிருசீரேனும் இருநான்கு சீரேனும் வகை நாட்டி' என்க. நாட்டி என்பதன் பின் 'இயற்றிய' என்னும் ஒருசொல் வருவித்துரைக்கப்பட்டது. இஃது இசை எச்சம். அவ்விருதிறத்து நூற்களாவன குறுந்தாண்டகம், நெடுந்தாண்டகம் என்பன.

'வகை' என்றதனால் நான்கடிச் செய்யுள் என்று கொள்க. யாப்பருங்கலவிருத்தி 2-ஆம் சூத்திரத்தின் விசேட உரையில் (பக்கம்-447) "இருபத்தேழெழுத்து முதலாக உயர்ந்த எழுத்தடியினவாய், எழுத்தும், குருலகுவும் ஒத்துவருவன அளவியல்

கஉக. "தாண்டகம் மானிடர் கடவுளர்க் குறித்தே"
—மாபூதனார்.

கஉஉ. "அடிவரை நான்கும் வரும்எழுத் தெண்ணி
நேரடி வருவது தாண்டகம் ஆகும்"
—சீத்தலையரர்.

தாண்டகம். எழுத்தொவ்வாதும், எழுத்தலகு ஒவ்வாதும் வருவன அளவழித்தாண்டகம் என்னை?

"..................................சீரொத்த
மூவொன்ப தாதியா முற்றின தாண்டகமென்
றேதினர் தொல்லோர் எடுத்து"

"சந்தமும் தாண்டகமும் தம்முளள வொத்தலது
வந்த முறைமை வழுவாவேல்—முந்தை
அளவியலாம் என்றுரைப்பர் அவ்வாறன் றகில்
அளவழியாம் என்பர் அவர்"

என்றதை ஈண்டு நோக்குக.

தாண்டகம் என்பது தமிழ் இலக்கணம்பற்றி வந்த செய்யுள் அன்று; வடமொழி இலக்கணம் பற்றிவந்த செய்யுளாகும். வட மொழிச் செய்யுள் தமிழ் யாப்பிற் கூறப்படும் அசைக்குப் பதிலாக எழுத்தலகு கொண்டு வருவனவாம். அவ்வெழுத்தலகு, லகு,குரு என இரண்டு வகைப்படும். அவற்றுள் லகுவாவது உயிர், உயிர்மெய் என்பவற்றுள் குற்றெழுத்து ஒன்று வருவது. (உ-ம்) அ, க. எனக்காண்க. குருவாவது ஒரு குறில் ஒற்றடுத்து வருவதும், ஒரு நெடில் தனியாக வருவதும், ஒரு நெடில் ஒற் றடுத்து வருவதும் ஆம். (உ-ம்) அல் - கல், ஆ - கா, ஆல் - கால். எனக் காண்க. இவை, தாண்டகச் செய்யுட்களின் இலக் கணத்தை அறிதற்கு வேண்டுவன ஆதலின், ஈண்டுக் கூறப் பட்டன.

திருமங்கை ஆழ்வார் அருளிய திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டகம் என்பவற்றையும், தேவாரத்தில் உள்ள தாண்டகங்களையும் நோக்குக.

௯௬. பதிகம்

196. [1] ஆசிரி யத்துறை அதனது விருத்தம்
கலியின் விருத்தம் அவற்றின் நான்கடி
எட்டின் காறும் உயர்ந்த வெண்பா
மிசைவைத் தீரைந்து நாலைந் தென்னப்
பாட்டுவரத் தொடுப்பது பதிகம் ஆகும். (கூ0௬)

௯௭. சீர்மெய்க்கீர்த்தி

197. [2] சீர்நான் காதி இரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அந்தத் தவன்வர லாறு சொல்லியும்

---

1. ஆசிரியத்துறையும், ஆசிரிய விருத்தமும், கலிவிருத்தமும் ஆகிய அவற்றின்மிசை நான்கடி முதல் எட்டடிகாறும் உயர்ந்த வெண்பாவை வைத்துப் பத்தினால் ஆனது, இருபதினால் ஆனது என்று சொல்லும்படி பாட்டுக்கள் அமையப் பாடப்படுவது பதிகம் ஆகும் என்பது.

'அவற்றின்மிசை நான்கடி, எட்டின்காறும் உயர்ந்த வெண்பா வைத்து' என இயைக்க. 'எட்டின்காறும்' என்றதனால், 'நான்கடி' என்றதனோடு முதல் என்பது சேர்க்கப்பட்டது எனவும், 'நான்கடி' என்றதனால் எட்டு என்றது எட்டடி என்று கொள்ளப்பட்டது எனவும் உணர்க.

இந்நூல் இதுகாறும் வெளிப்போந்துள்ள மற்றைப்பாட்டியல்களிற் காணப்பட்டிலது. ஆதலின், சூத்திரத்தின் தொடர்களின் இயல்புநோக்கி ஈண்டுப் பொருள் கூறப்பட்டது. இதற்கு வேறு பொருள் கொள்ளக்கூடுமெனிற் கொள்க.

2. நான்கு முதலிய சீர்களை உடைய இரண்டடி ஒரு தொடையாய் அமைந்த பாட்டில் மன்னனுடைய உண்மையாகிய புகழ்கள் எல்லாவற்றையும் சொல்லியும், முடிவின்கண்

அவளுடன் வாழ்கெனச் சொல்லியுஞ் மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட உரைப்பது சீர்மெய்க் கீர்த்தி. (௧௧௦)

௧௨௬. "நிலைபெறு சீர்மெய்க் கீர்த்தியின் அந்தம்"
உரையாய் முடியும் எனஉரைத் தனரே.
—கோவூர்கிழார்.

அவனுடைய வரலாறுகளைச் சொல்லியும், நின் பெருந்தேவியாகிய அவளோடு நீ (இன்புற) வாழ்க என்று சொல்லியும், மற்றவன் இயற்பெயர்க்குப் பின்னர் (உங்கள் ஆயுள்) யாண்டுகள் மேன் மேலும் வளர்வனவாக என பலவகையிற் பொருந்தும்படி பாடப் படுவது சீர் மெய்க்கீர்த்தியாம் என்பது.

'நான்காதிசீர்' என இயைக்க. ஈண்டு 'மெய்ப்புகழ்' என்றது மெய்ப்புகழ்க்குக் காரணமாகிய குணம் செய்கைகளை; இது காரியவாகு பெயர்.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின் 34-ஆம் செய்யுளில்,

"தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீர் அடியால்
எழிலரசர் செய்தி இசைப்பர்"

என்றதையும், அதன் உரையில் "ஆசிரியம் விரவிய சொற்சீரடிகளால் மன்னரது உண்மைக் கீர்த்தியைத் தொடுத்துப் பாடுவது மெய்க்கீர்த்தியாம்" என்றதையும், இலக்கணவிளக்கப்பாட்டியலில் உள்ள,

"சொற்சீ ரடியால் தொழிற்படு கீர்த்தியைப்
போற்புற மொழிதல்மெய்க் கீர்த்தி மாலை"

என்னும் 105-ஆம் சூத்திரத்தையும், அதனுரையில் "சொற்சீரடி என்னும் கட்டுரைச் செய்யுளாற் குலமுறையிற் செய்த கீர்த்தியை அழகுற மொழிதல் மெய்க்கீர்த்திமாலையாம்." என்றதையும் ஈண்டு நோக்குக.

கூஅ. [1]செருக்களவழி

198. [2]தலைவன் செய்த நிலைபெறு புகழ்புனை
நேரிசை வெண்பா இன்னிசை வெண்பாப்
பஃறொடை வெண்பா மறக்கள வழியே. (கககக)

---

1. களம் ஏர்க்களம், எனவும் போர்க்களம் எனவும் இரண்டு வகையினதாகும். அவற்றுள் ஏர்க்களமாவது வேளாண் மாந்தர் ஏரானுழுது பயிரிடும் இடம். போர்க்களமாவது வீரர் கள் படைகொண்டு போர்புரிதற்குரிய இடம். இங்ஙனமாகிய இவ் விருவகைக் களங்களுள், ஏர்க்களத்தை நீக்கிப் போர்க்களத்தைக் காட்டுதற்கு ஈண்டு 'செருக்களவழி' எனப்பட்டது. இது செரு விற்கு உரிய களம் என்றுதலின், நான்கன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை. இவ்விரு சொல்லும் ஈண்டு ஒருசொல் லாய் நின்று, வழி என்பதனோடு கூடிப் போர்க்களமாகிய வழி என்னும் பொருளதாய் நின்றது. வழி என்பதும் இடம் என்னும் பொருளதாய் நிற்றலின், இத்தொடர் இருபெயரொட்டாம் என்க. இங்ஙனமாகிய இத்தொடரில் வழி என்பது இடவாகு பெயராய் அவ்விடத்து நிகழும் செய்தியை உணர்த்தியது; அது காரிய ஆகுபெயராய் அச் செய்தியைப் பற்றிக்கூறும் நூலை உணர்த்திற்று என்றறிக. இதற்கு, விதி தொல். பொருள். புறத்திணை இயலில் "கூதிர்வேனில் என்றிருபாசறை" என்று தொடங்கும் இருபத்தோராஞ் சூத்திரத்தில்,

"ஏரோர் களவழி யன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியும்"

என்பதாகும். இதற்கு உரையாசிரியர் இளம்பூரணர், "ஏரோர் களவழி கூறுதலன்றிப் போரோர் களவழி தேரோர் தோற்று வித்த வென்றியும்" என்று பொருள் கூறி, விசேட உரையில், "அது, களம்பாடுதலும், களவேள்வி பாடுதலுமாம்"; என் றுரைத்து, "இருப்புமுகஞ் செறித்த", (புறநானூறு செ. 369) என்று தொடங்கும் புறப்பாட்டைக் காட்டி, "இஃது ஏரோர் களவழி"; என்றும், "ஒஒ உவமை", (களவழி, செ. 36) என்று தொடங்கும் களவழிப் பாட்டைக் காட்டி, இது, "போரோர் களவழி", என்றும், "நளிகடல் இருங்குட்டத்து", (புறம், செ. 26) என்று தொடங்கும் புறப்பாட்டைக் காட்டி, "இது,

கஉச. "நேரிசை இன்னிசை பஃறொடை வெண்பா
போரினக் களவழி புகலப் படுமே"

கூக. மறக்களவஞ்சி

199. [1]குறள்சிந் தளவடி அகவ லடிவிராஅய்
வஞ்சிச் செய்யுளின் மன்னர் மறக்களம்
எஞ்சா துரைப்பது மறக்கள வஞ்சி. (கசஉ)

களவேள்வி" என்றும் கூறியவற்றை ஈண்டு நோக்குக. இதற்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையும் ஈண்டு நோக்கற்கு உரியதாகும்.

2. அரசன் செய்த நிலைபெறும் புகழ்க்குக் காரணமாகிய வீரச்செயலை அழகுபடுத்திக் கூறும் மறக்களவழியை நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்னும் இவற்றாற் பாடுக என்பது.

'தலைவன் செய்த நிலைபெறு புகழ் புனை, மறக்களவழி, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா' என இயைக்க.

'பாடுக' என்னும் வினைமுற்றைக் கொடாமல்விட்டது, புறப்பொருள் இலக்கணத்தினின்று வழுவாமற் பாடுதல்வேண்டும் என்பதனை உணர்த்தற்காம் என்றுணர்க. ஈண்டுப் புகழ் என்பது காரியவாகு பெயராய்ப் புகழ்க்குக் காரணமாகிய வீரச் செயலை உணர்த்தியது. 'செருக்களவழி', 'மறக்களவழி' என்பன ஒரு பொருளனவாகும். மறம் - வீரம், அஃது, ஈண்டு வீரச்செயலாகிய போரை உணர்த்தி நின்றது ; ஆதலின் மறக்களம் என்பது செருக்களம் என்னும் பொருளதாய் நிற்றலை அறிக. அடுத்து வரும் 'மறக்களவஞ்சி' என்னும் நூலின் பெயரையும் நோக்குக.

1. இடையிடையே குறளடியும், சிந்தடியும் அளவடியுமாகிய அகவலடி விரவிவரும் வஞ்சிப்பாவினால் வேந்தர்களின் போர்க்களச் செய்தியைப் புறப்பொருள் இலக்கணத்திற் றிராமல், பாடப்படுவது மறக்களவஞ்சியாம் என்பது.

கஉகு. "இயங்குபடை மன்னர் இகற்களம் புகழ்ந்த
மயங்கியல் வஞ்சி மறக்கள வஞ்சி"

௪௦. செருக்களவஞ்சி

200. [1]விருத்தவகை பத்தான் விளம்பு மதனைச்
செருக்களம் எனவே செப்பினர் புலவர். (ககரு)

அடி என்றதனைக் குறள், சிந்து என்பவற்றேடுங் கூட்டுக. 'விராஅய்' என்பதனேடு வரும் என்னும் சொல் பெய்து பொருளுரைக்கப்பட்டது. இஃது இசை எச்சமாகும். நேரொன்றுசிரியத்தளையும், நிரையொன்றுசிரியத்தளையும் அமைந்த குறளடியும், சிந்தடியும், அகவலடியும் ஆகிய அகவலடி மயங்கிவரும் வஞ்சிப்பா என்க. இஃது அடிமயக்கம். அடி மயக்கம் இன்னது என்பது முன்னே கூறப்பட்டது. 'மறக்களம்' என்பதன் பொருள் முன் சூத்திரவுரையிற் கூறப்பட்டது. ஈண்டு மறக்களம் என்பது இடவாகு பெயராய் மறக்களத்தின்கண் நிகழும் செய்தியை உணர்த்தி நின்றது.

இந்நூலின் பொருளாகிய மறக்களச்செய்தி வஞ்சிப்பாவாற் பாடப்படுதலின் இதற்கு மறக்களவஞ்சி என்பது பெயராயிற்று என்றறிக.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின், 37-ஆஞ் செய்யுளில்,

"மொய்யின் றிறம்வஞ்சிப் பாவின் முடித்துரைத்தல்
செய்யிற் செருக்கள வஞ்சியாம் - தையால்
வழியுரைத்தல் வஞ்சி வரலாறு"

என்றதையும், அதன் உரையில், "செருக்களச் செய்திகளை வஞ்சிப்பாவாற் பாடின், செருக்கள வஞ்சியாம்; ஒரு பொருளின் வரலாற்றை வஞ்சிப்பாவாற் பாடின், வரலாற்று வஞ்சியாம்" என்று கூறியதையும் ஈண்டு நோக்குக.

1. மாற்றார் நாட்டின் மேற்படை எடுத்துச் செல்லுதலைப் பத்து விருத்தங்களாற் பாடப்படுவதனைச் செருக்களவஞ்சி என்று புலவர்கள் கூறினர்கள் என்பது.

ஈண்டுச் 'செருக்கள வஞ்சி என' என்னுமல், 'செருக்களம் எனவே' என்றது, இது, முற்சூத்திரத்திற் கூறியபடி பாட்டைப் பற்றி வந்த பெயரன்று; பகைமேற் செல்லுதலாகிய வஞ்சித்திணை யின் பொருள்பற்றி வந்த பெயராகும் என்பதறிவித்தற்காம் என்க.

'செருக்களம் எனவே' என்பதற்குச் செருக்களத்தைப் பற்றியதென்றே என்று பொருள் கொள்க. இதில் ஏகாரம் பிரிநிலைப் பொருளது. எதினின்று பிரிக்கப்பட்டது? எனின், வஞ்சிப்பாவினின்று பிரிக்கப்பட்டது என்க.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின், 31-ஆம் செய்யுளில்,

"..............................வஞ்சி
எடுத்துமேற் சேறல் இயம்பின்"

என்றதையும், அதன் உரையில், "படைமே லெடுத்துச் சேறலைப் பாடின் வஞ்சி மாலையாம்" என்றதையும் ஈண்டு நோக்குக.

வச்சணந்தி மாலையில் இந்நூலை ஆசிரியப்பாவாற் பாடுதல் வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும் அதில் இந்நூலுக்குச் செருக்களவஞ்சி என்று பெயர் கூறுமல் 'வஞ்சி மாலை' என்று கூறப்பட்டிருத்தலையும் நோக்குக. இதனுல், இந் நூலுக்கு 'வஞ்சிமாலை' என்பதும் பெயராம் என்பது பெறப் படுதல் காண்க.

முற்சூத்திரத்திற் கூறிய நூலுக்கும், இந்நூலுக்கும் இலக் கணவிளக்கப் பாட்டியலிற் கூறப்பட்ட இலக்கணம் வேருயிருக் கின்றன. அவற்றை அந்நூலின், 109-ஆம் சூத்திரத்தில்,

"ஆசற உணர்ந்த அரசர் பாவால்
....
........................வரலாற்று வஞ்சி
ஞாலமேல் தானை நடப்பது சொல்லின்,
செருக்களங் கூறின் செருக்கள வஞ்சி"

என்றதனுலும், அதன் உரையில், "அகவலோசையிற் பிறழாது உயர்ந்த அரசர்க்குரிய ஆசிரியப்பாவினுல், போர்க்களத்திற் செல்லும் படை எழுச்சியைக் கூறின், வரலாற்று வஞ்சியாம்; செருக்களத்தினைக் கூறின், செருக்களவஞ்சி என்னும் பெயர் பெறும்" என்றதனுலும் அறிக.

சக. ஆற்றுப்படை

201. [1]புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயில்தெறும் இருங்கா னத்திடை
வறுமை யுடன்வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவலன் நாரேர் பெயர்கொடை பராஅய்
ஆங்குநீ செல்கென் விடுப்பதாற் றுப்படை. (கசச)

வச்சணந்தி மாலையில், வஞ்சிமாலைக்குக் கூறப்பட்ட இலக்கணமானது இலக்கணவிளக்கப்பாட்டியலில் வரலாற்று வஞ்சிக்குக் கூறப்பட்டிருத்தலையும், வரலாற்று வஞ்சிக்கு வச்சணந்தி மாலையில் (செய்யுளியல், 37-ல்) வேறு இலக்கணம் கூறப்பட்டிருத்தலையும் கண்டுணர்க.

அன்றியும் இலக்கணவிளக்கப் பாட்டியலில் அவற்றை ஆசிரியப்பாவினுற் பாடுதல் வேண்டும் என்றலின், அவ்விரு நூலின் பெயரினும் வரும் 'வஞ்சி' என்பதற்கு அந்நூலின்கண் திணைப்பொருளே கொள்ளப்பட்டது என்பது பெறுதலும் காண்க.

1. வேந்தனது பரிசிலைப் பெற்றுக்கொண்டு திரும்பி வாராநிற்கும் ஓர் இரவலன் வெயில் மிகவும் வருத்தும் பெருங் காட்டின் நடுவில் வறுமையுடன் வாராநிற்கும் புலவரும், பாணரும், பொருநரும், விறலியரும், கூத்தருமாகிய இவர்களுள் ஒருவரைக்கண்டு, தனக்குப் பரிசில் அளித்த வேந்தனுடைய நாடும், ஊரும், பெயரும், ஈகையுமாகிய இவற்றைப் புகழ்ந்து அங்கு நீ செல்க; (சென்றால் என்னைப்போல நீயும் பரிசில் பெற்று மீளுவாய்) என்று கூறி அவ்வேந்தன்பால் தான் கண்ட அவ்விரவலனைச் செல்லச் செய்வது ஆற்றுப்படையாம் என்பது.

ஆற்று - வழியில், படை - படுத்தல் (செலுத்துதல்), இரவலன் - வேண்டிப்பரிசில் பெறுவோன்.

ஆற்றுப்படையாவது, புலவர், பாணர், பொருநர், கூத்தர், விறலியர் என்பவர்களுள், ஓர் இரவலன் வண்மையின் நீங்காதுகிய ஒரு வேந்தன்பாற்சென்று, பெரும்பொருளைப் பரிசிலாகப்

பெற்றுக்கொண்டு, மீண்டு ஒரு காட்டின் இடையில் வருகையில் தன்னைப்போன்ற மற்றோர் இரவலனைக் கண்டு, "ஐய நான், இன்ன வேந்தன்பாற்சென்று இப்பெரும்பொருளைப் பரிசிலாகப் பெற்று வருகின்றேன்; நீயும் அவ்விறைவன்பாற் செல்லின், என்னைப்போலப் பரிசிலைப் பெற்று வருவாய்'' என்று கூறி, அவ்வரசனுடைய நாடு முதலியவற்றை அவ்விரவலனுக்கு உரைத்து அவனை அம் மன்னனிடம் அனுப்புதலாம் என்க.

அவருள் புலவராவார் நல்லிசைப்புலமை சான்றோர். கூத்தராவார் 'எண்வகைச் சுவையும், மனத்தின்கட்பட்ட குறிப்புக்களும், புறத்துப் போந்து புலப்பட' ஆடுதலில் வல்லவர். பாணராவார் இசைபாடுதலினும் யாழ்வாசித்தலினும் வல்ல ஒருவகை வகுப்பினர். இவர்களுள் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் எனப் பல பிரிவினர் உண்டு. பொருநர் என்பாரும் ஒருவகை வகுப்பினரே. இவர்களுள்ளும் ஏர்க்களம் பாடுவாரும், போர்க்களம் பாடுவாரும், பரணி பாடுவாரும் எனப் பல பிரிவினர் உண்டு.

விறலியராவார் முற்கூறியபடி ஆடுதலில்வல்ல மகளிர். விறல் - வன்மை, விறலி என்பதற்கு ஆடுதலில் வன்மையுடையாள் என்பது பொருள். இவ்வைவரால் ஆற்றுப்படையானது புலவராற்றுப்படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை, விறலி ஆற்றுப்படை என ஐந்து வகைப் படும் என்றறிக.

அவற்றுள், புலவராற்றுப்படை நீங்கிய மற்றை நான்கினையும், தொல். பொருள். புறத்திணை இயலின், 36-ஆம் சூத்திரத்தில்,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்''

என்றதனும், அதற்கு உரையாசிரியர் இளம்பூரணர், அதன் உரையில், "கூத்தராயினும், பாணராயினும், பொருநராயினும், விறலியாயினும் நெறியிடைக் காட்சிக்கண்ணே எதிர்ந்தோர் உறழ்ச்சியால் தாம் பெற்ற பெருவளன் நுமக்குப் பெறலாகும்

ஆற்றுப்படைப் பாடுதற்கு உரிய பா

202. [2]ஓங்கிய அதுதான் அகவலின் வருமே. (ககரு)

புலவராற்றுப்படைக்குச் சிறப்புவிதி

203. [3]புலவராற் றுப்படை புத்தேட்கு முரித்தே. (ககசு)

என்று சொன்ன பக்கமும்'என்று பொருள் கூறி, அதன் விசேட உரையில், "சொன்ன பக்கம்' என்றதினன், ஆற்றினது அருமையும், அவன் ஊரது பண்பும் கூறப்படும்" என்றதையும் ஈண்டு நோக்குக.

புறப்பொருள் வெண்பா மாலை, பாடாண் படலத்தில்,

"சேணோங்கிய வரையதரிற்
பாணனை ஆற்றுப் படுத்தன்று" (கொளு. 28)

எனவும்,

"ஏத்திச் சென்ற இரவலன்
கூத்தரை ஆற்றுப்படுத்தன்று" (கொளு. 29)

எனவும்,

"பெருநல்லான் உழையீ ராகெனப்
பொருநனை ஆற்றுப்படுத்தன்று" (கொளு. 30)

எனவும்,

"திறல்வேந்தன் புகழ்பாடும்
விறலியை ஆற்றுப்படுத்தன்று" (கொளு. 31)

எனவும் வரும் கொளுஉக்களையும் ஈண்டு நோக்குக.

2. (பொருளாற்) சிறந்ததாகிய அவ்வாற்றுப் படையானது, ஆசிரியப்பாவினுல் அமைக்கப்படும் என்பது.

3. புலவராற்றுப்படையானது, மக்கட்கு உரியதாவதே யன்றித் தேவர்கட்கும் உரியதாகும் என்பது.

புத்தேட்கும் என்பதன் உம்மை எச்சப்பொருளது, மக்கட்கு உரியதாவதேயன்றி என்னும் பொருளைத் தருதலின். மக்களைப் பற்றிய புலவராற்றுப்படைக்குப் புறநானூற்றில் உள்ள 48, 49, 141-ஆம் செய்யுட்களும், தேவரைப்பற்றிய புலவராற்றுப்படைக்குத் திருமுருகாற்றுப்படையும் உதாரணமாகும்.

தொல். பொருள். புறத்திணை இயல், 33-ஆம் சூத்திரத்தில் ‘கந்தழி’ என்றதற்கு நச்சினார்க்கினியர், “ஒரு பற்றுக்கோடும் இன்றி, அருவாகித் தானே நிற்கும் தத்துவங்கடந்த பொருள்” என்று பொருள் கூறித் திருமுருகாற்றுப்படையைக் ‘கந்தழி ஆற்றுப்படை’ என்றனர்.

உரையாசிரியர், இளம்பூரணர் ‘கந்தழி’ என்பதற்குக் கண்ணன் ‘சோ’ என்னும் மதிலை அழித்ததைப் பொருளாகக் கொண்டார். அவர் அங்ஙனம் பொருள் கொண்டார் என்பதனைக் கந்தழிக்கு அவர் காட்டிய,

“அன்றெறிந் தானும் இவனால் அரண்வலித்
தின்றிவன் மாறாய் எதிர்வார்யார் - கன்றும்
அடையார் மணிப்பூண் அடையாதார் மார்பிற்
சுடராழி நின்றெரியச் சோ”

(புற-வெண்-உழிஞை-செ. 7.)

என்னும் உதாரணச் செய்யுளான் அறிக.

இனிப் புறப்பொருள் வெண்பாமாலை நூலாசிரியரும், அதன் உரையாசிரியரும் அப்பொருளே கொண்டார்கள். அவர்கள் அங்ஙனம் பொருள் கொண்டமையைப் புறப்பொருள் வெண்பாமாலையின் உழிஞைப்படலத்தில் உள்ள,

“மாவுடைத்தார் மணிவண்ணன்
சோவுடைத்த மறம்நுவலின்று”

என்னும் 7-ஆம் கொளுவினாலும், பாடாண் படலத்தில் உள்ள,

“சூழநேமியான் சோஎறிந்த
வீழாச்சீர் விறல்மிகுத்தன்று”

என்னும் 40-ஆம் கொளுவினாலும், அவற்றின் உரையினாலும் அவற்றிற்குக் காட்டப்பட்ட உதாரணங்களானும் அறிக.

இலக்கண விளக்கப்பாட்டியல் நூலாசிரியரும் அவ்வாறே கொண்டனர். அதனை, இலக்கணவிளக்கம், புறத்திணை இயல், 19-ஆம் சூத்திரத்தில்,

“சோவினை எறிந்த துளவணி மாயோன்
மேவரு விறலினை வியந்த கந்தழியும்”

என்றதனானும், அதற்கவர் காட்டிய உதாரணத்தானும் அறிக.

இனி வீரசோழிய உரையாசிரியர், வீரசோழியம், பொருட் படலம், 21-ஆம், சூத்திரத்தின் உரையில், 'கந்தழி' என்பதற்குச் 'செருவில் தெட்பம் உடைமை' என்று பொருள் கூறினர். இதுவும் உரையாசிரியர் முதலியோர் கூறிய பொருளை உட் கொண்டிருத்தல் காண்க.

இங்ஙனம் 'கந்தழி' என்பதற்கு உரையாசிரியரும், வெண்பாப் பாட்டியல் நூலாசிரியரும், அதன் உரையாசிரியரும், இலக்கண விளக்க ஆசிரியரும் கண்ணன் 'சோ' என்னும் அரணை அழித்ததையே பொருளாகக் கூறுதலானும், புலவராற்றுப்படையன்றிக் கந்தழி ஆற்றுப்படை என்பது எந்நூலினுங் கூறப்படாமையானும் நச்சினார்க்கினியர் 'கந்தழி ஆற்றுப்படை' என்றது ஏற்புடையது அன்றாம் என்க.

அவர் 'கொடிநிலை,' 'வள்ளி' என்பவற்றிற்குக்கூறிய பொருளும் மற்றவர்கள் கூறிய பொருளின் வேறாகவே இருக்கின்றன. அவை ஈண்டுக் கூறவேண்டுவனவல்ல; ஆகலின், அவை ஈண்டுக் கூறாமல் விடப்பட்டன. அவற்றை ஆய்ந்துகொள்க.

புறப்பொருள் வெண்பாமாலை நூலாசிரியரும், அதன் உரையாசிரியரும், இலக்கணவிளக்க ஆசிரியரும் புலவராற்றுப்படை தேவர்களுக்கு உரியதெனக் கூறினார்கள். அவர்கள் அங்ஙனங் கூறினமையைப் புற - வெண் - பாடாண் படலத்திலுள்ள,

"இருங்கண்வானத் திமையோருழைப்
பெரும்புலவனை ஆற்றுப்படுத்தன்று"

என்னும் 42-ஆம் கொளுவினாலும், அதன் உரையினாலும், அதற்குக் காட்டப்பட்ட உதாரணச் செய்யுளானும், இலக்கண விளக்கம், பொருள். புறத்திணையியலின் 19-ஆம் சூத்திரத்தில்,

"விரும்பிய தநூஉம் விண்ணவர் தம்முழை
அரும்பெறற் புலவரை ஆற்றுப் படுத்தலும்"

என்றதனாலும், அதன் உரையினாலும் அறிக.

புறநானூற்றின்கண் மக்களைப்பற்றிய புலவராற்றுப்படை இருப்பவும், அவர்கள் அங்ஙனம் கூறியது தேவரைப்பற்றிய புலவராற்றுப்படையின் சிறப்பு நோக்கி என்க.

இந்நூலின்கண் தேவரைப்பற்றிய புலவராற்றுப் படையை விதந்து கூறி, மக்களைப்பற்றிய புலவராற்றுப் படையை உம்மையாற்றழுவிக்கொண்டதும் அக்கருத்துப்பற்றியேயாம் என்றறிக.

சஉ. கண்படை நிலை

204. [1]காலைபகல் மாலை யாழ்முறை அறத்தியல்
அமைச்சியல் அரசியல் ஏனை இயல்இசை
நாட கத்திய லோடு நான்மறை
முறையே எய்தினை ஊழி வாழி
இனிய மகளிரோ டின்பத்துயில் கோள்கேன்
றிங்ஙனம் உரைப்பது கண்படை ஆகும். (ககஎ)

---

1. ('செங்கோல் அரசே,' நீ) காலையினும், பகலினும், மாலையினும் மனம் ஆழ்ந்த முறைமையின், அறத்தியலையும், அமைச்சியலையும், அரசியலையும், அவற்றின் வேருகிய இயல் இசை நாடகங்களின் இயல்களையும் நான்கு மறையிற் கூறப்பட்ட முறைப்படி எய்தினுய். (நீ பல) ஊழிக்காலம் வாழ்வாயாக. (இப்பொழுது நின் மனத்திற்கு) இனிய மகளிரோடு இன்பத்தைத் தரும் துயிலைக்கொள்க' என்று இவ்வாறு உரைப்பது கண்படைநிலையாகும் என்பது.

ஓடு என்பது எண்ணிடைச் சொல்; அதனை அறத்தியல் முதலியவற்ரேடுங் கூட்டுக. ஆழ்முறை என்பது வினைத்தொகை, ஆழ்ந்த முறைமை என்ருதலின். 'ஆழ்' என்னும் வினைக்கு மனம் என்னும் கருத்தாவும், முன்னிலையானை நோக்கிக் கூறவேண்டுதலின், 'செங்கோல் அரசே,' என்னும் விளியும், 'எய்தினை,' 'துயில்கொள்க' என்னும் வினைகளுக்கு 'நீ' என்னும் கருத்தாவும் வருவித்துரைக்கப்பட்டன.

இனி 'யாழ்முறை' என்றதனை ஆழ்முறை என்று பிரிக்காமல் 'யாழ்முறை' எனவே வைத்து, 'உரைப்பது' என்பதன் முன் இயைத்து, 'யாழ் இசைபோன்ற இனிய முறைமையின் உரைப்பது' என்று பொருள் கொள்ளுதலுமாம். இப்பொருளில் 'யாழ்' என்பது கருவி ஆகுபெயராய் இசையை உணர்த்திற்று என்க.

அரசன், அறத்தியல் முதலியவற்றை எய்து முறையைக் களவியல், 40-ஆம் சூத்திர உரையில், "தலைமகனல் தலைநின்று ஒழுகப்படுவன தருமம், அருத்தம், காமம் என மூன்று; அம் மூன்றினையும் ஒரு பகலை மூன்று கூறிட்டு, முதற்கண் பத்து நாழிகையும் அறத்தொடுபடச் செல்லும்; இடையன பத்துநாழி

சரு. துயிலெடை நிலை

205. [1]கண்படை மன்னவர் முன்னர்த் தண்பத
விடியல் எல்லை இயல்புறச் சொல்லித்
தந்த திறையரும் தாராத் திறையரும்
ஏத்தி நின்மொழி கேட்டினி தியங்க

கையும் அருத்தத்தொடு படச்செல்லும்; கடையன பத்துநாழி கையும் காமத்தொடு படச்செல்லும்'' என்றதனுல் அறிக.

தஞ்சைவாணன் கோவை உரையாசிரியர், பரத்தையிற் பிரிவின் முன்னுரையில், "காலைக்கடன் கழித்தலும், உலகத்தி விருந்து நாடுகாவற்றெழில் செலுத்தலும், விருந்துடன் அடிசில் கைதொடலும், நாவலரோடு கல்வி பயிறலும், ஆடல் பாடல் களிற் களித்தலும், மடவாரோடு கூடலும், துயிறலும், துயி லுணர்ந்து தேவர்ப்பராவலுமாகிய காலவறை எட்டினுள், ஆடல் பாடற்காலம் ஒன்று'' என்றதையும் ஈண்டு நோக்குக.

தொல். பொருள். புறத்திணை இயல், 87-ஆம் சூத்தி ரத்தில்,

"கண்படை கண்ணிய கண்படை நிலையும்''

என்றதையும், புறப். வெண். வாகைப்படலத்தில் உள்ள,

"மண்கொண்ட மறவேந்தன்
கண்படைநிலை மலிந்தன்று''

என்னும் 29-ஆம் கொளுவையும், பாடாண்படலத்தில் உள்ள,

"நெடுந்தேர்த் தானை நீறுபட நடக்கும்
கடுந்தேர் மன்னவன் கண்படை மலிந்தன்று''

என்னும் 8-ஆம் கொளுவையும், அவற்றின் உரைகளையும், உதா ரணங்களையும் ஈண்டு நோக்குக.

1. கண் துயில் கொண்டிருத்தலை உடைய மன்னருக்கு முன்னே (சூதர்கள் வந்து) இரவின் முடிவாகிய குளிர்ந்த பொழு தான விடியற்காலத்தின் இயற்கையை நன்கு பொருந்தச் சொல் லித் 'திறை செலுத்தியவர்களும், இனித் திறை செலுத்தவேண்

வேண்டினர் இத்துயில் எழுகேன விளம்பின்
அதுவே மன்னவர் துயிலேடை நிலையே. (ககஅ)

டியவர்களுமாகிய மன்னர்கள் உன்னைப்போற்றி, உன்மொழியைக் கேட்டு, (உன்மொழியின்படி) இனிது நடத்தலை விரும்பி வந்திருக்கின்றார்கள். ஆதலின், இத்துயிலினின்று எழுந்தருள்க' என்று கூறின், அது, மன்னர் துயிலெடைநிலையாம் என்பது.

'எல்லைத் தன்பதவிடியல்' என இயைக்க. நூல் காரணமும், நூலால் தெரிவிக்கப்படும் பொருள் காரியமும் ஆதலின், துயிலெடைநிலை என்பது காரியவாகு பெயராய் அதனைப் பற்றிப் பாடும் நூலுக்கு ஆயிற்று என்க. இயல்பு - இயற்கை, பதம் - பொழுது. 'இயங்க' என்னும் செயவென் எச்சம் ஈண்டு இயங்குதல் என்னும் தொழிற் பெயர்ப்பொருளதாய் 'வேண்டினர்' என்னும் வினையின் செயப்படுபொருளாய் நின்றது. இயங்கல் - நடத்தல் 'எழுகவென' என்பது அகரந்தொக்கு எழுகென என்றாயிற்று.

தொல். பொருள். புறத்திணை இயல், 36-ஆம் சூத்திரத்தில்,

"தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூத ரேத்திய துயிலேடை நிலையும்"

என்றதனால், ஈண்டுச் 'சூதர் வந்து' என்பது இசை எச்சமாக வருவித்துரைக்கப்பட்டது.

மன்னர்மன்னர்களைத் துயிலெழுப்புகையிற் காலைப் பொழுதின் இயல்பும் அம் மன்னர்மன்னரது அருளைப் பெறுதல் வேண்டி மற்றை மன்னர்கள் வந்திருத்தலுமாகிய இவ்விரண்டையும் கூறித் துயில் எழுப்புதலைக் கூறுதல் துயிலெடைநிலை என்பது இச்சூத்திரத்தின் பொருளாகும். இங்ஙனம் மன்னர்மன்னர்களைப் பாடிய நூற்கள் இப்பொழுது காணப்பட்டிலவாயினும் கடவுளரைப்பற்றிப் பாடப்பட்டனவும் நாலாயிரத்தினும், திருவாசகத்தினும், பிறவற்றினும் உள்ளனவும் ஆகிய திருப்பள்ளி எழுச்சிகள் ஈண்டுக் கூறிய துயிலெடைநிலைகளே; ஆதலின், அவற்றினின்று உதாரணம் காண்க.

காலை இயல்புகள்:

நாலாயிரத்தில் உள்ள திருப்பள்ளி எழுச்சி

"கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனஇருள் அகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்," (பா-1.)

"கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவிக்
கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்
ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிற குதறி," (பா-2.)

"சுடரொளி பரந்தன சூழ்திசை எல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ
பாயிருள் அகன்றது பைம்பொழிற் கமுகின்
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ," (பா-3.)

"மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங்குழ லோசையும் விடைமணிக் குரலும்
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம்," (பா-4.)

"புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகடல் அரவம்," (பா-5.)

"தோன்றினன் இரவியும் துளங்கொளி பரப்பி
அம்பர தலத்தினின் றகல்கின்ற திருள்போய்," (பா-8.)

"கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ
துடிஇடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர்," (பா-10.)

திருவாசகர்

"அருணனிந் திரன்திசை அணுகினன் இருள்போய்
   அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழவெழ நயனக்
   கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரணிரை அறுபதம் முரல்வன இவை,"   (பா-2.)

"கூவின பூங்குயில் கூவின கோழி
   குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்
   தொருப்படு கின்றது,"   (பா-3.)

அருள்பெற வேண்டி வர்திருக்கும் குழு:

நாலாயிரம்

"இரவியர் மணிநெடுந் தேரொடும் இவரோ
   இறையவர் பதினொரு விடையரும் இவரோ
மருவிய மயிலினன் அறுமுகன் இவனே
   மருதரும் வசுக்களும் வந்துவந் தீண்டிப்
புரவியோ டாடலும் பாடலும் தேரும்
   குமரதண் டம்புகுந் தீண்டிய வெள்ளம்
அருவரை அனையநின் கோயில்முன் இவரோ,"   (பா-6.)

"அந்தரத் தமரர்கள் கூட்டங்கள் இவையோ
   அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ
இந்திரன் ஆனையும் தானும்வந் திவனே
   எம்பெரு மானுன கோயிலின் வாயில்
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
   இயக்கரு மயங்கினர் திருவடித் தொழுவான்
அந்தரம் பாரிடம் இல்லைமற் றிதுவோ,"   (பா-7.)

"ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி
   யாழ்குழல் முழவமோ டிசைதிசை கெழுமிக்
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்
   கெந்தரு வரவர் கங்குலுள் எல்லாம்
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
   சித்தரு மயங்கினர் திருவடித் தொழுவான்,"   (பா-9.)

திருவாசகம்

"இன்னிசை வீணைய ரியாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்," (பா-4.)

"பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்," (பா-6.)

நாலாயிரத்துத் திருப்பள்ளி எழுச்சியில், இறையவர் துயிலுணர்ந்த உடன் நோக்கற்கு உரிய மாநிதி, கபிலை, கண்ணடி முதலியவற்றை முனிவர் முதலியோர் கொண்டுவந்திருத்தலைக் கூறுதலும் உரைக்கப் பெற்றிருக்கின்றது.

அதுவருமாறு:

"வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலையோண் கண்ணடி முதலா
எம்பெரு மான்படி மைக்கலங் காண்டற்
கேற்பன வாயின கொண்டுநன் முனிவர்
தும்புரு நாரதர் தோன்றினர் இவரோ,"

இதனை இச் சூத்திரத்தின்கண் "இயல்பினைச் சொல்லி" என்னமல், "இயல்புறச் சொல்லி" என்றதனுற் கொள்க.

ஈண்டுத் தொல். பொருள். புறத்திணை இயல், 36-ஆம் சூத்திரத்தில் உள்ள,

"தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்"

என்பதற்கு நச்சினார்க்கினியர் காட்டிய உதாரணச் செய்யுளையும், புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலத்தில் உள்ள,

"அடுதிறல் மன்னரை அருளிய எழுகெனத்
தொடுகழல் மன்னனைத் துயிலெடுப் பின்று"

என்னும் 9-ஆம் கொளுவிற்குக் காட்டப்பட்ட உதாரணச் செய்யுளையும் நோக்குக.

சச. விளக்கு நிலை

206. [1]துளக்கமில் மன்னர்க் காம்விளக் குரைப்பது
விளக்கு நிலைஎன வேண்டினர் புலவர். (கககூ)

---

1. போரிற் சிறிதும் மனம் கலங்குதல் இல்லாத அரசர்க்கு உரிய விளக்கின் தன்மையைச் சொல்லுவது விளக்குநிலையாம் என்பது.

இதனைப், புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலத்தில் உள்ள,

"அளப்பரும் கடல்தானையான்
விளக்குநிலை விரித்துரைத்தன்று"

என்னும் 12-ஆம் கொளுவினானும், "அளத்தற்கரிய கடல்போன்ற சேனையினை உடையான்றனது விளக்கினது நிலையைப் பரப்பிச் சொல்லியது," என்னும் அதன் உரையானும்,

"வளிதுரந்தக் கண்ணும் வலந்திரியாப் பொங்கி
ஒளிசிறந் தோங்கி வரலால் - அளிசிறந்து
நன்னெறியே காட்டும் நலந்தெரி கோலாற்கு
வென்னெறியே காட்டும் விளக்கு"

என்னும் உதாரணச் செய்யுளானும்,

"காற்றெறிந்த விடத்தும், வலமாகச் சுழன்றெழுந்து, சோதிவிட்டு, உயர்ந்து வருதலால், தண்அளியை மிகுத்து, அழகிய வழியைக் காட்டவல்ல நன்றியை ஆராயும் செங்கோலினை உடைய வேந்தற்கு வெல்லு முறைமையையே காட்டாநிற்கும் விளக்கு" என்னும் அதன் உரையானும் அறிக.

இனித் தொல். பொருள். புறத்திணை இயல், 35-ஆம் சூத்திரத்தில்,

"வேலை நோக்கிய விளக்கு நிலையும்"

என்றதையும், அதற்கு, 'உரையாசிரியர் இளம்பூரணர், உரையில் 'வேலைக் குறித்த விளக்கு நிலையும்' என்று கூறியதையும், விசேட உரையில், 'நோக்கலாவது விளக்கு எதுவாக வேலின்

௬௫. கடா நிலை

207. [1]கொற்றவை தனக்குக் கொற்றவர் எறியும்
கடாநிலை உரைப்பது கடாநிலை ஆகும். (௧௨௦)

௧௨௬. "வடாதுறை கன்னிக்கு மன்னவர் எறிந்த
கடாநிலை உரைப்பது கடாநிலை ஆகும்"
—பெருங் குன்றூர் கிழார்.

வெற்றியைக் காட்டுதல்' என்றதையும் ஈண்டு நோக்குக. இனி நச்சினார்க்கினியர், அதனை,

"வேலி னோக்கிய விளக்கு நிலையும்".

என்று பாடங்கொண்டு உரையில், "வேலும், வேற்றலையும் விலங்காது ஓங்கியவாறு போலக் கோலோடு விளக்கும் ஒன்றுபட்டு ஓங்குமாறு ஓங்குவித்த விளக்குநிலையும்" என்று கூறியதையும், விசேட உரையில், இன் உவமப்பொருள். இது, கார்த்திகைத் திங்களிற் கார்த்திகை நாளின் ஏற்றிய விளக்குக், கீழும், மேலும், வலமும், இடமும் திரி பரந்து சுடர் ஓங்கிக் கொழுந்துவிட்டெழுந்தது என்று அறிவோர் ஆக்கம் கூறப்படுவதாம்" என்று கூறி,

"மைமிசை யின்றி மணிவிளக்குப் போலோங்கிச்
செம்மையி னின்றிலங்குந் தீபிகை - தெம்முனையுள்
வேலினும் கோடாது வேந்தன் மனைவிளங்கக்
கோலினும் கோடா கொழுந்து"

என்னும் செய்யுளை உதாரணமாகக் காட்டிப் பின்னர், "வேலின் வெற்றியை நோக்கிநின்ற விளக்குநிலை எனப் பொருள் கூறி,

"வளிதுரந்தக் கண்ணும்...காட்டும் விளக்கு"

என்பது காட்டுவாரும் உளர். அவர் இதனை நிச்சம் இடுகின்ற விளக்கு என்பர்"என்று உரையாசிரியர் முதலியோர் கூறியதைப் பிறர் கோளாகக் கொண்டு கூறியதையும் ஈண்டு நோக்குக.

புறப்பொருள் வெண்பாமாலைப் பாடாண் படலம், 13-ஆம் கொளுவில், "மன்னனைச் சூரியனோடு உவமித்து உரைத்தலும் விளக்கு நிலையாம்" என்று கூறியதையும் ஈண்டு நோக்குக.

1. மன்னர்கள் (கொற்றவைக்குப் பரவுக்கடன் கொடுக்குங்கால்) எறியும் எருமைக்கடாவின் தன்மையைப்பற்றிப் பாடுவது கடாநிலை ஆகும் என்பது.

சகூ. யாண்டு நிலை

208. [1]வையக மன்னவன் மன்னுக பல்யாண்
டெய்துக என்ப தியாண்டுநிலை ஆகும். (கஉக)

---

1. (இச் செங்கோல்) மன்னவன் பூமியின்கண் நிலை பெற்று வாழ்வானாக. இவனுடைய வாழ்நாள் பல யாண்டாகப் பொருந்துவதாக என்று வாழ்த்துவது யாண்டுநிலை ஆகும் என்பது.

தொல். பொருள். செய்யுளியலில் உள்ள,

"வாழ்த்தியல் வகையே நாற்பாற்கும் உரித்தே"
(நச்சினார்க்கினியர் உரை, சூ. 421.)

என்னுஞ் சூத்திரத்தின் விசேட உரையில்,

"அங்ஙனம் வாழ்த்தப்படும் பொருளாவன: கடவுளும், முனிவரும், பசுவும், பார்ப்பாரும், அரைசரும், மழையும், நாடும் என்பன. அவற்றுள், கடவுளை வாழ்த்தும் செய்யுள், 'கடவுள் வாழ்த்து' எனப்படும். ஒழிந்த பொருள்களை வாழ்த்திய செய்யுள், 'அறுவகை வாழ்த்து' எனப்படும் என்பது" என்றதனை ஈண்டு நோக்குக.

இதனால், இங்ஙனம் அரசனை வாழ்த்துதல் அறுமுறை வாழ்த்தினுள் ஒன்று என்பது பெறப்படுகின்றமையின், இஃது அங்ஙனமாகிய வாழ்த்தாம் என்று கொள்க.

உரையாசிரியர் இளம்பூரணர், மேற்குறித்த சூத்திரத்தின் விசேட உரையில், "'வகை' என்றது, தேவரை வாழ்த்தலும், முனிவரை வாழ்த்தலும், ஏனையோரை வாழ்த்தலும்" என்றதையும் ஈண்டு நோக்குக.

'யாண்டுநிலை' என்பது ஈண்டுக் காரியவாகுபெயராய் நூலை உணர்த்தி நின்றது என்க.

அங்ஙனம் செங்கோல் மன்னனை அன்றி வாழ்த்தார் ஆகலின், 'செங்கோல்' என்பது வருவித்துரைக்கப்பட்டது. இஃது திசைஎச்சம்.

உரை நடை

209. [1]இது, பெரும்பான்மை நேரிசைவெண்பாவாற் பாடப்பெறும்; சிறுபான்மை எல்லாப் பாவானும் பாடப்பெறும். (சஉஉ)

சஎ. பறை நிலை

210. [2]காவலர் இனிதுறத் தேவர்காத் தளிக்கென
கடவுளர் விழவினும் கதிர்முடி விழவினும்
நாடும் நகரமும் நலம்பெற இயம்பி
வருநெறி வஞ்சி வழங்கப் பற்றிய
மொழிவரத் தொடுப்பது பறைநிலை ஆகும். (சஉ௩)

---

1. இந்நூல், பெரும்பான்மையும் நேரிசை வெண்பாவினாற் பாடப்படும்; சிறுபான்மை எல்லாப் பாக்களினாலும் பாடப்படும் என்பது இவ்வுரை நடையின் கருத்து.

2. கடவுளர் திருவிழாவினும், (அரசர்கள்) முடிசூடும் திருவிழாவினும் நாட்டின்கண்ணும் நகரத்தின்கண்ணும் (எங்கள் செங்கோல் மன்னர்) நன்மையை அடையும்வண்ணம் அளி செய்து காக்கவேண்டும் என்று, மன்னர் நன்மையைப் பெறும் படி சொல்லிவாராநிற்கும் முறைமை வஞ்சிப்பாவின்கண் அமைய (அரசர்பால்) அன்பு அமைந்ததனாலாகிய சொற்கள் பொருந்தப் பாடப்படுவது பறைநிலை ஆகும் என்பது.

'கடவுளர் விழவினும் கதிர்முடி விழவினும் நாடும், நகரமும் காவலர் இனிது உறத் தேவர் அளித்துக் காக்க என நலம்பெற இயம்பிவரும்நெறி வஞ்சி வழங்கப்பற்றிய மொழி வரத் தொடுப் பது' என இயைக்க.

இனிது - இனிமையானது, நன்மை; இது குறிப்புவினை யாலணையும் பெயர். காத்து அளிக்க என்பதனை அளித்துக் காக்க என விகுதி பிரித்துக் கூட்டி மொழிமாற்றி உரைக்க. காக்க என்னும் வியங்கோள் ஈண்டு வேண்டுதற் பொருளில் வந்தது. 'வஞ்சி வழங்க' என்பதற்கு வஞ்சிப்பாவின்கண் அமைய என்பது பொருளாமேனும் ஈண்டு அஃது, அங்ஙனம்

௪அ. அந்தாதித் தொகை

211. [1]வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
பண்பாய் உரைப்பதந் தாதித் தொகையே. (கஉ௪)

அந் நூலை வஞ்சிப்பாவினுல் பாடுதல் வழக்கம் (மரபு) என்னுங் குறிப்புப் பொருளைத் தோற்றுவித்து நிற்றலை உய்த்துணர்க.

'பற்றியமொழி' என்பது பற்று அமைந்ததனுல் ஆகிய மொழி என்னும் பொருளது; ஆதலின், இத் தொடரில், 'பற்றிய' என்பது காரணப் பொருட்டாகிய பெயரெச்சவினையாம் என்க.

பறைநிலை என்பது பறையை அறைந்து கூறும் நிலைமையது என்னும் பொருளதாகும்; இஃது இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை யாகிய காரணப்பெயர்.

இந்நூல், வள்ளுவர்கள் இவ்விரு விழாக்களினும், நாடு நகரங்களில் யானை மீதிவர்ந்து, பறையை அறைந்து, அரசர் களைக் கடவுளர் காக்கவேண்டும் என்று வாழ்த்துதலைப் பாடுவது போலும்.

இப்பொருள் 'பறைநிலை' என்பதன் பொருளாற்றலால் விளங்குதல் அறிக. இதற்கு வேறு பொருள் கொள்ளக்கூடும் எனிற் கொள்க.

1. (புலவர்களால் தாங்கள்) விரும்பிய பொருள்களின்மேல் வெண்பாவாயினும், கலித்துறையாயினும் (அந்தாதித் தொடையின் தன்மையோடு) அமையப் பாடப்படுவது அந்தாதித் தொகையாம் என்பது.

'வேண்டிய' என்னும் வினைக்குப் புலவர்கள் என்னும் வினைமுதல் வருவித்துரைக்கப்பட்டது. பண்பு - தன்மை; அஃது ஈண்டு இந்நூலுக்குரிய அந்தாதித் தொடையின் தன்மையைக் குறித்து நின்றது. அதனுடன் ஒடு என்னும் மூன்றனுருபைக் கூட்டுக. ஈண்டு அது விசேடணப் பொருளது. ஈண்டு 'ஆக' என்பது 'ஆய்' எனத் திரிந்து நின்றது. அந்தாதி என்பது அந்த அந்தத்தால் அமைந்த ஆதியை உடையது என்னும் பொருளது. அதாவது தன்கண் உள்ள செய்யுட்களுள் முன் உள்ள செய்யுளின் அந்தத்தால் அமைந்த ஆதியை அடுத்துள்ள

செய்யுள் பெற்று வருதலை உடையது என்பது. இது நூலுக்கு மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகிய காரணப்பெயர். இது, மண்ணாலாகிய குடம் என்பது போன்றது.

தொகை - கூட்டம் (கூடுதல்). அஃதீண்டுத் தொழிலாகு பெயராய்த் தொகுதலை உடைய செய்யுட்களை உணர்த்த; அது கருவியாகுபெயராய் நூலை உணர்த்தியது. ஆதலின், அந்தா தித் தொகை என்பதற்கு 'அந்தாதியாகிய நூல்' என்பது பொரு ளாம் என்க. இஃது இருபெயரொட்டாம் என்க.

இதில், 'தொகை' என்றது தொகைநிலைச்செய்யுள், தொடர் நிலைச்செய்யுள் என்பவற்றுள், இது, 'தொகைநிலைச் செய்யுள்' என்றற்குக் கூறப்பட்டது என்னலாகாதோ? எனின், இது (அந்தாதி), சொற்றொடர்நிலை, பொருட்டொடர்நிலை என்னும் தொடர்நிலைச்செய்யுட்கள் இரண்டனுள், சொற்றொடர்நிலைச் செய்யுளாகலின், அங்ஙனம் கூறுதலாகாதென்க.

இவ்வியலில் உள்ள,

> "ஒன்றுபல வாகிய இளமந் தாதி
> கோவை காப்பியம் ஆதியாக் கூறுவன"

என்னும் நான்காஞ் சூத்திரத்தையும் ஈண்டு நோக்குக.

அந்தம் - முடிவு; ஆதி - முதல். அந்தாதித் தொடையானது எழுத்து, அசை, சீர், அடி என்பனவற்றால் நான்கு வகையாம். அவற்றை யாப்பிலக்கணத்திற் காண்க.

'அந்தாதி' என்னுமல், 'அந்தாதித் தொகை' என்றது அது, பெரும்பான்மையும் நூறு செய்யுளாற் பாடப்பெறும் என்ப தூஉம், சிறுபான்மை முப்பது முதலிய செய்யுட்களாலும் பாடப் பெறும் என்பதூஉம் அறிவித்தற்காம் என்க.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின், 9-ஆம் செய்யுளில்,

> "ஒத்தாய வெண்பா ஒருநூறு - ஒத்தசீர்
> அந்தாதி ஆதம் கலித்துறையும் அவ்வகையே
> வந்தால் அதன்பேர் அவை"

என்றதையும், அதன் உரையில், "நேரிசை வெண்பா நூறு அந் தாதியாய் வந்தால், வெண்பா அந்தாதி என்றும், கட்டளைக்

சகூ. மருட்பா

212. [1]புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறமையின் மருட்பாச் செய்யுளின் வருமே. ()

கலித்துறை நூறு அந்தாதியாய் வந்தால், கலித்துறை அந்தாதி என்றும் பெயர் பெறும்'' என்றதையும், இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"நூறு வெண்பா நூறு கலித்துறை
கூறுதல் நூற்றந் தாதிக் கோளே''

என்னும் 82-ஆம் சூத்திரத்தையும், அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

1. புறநிலை வாழ்த்தும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉம் ஆகிய மூன்றும் மருட்பாவாகிய செய்யுளில் அவற்றிற்கு உரிய இலக்கண வகையினால் அமைத்துப் பாடப்பெறும் என்பது.

'என' என்பது எண்ணிடைச்சொல், மற்றை இரண்டனோடும் அதனைக் கூட்டுக.

"புறநிலை வாயுறை செயறிவுறூஉ என மருட்பாச் செய்யுளின் திறமையின் வரும்'' என இயைக்க.

புறநிலை - புறநிலை வாழ்த்து; வாயுறை - வாயுறை வாழ்த்து; புறநிலை வாழ்த்தின் இலக்கணத்தைத் தொல். பொருள். செய்யுளியலில் உள்ள,

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெற''

என்னும் 110 - ஆம் சூத்திரத்தானும், அதன் உரையானும், வாயுறை வாழ்த்தின் இலக்கணத்தை,

"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்

ருo. [1]பாதாதி

213. [2]அகஅடி உகிரே விரல்புற அடியே
பரடே கழலே கணைத்தாள் முழந்தாள்
குறங்கே அல்குல் கொப்பூழ் வயிறதன்
வரையே இடையே மயிரின் ஒழுங்கே
முலைஉகிர் விரலே முன்கை அகங்கை
தோள்இணை கழுத்தே முகம்நகை செவ்வாய்

தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமேன்
றேம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே''
என்னும் 112-ஆம் சூத்திரத்தானும், அதன் உரையானும்,

செவியறிவுறூஉவின் இலக்கணத்தை,

''செவியுறை தானே,
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே''
என்னும் 114-ஆம் சூத்திரத்தானும், அதன் உரையானும் அறிக.

இப்பொருள்கள்பற்றிப் பெயர் கூறாமல், 'மருட்பா' எனப் பாப்பற்றிப் பெயர் கூறியது என் எனின், மருட்பா இம்மூன்று பொருளும் கைக்கிளையும்பற்றியன்றி வாராது; ஆகலின், அவ்வுரிமை நோக்கிப் பாப்பற்றிப் பெயர் கூறப்பட்டது என்க.

'மேதகு சாதகம்' (இவ்வியல், சூ. 15) என்னும் தொகைச் சூத்திரத்தின் விசேட உரையில், 'புறநிலை வாயுறை செவியறிவுறூஉவே,' என்றதற்குக் கூறிய இலக்கணத்தையும் ஈண்டு நோக்குக.

1. பாதமாகிய ஆதியை உடையது. இது, பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழியாகிய காரணப்பெயர். பாத முதலாக முடிவரையினும் பாடப்படுவது என்பது இதன் கருத்து.

2. (க) உள்ளங்காலும், (உ) அடியின் நகங்களும், (ங) அடியின் விரல்களும், (ச) புறவடிகளும், (ரு) பரடுகளும், (சு) பாதங்

முக்கே கண்ணே காது புருவம்
நுதல்எனும் ஆறைந் துறுப்புடன் இரண்டும்
பாதம் ஆதியா வேண்டுதல் புணர்ப்பினஃ
தோதிய பாத மாதியாம் என்ப. (கஉசு)

களும், (எ) கணைக்கால்களும், (அ) முழந்தாள்களும், (க) தொடைகளும், (கo) அல்குலும், (கக) கொப்பூழும், (கஉ) வயிறும், (கஙு) வயிற்றின் வரைகளும், (கச) இடையும், (கரு) வயிற்றின் மயிர் ஒழுங்கும், (கசு) தனங்களும், (கஎ) கைந்நகங்களும், (கஅ) கைவிரல்களும், (கக) முன்கைகளும், (உo) உள்ளங்கைகளும், (உக) இரண்டு தோள்களும், (உஉ) கழுத்தும், (உஙு) முகமும், (உச) பற்களும், (உரு) செவ்வாயும், (உசு) மூக்கும், (உஎ) கண்களும், (உஅ) காதுகளும், (உக) புருவங்களும், (ஙுo) நெற்றியும் என்று சொல்லப்படும் முப்பது உறுப்புக்களுடன் ஈண்டு விதந்து கூறப்படாத இரண்டு உறுப்புக்களும் கூடிய முப்பத்திரண்டு உறுப்புக்களையும், பாதம் ஆதி ஆகும்படி வைத்து (முன்னோர்களால்) விரும்பப்படுதலை உடைய முறைமையிற் பாடினால், அது, பாதமாதி என்னும் நூலாம் என்று புலவர்கள் கூறுவார்கள் என்பது.

ஈண்டு விதந்து கூறப்படாத இரண்டு உறுப்புக்கள் தலைமயிரும் கன்னமும் போலும்; 'பாதமாதியாப் புணர்ப்பின்' என்பதே போதியதாகவும், 'பாதமாதியா வேண்டுதல் புணர்ப்பின்' என்றது என் எனின், கேசமாதியாக வைத்துப் பாடப்படுதலும் உண்டு. அங்ஙனம் பாடப்படுவது, 'கேசாதி' எனப்படும் என்பதூஉம் இதில், 'முலை என்றது மகளிரைக் குறித்து நிற்றலின், ஆடவர்களைப் பற்றிப்பாடுமிடத்து, அதனை நீக்கி 'மார்பு' என்பதனைச் சேர்த்துக்கொள்ளல்வேண்டும் என்பதூஉம், அறிவித்தற்காம் என்க.

இவை, முறையே 'பாதாதிகேசம்' என்றும், 'கேசாதிபாதம்' என்றும் கூறப்படுதலும் உண்டு; ஆயினும், 'பாதாதி,' 'கேசாதி' என்னும் பெயர்களே இலக்கண அமைதியிற் சிறந்தனவாயிருக்கின்றன.

ருக. பணைமுலை நயனம்

214. [1]பணைமுலை நயனம் பாங்காம் அகவல்
விருத்தம் பத்தென விளம்பினர் புலவர். (கருஎ)

கஉஎ. "ஆகிய கண்முலை அகவல் விருத்தம்"
—பெருங்குன்றூர் கிழார்.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின், 29-ஆம் செய்யுளில்,

"...............................உறுப்பமைந்த
பாதாதி கேசமும் கேசாதி பாதமுமா
ஓதும் கலிவெண்பா ஒன்று"

என்றதையும், அதன் உரையில், "அவயவங்களைக் கலிவெண்பா வாற் புகழ்ந்து பாதாதிகேசமாகப் பாடுவது 'பாதாதி கேசம்' என்றும், கேசாதி பாதமாகப்பாடுவது 'கேசாதிபாதம்' என்றும் பெயர் பெறும்," என்றதையும், இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"அடிமுதல் முடியள வாக இன்சொல்
படர்வுறு கலிவெண் பாவால் கூறல்,
பாதாதிகேசம் கேசாதி பாதம்
ஓதின்அப் பெயரான் உரைக்கப் படுமே"

என்னும் 111-ஆம் சூத்திரத்தையும், அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

1. பருத்த தனங்களையும் கண்களையும் நன்மை அமைந்த ஆசிரிய விருத்தம் பத்தாற் பாடின், அவை, பணைமுலைப்பத்து, நயனப்பத்து என்று பெயர் பெறும் எனப் புலவர்கள் கூறினர் கள்.

ஈண்டு வருவித்த சொற்கள் இசை எச்சமாகும். இவை இரண்டு நூற்களாமேனும், 'பத்து' என்பதனால் ஈண்டு ஒரு நூலாகக் கொள்ளப்பட்டன.

வச்சணந்தி மாலைச் செய்யுளியலில் உள்ள,

"தந்துரைத்த மன்விருத்தம் சார்ந்த கலித்துறைதான்
அந்தமுறும் கண்முலைமேல் ஐயிரண்டாய் - வந்தால்

ரு உ. உழத்திப் பாட்டு

215. [1]புரவலற் கூறி அவன்வா ழியவேன்
றகல்வயல் தொழிலை ஒருமை உணர்ந்தனள்
எனவரும் ஈரைந் துழத்திப் பாட்டே. (கஉஅ)

நயன பயோதரப்பத் தாம்என்று நன்னூற்
பயனுணர்ந்தார் முன்பு பகர்''

என்னும் 25-ஆம் செய்யுளையும், அதன் உரையில், "ஆசிரியவிருத்தத்தான் ஆதல், கலித்துறையான் ஆதல் நயனத்தையும் பயோதரத்தையும் பொருளாகக்கொண்டு, பப்பத்துக் கவிபாடுவது, நயனப்பத்து என்றும், பயோதரப்பத்து என்றும் பெயர் பெறும்'' என்றதையும், இலக்கணவிளக்கப்பாட்டியலில் உள்ள,

"பணைமுலை நயனத் தினைப்பப் பத்தா
அணைவுறப் புகறல் அப்பத் தாதும்''

என்னும் 91-ஆம் சூத்திரத்தையும் ஈண்டு நோக்குக.

1. உழத்திப் பாட்டுச் செங்கோல் அரசனை முதலிற் கூறி, அவன் வாழ்க என்று வாழ்த்தி, உழத்தி அகன்ற வயல்களின் தொழில்களை ஒப்பற உணர்ந்துகொண்டாள் என்று பத்துப் பாட்டாற் பாடப்படும் என்பது.

"உழத்திப்பாட்டுப் புரவலற்கூறி அவன் வாழிய என்று, (உழத்தி) அகல் வயல் தொழிலை ஒருமை உணர்ந்தனள் என ஈரைந்துவரும்,'' என இயைக்க.

இஃது இப்பொழுது 'பள்ளு' என்று வழங்குகின்றது. இதனை, கடவுள் வணக்கமும், 'மூத்த பள்ளியும் இளைய பள்ளியும் குடும்பன் வரவோடு அவன் பெருமை கூறலும், முறையே அவர்கள் வரலாறும், நாட்டுவளமும், குயில் குரல் கேட்டலும், மழை வேண்டிக் கடவுட்பராவலும், மழைக்குறி ஓர்தலும், ஆற்றின்வரவும், அதன் சிறப்பைக் காண்டலும் ஆகிய இவற்றை இடைஇடை அகப்பொருட்டுறைகள் அமையக் கூறிப் பின்பு, பண்ணைத்தலைவன் வரவும், பள்ளிகள் இருவர் முறையீடும், பண்ணைத்தலைவன் இளையாளை உரப்பலும், பள்ளன் வெளிப்படலும், பண்ணைத்தலைவன் அவனைப் பண்ணைச் செயல்பற்றி வினவலும்,

ருகூ. குறத்திப் பாட்டு

216. [1]இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமும்
திறப்பட உரைப்பது குறத்திப் பாட்டே. (கஉகூ)

217. [2]குறத்திப் பாட்டும் அதனோ ரற்றே. (கஙௐ)

அவன் அதனைக் கூறுதலும், ஆயரை வருவித்தலும், அவர்கள் வரலும், அவர்களின் பெருமை கூறலும், மூத்த பள்ளி முறையீடும், குடும்பன் கிடையில் இருந்தான்போல் வரலும், அவனைத் தொழுவில் மாட்டலும், அவன் புலம்பலும், மூத்த பள்ளி அடிசில் கொண்டு வரலும், அவன் அவளிடம் கூறித் தன்னை மன்னிக்கக் கேட்கும்படி அவளை வேண்டலும், அவள் மறுத்தலும், அவன் சூள் உறுதலும், அவள் அவனை மன்னிக்கவேண்டிப் பண்ணைத் தலைவனைப் பரவலும், விதை முதலிய வளம் கூறலும், உழவர் உழுதலும், காளை வெருளலும், அது பள்ளன்மேற் பாய்தலும், பள்ளிகள் புலம்பலும், அவன் எழுந்து வித்தலும், அதைப் பண்ணைத் தலைவனுக்கு அறிவித்தலும், நாற்று நடலும், விளைந்தபின் செப்பம் செய்தலும், நெல் அளத்தலும், மூத்தபள்ளி முறையீடும், பள்ளிகள் தங்களுக்குள் ஒருவரைஒருவர் ஏசலும் ஆகிய இவ்வுறுப்புக்களைப் பொருந்த வைத்துப் பாட்டுடைத்தலைவன் பெருமை இடையிடையே தோன்றும்படி சிந்தும் விருத்தமும் விரவிவரப் பாடுதல் வேண்டும்' என்ப. இம்முறை பிற்காலத்துப் பெருக்கிக் கொள்ளப்பட்டதுபோலும்.

'உழத்திப்பாட்டு' என்பது எட்டிப்பூ நம்பிப்பூ என்பன போல் நின்றது. பின்வரும், 'குறத்திப்பாட்டு' என்பதும் அது.

1. குறத்திப்பாட்டு, (குறத்தி) இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலத்து நிகழ்வனவற்றையும் அறிந்து சிறந்த வகையின் அமைய உரைத்தலைப் பாடுவதாம் என்பது.

2. குறத்திப்பாட்டும், உழத்திப்பாட்டைப்போலப் பத்துப் பாட்டாற் பாடப்படுதற்கு உரியதாம் என்பது.

இதனை, தலைவன் உலாவருதலும், மகளிர் காமுறுதலும், தலைவி வரலும், உலாப்போந்த தலைவனைக் கண்டு தலைவி காதல் கொள்ளுதலும், திங்கள் தென்றல் முதலியவற்றின் உபாலம்பனமும், பாங்கி தலைவியை உற்றது வினவலும், தலைவி பாங்கியோடு

ருசு. ஒருபா ஒருபஃது

218. [1]வெள்ளை ஆதல் அகவல் ஆதல்
தள்ளா ஒருப தோருபா ஒருபஃது. (கஙக)

உற்றது கூறலும், பாங்கி தலைவனைப் பழித்துக்கூறலும், தலைவி தலைவனைப் புகழ்ந்து கூறலும், தலைவி பாங்கியைத் தூதாக வேண்டலும், தலைவி பாங்கிக்குத் தலைவன் இயல் (அடையாளம்) கூறலும், குறத்தி வருதலும், தலைவி குறத்தியை மலைவளம் முதலியவற்றை வினவலும், குறத்தி தங்கள் மலைவள முதலியவற்றைக் கூறலும், தலைவனுடைய நிலவளம் கிளைவளம் முதலியவற்றைக் கூறலும், தான் முன்னே முன்னே சொன்ன குறிகளைக் கூறலும், தலைவி குறி வினவலும், குறத்தி தெய்வம் பராவலும், குறிதேர்ந்து நலம்வரல் கூறலும், தலைவி பரிசில் உதவி விடுதலும், குறவன் வருதலும், புள் வருதலும், குறவன் கண்ணி வைத்தலும், புட்படுத்தலும், குறவன் காமுற்றுக் குறத்தியைத் தேடலும், குறவன் பாங்கனிடம் குறத்தியின் அடையாளம் (இயல்) கூறலும், குறவன் குறத்தியைக் கண்ணுறலும், குறத்தி அணிந்திருக்கும் அணிகளைக் கண்டு ஐயுற்றுக் குறவன் வினவலும், குறத்தி அவன் கேள்விகளுக்கு விடை கூறலும் ஆகிய இவ்வுறுப்புக்களைப் பொருந்த வைத்து, ஆசிரியப்பா, வெண்பா, தரவுகொச்சகம், கலித்துறை, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம் முதலிய இயற்றமிழ்ச் செய்யுட்களை இடைஇடை அமைத்துச் சிந்து முதலிய நாடகச்செய்யுட்களாற் பாடுதல் வேண்டும் என்ப.

இதற்கு உரிய இம்முறையும் பிற்காலத்துப் பெருக்கிக் கொண்டதுதான்போலும்.

1. வெண்பாவாயினும், ஆசிரியப்பாவாயினும் ஒன்றோடொன்று சொல்லாற் றொடர்தல் நீங்காத ஒரு பத்துச் செய்யுள் அமையப் பாடப்படுவது ஒருபா ஒருபஃதாம் என்பது.

ஒருபது என்னுமல், 'தள்ளா ஒருபது' என்றது என்? எனின், இஃது அந்தாதியாய் வரும் என்பது அறிவித்தற்காம் என்க.

ருரு. இருபா இருபஃது

219. [1]வெள்ளை அகவல் பின்னர் முறைவைத்
தெள்ளா தியல்வ திருபா விருபஃது. (கஙஉ)

கஉஅ. ஒருபா ஒருபஃதும் இருபா இருபஃதும்
கருதிய வெள்ளையும் அகவலும் காட்டினர்"

வச்சணந்திமாலைச் செய்யுளியலின், 18-ஆம் செய்யுளில்,

"ஓர்ந்தகவல் வெண்பா கலித்துறையென் றென்றினல்
ஆர்ந்தஒரு பாவோருபது"

என்றதையும், அதன் உரையில், "ஆசிரியப்பாவேனும், வெண்பா வேனும், கலித்துறையேனும் அந்தாதியாய்ப் பத்துச் செய்யுள் வருவன ஒருபா ஒருபஃதாம்" என்றதையும், இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

"அகவல் வெண்பாக் கலித்துறை யதுகோண்
டோருபா ஒருபஃ துறிளப் பெயராம்"

என்னும் 63-ஆம் சூத்திரத்தையும் ஈண்டு நோக்குக.

1. முன்னர் வெண்பாவையும், பின்னர் ஆசிரியப்பாவையும் முறையாக வைத்து, அவை ஒன்றோடொன்று சொல்லாற் றொடர்தலை நீங்காத வகையிற் பாடப்படுவது இருபா இருபஃதாம் என்பது.

'இயல்வது' என்னுமல் 'தள்ளாதியல்வது' என்றதனல், இதுவும் அந்தாதியாய் வரும் என்பது கொள்க.

வச்சணந்திமாலைச் செய்யுளியலின் 17-ஆம் செய்யுளில்,

"ஏய்ந்த இருபா இருபதுவெண் பாஅகவல்,"

என்றதையும், அதன் உரையில், "வெண்பாவும், ஆசிரியப்பாவும் முறையே அந்தாதியாய் வந்து இருபது செய்யுளான் முடிவது இருபாஇருபஃது" என்றதையும், இலக்கணவிளக்கப் பாட்டியலில் உள்ள,

ருசு. கோவை

220. [1]கோவை என்பது கூறுங் காலை
மேவிய களவு கற்பெனும் கிளவி
ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூ றென்ப. (கரு௲)

உஉக. "களவினும் கற்பினும் கிளவி வகையால்
திணைநிலை திரியாச் செம்மைத் தாகி
நாட்டிய கலித்துறை நானூ றுரைப்பது
கோட்டம் இல்லாக் கோவை ஆகும்"

"ஒருபது வெண்பா ஒருபஃ தகவல்
இருபது வரினிரு பாவிரு பஃதே"

என்னும் 62-ஆம் சூத்திரத்தையும், அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

1. கோவை என்பதைக் கூறுமிடத்து அகப்பொருள் இலக்கணத்தைத் தழுவி ஐந்திணையிற்றிரியாதனவாய்ப் பொருந்திய களவும் கற்புமாகிய கைகோள்கள் இரண்டினுக்கு உரிய கிளவிகள் பழைமையாகிய முறையின்வரும் கட்டளைக் கலித்துறை நானூற்றாற் பாடப்படும் என்று கூறுவர் புலவர் என்பது.

"கோவை என்பது கூறுங் காலை, அகப்பொருள் தழீஇ ஐந்திணை திரியா, மேவிய களவு கற்பெனும் கிளவி, முந்திய கலித்துறை நானூறு என்ப" என இயைக்க.

அகப்பொருள் என்பது ஈண்டுப் பொருளாகு பெயராய் அதன் இலக்கணத்தை உணர்த்தியது.

ஐந்திணையாவன: முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பன. ஈண்டு இவை, தொல். பொருள். அகத்திணை இயலில் உள்ள,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்

கஙo. ஐந்திணை தழுவிய அகநிலைக் கோவை
தந்தநா னூறும் தாம்கலித் துறையே.

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே''

என்னும் 5-ஆம் சூத்திரத்தையும், 2-ஆம் சூத்திரத்தில்,

''நடுவண் ஐந்திணை நடுவணது''

என்றதையும் நோக்கிக் கூறப்பட்டன. 'நடுவண் ஐந்திணை நடுவணது,' என்பதன் பொருள், 'கைக்கிளை பெருந்திணை என்பவற்றிற்கு நடுநின்ற ஐந்திணையின் நடுவணதாகிய பாலை' என்பதாகும்.

திரியா என்பது பலவின்படர்க்கை எதிர்மறைவினைமுற்று; அஃது ஈண்டுத் திரியாதனவாய் என எச்சப்பொருட்டாய்நின்று, மேவிய என்பதனைக் கொண்டு முடிந்தது. 'திரியா மேவிய களவு கற்பு' என்பது, 'மாண்பொருள் முழுவதும் முனிவற அருளிய மூவறு மொழி' என்பதுபோல நின்றது.

ஈண்டு ஐந்திணை என்றது, திணை எனப்படும். களவு கற்பு என்பன கைகோள் எனப்படும். கிளவி என்பன களவு கற்பு என்பவற்றின் பகுதிகளாகும். இவை துறை என்றும் கூறப்படும். இவை மூன்றும் அகப்பாட்டுறுப்புக்கள் பன்னிரண்டைச் சேர்ந்தனவாகும். பன்னிரண்டு அகப்பாட்டுறுப்புக்களையும்,

''திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் பயனே முன்னம்
மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையென்
றப்பால் ஆறிரண் டகப்பாட் டுறுப்பே''
(நாற்கவிராசநம்பி அகப்பொருள்-ஒழிபியல், சூ. 2.)

என்னுஞ் சூத்திரத்தான் அறிக.

ஐந்திணைப்பொருள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் மூன்று வகையினுற் கூறப்படும். இவற்றை எல்லாம் அகப்பொருள் இலக்கணங்களிற் காண்க.

௫௭. [1]கணக்கு

221. [2]மேல்கீழ்க் கணக்கென இருவகைக் கணக்கே. ()

கஉக. "மேற்கணக் கெனவும் கீழ்க்கணக் கெனவும்
பாற்படு வகையாற் பகர்ந்தனர் கொளலே"

222. [3]அகவலும் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீரு
மிகுத்துடன் தொகுப்பன மேற்கணக் கெனவும்

---

1. 'கணக்கு' என்பதற்கு 'நூல்' என்பது பொருள். இஃது, அப்பொருளதாதலை,

"உணற்கினிய இன்னீர் பிறிதுழிஇல் என்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார் - கணக்கினை
முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று"

(பழமொழி - செ. 61.)

என்றதனாலும்,

"கற்றதூஉம் இன்றிக் கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம் பேதையோர் சூத்திரம் - மற்றதனை
நல்லா ரிடைப்புக்கு நாணாது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்"

(நாலடியார், அவை அறிதல், செ. 4.)

என்றதனாலும், 'மதுரைக்கணக்காயனார்' என்றதனாலும் அறிக. கணக்காயர் - நூற்களைக் கற்பிப்பவர்.

2. கணக்கு, மேற்கணக்கு எனவும், கீழ்க்கணக்கு எனவும் இரண்டு வகையாம் என்பது.

3. ஆசிரியப்பாவும், கலிப்பாவும், பரிபாடலும் ஆகிய இம் மூன்று பாக்களால் ஐம்பது முதலாக ஐந்நூறு இறுதியாக, அப்பாக்களை அடி அளவில் மிக்கனவாயிருக்கும்படி வைத்து, (அவற்றை) ஒரினமாக அமைத்து, தொகுக்கப்படின் அவற்றை

வெள்ளைத் தொகையும் அவ்வகை எண்பெறின்
எள்ளறு கீழ்க்கணக் கெனவும் கொளலே. (கரு௫)

மேற்கணக்கு என்றும், வெண்பாக்களின் தொகுதியும், அடியளவிற் குறைந்தனவாயிருக்கும்படி வைக்கப் பெற்று, அவ்வித எண்பெற்றுவரின், அவற்றை எள்ளப்படுதல் இல்லாத கீழ்க்கணக்கு என்றும் கொள்க என்பது.

மிகுத்து என்பதற்கு மிகும்படி செய்து என்பது பொருள். இது, பிறவினை; இதில், உகரம் இறுதிநிலை, அஃதேறி நின்ற தகரமெய் இறந்தகாலம் உணர்த்தியது. முன்னுள்ள தகரமெய் தன் வினையைப் பிறவினையாக்க வந்தது. இதன் தன்வினை மிகுந்து என்பது. இறுதிநிலை - விகுதி.

மிக்கிருத்தல் பெரும்பான்மையும் ஐந்தடியின் மிக்கிருத்தல். மேற்கணக்கின் செய்யுட்கள் சிறுபான்மை ஐந்தடியிற் குறைந்தும் வரும்.

மேற்கணக்கின் செய்யுட்கள் பெரும்பான்மையும் ஐந்தடியின் மிக்கிருத்தல் வேண்டும் எனவே கீழ்க்கணக்கின் செய்யுட்கள் பெரும்பான்மையும் ஐந்தடியின் மிகாதனவாயிருத்தல் வேண்டும் என்பது பெறப்படுதல் காண்க. கீழ்க்கணக்கின் செய்யுட் சிறுபான்மை ஐந்தடியின் மிக்கும் வரும் எனக்கொள்க.

பரிபாடல் இருபத்தைந்தடியிற் குறைந்து வருவதன்றாகலின், ஐந்தடியின் மிகாதனவாயிருத்தல் வேண்டும் என்னும் வரையறை அகவற்பாவையும், கலிப்பாவையுமே நோக்கியதாம் என்றுணர்க.

'மிகுத்து' என்றதற்கு அடிமிகுத்து என்பது எதனாற் பெறப் பெற்றது எனின், தொல். பொருள். செய்யுளியலில் உள்ள,

> "வனப்பிய றனே வகுக்குங் காலைச்
> சின்மென் மொழியால் தாய பனுவலோ
> டம்மை தானே அடிநிமிர் வின்றே"

என்னும் 235-ஆம் சூத்திரத்தில், பேராசிரியர்

> "அம்மை தானே அடிநிமிர் வின்றே'

என்றது கீழ்க்கணக்கின் செய்யுட்கள் அடிநிமிர் வில்லாதனவா

கஙஉ. "ஐம்பது முதலா ஐந்நா றீற
ஐவகைப் பாவும் பொருள்நெறி மரபிற்
றேதுக்கப் படுவது மேற்கணக் காதும்"

கஙங. "அடிநிமிர் பில்லாச் செய்யுட் டோதுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காதும்"

யிருத்தல் வேண்டும் என்னும் பொருளதாகும்" என்றாராதலின், பெறுதும் என்க. இதற்கு உரையாசிரியர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர்கள் கூறிய உரையை ஈண்டு நோக்குக.

இதன் மேற்கோட் சூத்திரத்தில்,

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டோதுதி"

என்றதையும் நோக்குக.

கீழ்க்கணக்கின் செய்யுட்கள் அடிநிமிர்பில்லாதனவாம் எனவே, மேற்கணக்கின் செய்யுட்கள் அடிநிமிர்புடையன என்பது பெறப்படுதல் அறிக.

இவற்றால், ஈண்டு மேல், கீழ் என்பன அடிகளின் மிகுதியையும், குறைவையும் உணர்த்துதற்கு வந்தனவேயன்றி உயர்வு, தாழ்வு என்னும் பொருளை உணர்த்துதற்கு வந்தனவல்ல என்பதறிக.

ஆயின், கீழ்க்கணக்கு என்னாமல், "எள்ளறு கீழ்க்கணக்கு" என்றது என்? எனின், அவை பெரும்பான்மையும் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாற் பொருளையும்பற்றி வரும்; சிறுபான்மை கார்நாற்பது, களவழி என்பனபோல ஒரோ ஓர் பொருளைப்பற்றியும் வரும் என்பனவற்றை அறிவித்தற்காம் என்க.

மேற்காட்டிய தொல்காப்பிய சூத்திரத்தில், 'தாயபனுவலோடு' என்றதற்குப்பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் கூறிய வுரையை ஈண்டு நோக்குக.

ஆயின், 'வெள்ளைச் செய்யுளும்' என்னாது 'வெள்ளைத் தொகையும்' என்றது என்? எனின், கீழ்க்கணக்கு நூற்கள் வெண்பாவேயன்றிச் சிறுபான்மை முதுமொழிக் காஞ்சியைப்

ரு-அ. [1]தொடர்நிலைச் செய்யுள்

223. [2]வித்தெண் டுளிகோடி தலைவனொடு மேவி
ஒத்த வெள்ளை விருத்தம் அகவல்

போல வேறு செய்யுட்களைப் பெற்றுவருதலும் உண்டு என்பதனை அறிவித்தற்காம் என்க.

ஆயின், 'மேற்கணக்கெனவும், கீழ்க்கணக்கெனவும் பெயர் பெறும்' என்னாது, 'மேற்கணக்கெனவும், கீழ்க்கணக்கெனவும் கொளல்' என்றது என்? எனின், அவை சிறுபான்மை ஐம்பது செய்யுட்களிற் குறைந்தும், ஐந்நூறு செய்யுட்களின் மிக்கும் வரினும் கொள்ளுதல் வேண்டும் என்பதனை அறிவித்தற்காம் என்க.

நாலநாற்பதின் செய்யுட்கள் ஐம்பதிற் குறைந்திருத்தலையும், திருக்குறளின் செய்யுட்கள் ஐந்நூற்றின் மிக்கிருத்தலையும் நோக்குக.

அவற்றுள், கீழ்க்கணக்கு நூற்களுக்கு உதாரணம் பதினெண் கீழ்க்கணக்கு நூற்களாம் எனவும், மேற்கணக்கு நூற்களுக்கு உதாரணம் எட்டுத்தொகை நூற்களாம் எனவும் அறிக.

பத்துப்பாட்டையும் மேற்கணக்கு நூலென்பவாயினும் இந்நூலின்கண் பத்துப்பாட்டிற்குத் தனியாக இலக்கணம் கூறப்பட்டிருத்தலின், அதனையும் மேற்கணக்கெனக் கோடல் இந்நூலின் கருத்தன்றாம் என்பதறிக.

1. ஈண்டுத் தொடர்நிலைச் செய்யுள் என்றது பொருட்டொடர்நிலைச் செய்யுளை என்று கொள்க. என்? எனின், சொற்றொடர்நிலைச் செய்யுள், பொருட்டொடர்நிலைச் செய்யுள் என்னும் தொடர்நிலைச் செய்யுளின் வகை இரண்டனுள், சொற்றொடர்நிலைச் செய்யுள் (அந்தாதி) முன்னர்க் கூறப்பட்டமையின் என்க.

2. வித்தும் எண்டுளியும் கொடியும் போன்றனவாகிய வரலாறுகள், தலைவனைப் பொருந்திவர (எல்லாப்பொருட்கும்) இயைந்ததாகிய வெண்பாவும், விருத்தமும், ஆசிரியப்பாவும், ஒரு தொடையான் அமைக்கப்பெற்ற கொச்சக உறுப்பும் ஆகிய செய்யுட்களால் அவ்வரலாறுகள் (தன்கண்) நடத்தப்படுதலைப்

வைத்த ஒருதொடை கோச்சக உறுப்பு
நடைபெற வருவது தொடர்நிலை என்ப. (கஙடசு)

பெறப் பாடப்படுவது பொருட்டொடர்நிலைச் செய்யுளாம் என்பது.

எண்டுளி என்பது முளை. இஃது, எண் துளி எனப் பிரிக்கப்படும். இவை, எண் - எண்ணப்படும், துளி - நீர்த்துளி என்னும் பொருளன. இவற்றுள், துளி என்பது உவமை ஆகு பெயராய் முன்னே நீர்த்துளிபோலத் தோன்றும் முளையை உணர்த்திற்று என்பது. இதனை எண்ணப்படும் துளியைப் போன்றது எனக்கொண்டு வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழி என்னலாகாதோ? எனின் இதில் உள்ள நிலை மொழியாகிய 'எண்' என்பது, வருமொழிப் பொருளாகிய நீர்த் துளி என்பதைத் தழுவாமல், ஆகுபெயர்ப் பொருளாகிய முளை என்பதைத் தழுவுதலின், அங்ஙனம் கூறலாகாது என்க. என்? எனின், நிலைமொழி வருமொழியைப் பொருளால் தழுவிநிற்ப, அவ்விருமொழியுந் தொக்க தொகையாற்றலான் மற்றோர் பொருள்கொள்ள நிற்பதே அன்மொழித் தொகையாம் ஆதலின் என்க.

முளையைத் துளி என்னுமல் 'எண்டுளி' என்றது, விதை, முளையாய்த் தோன்றியபின் அஃது எல்லாருங்கண்டு கருதுதற்கு உரியதாதல் பற்றி என்க.

ஈண்டு, வித்து, முளை, கொடி என்பன உவமை ஆகு பெயராய் வரலாறுகளை உணர்த்தின. இவற்றுள், வித்து, முளைக்கும், முளை கொடிக்கும் முதற்காரணமாகும். அவற்றைப் போல ஒரு தலைவனைப்பற்றிய வரலாறுகளும் ஒன்றற்கொன்று காரண காரியத்தொடர்பை உடையனவா யிருத்தல் வேண்டும் என்பதூஉம், முதற்காரணங்கள் தாமே காரியப் பொருள்களாக மாறுவனவாகலின், வித்து, முளை, கொடி என அவை தத்தம் நிலைகளான் வேறு வேறாகக் கூறப்படினும், ஒன்றினின்று ஒன்று பிரிந்திராமல், ஒன்றெனற்கு உரியனவாயிருத்தல்போல அவ் வரலாறுகளும், பலவாகிய தத்தம் நிலைமைகளான் வேறு வேறு எனக் கூறும்படி இருப்பினும், முற்கூறிய காரணகாரியத் தொடர்பினால் ஒன்றெனக் கோடற்கு உரியனவாயிருத்தல்

கரு௪. "வித்தே எண்டுளி விருந்தியல் கோடியென
ஒத்த மூவகை இறைவனோடு பொருந்தி

வேண்டும் என்பதூஉம் அறிவித்தற்கு அவை, (வித்து முதலி யவை) ஈண்டு உவமையாகக் கூறப்பட்டன என்றறிக.

அங்ஙனம் வரலாறுகள் தொடர்ந்து நில்லாவிடின் அவை பொருட்டொடர் நிலையாகா என்க.

வித்து முளை செடி, அல்லது வித்து முளை மரம் என்னுமல், வித்து முளை கோடி என்றது, என்? எனின், கொடியானது ஒரு கொள்கொம்பை அல்லது ஒரு மரத்தைச் சார்ந்திருத்தல் போல அவ்வரலாறுகள் ஒரு தலைவனைச் சார்ந்திருத்தல் வேண்டும் என்பதை அறிவித்தற்காம் என்க.

ஆயின், வித்து, முளை, கொடி என்பனவற்றுள், கொடியை யன்றி வித்தும், முளையும் கொள்கொம்பை அல்லது மரத்தைச் சார்தலின்மையின், அவை, தலைவனை முழுதும் சாரும் வரலாறு கட்கு உவமை ஆதல் எய்துமோ? எனின், ஒருவன் ஆடையை உடுத்தான் எனின், ஆடைக்கு முதற்காரணமாகிய நூலும் அதற்கு முதற்காரணமாகிய பஞ்சும் அவ்வாடையின் வேறு பிரிந்திராமையின், அவையும் அவனைச் சார்ந்தன எனவே கொள்ளப்படும். அது போலக் கொடிக்கு முதற்காரணமாகிய முளையும், அதற்கு முதற்காரணமாகிய விதையும் கொடியின் வேறு பிரிந்திராமையின், அவையும் கொள்கொம்பு அல்லது மரத்தைச் சார்ந்தன எனவே கொள்ளப்படும்; ஆதலின், அவை உவமை ஆதல் எய்தும் என்க. ஆடையில் நூலும், நூலிற் பஞ்சும் இருத்தல் காணப்படுகின்றன. அதுபோலக் கொடியில் முளை யும், விதையும் ஆகிய இவற்றின் இருப்புக் காணப்படவில்லையே எனின், அவை கொடியிற் கரந்திருத்தலின் அவற்றின் இருப்புக் காணப்படவில்லை. அவை கொடியின்கண் இராவிடின், ஒரு கொடி அழிந்தபின் உலகில் வேறு கொடி உளதாதல் எய்தாது; என்க. ஒரு கொடியில் அவை இருத்தலாலேயே உலகில் வேறு கொடி உளதாகின்றது என்றறிக.

அங்ஙனமாயின், 'வித்தெண்டுளிகொடி ஒருவனொடு மேவி' என்னுமல், 'தலைவனொடு மேவி,' என்று கூறியது என்? எனின், கொடி முன் தன்னோடு இயைபில்லாத ஒரு கொள்கொம்பு அல் லது மரத்தைச் சார்தல்போல, அவ்வரலாறுகள் தம்மோடு

ஒழுகிய வெள்ளை விருத்தம் அகவல்
உரையோடு மிடைந்த பாட்டுடைக் கோச்சகம்
நடைபெற வருவது தொடர்நிலை வகையே''

இயைபில்லாத ஒருவனைச் சார்தல் உடையனவல்ல; அவற்றிற்குக் காரணமாகிய செயலுக்குக் கர்த்தாவாயிருப்பவனையே (வினை முதலையே) சார்தல் உடையனவாம் என்பதறிவித்தற்காம் என்க.

அங்ஙனமானால், 'தலைவனொடு மேவி' என்ற துணையானே அவ்வரலாறுகள் அவற்றிற்குக் காரணமாகிய செயலுக்குக் கர்த்தாவாகியவனைச் சார்தல் பெறப்படுதலின், அதற்குக் கொடியை உவமையாகக் கூறியது மிகையன்றோ? எனின், அவ்வரலாறுகள் முற்கூறிய காரணகாரியத் தொடர்போடு சார்ந்திருத்தல்வேண்டும் என்பதனை வற்புறுத்தற்குக் கூறப்பட்டதாகலின், மிகையன்றாம் என்க.

தண்டி அலங்காரத்தில் பெருங்காப்பிய இலக்கணம் கூறுவதாகிய 8-ஆம் சூத்திரத்தில், 'சந்தியில் தொடர்ந்து' என்றதையும் ஈண்டு நோக்குக. சந்தி, நாடகத்தின்கண் நிலைபெறுவதாகும். அஃது, ஐந்துவகையாம். அவை, வித்து, முளை, தழைத்தல், விளைவு, துய்த்தல் என்பன. நாடகத்தின் வரலாறுகள் இம்முறையின் அமைதல் வேண்டும் என்ப. அதுபோலக் காப்பிய வரலாறும் அமைதல் வேண்டும் என்பது அதன் கருத்தாகும் என்றறிக.

'தலைவனை மேவி' என்னும் இரண்டாம் வேற்றுமையின்கண் 'தலைவனொடு மேவி' என மூன்றாம் வேற்றுமை வந்து மயங்கியது. இஃது உருபு மயக்கமாகும். 'மேவ' என்னும் செயவென் எச்சம், ஈண்டு 'மேவி' எனச் செய்தென் எச்சமாகத் திரிந்து நின்றது.

'வெள்ளை விருத்தம் அகவல்' என்னுமல், 'ஒத்த வெள்ளை விருத்தம் அகவல்' என்றது என்? எனின், வெண்பாவும், விருத்தமும், ஆசிரியப்பாவும் எல்லாப் பொருளினும் வருதற்கு உரியனவாம் என்பதறிவித்தற்காம் என்க.

ஆயின், 'அகவல் விருத்தம்' என முறையிற்கூறாது 'விருத்தம் அகவல்' என மாறிக் கூறியது என்? எனின், 'அகவல் விருத்தம்' எனின், ஆசிரியவிருத்தம் என்று பொருள்படும் ஆதலின், என்க.

இதுவும் அது

224. [1]தொடர்நிலைச் செய்யுள் பாட்டுப்பல தொடுத்துத்
தலைஇடை கடையென நுவலவும் படுமே. (கங-சு)

ஒரு தொடைவைத்த கொச்சக உறுப்பாவது, கொச்சக உறுப்பாய் வரும் தாழிசைகளுள் இரண்டடியான் வரும் தாழிசையாம் என்க. இஃது அன்னதாதல் முன்னே கூறப்பட்டது.

'ஒத்த வெள்ளை......கொச்சக உறுப்பு' என்றதனோடு 'ஆன்' என்னும் மூன்றன் உருபைச் சேர்க்க. நட என்பது பகுதி; ஈற்றகரங்கெட்டு, 'ஐ' என்னும் விகுதி சேர்ந்து நடை என்ருயிற்று. இதில் ஈற்ற கரங்கெட்டது கடைக்குறையாகும். இது செய்வினைத் தொழிற் பெயர். இஃது ஈண்டு நடத்தப்படுதல் என்னும் செயப்பாட்டு வினைத்தொழிற் பெயர்ப் பொருளில் வந்தது என்க.

பொருட்டொடர்நிலைச் செய்யுள் காப்பியம் என்றும் கூறப்படும். காப்பியத்திற்குத் தொல்காப்பியம், தண்டி அலங்காரம், மாறனலங்காரம் முதலியவற்றிற் கூறப்பட்டுள்ள இலக்கணங்களையும் ஈண்டு நோக்குக.

தொல்காப்பியத்திற் காப்பிய இலக்கணத்தைப் பொருள். செய்யுளியலின் ஈற்றிற் கூறப்பட்ட எண்வகை வனப்பிற்காண்க.

1. பொருட்டொடர்நிலைச் செய்யுட்கள் (தம்பால்) பல பாட்டுக்கள் தொடுக்கப்பட்டுத் தலையானவை, இடையானவை கடையானவை என்று சொல்லப்படுதலையும் பொருந்தப் பெறும் என்பது.

தொடுத்து என்பது செய்வினை வினைஎச்சம். ஈண்டு அது, தொடுக்கப்பட்டு என்னும் செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தது. அது, பாட்டாகிய சினையின் வினை; 'நுவலவும் படும்' என்னும் முதல் வினையைக் கொண்டு முடிந்தது. நுவல என்னும் அகர ஈற்றுச் செய்வினை வினைஎச்சம், நுவலப்படுதல் என்னும் செயப்பாட்டு வினைத்தொழிற் பெயர்ப்பொருளில் வந்தது. ஈண்டு உம்மை, வரலாறுகள் காரணகாரியத் தொடர்பினல் ஒன்ருேடொன்று தொடர்ந்திருத்தலே அன்றித் தன்மையினல் இங்ஙனங் கூறப்படுதலையும் பொருந்தப்பெறும் என்னும் பொருளைத் தருதலின் எச்சப்பொருளதாம் என்க.

இதுவும் அது

225. [1]அவற்றுள்,
தலைஎனப் படுபவை மலைவின் றாகி
அறம்பொருள் இன்பம் வீடெனும் இவற்றின்
திறந்தெரி மரபின் நீங்கா தாகி
வென்றிகொள் இருக்கை என்றிவை அனைத்தும்
சந்தி ஆகத் தந்துநிலை பெறுமே. (கஉஎ)

---

1. அம்மூன்றனுள், தலையான காப்பியங்கள் என்று சொல்லப்படுவன உலகவழக்குச் செய்யுள்வழக்கு என்பவற்றோடும் ஐந்தியலோடும் மாறுபாடு இல்லாதனவாய்; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் இந்நாற் பொருள்களின் வகைகளையும் கற்பார் தெரிதற்குக் காரணமாகிய முறைமையினின்று நீங்காதனவாய்; வெற்றியும், வெற்றி பெறுதற்குக் காரணமாகிய மந்திரமும் என்று சொல்லப்பட்ட இவை முதலாகிய காப்பியத்தின்கண் வருதற்கு உரியனவாகிய யாவும் நாடகத்தின்கண் நிலை பெறும் சந்தியைப்போல ஒன்றோடு ஒன்று தொடர்புற்று இருக்க அமைக்கப்பெற்று, (அவையாவும் அறிவுடையார் ஒப்பும்படி இனிது அமைந்திருத்தலின்,) நிலை பெற்றிருத்தற்கு உரியனவாகும் என்பது.

'மலைவு' என்றது அணி இலக்கணத்திற் கூறப்பட்ட இட மலைவு, காலமலைவு முதலியவற்றை என்னலாகாதோ? எனின், 'அவை உலகவழக்குச் செய்யுள் வழக்கு என்பவற்றோடும் ஐந்தியலோடும் மாறுபடாமல்' என்றதனுள் அடங்குதலின், அவற்றை வேறு கூறுதல் வேண்டா என்க.

ஆயின், 'செய்யுள் வழக்கோடு மாறுபடாமல்' என்ற துணையானே ஐந்தியலோடு மாறுபடாமை பெறப்படாதோ? எனின், இஃது உலகவழக் கிலக்கணம், இஃது செய்யுள் இலக்கணம் என்று இலக்கணம் கூறப்படுதலின், செந்தாமரை என்பதன்கண் செம்மையாகிய பண்பு தாமரையாகிய பண்பியின் வேறாயிருத்தல் போலச் செய்யுள் வழக்கினின்றும் ஐந்தியல் வேறாதல் பெறப்படுதலால், 'செய்யுள் வழக்கோடு மாறுபடாமல்' என்ற துணையானே ஐந்தியலோடு மாறுபடாமை பெறப்படாது என்க.

ருகூ. பாட்டு (பத்துப்பாட்டு)

226. [1]நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
ஏறிய அடியின் ஈரைம் பாட்டுத்
தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே. (கருஅ)

227. [2]அதுவே,
அகவலின் வரும்என அறைகுநர் புலவர். (கருகூ)

'நீங்காதாகி,' என்றது பன்மையின் ஒருமை வந்த வழு வமைதி.

சந்தி இன்னது என்பதும் அதன் வகையும் முன்னே கூறப் பட்டன.

'வித்தெண்டுளி' என்னும் சூத்திரத்தில் 'வித்து, முளை, கொடி' என்று கூறியவற்றானே காப்பியத்தின் வரலாறுகள் காரணகாரியத் தொடர்பினால் ஒன்றோடொன்று இயைந்திருத் தல் வேண்டும் என்னும் பொருள் பெறப்பட்டிருக்க, மீண்டும் இச் சூத்திரத்தில் 'சந்தியாக' என்றது, கூறியது கூறலாகாதோ? எனின், காப்பியம்போன்ற மற்றொரு நூலின்கண் அங்ஙனம் வரலாறுகள் அமைந்தியங்கும் திறம் கூறி, அப்பொருளை உவமை முகத்தான் விளக்குதற்குக் கூறியதாகலின், கூறியது கூறலா காது என்க.

இம்மை மறுமைகளுக்கு உரிய அறம் முதலிய நான்கு பொருளையும் கூறுவன தலையானவை எனவே, இம்மைக்கு உரிய மூன்றைக் கூறுவன இடையானவை எனவும், இரண்டும் ஒன்றும் கூறுவன கடையானவை எனவும் கொள்க.

1. சிறுமை நூறடி ஆக, உயர்வு நூற்றுப்பத்தும், நூற்றுப் பத்தின் மிக்கனவுமாகிய அடிகளாற் பத்துப் பாட்டுப் பாடப் படுவது பத்துப் பாட்டு என்று சொல்லப்படும் என்பது.

அளவு ஏறிய என்பதற்கு அவ்வளவின் மிக்கன என்பது பொருள்; இதில், ஏறிய என்பது பலவின்படர்க்கை வினையா லணையும் பெயர். பத்துப் பாட்டை நோக்குக.

2. அஃது, ஆசிரியப்பாவினாற் பாடப்படும் என்று புலவர் கள் கூறுவார்கள் என்பது.

'அது' பத்துப்பாட்டு.

௬௦. கடைநிலை

228. [1]கடைநிலை என்பது காணுங் காலைப்
பரிசில் உழப்பும் குரிசிலை முனிந்தோர்
கடையகத் தியம்பும் காட்சித் தென்ப. (௧௬௦)

௧௩௫. "பரிசிலீட் டித்தல் அஞ்சி வெறுத்தோர்
கடைநின் றுரைப்பது கடைநிலை ஆதும்"

உரை நடை

௧௩௬. "கடை எனினும் அங்கதம் எனினும் ஒக்தும்"

---

1. கடைநிலை என்பதை நோக்குங்கால், அது, பரிசில் கொடுத்தலைப் பற்றிக் குழப்பிப் பேசும் இறைவனிடம் கோபம் கொண்ட புலவர்கள் அவன்றன் வாயிலின்கண் நின்று கூறும் பொருளை உடையதாம் என்று புலவர் கூறுவர் என்பது.

காட்சித்து என்பது பொருளை உடையது என்னும் பொருளது. இது, குறிப்பு வினையாலணையும் பெயர். இதில் காட்சி என்பது செய்வினைத் தொழிற் பெயர். அஃதீண்டுக் காணப்படுதல் என்னும் செயப்பாட்டுவினைப் பொருளதாய் நின்று, தொழிலாகு பெயராய்க் காணப்படும் பொருளை உணர்த்தியது.

இது, தொல். பொருள். புறத்திணை இயலிற் கூறிய

"சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை"

என்றதனுற் கூறப்பட்ட கடைநிலை அன்று;

தொல். பொருள். செய்யுளியலில் உள்ள,

"அங்கதம் தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள் கரந்த தெனஇரு வகைத்தே"

என்னும் 124-ஆம் சூத்திரத்தானும்,

"செம்பொருள் ஆயின் வசைஎனப் படுமே"

என்னும் 125-ம் சூத்திரத்தானும் கூறப்பட்ட அங்கதச் செய்யுளின் பாற்படுவதாம் என்று அறிக.

சூக. கையறு நிலை

229. [1]வலங்கெழு வேந்தர் வான்புகக் கவிஞர்
கலங்கித் தொடுப்பது கையறு நிலையே. (கசக)

கஙஎ. "வெற்றி வேந்தன் விண்ணகம் அடைந்தபின்
கற்றோர் உரைப்பது கையறு நிலையே"

கையறவுக்கு ஆகாத பாக்கள்

230. [2]கலியே வஞ்சியிற் கையற வுரையார். (கசஉ)

---

1. பூமியை ஆளும் வன்மை பொருந்திய மன்னர் விண்ணகம் அடையப் புலவர்களால் மனம்கலங்கிப் பாடப்படுவது, கையறு நிலையாம் என்பது.

2. கையறு நிலையைக் கலிப்பாவினாலும், வஞ்சிப்பாவினாலும் பாடார் என்பது.

இது, தொல். பொருள். புறத்திணை இயலில் உள்ள, 24-ஆம் சூத்திரத்தில்,

"இன்னனென் றிரங்கிய மன்னை யானும்"

என்று கூறிய மன்னைக் காஞ்சியின் பாற்படும்.

புறப் பொருள் வெண்பா மாலை - கரந்தைப் படலத்தில் உள்ள,

"வெருவரும் வாளமர் விளிந்தோற் கண்டு
கருவி மாக்கள் கையற வுரைத்தன்று"

என்னும் ஒன்பதாங் கொளுவினையும், அதன் உரையில், "அஞ்சத்தகும் வாட்பூசலிலே பட்டோனைப் பார்த்து, யாழ்ப்பாணர் அவன் பட்டபடியைச் சொல்லியது" என்றதையும், பொதுவியற் படலத்தில் உள்ள,

"செய்கழல் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர்
கையற வுரைத்துக் கைசோர்ந் தன்று"

என்னும் 14-ஆம் கொளுவையும், அதன் உரையில், "தொழில் அழகுபெற்ற வீரக்கழலினை உடைய வேந்தன், துஞ்சினானாக அணைந்தோர் இறந்தமையைச் சொல்லி ஒழுக்கம் தளர்ந்தது" என்றதையும் ஈண்டு நோக்குக. இவை இரண்டும் கையறுநிலை.

இவ்வியலின் புறனடை

231. [1]மற்றவை வல்ல இனம்பிறி தோன்றினும்
அத்தகு மரபின் அடக்கினர் கோளலே. (கசக)

புறப். வெண். காஞ்சிப் படலத்தில் உள்ள,

"வியலிடமருள விண்படர்ந்தோன்
இயல்பேத்தி அழிபிரங்கின்று"

என்னும் 20-ஆம் கொளுவையும், அதன் உரையில், "அகன்ற பூமியில் உள்ளார் மயங்க வீரசொர்க்கத்தே சென்றவன் பண்பினைப் புகழ்ந்து சொந்தது" என்றதையும் நோக்குக.

இது, முன்னேகூறிய மன்னைக் காஞ்சியாகும். இது, பெரும்பான்மையும் 'மன்' என்னும் இடைச்சொல்லைப் பெற்றுவரும். இவ்விடைச் சொல் ஈண்டு வருகையில் 'கழிந்தது' என்னும் பொருள் தந்து நிற்கும்.

1. (கற்றுவல்ல சான்ருேர்களாற் செய்யப்படுதலான்,) வன்மையை உடையனவாகிய வேறு புதிய நூற்கள் உளவாயினும், அவற்றையும், முன்னே பிள்ளைப்பாட்டு முதலியவாகக் கூறப்பட்ட நூற்களின் அந்தத் தகுதிவாய்ந்த இலக்கணத்தின்கண் (அறிவுடையோர்) அடக்கிக்கொள்ளக்கடவர் என்பது.

"வல்ல பிறிது இனம் ஒன்றினும் மற்றவை" என இயைக்க. இதில், 'வல்ல'என்பது பலவின் படர்க்கைக் குறிப்பு வினையாலணையும் பெயர்; வன்மையை உடையவை என்பது பொருள். 'பிறிது' என்பது பன்மையின் ஒருமை வந்த வழுவமைதி. மரபு என்பது ஒன்றை முன்னோர்கள் சொல்லிய முறைமைப்படி சொல்லுதலாகும். அஃது அன்னதாதலை,

"எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"

என்றதனுல் அறிக. மரபு என்பதற்கு முறைமை என்பது பொருள். அஃது ஈண்டுப் பண்பாகுபெயராய்ப் பெரியோர்களால் முறையாகச் சொல்லப்பட்டுவரும் நூற்களை, உணர்த்த, அது, பொருளாகு பெயராய் அவற்றின் இலக்கணத்தை உணர்த்தி நின்றது என்க.

தொல். பொருள். செய்யுளியலில் உள்ள,

"விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"

என்னும் 239-ஆம் சூத்திரத்தையும், பேராசியர், அதன் உரையில், "விருந்துதானும் தொடுக்கப்படும் தொடர்நிலை மேற்று என்றவாறு" என்றதையும், விசேட உரையில் 'தானும்' என்ற உம்மையான், முன்னைத் 'தோல்' எனப்பட்டதூஉம், பழைய கதையைப் புதிதாகச் சொல்லப்பட்டதாயிற்று. இது, பழங்கதை மேற்றன்றிப் புதிதாகச் சொல்லப்படுதல் ஓம்புதல் உடைமையின், உம்மையான் இறந்தது தழீஇயினுன் என்பது. "புதுவது கிளந்த யாப்பின் மேற்று" என்றது என்னை? எனின், புதிதாகத் தாம் வேண்டியவாற்ருற் பல செய்யுளும் தொடர்ந்துவரச் செய்வது. அது, முத்தோள்ளாயிரமும், பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளும் என உணர்க. கலம்பகம் முதலாயினவும் சொல்லுப" என்று கூறியதையும் ஈண்டு நோக்குக.

இவற்ருல், ஆசிரியர் தொல்காப்பியனுரும் புதிய நூற்கள் செய்தற்கு உடன்பட்டமை விளங்குதல் அறிக.

இனவியல் உரை முற்றிற்று.

பன்னிரு பாட்டியலுக்குக்

கா. ர. கோவிந்தராஜ முதலியார் எழுதிய உரை

முற்றிற்று.

பன்னிரு பாட்டியல்

சூத்திர முதற்குறிப்பகராதி

பன்னிரு பாட்டியல்

மேற்கோள் சூத்திர முதற்குறிப்பகராதி

உரையிற்கொண்ட மேற்கோள் நூற்கள்

1. இலக்கணவிளக்கப் பாட்டியல்
2. கொன்றைவேந்தன்
3. திருக்குறள்
4. திருவாசகம்
5. தொல்காப்பியம்
6. நன்னூல்
7. நாலடியார்
8. நாலாயிரம்
9. நான்மணிக்கடிகை
10. பழமொழி
11. புறப்பொருள் வெண்பாமாலை
12. வச்சணந்திமாலை

உரை

1. தஞ்சைவாணன் கோவை உரை
2. யாப்பருங்கல விருத்தி உரை

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
க	சு	குறிப்புரை	உரை
உ	க	பொருத்தங்களையும்	பொருத்தங்களும்,
உசு	உஎ, உஅ	ஐம்பத்து நான்கு, ஐம்பத்தைந்தாம்	ஐம்பத்தொன்று, ஐம்பத்திரண்டாம்
௩0	உ௩	நான்கும்,	நான்கும்
௩உ	உஎ	பொருளை உடைய சொல்லை	பொருளை
௩சு	கரு	அஃது தொகைப் புறத்துப் பிறந்த	அத்தொகைப்புறத்துப் பிறந்த
ச0	எ	இனங்களின் வகை	இனங்களின் பொது வகை
சக	சு	ஒன்பல	ஒன்றுபல
சஅ	அ	எண்ணி	எண்ணிய
சுக	கஅ	நேரசை வெண்பாக் களாற்	நேரசையை முதலாகக் கொண்டவெண்பாக்களாற்
சுஉ	கக	நேரசை வெண்பாவை	நேரசையை முதலாக உடைய வெண்பாவை
சு௩	உக	இருக்கும்.	இருக்கும்
அசு	௩க, ௩உ	வாழ்த்துக் கூறுதலும்	வாழ்த்தும்
	,,	கடைதிறப்புக் கூறுதலும்	கடை திறப்பும்
	,,	பாலை நிலத்தியல்பு கூறுதலும்	பாலை நிலத்தியல்பும்
அஎ	க0	சிறப்பைக் கூறுதலும்	சிறப்பும்
,,	கசு	மகிழ்ச்சியைக் கூறுதலும்	மகிழ்ச்சியும்
,,	உசு	காணுதலைக் கூறுதலும்	காணுதலும்
க0௩	கச	அந்தாயிற் சில	அந்தாதியிற் சில

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
ககo	ங	அவலும்	அகவலும்
ககஉ	உங	இணக்கம் முதலிய	இணக்கம் என்னும் இவை முதலிய
கக௩	உ௩	எனவும்	என்றும்
கஉக	கஉ, க௩	எதனுற் பெறப்பட்டது	எதனுற் பெறப்பட்டது?
கஉஅ	கூ	பாலே	பாவே
க௩எ	கo	செருக்கள வழி	செருக்களம்
க௩அ	உக	செய்தியைப் புறப் பொருள்	செய்தியை அமைத்துப் புறப் பொருள்
க௩கூ	கo	அகவலடியும்	அளவடியும்
க௪க	உ௩,	புகழ்ந்து	புகழ்ந்து,
,,	உ௫	கூறி	கூறி,
க௫௩	௪	வடாதுறை	வடாஅதுறை
க௫கூ	௩o	அந்த அந்தத்தால்	அந்தத்தால்

விலை ரூ. 2